வரு.74 இல. 43 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
28 பக்கங்கள் 80/-
2022 ஒக்டோபர் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை October 23 Sunday, 2022






02 துன்புறுத்தல் முகாம்களாக மாறியுள்ள பல்கலைக்கழகங்கள்!



03 உலகில் குறைந்த வரி வருமானம் கொண்ட நாடு இலங்கை



05 நாட்டின் மீது அக்கறையில்லா சில அரசியல்வாதிகள்



24 களைப்பை விஞ்சுமா அனுபவம்?

**தமிழ் அரசியல் கைதிகள் சிலர் விடுவிப்பு**

## கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஜனாதிபதி

**ஜனாதிபதிக்கு அமைச்சர் டக்ளஸ் நன்றி தெரிவிப்பு**





தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு பகுதியினரை தீபாவளி தினத்தன்று விடுதலை செய்வ தற்குதீர்மானிக்கப்பட்டிருக்கின்றமை 06

## தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க சலுகை வட்டியில் கடன்



**4,900 மில். ரூபாவை அரசு ஒதுக்கியது**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் குறைந்த வட்டியில் கடன்களை பெற்றுக் கொடுப்பதற்காக அரசாங்கம் 4,900 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாட்டிலுள்ள அரச வங்கிகள் உள்ளிட்ட 8 வங்கிகளுக்கு நிதிய மைச்சினால் அந்த நிதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் 06

**மத வழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொண்டு**

## உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய அரசினால் சிறப்புத் திட்டம் அறிமுகம்

**உணவு வங்கிகள், உணவு பரிமாற்ற மையங்களை நிறுவவும் முடிவு**



உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும், மக்களின் போஷாக்கு மட்டத்தை மேம்படுத்தவும் மத வழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொண்ட உணவு வங்கிகள் மற்றும் உணவுப் பரிமாற்ற மையங்களை 06

**22 ஆவது திருத்தத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை**

# சுயாதீன ஆணைக்குழுக்கள் சுதந்திரமாக இயங்க வாய்ப்பு

**இலங்கைக்கு சர்வதேச அரங்கிலும் அங்கீகாரம்**

**தேர்தல், நிதி,பொலிஸ், அரச சேவை, கணக்காய்வு, இலஞ்ச ஊழல் ஆகியன பக்கச்சார்பின்றி சுதந்திரமாக இயங்க சந்தர்ப்பம்**

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்டம் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டதையடுத்து அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களும் மீண்டும் இயங்கக்கூடிய சந்தப்பம் உருவாகியுள்ளது.

இதன்படி தேர்தல் ஆணைக்குழு, நீதிச் சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, அரச சேவைகள் ஆணைக்குழு, கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, தேசிய திட்டமிடல் ஆணைக்குழு என்பன 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதையடுத்து சுயாதீனமான பக்கச்சார்பற்ற ஆணைக்குழுக்களாக நிறுவுவதற்கான பின்னணி உருவாகியுள்ளது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஆணைக்குழுக்களே இதுவரை நாட்டில் இயங்கி வந்தன. 06

**22 ஆவது அரசியலமைப்பு திருத்தம்**

## சரத்வீரசேக்கர எம்.பி எதிராகவே வாக்களிப்பு

**பாராளுமன்ற செயலாளர் நாயகம் விளக்கம்**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்ட 22 ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் வீரசேக்கர எதிராகவே வாக்களித்திருந்ததாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

இச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு நிறைவடைந்ததையடுத்து நடைபெற்ற வாக்கெடுப்பின் போது ஆதரவாக 179 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், எதிராக ஒருவாக்கு அளிக்கப்பட்டது. அவ்வாறு சட்ட மூலத்துக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் வீரசேக்கர வாக்களித்திருந்தார். 06

**வாசகர்களுக்கு தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்**



சரண்யா துயாபரன்
படம்: சுதத் நிசாந்த



பயணித்து கொண்டிருக்கையில்

**திடீரென தீப்பற்றி முற்றாக எரிந்த வான்** 06

யாழ்.KKS பகுதியில் சம்பவம்

## இ.தே.தோ.தொ சங்கத் தலைவராக சாகல

**ஹரீன் அடுத்த வாரம் பதவி விலகல்**



இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்கவை நியமிக்க கட்சியின் முகாமைத்துவச் சபை தீர்மானித்துள்ளது. 06

## இலங்கை தமிழர் 03 பேர் தனுஷ்கோடியில் தஞ்சம்

**திருச்சி ஷாஹுல் ஹமீட், மன்னார் குறுப் நிருபர்**



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவர் நேற்று சனிக்கிழமை (22) காலை கடல் வழியாகச் சென்று தனுஷ்கோடியில் தஞ்சமடைந்துள்ளனர். 06

**மறைந்த எழுத்தாளர் 'சாஹித்திரத்னா'**

## தெளிவத்தை ஜோசப்பின் இறுதிக் கிரியை இன்று



ஈழத்தின் சிறுகதையாளர், நாவலாசிரியர், இலக்கிய ஆய்வாளர் 'சாஹித்திய ரத்னா' தெளிவத்தை ஜோசப்பின் இறுதிக்கிரியைகள் இன்று 23 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். 06

**வாரமஞ்சரி எங்கள் கருத்து...**

## ஈழத்து இலக்கியக் களத்தின் போராளி தெளிவத்தை ஜோசப்!

இலங்கையின் தமிழ் இலக்கியக் களத்தில் கடந்த ஆறு தசாப்த காலத்துக்கும் மேலாக மங்காமல் பிரகாசித்த சாதனையாளரான தெளிவத்தை ஜோசப் தனது 88 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்று விட்டார்.

தெளிவத்தை ஜோசப் இனிமேல் எம்மத்தியில் இல்லையென்று நினைக்கையில் இலக்கியப் படைப்பாளிகள், ஆர்வலர்கள் மற்றும் அன்னாருடன் நெருங்கிப் பழகிய அனைவருக்குமே பெரும் வேதனை தோன்றுகின்றது.

இலங்கையின் இலக்கியக் களத்தில் பெரும் வெற்றிடமொன்றை அவர் ஏற்படுத்திச் சென்றிருக்கிறார். அன்னாரின் மறைவானது குடும்ப உறுப்பினரொருவரை பறிகொடுத்து விட்ட துயரத்தை தங்களுக்கு ஏற்படுத்தியுள்ளதாக அவருடன் இலக்கியப்பயணம் செய்துள்ள ஆர்வலர்கள் வேதனைப்படுகின்றனர்.

இந்திய இலக்கியத்தின் ஆதிக்கத்தில் ஈழத்து இலக்கிய ஆர்வலர்கள் கட்டுண்டு கிடந்த காலப்பகுதியில், இலங்கையில் தமிழ் படைப்பிலக்கியத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்தவர்களில் தெளிவத்தை யோசப்பும் ஒருவரென்று தாராளமாகக் கூற முடியும். 1960 களில் ஆரம்பித்த அவரது இலக்கியப் பயணம் நேற்றுமுன்தினம் வரை கடந்த 62 வருடங்களாக ஓய்வின்றித் தொடர்ந்துள்ளது. 06



**22 ஆவது திருத்த வெற்றி சகல பிரஜைகளுக்குமான வெற்றியே** 06

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவிப்பு

**நாட்டில் சீரற்ற காலநிலை தொடரும்**

## தாழமுக்கம் சூறாவளியாக உருவாகவும் சந்தர்ப்பம்

**மக்கள் எச்சரிக்கையுடன் செயற்பட அறிவுறுத்து**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சீரற்ற காலநிலை மேலும் தொடருமென்றும் வங்காள விரிகுடா மற்றும் தெற்கு அந்தமான் கடற்றொகுதியில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம் சூறாவளியாக உருவாகும் வாய்ப்புள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன் காரணமாக நாட்டில் சீரற்ற காலநிலை மேலும் நீடிப்பதுடன் 06

**வேட்பாளர்களுக்கான விண்ணப்பம் கோரல் - 2023**

எதிர்வரும் 2023 இல் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் **தேசிய விடுதலை மக்கள் முன்னணி (NLPF)** கட்சியில் போட்டியிட விரும்புவோர் தங்களது சுய தரவுகள் அடங்கிய விண்ணப்பத்தை கீழ்க்காணும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

பொதுச் செயலாளர்
**தேசிய விடுதலை மக்கள் முன்னணி (NLPF)**
இல. 355/7, முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம்.

மேலதிக தகவல்களுக்கு - 075-2967894



# மாணவர்களை அச்சுறுத்துகின்ற துன்புறுத்தல் முகாம்களாக மாறிவரும் பல்கலைக்கழகங்கள்

**அரச பல்கலைக்கழகங்கள் தொடர்பான ஆய்வுகளில் வெளிவந்துள்ள திடுக்கிடும் தகவல்கள்!**

**சட்டத்தினாலும் முடிவுக்குக் கொண்டு வர முடியாதுள்ள ராகிங் சித்திரவதை!**

**ராகிங் என்ற போர்வையில் 9,903 மாணவிகள் மீது பாலியல் துன்புறுத்தல்கள்!**

**கடந்த 15 வருட காலப்பகுதியில் உயர்கல்வியை இடைநடுவில் கைவிட்ட 9,834 மாணவர்கள்! இதுவரையான காலப்பகுதியில் தற்கொலை செய்து கொண்ட அல்லது தற்கொலைக்கு முயன்று ஊனமுற்ற மாணவர்களின் எண்ணிக்கை 195!**






ஒருவரது வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதது கல்வி. அதே போன்று சமூகத்துக்கும் நாட்டுக்கும் அவசியமானது கல்வி. தனிநபரினதும் சமூகத்தினதும் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் கல்வி அளிக்கின்ற பங்களிப்பை போன்று வேறொன்றும் அளிப்பதில்லை. அதிலும் குறிப்பாக உயர்கல்வி அதிக முக்கியத்துவம் பெற்றதாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் இன்றைய நவீன உலகில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கல்வியின் தேவையும் அதன் முக்கியத்துவமும் உணரப்பட்டிருப்பதன் வெளிப்பாடே அதுவாகும்.

இந்நாட்டில் சுதந்திரத்திற்கு முன்பே இலவசக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றைய கல்வி அமைச்சர் சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர, 1945 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலவச கல்விச் சட்டத்துடன் கல்வித் துறையில் மிக முக்கியமான மாற்றத்தை முன்வைத்தார். இச்சட்டம் இயற்றப்பட்டதன் மூலம், நாட்டின் அனைத்துப் பிள்ளைகளும் எந்த பாரபட்சமும் இல்லாமல் முன்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக்கல்வியை பெறக்கூடிய வாய்ப்பு உருவானது. இது இந்நாட்டின் கல்வித்துறை பெற்றுக்கொண்ட மிகப்பெரிய கொடையாகும்.

இலவசக்கல்வி அன்று முதல் இன்று வரையும் நடைமுறையில் இருக்கும் நிலையில், இந்நாட்டில் 5 வயது முதல் 16 வயதுக்கு உட்பட்ட ஒவ்வொரு பிள்ளையும் கல்வி பெறுவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைகின்ற மாணவர்களில் சுமார் ஒரு இலட்சம் பேர் அவர்களது பெறுபேறுகளின் அடிப்படையில் அரச பல்கலைக்கழகங்களுக்கு உயர்கல்விக்காக உள்வாங்கப்படுகின்றனர். நாட்டில் 25 பல்கலைக்கழகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

தனிநபர் விருத்திக்கும், சமூகத்தையும் நாட்டையும் கட்டியெழுப்புவதற்கும் கற்றறிந்தவர்களையும் புத்திஜீவிகளையும் உருவாக்கும் தளங்களாக விளங்கும் இப்பல்கலைக்கழகங்களில் இற்றைக்கு ஏழெட்டு தசாப்தங்களுக்கு முன்னர் பகிடிவதை அறிமுகமாகியுள்ளது. இது இந்நாட்டின் கல்வி முறையில் காணப்படாத ஒன்று. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு இந்நாடு உள்ளாகி இருந்த காலப்பகுதியில் இந்நாட்டு உயர்கல்வி வழங்கும் நிறுவனங்களுக்குள் இந்த பகிடிவதை ஊடுருவியுள்ளது.



உயர்கல்வி பெற வரும் புதிய மாணவர்களுடன் அறிமுகமாகிக் கொள்வதையும், அவர்களுடன் ஒற்றுமையை வளர்த்துக் கொள்வதையும் நோக்காகக் கொண்டு பல்கலைக்கழகங்களின் சிரேஷ்ட மாணவர்களால் மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடாகவே பகிடிவதை கருதப்படுகிறது. ஆனால் காலப்போக்கில் புதிய மாணவர்களை உடல், உள ரீதியில் அநாகரிகமான முறையில் இம்சிப்பதாகவும் துன்புறுத்துவதாகவும் பகிடிவதை மாற்றமடைந்தது. இப்பகிடிவதை பேச்சு, உடல், பாலியல் ரீதியில் துன்புறுத்தும் ஒரு சேஷ்டையாக உருவானது. அத்தோடு வன்முறைகளுக்கு இட்டுச் செல்லப்படக் கூடிய ஒரு செயற்பாடாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது பகிடிவதை.

இந்நாட்டின் உயர்கல்வி வரலாற்றில் களனி பல்கலைக்கழகத்தில் மிக மோசமான பகிடிவதை 1974 இல் இடம்பெற்றுள்ளது. அதற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியதன் விளைவாக நான்கு அதிகாரிகள் தண்டிக்கப்பட்டனர். 12 மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதோடு, மூன்று பேர் இடைநிறுத்தமும் செய்யப்பட்டனர். இந்நாட்டில் பகிடிவதைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட முதலாவது நடவடிக்கை இது.

ஆனாலும் பகிடிவதை முடிவுக்கு வரவில்லை. இந்நிலையில்தான் 1975 இல் பேராதனைப் பல்கலைக்கழக மாணவியொருவர் பகிடிவதையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக பல்கலைக்கழகத்தின் இராமநாதன் விடுதியின் இரண்டாம் மாடியில் இருந்து குதித்துள்ளார். இதன் விளைவாக அவர் ஊனமுற்றார்.

அதேநேரம் பகிடிவதை காரணமாக றுஹுணு பல்கலைக்கழகத்தில் 1993 இல் மாணவர் ஒருவர் உயிரிழந்ததோடு, 1997 இல் இதே பல்கலைக்கழகத்தில் பாலியல் ரீதியிலான துன்புறுத்தலுக்கு உள்ளான மாணவியொருவர் தற்கொலை செய்து கொண்டார். இதே ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீட முதலாம் வருட மாணவரான செல்வநாயகம் வரப்பிகாஷ் கடுமையான பகிடிவதைக்கு உள்ளானதால் சிறுநீரகச் செயலிழப்புக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

இவ்வாறான நிலையில் பகிடிவதைக்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பு வெளிப்படலானது. குரூரத்தனமான இம்சிப்பாகவும் துன்புறுத்தலாகவும் இப்பகிடிவதை வளர்ச்சி பெற்று வருவதில் பரவலாகக் கவனம் செலுத்தப்பட்டது. இவ்வாறு பகிடிவதை தொடருமாயின் இந்நாட்டின் உயர்கல்வி பாரிய பின்னடைவுக்கு உள்ளாகக் கூடிய அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்திருந்தது. அத்தோடு அன்றைய சூழலில் பகிடிவதையைக் காரணம் காட்டி பல மாணவர்கள் உயர்கல்விக்காக அரச பல்கலைக்கழகங்களுக்கு செல்வதைத் தவிர்த்துக் கொண்டனர்.

இந்நிலையில் பகிடிவதையால் ஏற்பட்டுவரும் விளைவுகள் குறித்து விரிவான கவனம் செலுத்தப்பட்டது. அதனை அடிப்படையாகக் கொண்டு 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் ஏனைய வடிவங்களிலான வன்முறைகளை தடைசெய்யும் சட்டத்தின்படி பகிடிவதை ஒரு குற்றச்செயல் என அங்கீகரிக்கப்பட்டது. அத்தோடு இலங்கையிலுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் பகிடிவதை எதிர்ப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இவற்றோடு சேர்த்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 919 ஆம் இலக்கச் சுற்றறிக்கைப்படி, உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி பெறும் மாணவர் ஒவ்வொருவரும் பகிடிவதையைத் தொடங்கவோ தூண்டவோ செய்யவோ மாட்டேன் எனவும் பகிடிவதைக்கு உதவ மாட்டேன் எனவும் கட்டாயம் கையொப்பமிட வேண்டும். இந்த ஏற்பாடும் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் இருக்கின்றது.

இவ்வாறான ஏற்பாடுகளின் விளைவாக அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதை இடம்பெறுவது குறைவடைந்திருந்தாலும் அது முற்றாக ஒழிந்ததாக இல்லை. 1997 இல் அம்பாறை ஹார்டி உயர்தொழில்நுட்பக் கல்லூரியில், முதலாமாண்டு மாணவர் ஒருவர் பகிடிவதையால் உயிரிழந்தமையும், 2002 இல் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பகிடிவதைக்கு எதிரான கலந்துரையாடலை நடாத்திய மாணவர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டதும் அதற்கு பின்னரான இன்னும் பல சம்பவங்களும் நல்ல எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

இவ்வாறான நிலையில் அண்மையில் மற்றொரு செய்தி வெளியாகியிருந்தது. இவ்வருடம் (2022) றுஹுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் முதலாம் ஆண்டில் பிரவேசித்துள்ள மாணவர்களைப் பகிடிவதைக்கு உள்ளாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அப்பல்கலைக்கழகத்தில் 200 இற்கும் மேற்பட்ட இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது. இதனை அப்பல்கலைக்கழத்தின் மருத்துவபீட பதில் பீடாதிபதி பேராசிரியர் சன்ன யஹதுகொட கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

சட்டரீதியாக பகிடிவதை ஒரு குற்றச்செயலாக அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும், அது பல்கலைக்கழகங்களில் இன்னும் இடம்பெறுவதையே இந்நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் இந்நாட்டின் உயர்கல்வி நிறுவனங்களில் அனைத்து வடிவிலான பகிடிவதைகளையும் துணைவேந்தர்களும் பணிப்பாளர்கள் குழுவினரும் வன்மையாகக் கண்டித்துள்ளனர். எந்தவொரு துணைவேந்தரும் பகிடிவதையினை ஏற்றுக்கொள்வதோ அல்லது ஆதரிப்பதோ அல்லது அதில் ஈடுபடுபவர்களைப் பாதுகாப்பதோ இல்லை.

(15ஆம் பக்கம் பார்க்க)



மர்லின் மரிக்கார்...

# இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றில் மறக்க முடியாத ஆளுமை"லண்டன்" காதர்

இலங்கையின் மூத்த தொழிற்சங்கவாதிகளில் ஒருவர். முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்காக, இஸ்லாமிய விழுமியங்களின் அடிப்படையிலான வாழ்வு முறைக்கு, அன்றைய இளைஞர் யுவதிகளுக்காக கல்வித்துறையில் பங்களிப்புச்செய்த ஆளுமையின் சொந்தக்காரர் "லண்டன்" காதர்.

இவர் மாளிகாவத்தை பிரதேசத்தில் வாழ்ந்த நாட்களில், நான் அவருடன் நெருங்கிப் பழகினேன்.

சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் (18. 07. 2022) தன்னுடைய 90ஆவது வயதில், மாளிகாவத்தை இல்லத்தில், இறையடி சேர்ந்தார் லண்டன் காதர்.

வயது, அனுபவம், செயல்திறன், ஆகியவற்றில்



மூத்தவரான லண்டன் காதரை நான் நேசிப்பதற்கும், நெருக்கமாய் பழகுவதற்கும் பல காரணங்கள் இருந்தன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மாணவர் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவரும்,கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவருமான நண்பன் ஏ.சீ.எம் சப்ரியின் அன்புத்தந்தை தான் லண்டன் காதர்.

இலங்கை சுங்கத்திணைக்களத்தில் ,சுங்க அத்தியட்சகராக ஏ.சீ.எம்.சப்ரி தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். ஸ்ரீ லங்கா முஸ்லிம் மாணவர் சம்மேளனத்தில் இவர்கள் எல்லோருடனும் இணைந்து நானும் செயற்பட்டுக் கொண்டிருந்தேன்.

தற்போது ஐக்கிய அமீரக இராச்சியத்தில், சிரேஷ்ட நிதி முகாமையாளராகக் கடமையாற்றும் மற்றுமோர் நண்பன் கே.எம். எம்.அம்ரி, லண்டன் காதரின் சகோதரர்களில் ஒருவரான கிழ்று மொஹிதீனின் புதல்வர் மாத்திரமல்ல, இவரும் எமது சம்மேளனத்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவராவார். நண்பன் அம்ரியின் மூத்த சகோதரர் கே.எம். அஸ்கர் கூட மூத்த உறுப்பினரும் தீவிர செயற்பாட்டாளருமாவார்.




நண்பன் சப்ரியின் தந்தை என்ற வகையில், அவர் மீதான அன்பு கலந்த மரியாதையும், எங்களுடன் அவர் பழகிய முறையும், நீண்ட காலத்தொடர்பும் எங்களை பிணைத்திருந்தன.

மாளிகாவத்தை,கெத்தாறாமை சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு அருகில் அமைந்துள்ள மஸ்ஜிதுஸ் ஸலாம் பள்ளிவாசலில்,தொழுகையை நிறைவேற்றுவது அவரது வழக்கமாக இருந்தது.

அதிலும் குறிப்பாக,வெள்ளிக்கிழமைகளில் ஜும் ஆ தொழுகைக்குப் பின்னர் , நான் வெளியே வரும்வரை காத்து நின்று, ஸலாம் என்ற முகமன் வாழ்த்து சொல்லிவிட்டுத்தான் வீட்டுக்கே போவார். நான் கூட, அவர் வரும்வரை காத்திருப்பதை வழக்கப்படுத்திக்கொண்டேன்.

அவருடைய இந்தச்செயற்பாடு, என்னை அவர்பால் ஈர்த்தது என்றே சொல்லலாம். அதிலும், தன்னைவிட வயது குறைந்தவர்களிடம் அன்பாகவும், அமைதியாகவும்,பேசுவார். மாளிகாவத்தையில், மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக " ஸ்ரீ லங்கா முஸ்லிம் கல்விப்பேரவை" என்ற ஓர் அமைப்பை சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன், என்னுடைய தலைமையில் ஆரம்பித்திருந்தேன். அதில் உற்சாகத்துடன் கலந்து கொண்டார். உப தலைவர் பதவியையும் வகித்தார். என்னையும் ஊக்குவித்துக்கொண்டிருந்தார்.





லண்டன் காதர் என்ற ஆளுமையின், நட்பும், நற்பண்புகளும், நெருக்கமான தொடர்பும் மாத்திரமல்லாது, இந்த நாட்டினதும், தான்சார்ந்த சமூகத்தினதும் வளர்ச்சிக்காக, அவர் ஆற்றிய பங்களிப்புக்களும் பதிவு செய்யப்படவேண்டும் என்று என்னுள் எழுந்த வேட்கையும், இந்தக்கட்டுரை எழுதுவதற்கு தூண்டுகோலாய் அமைந்தன.

இலங்கையின் தேசிய ரீதியிலான இடதுசாரி இயக்கங்களின் அரசியல் தலைவர்களினாலும், அங்கத்தவர்களினாலும், சாதாரண ஒரு பொது மகனாலும் அடையாளம் காணப்பட்ட ஓர் ஆளுமைதான் "லண்டன் காதர்".

குதுப் மொஹிதீன் அப்துல் காதர் என்ற முழுப்பெயரையும் கொண்டிருந்த "லண்டன் காதர்" கொழும்பு மத்திய தொகுதியில் அமைந்துள்ள புதுக்கடையில் 1933ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி பிறந்தார்.

இவருக்கு எப்படி “லண்டன் காதர்” என்று பெயர் வந்தது என்பதை இக்கட்டுரையின் ஒரு பகுதியில் குறிப்பிடவுள்ளேன். புதுக்கடை, பண்டார நாயக்க மாவத்தையில் அமைந்துள்ள ஃபாத்திமா முஸ்லிம் கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வியை "லண்டன் காதர்" மேற்கொண்டிருந்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்தியடைந்து, மருதானை சென்ட்ரல் ஆங்கிலக் கல்லூரியில் கல்வியைத்தொடர்ந்தார். கொழும்பு மத்திய தொகுதியில், இப்பரீட்சையில் சித்தியடைந்த முதலாவது மாணவர் லண்டன் காதர் என்பது குறிப்பிடத்தக்கது.



சிறு வயதிலேயே, சமூக செயற்பாடுகளில் ஈடுபாடுமிக்கவராகத் திகழ்ந்த லண்டன் காதர், எஸ் எஸ் சீ பரீசை சித்தியடைந்த பிறகு, குடு ம்பச் சுமைகள் காரணமாக உயர் கல்வியை தொடர முடியாத நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டார். இந்த கால கட்டத்தில் தான் கொழும்பு, தெவட்டகஹ பள்ளிவாசலுடன் இணைந்ததாக உஸ்மானிய்யா ஆங்கிலப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இப்பாடசாலையில் ஆங்கில போதனாசிரியராகக் கடமையாற்றிய லண்டன் காதரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பிற் காலத்தில், பல உயர் பதவிகளை வகித்தார்கள். முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.எச்.எம்.அஸ்வர்கூட லண்டன் காதரிடம் கல்வி கற்றவராவார். அவரே இதனைப் பலமுறை கூறியிருக்கின்றார். 19ஆம் நூற்றண்டின் கடைசிப்பகுதியில்தான் முதலாவது முஸ்லிம் பாடசாலையொன்று பேருவளையில் உருவாக்கப்படுகின்றது. கொழும்பில்தான், ஆண்களுக்கென்று முதலாவது முஸ்லிம் பாடசாலை உருவாக்கப்பட்டது 1800 களில், மத்ரசதுல் ஃகைரியா என்ற பெயரில் ,கொழும்பு பெரிய பள்ளிவாசலுடன் இணைந்ததாக இப்பாடசாலை அமைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, சில ஆண்டுகள் கழித்துத் தான் கொழும்பு ஸாஹிராக்கல்லூரி ஆரம்பிக்கப் பட்டது. நீதியரசர் அக்பரின் தலைமையிலான முஸ்லிம் கல்விப்பேரவை (Muslim Educational Forum) என்ற அமைப்பின் மூலம் இரண்டு பாடசாலைகள் உருவாக்கப்படுகின்றன.

ஒன்று பாத்திமா முஸ்லிம் பாடசாலை (பண்டாரநாயக்கா மாவத்தை) மற்றையது 1906 ஆம் ஆண்டளவில் ஹுஸைனியா என்ற ஆங்கிலப் பாடசாலை (Hussainiya English School) கொழும்பு 12, ஹல்ஸ்டோர்ப் பகுதியில் உருவாக்கப்பட்டது. பாத்திமா முஸ்லிம் பாடசாலையைத்தவிர, ஏனைய பாடசாலைகளில், மேல் மட்டத்தில் உள்ள முஸ்லிம்கள் ஆங்கில மொழியில் தான் கல்வி கற்றார்கள். 1904ஆம் ஆண்டளவில், மத்ரசதுல் ஃகைரியா பாடசாலை ஹமீதியா என்று பெயர் மாற்றம் செய்யப்படுகின்றது.

(15ஆம் பக்கம் பார்க்க)

"இளநெஞ்சன்" முர்ஷிதீன்...
மாளிகாவத்தை

# உலகில் குறைந்த வரி வருமானம் கொண்ட நாடு இலங்கை மாத்திரமே!

## மத்தியவங்கி ஆளுனர் கலாநிதி நந்தலால் வீரசிங்க



**நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை பற்றி மக்களுக்கு தெளிவூட்ட வேண்டியதன் அவசியத்தை விளக்குகின்றார் மத்திய வங்கி ஆளுனர் நந்தலால் வீரசிங்க...**

**கேள்வி:- மத்திய வங்கி தொடர்பில் மக்களிடத்தில் நல்லபிப்பிராயம் இல்லை. நீங்கள் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டதன் பின்னர் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் பேசினீர்கள். வெளிநாட்டு நாணயக் கையிருப்பு உள்ளது என அன்று கூறப்பட்ட பொய்யை நீங்கள் நாட்டுக்கு வெளிப்படுத்தினீர்கள்.**

**புதிய வரித் திருத்தம் தொடர்பிலான நேரடிக் கொள்கைகள் பற்றி எமக்கு போதுமான தெளிவு இல்லை. தற்போதைய வரித் திருத்தம் குறித்து மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

**பதில்:-** மத்திய வங்கியின் ஆளுநர் என்ற வகையில் நாட்டின் நிதி நிலை தொடர்பில் முதலில் தெளிவை வழங்க வேண்டும். முழு நாட்டினதும் நிதிக் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மை, வெளிநாட்டுச் செலாவணிக் கையிருப்பைப் பேணுதல், பணவீக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் என்ற வகையில் எனக்கு பொறுப்புக்கள் உள்ளன.

இது தொடர்பில் செயற்படும் போது அரச நிதி தொடர்பில் பிரதான பொறுப்பு இருப்பது நிதி அமைச்சருக்கே. திறைசேரிக்கும், பாராளுமன்றத்திற்குமே அரச நிதிக் கொள்கை உள்ளது. எனினும் இவை இரண்டும் தொடர்புடையவை. அரச நிதிக் கொள்கை நிலையானதாகச் செயற்படவில்லை என்றால் அதன் மூலம் நாட்டின் நிதிக் கொள்கைக்கு தாக்கங்கள் ஏற்படும். அரச மற்றும் தனியார் துறைகளும் நாட்டின் நிதிக்குள் உள்ளடங்கும். இவை அனைத்தினதும் கட்டுப்பாடு மத்திய வங்கியிடம் உள்ளது. இது மிகவும் முக்கியமான பணியாகும். இதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், பொருளாதாரத்தை கடன் பெற்றே நிவர்த்தி செய்யப்படுகின்றது. கடன் பெற்றுக் கொள்வது பிரச்சினையல்ல. எனினும் கடன் பெற்றுக் கொள்வதற்கான ஆற்றல் இருக்க வேண்டும். அரசாங்கம் என்ற வகையில் நீண்ட காலமாக வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடன் வாங்க வேண்டிய நிலையே இருந்து வருகின்றது.

ஆனால் கடந்த 2019ம் ஆண்டின் பின்னர் நாட்டில் செயற்படுத்தப்பட்ட வரி வருமானக் கொள்கையின் காரணமாக பாரியளவில் வருமானம் குறைந்தது. இதனால் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை அதிகரித்தது. நூற்றுக்கு ஆறு, ஏழு வீதமாக இருந்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை 2020, 2021ம் ஆண்டுகளில் நூற்றுக்கு 11 வீதம் வரைக்கும் அதிகரித்தது. அது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. முன்னர் வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்கி வரவுசெலவு பற்றாக்குறையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் இருந்தன. தற்போது கடினமான சூழ்நிலைக்கு வந்திருக்கின்றோம். வரி வருமானங்களை இல்லாமற் செய்ததனால் வெளிநாடுகளின் செய்வது பெரும் பிரச்சினை அல்ல. கொவிட் காலத்தில் அதிக நாடுகள் இந்த வேலையைச் செய்தன. 2020, 2021, 2022ம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக பணம் அச்சிடப்பட்டது. வெளிநாட்டுக் கடன் பெற முடியாத காரணத்தினால் அவ்வருடங்களில் முழுமையாகவே பணத்தை அச்சிட்டார்கள். இதனால் பணவீக்கம் பெருமளவில் உயர்ந்தது.

அரச நிதிக் கொள்கையானது தவறான கொள்கையாக இருந்ததால் நாட்டின் நிதிக் கொள்கை மற்றும் பணவீக்கம், வெளிநாட்டு நாணயக் கையிருப்புக்களில் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டன. இன்று இந்நாட வீழ்ச்சியடைந்த நிலைக்குள்ளாகியிருக்கின்றது. இதன் பெறுபேறாகவே பணவீக்கம் 70 வீதத்திற்கு அதிகரித்துள்ளது. உணவுக்கான பணவீக்கம் 95 வீதமாக அதிகரித்தது. 200 ஆக இருந்த வெளிநாட்டு செலாவணி விகிதம் 365 ஆக உயர்ந்தது. நாட்டிலிருந்த வெளிநாட்டு நாணயக் கையிருப்பு முற்றாகவே இல்லாமல் போனது. நாட்டில் கடனைத் திருப்பிச் செலுத்தக் கூடிய நிலை இருக்கவில்லை. இந்தளவுமோசமான நிலைக்குச் செல்லாமல் ஏதேனும் ஒரு முறையில் இதனை சரி செய்து கொள்கையினை வகுத்திருந்தால். நிலைமையை ஏதோ ஒரு வகையில் கட்டியெழுப்பியிருக்க முடிந்திருக்கும். எனினும் இதன் மூலம்தான் அரச நிதிக் கொள்கை நாட்டின் நிதிக் கொள்கையில் தாக்கத்தை செய்திருக்கின்றது.

இதனால்தான் நாடு பாதாளத்தில் வீழ்ந்தது. அவ்விடத்தில்தான் நாம் இப்போது இருக்கின்றோம். நாம் முன்னேறிச் செல்வதற்கு இவ்வாறான கஷ்டமான நிலைகளின் போது மக்களுக்கு உண்மைகளை தெளிவு படுத்த வேண்டும். கடந்த காலத்தில் சரியான கொள்கையினை நடைமுறைப்படுத்தாத காரணத்தினால் இவ்வாறு நடந்திருக்கின்றது. எனவே நாம் அதனை சரி செய்து கொள்ள வேண்டும்.

## ஈரானுக்கும் வெனிசுவெலாவுக்கும் வரிவருமானம் தேவைப்படுவதில்லை

**கேள்வி:- நீங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைகளின் போது முக்கிய பங்கினை வகிக்கின்றீர்கள். ஆரம்பத்திலிருந்தே நீங்கள் அந்த நிலைப்பாட்டில் இருந்தீர்கள். தற்போதைய அரசாங்கம் முன்னரை விடவும் அதிகளவில் ஐ.எம். எப் செயற்பாடுகளுக்கான கொள்கைகளைத் தயாரித்து அதற்கு இணங்கிச் செயற்படுகின்றது. ஜனாதிபதி வெளியிட்ட அறிக்கையில் இது தொடர்பில் சில சாதகமான உண்மைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த வரித் திருத்தங்களைத் தொடர்ந்து ஐ. எம். எப் செயற்பாடுகளுடன் எம்மால் வருங்காலத்தில் இப்போதிருக்கும் பிரச்சினைகள், குழப்பங்களைத் தீர்த்து முன்னேறிச் செல்வதற்கு ஏதேனும் வழிகள் திறக்கும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?**

**பதில்:-** நிச்சயமாக. உண்மையில் இதனை நான் இப்போதைக்கு இருக்கும் ஒரே வழியாகவே பார்க்கின்றேன். தற்போதைய நிலைக்கு வந்திருக்காவிட்டால் நாம் வேறு நடைமுறைகளை முயற்சி செய்து பார்த்திருக்கலாம். எனினும் எமது கையிருப்பு நன்றா கவே குறைந்ததன் பின்னர் எமக்கு எவரும் கடன் வழங்கவில்லை.

உறுப்பு நாடு என்ற வகையில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து மாத்திரமே இதுபோன்ற நேரத்தில் கடன் கேட்கும் உரிமை எமக்க உள்ளது. அதேபோன்று சர்வதேச நாணய நிதியம் இருப்பதும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாடுகளுக்கு உதவி செய்வதற்காகும். எனினும் இங்கிருக்கும் மோசமான பிரச்சினை என்னவென்றால் சர்வதேச நாணய நிதியம் ஒரு நாட்டுக்கு கடன் வழங்குவதற்கு கடன்களின் நிலையான தன்மை நிலவ வேண்டும். இலங்கை அரசாங்கம் பதினாறு தடவைகள் கடனுக்காக சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்றுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் முன்வைக்கும் வேலைத்திட்டங்களுடன் அவர்கள் இணங்குவார்களாயின் நிதியினை வழங்குவார்கள். இந்த தடவை இருக்கும் சிக்கலான நிலை என்னவென்றால் பணியாளர் குழு ஒப்பந்தத்தில் நாம் கடந்த செப்டெம்பர் மாதத்தில் கையெழுத்திட்டோம். எனினும் கடன் முகாமைத்துவம் செய்யப்படும் வரைக்கும் எம்மால் அதனை நடைமுறைப்படுத்த முடியாது. எனவே நாம் கடன் மறுசீரமைப்பைச் செய்ய வேண்டும். கடந்த வாரம் கடன் மறுசீரமைப்பு திட்டத்தில் நல்ல முன்னேற்றத்தைப் பெற்றுக் கொண்டோம்.

நாம் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். கடந்த மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நாட்டின் சில சில இடங்களில் வரிசைகளை நீங்கள் கண்டிருப்பீர்கள். தற்போது அந்த நிலை படிப்படியாக குறைந்து போயிருக்கின்றது. முன்னேற்றங்கள் இருந்தாலும் இன்னமும் நிலையான முன்னேற்றம் எனக் கூற முடியாது. அவ்வாறு நடப்பதற்கு பொருளாதாரத்தை இயக்கும் வரிக் கொள்கையை உருவாக்க வேண்டும். கடன் மறுசீரமைப்பை செய்ய வேண்டும். அப்போது சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதி கிடைக்கும். அப்போது எம்மால் முன்னேறிப் பயணிக்க முடியும். அதனால்தான் இந்த வரிக் கொள்கையினை முன்னே கொண்டு செல்ல வேண்டியுள்ளது. ஜனாதிபதி குறிப்பிட்டதைப் போன்று ஏனைய மறுசீரமைப்புக்களையும் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாமல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

**கேள்வி:- இங்கு இருக்கும் அனேக அதிகாரிகள் கடந்த காலத்திலும் இருந்தார்கள். இந்த அதிகாரிகளோடு இந்த வேலைத்திட்டத்தை தொடர்ந்து முன்னே கொண்டு செல்வதற்கான வாய்ப்பு உள்ளதா?**

(21 ஆம் பக்கம் பார்க்க)



**தனுஷ்க ராமநாயக்க,**
பணிப்பாளர் நாயகம்,
ஜனாதிபதி ஊடகப்பிரிவு
தமிழில்: **முஸப்பிர்**







# "அப்பா என்று குரல் கேட்ட மறுகணமே மகள் துப்பாக்கி சன்னங்கள் துளைத்து அசைவற்று விழுந்து கிடந்தாள்"

## நெடுங்கேணியில் கொல்லப்பட்ட யுவதியின் தந்தையின் வாக்குமூலம்

பாலநாதன் சதீஸ்
(ஓமந்தை விஷேட நிருபர்)





அன்று இரவு 8.30 மணி இருக்கும், பிருந்தாமலர் தான் அன்று இறக்கப் போவது தெரியாமல் வழமைபோன்றே பல கனவுகளுடன் உறங்க தயாரானார். உறங்க முன்னர் வெளியே ஏதோ சத்தம் கேட்கவே அவசரமாக வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தார். "அப்பா" என்று அவலக் குரல் எழுப்பினார். அவ்வளவுதான் அடியற்ற மரம்போல் இரத்தம் பெருக்கடுக்க கீழே சாய்ந்தார். வவுனியா நெடுக்கேணியை உலுக்கிய யுவதியின் கொலைச் சம்பவம் வவுனியா எங்குமே பீதி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

நெடுங்கேணி சிவா நகர் கிராம மக்கள், பொலிஸார், துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான யுவதியின் தந்தை ஆகியோரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டே இக் கொலைச்சம்பவம் தொடர்பில் தகவல்கள் பகிரப்படுகின்றன.

வவுனியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நெடுங்கேணி பகுதியில் சிவா நகர் என்ற கிராமம் அமைந்துள்ளது. தினமும் நாட்கூலி வேலை, காடுகளுக்கு சென்றும் வருமானம் தேடல், விவசாயம், வீட்டுத்தோட்டம் என அந்த மக்களின் நாளாந்த சீவியம் போராட்டத்துடனேயே சென்று கொண்டிருக்கின்றது. அத்தகைய கடினமான போராட்டத்தின் மத்தியில் தமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் மக்கள் வாழ்கின்ற நெடுங்கேணி பகுதியில் இடம்பெற்ற இரண்டாவது துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் எல்லோரையும் நிலைகுலைய வைத்திருக்கின்றது.

வவுனியா, நெடுங்கேணி சிவாநகர் பகுதியில் சிதம்பரப்பிள்ளை துரைராஜசிங்கம் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். தந்தை ஓய்வு பெற்ற தபால் ஊழியர். தாய் மரணமடைந்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டது. குடும்பத்தில் பிள்ளைகள் எட்டுப்பேர். அதில் ஒரு சகோதரர் வாகன விபத்திலும், இன்னுமொரு சகோதரர் யுத்தத்திலும் இறந்துவிட்டார்கள். ஏனைய சகோதரர்கள் திருமணமாகி வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டார்கள். மரணமடைந்த இளம் யுவதிதான் தனது தந்தையுடன் வசித்து வந்துள்ளார். அந்த யுவதிதான் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகினார்.

யுவதியை சுட்டுக்கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் யுவதியின் வீட்டுக்கு அருகிலுள்ள வீட்டில் வாடகைக்கு வசிக்க கடந்த நான்கு மாதங்களுக்கு குடிவந்ததாகவும், மரணமடைந்த யுவதியின் குடும்பத்துக்கும், சந்தேக நபருக்கும் ஏற்பட்ட தகராறினால் வீட்டை விட்டு வெளியேறி வேறு இடத்தில் வாடகைக்கு குடியிருப்பதும் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சேமமடுவை சேர்ந்த 29 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

சுட்டுக்கொல்லப்பட்ட பிருந்தாமலர் என்ற யுவதி தனது 21ஆவது பிறந்ததினத்தை சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற தினத்துக்கு முதல்நாள் தனது தந்தையாருடன் மகிழ்ச்சியாகக் கொண்டாடியுள்ளார். மறுநாள் இரவு தனது வீட்டின் பின்புறக் கதவைத் திறந்து வெளியே வரும்போது (சந்தேகத்திற்கு இடமான முறையில் ஒருவர் நின்றதனை கண்டு தனது தந்தையை அழைத்துள்ளார். அழைத்த அடுத்த கணமே, துப்பாக்கிச்சூட்டு சத்தமும் கேட்டுள்ளது. தந்தை மகளின் அலறலையும், துப்பாக்கி சூட்டு சத்தத்தையும் கேட்டு பதறியடித்து வெளியே போய்ப் பார்க்கையில், மகள் துப்பாக்கி சன்னங்கள் துளைத்து குருதிவழிந்த நிலையில் அசைவற்று விழுந்து கிடப்பதனை கண்டுள்ளார். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய யுவதி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அங்கு விரைந்த பொலிஸார் குறித்த சம்பவ இடத்தினை பார்வையிட்டதோடு மரணமடைந்த யுவதியின் தந்தையிடம் மேற்கொண்ட விசாரணையின் போதே பல விடயங்கள் வெளிவந்தன.

கொலை செய்ததாக கருதப்படும் சந்தேக நபருக்கும், குறித்த யுவதியின் குடும்பத்தாருக்கும் இடையே சில மாதத்திற்கு முன்னர் தகராறு ஏற்பட்டுள்ளது. கொலைச்சம்பவம் நடைபெறுவதற்கு ஒருவாரத்துக்கு முன்னர் யுவதியின் தொலைபேசியை சந்தேகநபர் பறித்து உடைத்திருக்கிறார். கோபமடைந்த யுவது இதுகுறித்து பொலிஸில் முறைப்பாடும் செய்துள்ளார். அதன்பின்னர் சந்தேக நபர் அப்பகுதியில் இருந்து வெளியேறி வேறு பகுதியில் வாடகைக்கு குடியமர்ந்துள்ளார்.



சந்தேகநபர் யுவதியின் வீட்டிற்கு வந்து பயிற்றங்காய் பிடுங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளளார். அவ்வாறு அன்றையதினம் பயிற்றங்காய் பறிக்க வந்தபோதே யுவதி துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

இவ்வாறு யுவதியின் தந்தை அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் 29 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இக்கொலைச் சம்பவம் காதல் விவகாரம் எனச் சிலரும், குடும்பத் தகராறு, முன்விரோதம் எனவும் ஒவ்வொரு கோணத்தில் சிவா நகர் கிராம மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர். கொலை செய்ததாக கருதப்படும் சந்தேக நபர் தற்போது வசிக்கும் வீட்டில் குற்றவியல் தடய பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் தேடுதல் நடாத்திய போது கைத் துப்பாக்கி மற்றும் வெடிபொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.



கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பொலிஸார் வியாழக்கிழமை (20.10.2022) அன்று நீதிமன்றில் முற்படுத்திய போது 14 நாட்கள் தடுப்பு காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

உயிரிழந்த யுவதியின் தந்தை மேலும் கருத்துக் கூறுகையில், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அன்று போதையில் இருந்ததாகவும், போதையிலேயே தமது வீட்டிற்கு வந்து பயிற்றங்காய் ஆய்ந்து சென்றதாகவும் கூறியிருந்தார்.

தமக்குள் வேறொரு பிரச்சினையும் இல்லை எனவும், உயிரிழந்த மகளின் தொலைபேசியினை சந்தேகநபர் பறித்து உடைத்ததாகவும், மகள் அது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும் தெரிவித்தார். சந்தேக நபரிடம் இருந்து தொலைபேசி மற்றும் 5500 வாடகைப்பணம் என்பனவற்றை தனது மகள் பெற்றதாகவும், அந்தப் பணத்திலேயே தனது மகள் தனது பிறந்த தினத்தை கொண்டாடியதாகவும் தந்தை கூறினார்.

கடந்த சில வருடங்களில் தமது இரண்டு மகன்களை இழந்து, பின்னர் தனது மனைவியை இழந்து விட்டதாகக் கூறிய அவர் தற்போது தனது செல்ல மகளையும் இழந்துவிட்டதாக கதறியழுதார்.

யுவதியின் தந்தை அளித்த வாக்கு மூலத்தினையும், தொலைபேசி தகவல்கள் மற்றும் சந்தேகநபர் குடியிருந்த வீட்டில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்கள் என்பனவற்றைக் கொண்டு உண்மையான குற்றவாளி யார் என்பதனை கண்டுபிடிப்பதற்காக பல்வேறு கோணங்களில் நெடுங்கேணி பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரை இழந்தால் திரும்பப்பெற முடியாது. உயிருக்கு விலைமதிப்பில்லை என்பார்கள் ஆனால் இன்றைய போதையுலகில் மனித உயிரை மனிதனே பறிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு கொண்டிருக்கின்றோம்.

எமது நாடு பொருளாதார நெருக்கடியால் பெரும் பின்னடைவை சந்தித்துள்ள நிலையில் கொலை, கொள்ளை, போன்ற வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. அதிலும் தமிழ்மக்கள் அதிகமாக வாழ்கின்ற வடக்கு மாகாணத்திலே அதிகளவான வன்முறைச் சம்பவங்கள் தொடர்ச்சியாக பதிவாகி வருகின்றது. இதற்கு இந்த கொலைச்சம்பவமும் ஓர் எடுத்துக்காட்டாகும்.






# நாடு மீதான அக்கறை கிடையாது; தங்களது நலன்களிலேயே அக்கறை!



## தேசியப் பேரவையைப் புறக்கணிக்கும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளைக் கண்டிக்கின்றார் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

**நாட்டைப் பற்றிச் சிந்திக்காமல், தம்மைப் பற்றிய சிந்தனை மேலோங்கி நிற்கிறது என்பதையே தேசியப் பேரவையைப் புறக்கணிக்கும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் புலப்படுத்துகின்றன என்று நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். தற்போதைய அரசியல் நிலைமை குறித்து எமக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

**கே: முன்கூட்டியே தேர்தலை அறிவிப்பதே அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு என்று சிலர் கூறுகின்றனர். எவ்வாறாயினும், நாமல் ராஜபக்ஷ போன்ற சில உறுப்பினர்கள் "இந்த நேரத்தில் தேர்தல் பற்றிப் பேசக்கூடாது" என்றும் "நாட்டை ஸ்திரப்படுத்த அனைவரும் ஜனாதிபதிக்கு தங்கள் ஆதரவை வழங்க வேண்டும்" என்றும் கூறியுள்ளனர். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: இதில் இரண்டு அம்சங்கள் உள்ளன. நீங்கள் தேர்தலுக்குச் சென்றால் நாங்கள் ஜனநாயகத்தைப் பாதுகாக்கிறோம் என்று மகிழ்ச்சியுடன் வாதிடலாம். மற்றைய வாதம் என்னவென்றால், நீங்கள் தேர்தலுக்குச் செல்லும்போது எல்லா விஷயங்களும் நிச்சயமற்றதாகி விடும். "உங்கள் தேர்தலை முடித்துவிட்டு மீண்டும் வாருங்கள்" என சர்வதேச நாணய நிதியம் கூறும். அரசியல் நிச்சயமற்ற தன்மையால் இலங்கைக்கு நன்கொடை கொடுப்பதில் கூட ஈடுபட முடியாது என்று பல்வேறு நாடுகளும் கூறுகின்றன. அதுமட்டுமின்றி, இந்தத் தருணத்தில் தேர்தலை நடத்துவதற்கு திறைசேரியினால் முடியுமா என்பது எனக்குத் தெரியாது.

**கே: உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதன் மூலம் அரசாங்கம் மீண்டும் தேர்தல் முறையை மாற்றியமைக்க முயற்சிப்பதாக முன்னிலை சோசலிசக் கட்சி மற்றும் சில பிரிவுகள் குற்றம் சாட்டுகின்றன. இது பற்றிய உங்கள் பார்வை என்ன?**

பதில்: எனது அறிவுக்கு எட்டியவரை யாரும் தேர்தலை ஒத்திவைக்க விரும்பவில்லை. அதைத் தள்ளிப்போட என்ன நோக்கமிருக்கிறது என்று தெரியவில்லை. தற்போது ஜனாதிபதி கூறுவது என்னவென்றால், உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் அந்த உள்ளூராட்சி மன்றங்களை பராமரிக்க போதுமானதாக இல்லாததால் இந்த உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தும் பயனற்றதாகி விட்டன என்பதாகும்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை தற்காலிகமாக 8,400 ஆக உயர்த்தியுள்ளோம். அந்த உறுப்பினர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டு ஒன்றும் செய்யாமல் இருக்கிறார்கள். எனவே, நாங்கள் அதை நெறிப்படுத்த வேண்டும். அதனால்தான் தேர்தல் முறை மாற்றப்பட வேண்டும் என்று கூறுகிறோம். அதற்கு அரசியல் கட்சிகளில் உள்ளவர்களில் பெரும்பாலோர் சம்மதித்தால், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை காலஅவகாசம் இருப்பதால், இந்த மாற்றங்களைச் செய்வதற்கு அதிக காலம் எடுக்காது.

**கே: தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண முன்மொழியப்பட்ட தேசிய சபையை பல அரசியல் கட்சிகள் புறக்கணித்துள்ளன. இந்தச் சூழ்நிலையில் சபையின் எதிர்கால வாய்ப்புகள் என்னவாக இருக்கும்?**

பதில்: நமது அரசியல்வாதிகளுக்கு நாட்டைப் பற்றி அவ்வளவு அக்கறை இல்லை. அவர்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தைப் பற்றி மட்டுமே கவலைப்படுகிறார்கள் என்பதையே இது காட்டுகிறது. உண்மையில், இந்த ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் தேசிய பேரவைக்கான முன்மொழிவை நான் முதலில் கொண்டு வந்தேன்.

தேசிய பேரவை, இடைக்கால அரசு, சர்வகட்சி ஆட்சி வேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டு வந்தவன் நான். அப்போது அனைத்து அரசியல் கட்சிகளும் அதை நிராகரித்தன. அதன்பின்னரே பிரச்சினைகள் மற்றும் எதிர்ப்புக்கள் அனைத்தும் தொடங்கியிருந்தன. பிரச்சினைகள் தீவிரமடைந்த பின்னரே எல்லோரும் தேசிய பேரவைக்கான கோரிக்கையை முன்வைத்தனர். இருப்பினும், அவர்களால் இன்னும் ஒருமித்த கருத்துக்கு வர முடியவில்லை. அதன் பிறகு நாங்கள் ஆட்சி அமைக்க வேண்டியதாயிற்று. மீண்டும் பெரும்பாலான கட்சிகள் தேசிய பேரவையில் பங்கேற்க விரும்பவில்லை என்று கூறுகின்றன. இது அவர்களின் நிகழ்ச்சி நிரல் ஆகும்.

உண்மையில் நாட்டின் மற்றும் மக்களின் கவலைகள் அல்ல என்பதையே இது காட்டுகிறது. அவர்களின் கவலை அவர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரல் பற்றியது மட்டுமேயாகும்.

**கே: உத்தேச புனர்வாழ்வு சட்டமூலம் குறித்து பல்வேறு பிரிவுகளால் கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. மேலும் இந்தச் சட்டம் போராட்டக்காரர்கள் மற்றும் அரசியல் ரீதியாக எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர்களை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பும் திட்டம் என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்: சில குறிப்பிட்ட பிரிவினர் எப்படி நினைக்கிறார்கள் என்பது வெறும் கட்டுக்கதையே. இந்தச் சட்டமூலத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் 2010ஆம் ஆண்டே ஆரம்பமாகியிருந்தன. குறிப்பாக எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பது இதன் நோக்கமாக இருந்தது. தற்போது, புனர்வாழ்வுப் பணிகளை செய்து வருகிறோம். கந்தகாடு பகுதியிலும் ஏராளமானோர் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர். இது போன்ற இன்னும் பல இடங்கள் உள்ளன, ஆனால் சிலர் கைதிகளாக செல்கின்றனர். எனவே, இதுபோன்ற சட்டம் கொண்டு வருவதற்கு சில யோசனைகளும் எதிர்ப்புகளும் இருந்தன.

இவ்வாறான செயற்பாடுகளை முறைப்படுத்துவது மற்றும் மறுவாழ்வுக்கான சட்டபூர்வ பொறிமுறையை உருவாக்குவதே இச்சட்டமூலத்தின் பிரதான நோக்கமாகும். இரண்டாவது விடயம் என்னவெனில், போதைக்கு அடிமையானவர் போன்ற ஒருவரை மறுவாழ்வுக்காக அனுப்ப வேண்டும் என்றால், நீதிமன்ற உத்தரவைப் பெற வேண்டும். இப்போது போதைக்கு அடிமையானவர்களின் சில பெற்றோரும் உறவினர்களும் நீதிமன்றத்திற்குச் செல்லாமல் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்கின்றனர். ஏனெனில் இது அவர்களின் குடும்பத்திற்கு களங்கத்தை ஏற்படுத்துவதைப் போன்றதாகும். இப்போது நீதிமன்ற உத்தரவு இல்லாதவரை நாங்கள் யாரையும் புனர்வாழ்விற்காக அழைத்துச் செல்ல எந்த ஏற்பாடும் இல்லை. இப்போது நாம் இன்னும் தன்னார்வ புனர்வாழ்வை எளிதாக்க வேண்டும்.

நான் அமைச்சராவதற்கு முன், இச்சட்டமூலம் தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்கள் சட்டமூலத்தை உருவாக்கும் போது காலிமுகத்திடலைப் பற்றி அவர்கள் சிந்திக்கவே இல்லை என்று நினைக்கிறேன். இது மக்களை வழிதவறிச் சென்றவர்களை நல்ல குடிமக்களாக மாற்றுவதற்கு மட்டுமே. இப்போது அது உச்சநீதிமன்றத்தில் உள்ளது. நாங்கள் எதையும் வலுக்கட்டாயமாக செய்ய விரும்பவில்லை. உச்சநீதிமன்ற தீர்ப்புக்காக காத்திருக்கிறோம். கட்டமைப்பு என்னவாக இருக்க வேண்டும் என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கட்டும்.

**கே: மேற்குலகின் அனுசரணையில் இலங்கையின் மனித உரிமைகள் பதிவுக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது, அதற்கு ஆதரவாக 20 நாடுகளும், எதிராக 7 நாடுகளும் வாக்களித்திருந்ததுடன், 20 நாடுகள் நடுநிலை வகித்திருந்தன. இது இலங்கைக்கு எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்?**

பதில்: நாம் சார்ந்திருக்கும் நாடாக இருப்பதால் அது எங்களை மிகவும் மோசமாக பாதிக்கும். நமது ஜி.எஸ்.பி பிளஸ் இல்லாவிட்டால், நமது பொருளாதாரத்தை நிலைநிறுத்த மீன் ஏற்றுமதி மற்றும் அது போன்ற விஷயங்களைத் தொடர்வது கடினம். எனவே, மிகக் கடுமையான கஷ்டங்களும், பின்விளைவுகளும் ஏற்படலாம். ஆனால் தீர்மானத்திற்கு அனுசரணை வழங்கியவர்களுடன் நாங்கள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளோம். உள்ளக உரையாடல் மூலம் பிரச்சினையைத் தீர்க்க நாங்கள் முயற்சிக்கிறோம், மேலும் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மீட்டெடுப்பதற்கான எங்கள் உண்மையான முயற்சிகளையும் காட்டுகிறோம். இது தொடர்பாக நான் ஏற்கனவே பல தூதுவர்கள் மற்றும் அரசு பிரதிநிதிகளிடம் பேசியுள்ளேன்.

> ‘எனது அறிவுக்கு எட்டியவரை யாரும் தேர்தலை ஒத்திவைக்க விரும்பவில்லை. அதைத் தள்ளிப்போடுவதில் என்ன நோக்கமிருக்கிறது?’




# வீணான விமர்சனங்களில் அக்கறை செலுத்த வேண்டிய அவசியமில்லை!

புதுடில்லிக்குள் பிரவேசிப்பதற்கான அடையாளம் எனப் பெயர் பெற்ற ராஜ்பாத் பாதை 'கர்த்தவ்யபாத்' என அண்மையில் பெயரிடப்பட்டது. காலனித்துவ ஆட்சியின் கீழிருந்த இந்தியாவின் புதுடில்லி நகரில் மிகவும் அழகான மற்றும் நிர்வாகப் பிரதேசத்தை இணைக்கும் இந்தப் பாதை அன்றைய காலத்தில் ஐந்தாவது ஜோர்ஜ் மன்னரின் பெயரால் பெயரிடப்பட்டிருந்தது.

சுதந்திரத்தின் பின்னர் ஹிந்தி மொழிபெயர்ப்பாக ராஜ்பாத் என அழைக்கப்பட்டது. 75 வருடங்களுக்குப் பின்னர் புதிதாக பெயர் சூட்டப்பட்ட 'கர்த்தவ்யபாத்' பாதைக்கு அருகே புதிய அதிகாரவரம்பு நடைபாதை அமைக்கப்படுகிறது. அதிகாரவரம்பு பாதை என அழைக்கப்படுவதற்கு காரணம் உண்டு. ஜனாதிபதி, பிரதமர் காரியாலயம், பாராளுமன்ற தொகுதி மற்றும் பெருமளவு அரசகாரியாலயங்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கம் கூறுவது போன்று இந்தப் பிரதேசம் மக்களின் பணிகளுக்காகவே அபிவிருத்தி செய்யப்படுகின்றது. அதாவது அவர்களின் அன்றாட நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்காகும்.

ஜனாதிபதி மாளிகையான 'ராஷ்டிரபதி பவன்' இல் இருந்து 'இந்தியன் கேட்' வரை அதாவது யுத்தநினைவு ஸ்தூபி வரை மூன்று கிலோ மீட்டர் தூரம் அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் 2026 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த நிதி இந்திய ரூபாவில் 20,000 கோடியாகும். மாறும் மதிப்பீட்டுக்கு அமைய முழுமையாக திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் இதன் செலவு திட்டமிட்டதை விட அதிகரிக்கும் என கருதப்படுகின்றது. சாதாரண நிலப் பகுதியில் அபிவிருத்திக்காக பெரும் பணத்தை செலவிடுவதை சில தரப்பினர் விமர்சிக்கின்றார்கள். பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கம் மாறும் கருத்துகளுக்கு ஏற்ப முடிவுகளை மாற்றத் தயாரில்லை.

இந்த அதிகார வரம்பு நடைபாதையை அமைக்கும் திட்டத்துடன் இந்தியாவின் புராதனத் தன்மை இல்லாமல் போவதோடு, நவீனத்துவம் ஏற்படுமா என்ற கேள்வி எழுந்தது. பழைய கட்டமைப்பில் வாழ விரும்பும் தொழில் நிபுணர்கள் 60 பேர் இந்த மாற்றத்தை அனுமதிக்க முடியாது என பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தார்கள். நீண்ட காலம் இந்தியாவில் பணிபுரிந்த உயர்மட்ட அரசு அதிகாரிகள் அக்கடிதத்தில் கையொப்பமிட்டிருந்தார்கள். வரலாறு மறந்து போயுள்ளதுடன் சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது என குற்றச்சாட்டும் அணியினரின் கருத்துக்கு செவிசாய்க்காத அரசுக்கு எதிரான பல தரப்பினரும் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருந்தார்கள். எவ்வாறாயினும் இந்திய உயர்நீதிமன்றம் இந்த அபிவிருத்தி நடவடிக்கையை கைவிட முடியாது எனத் தீர்ப்பு வழங்கியிருந்தது.

இந்த அதிகார வரம்புக்கு உட்பட்ட 10 கிலோ மீற்றர் தூரத்திற்கு நடைபாதை இன்று உருவாக்கப்படுவதோடு, 40,000 சதுர மீற்றர் காணி அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பழைய பாராளுமன்ற கட்டடத்திற்கு அண்மையில் புதிய பாராளுமன்ற கட்டடம் அமைக்கப்படுகின்றது. தற்போதைய பாராளுமன்ற கட்டடம் 88 வருடங்கள் பைழமையானது என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. புதிய கட்டடம் அரசசபை உறுப்பினர்களுக்கு 888 ஆசனங்களையும் மற்றும் லோக்சபா உறுப்பினர்களுக்கு 384 ஆசனங்களையும் கொண்டது. 125 வருட எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அதனைஅமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்தியா தனது மாதிரியை மாற்றி வருவதோடு சுயமான புதிய தனித்தன்மையை உருவாக்கி வருகின்றது. மோடி அரசாங்கம் முடிவு செய்துள்ள அபிவிருத்தி யோசனைத் திட்டங்கள் பொதுமக்களின் நன்மைக்காக மாத்திரமல்லாமல் இறுதியில் பாரிய இராச்சியம் ஒன்றை உருவாக்கும் எனவும் தெரிகிறது. இன்னும் ஏழை மக்கள் வசிக்கும், ஆதார் கார்ட் மூலம் நிவாரணங்களை வழங்கும் இந்திய நாட்டுக்கு தாங்க முடியாத செலவு பற்றி சமூகம் விமர்சிக்கின்றது. ஆனால் அபிவிருத்தி மற்றும் முடிவெடுப்பதில் அரசாங்கம் வலுவாக உள்ளது.

தேவையற்ற விமர்சனங்களுக்கு இடமில்லாத பின்னணியை உருவாக்குவது தலைமைத்துவத்திடம் இருக்க வேண்டிய பண்பாகும். இலங்கை பல சந்தர்ப்பங்களில் ஒரு அடி முன்னால் வைக்கும் போது இரண்டடி பின்னால்தான் செல்கிறது. அண்மைக் காலமாக நடைபெற்ற சம்பவங்கள் எமக்கு நல்ல அனுபவங்கள் ஆகும். அதிகாரிகள் நன்றாக திட்டங்களை மேற்கொள்ள வேண்டியதோடு தலைவர்கள் முற்றிலும் கவனம் செலுத்தி முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது.

விடயங்கள் நிரல்படுத்தப்படும் போது பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் எதிர்காலத்தை பற்றி கவனம் செலுத்துவதை விடுத்து நடைபெறவுள்ள தேர்தல் குறித்து அக்கறை காட்டுகிறார்கள். நாட்டை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை தோல்வி அடைய செய்ய கூட்டுறவுத் தேர்தல் கூட போதுமானதாக காணப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அந்தத் தேர்தலின் முடிவு பாதிப்பை ஏற்படுத்துவதோடு ஊடகங்களில் இருந்து வரும் விமர்சனங்களால் பிரபல்யமும் இல்லாமல் போவதால் திட்டங்களை மாற்றும் சந்தர்ப்பங்களும் உள்ளன. விருப்புவாக்கு முறை இதற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள பாரிய காரணியாக உள்ளதாக தெரிகிறது.

தற்போது காணப்படும் தன்மையை கருத்தில் கொண்ட பின்னர் கல்வி,மின்சாரம், எரிபொருள், போக்குவரத்து மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் பாரிய மாற்றங்களை செய்ய வேண்டியுள்ளது. மின்சார உற்பத்தியில் செய்யக்கூடிய மாற்றங்கள் பற்றி அரசாங்கத்திடம் முடிவுகள் இல்லை. பாரிய செலவு செய்து உற்பத்தி செய்வதால் கட்டணம் நுகர்வோருக்கு சுமையாகின்றது. குறைந்த விலைக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய தனியார் பிரிவு அல்லது வெளிநாட்டு முதலீடுகள் பற்றிய முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. அதிகாரிகள் கூட தங்களுடைய தொழிலை பாதுகாக்க முயற்சிக்கிறார்கள். வழமையான முறைகள் மூலம் வாழ்வதோடு பழைய கட்டமைப்பை உடைக்க முயற்சி செய்வதில்லை.

அவ்வாறான பின்னணியில் அபிவிருத்தி இலக்கு தவறுகிறது. இன்று காணப்படும் நேர்மறை பொருளாதாரம் கடந்த காலத்தில் எடுக்கப்படாத முடிவுகளுக்காக செலுத்தப்படும் பாரிய நஷ்டஈடாகும். இன்று முடிவெடுத்து நாட்டை பலப்படுத்தினால் இலங்கையின் எதிர்கால சந்ததிக்கு வாழ்க்கை உண்டு. அண்டைய நாடான இந்தியா பின்பற்றும் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாட வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...

மலையக சமூகத்தின் 200 வருட பூர்த்தி;

# சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தெளிவூட்டல்

ஹற்றன் விசேட நிருபர்



மலையக சமூகம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்து 200 வருட பூர்த்தியினை முன்னிட்டு சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து தெளிவூட்டும் ஊர்வலம் ஒன்று நேற்று (22) திகதி ஹற்றனில் நடைபெற்றது.

இவ் ஊர்வலம் ஹற்றன் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் காலை 9.30 மணியளவில் ஆரம்பித்து ஹற்றன் நகர் ஊடாக ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் வரை ஊர்வலமாக சென்றது.

வளமான வாழ்விற்கான ஊர்வலம், ஆரோக்கியத்திற்கான ஊர்வலம், பாதுகாப்பிற்கான ஊர்வலம், கல்விக்கான ஊர்வலம், மலையக சிறுவர்களை பாதுகாப்போம் போன்ற சுலோக அட்டைகளை காட்சிப்படுத்தியவாறு கோசமிட்டதுடன் மேளதாள இசைகளும் சிறுவர்களால் இசைக்கப்பட்டன.

மலையக சிறுவர்கள் 200 வருட காலமாக கல்வி சுகாதாரம், போசாக்கு பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இதன் போது எடுத்துக்காட்டப்பட்டன.

அதனை தொடர்ந்து சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

# தெளிவத்தை ஜோசப் பல்வேறு கோணங்களில் தமிழுக்குப் பங்களிப்புச் செய்தவர்

## அனுதாபச் செய்தியில் ரவூப் ஹக்கீம் எம்.பி

மலையக மண்ணில் தோன்றி, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பல்வேறுபட்ட கோணங்களில் அளப்பரிய பங்களிப்பைச் செய்தவராக மறைந்த எழுத்தாளர் சாஹித்ய ரத்னா தெளிவத்தை ஜோசப் முத்திரை பதித்திருப்பதாக அவரது மறைவையொட்டி வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைக்காலத்தில் வடக்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும் தலைநகரிலும் புகழ் பூத்த இலக்கியவாதிகளை ஒவ்வொருவராக நாம் இழந்து கொண்டிருக்கின்றோம்.

மலையகத்தைப் பொறுத்தவரை எங்களது குடும்பத்தோடு தொடர்பைப் பேணி வந்து, நீண்ட காலத்திற்கு முன்னர் மறைந்த மூத்த எழுத்தாளர் என்.எஸ்.ஏ.ராமையயாவிற்குப் பிறகு நான் பெரிதும் மதிக்கும் இலக்கியவாதியாக மறைந்த தெளிவத்தை ஜோசப்பைக் காண்கின்றேன்.

சிறுகதை, நாவல், குறுநாவல் ஆசிரியராகவும், பத்தி எழுத்தாளராகவும், திரைப்பட கதை,வசன கர்த்தாவாகவும், தொகுப்பாசிரியராகவும், நூல்களுக்கு அணிந்துரை எழுதுபவராகவும், கூட்டங்களில் நயவுரை நிகழ்த்துபவராகவும் தெளிவத்தை ஜோசப் தடம்பதித்துச் சென்றிருக்கிறார்.

மறைந்த தெளிவத்தை ஜோசப்பின் குடும்பத்தினருக்கும்,உறவினர்களுக்கும், அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்கும் சிறுபான்மை அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் என்ற முறையிலும், தனிப்பட்ட முறையிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# பாடசாலை மாணவர்களுக்கு பாராளுமன்ற விவாதங்களை பார்வையிட வாய்ப்பு

பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறும் தினங்களில் பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கும் விவாதங்களைப் பார்வையிடுவதற்கும் பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பில் பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து முன்வைத்த யோசனைக்குப் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு நேற்று முன்தினம் (21) அனுமதி வழங்கியது.

இதற்கமைய பாராளுமன்றத்திலுள்ள பொதுமக்கள் கலரியிலிருந்து பாராளுமன்ற விவாதங்களைப் பார்வையிடப் பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

கொவிட்19 சூழல் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் கடந்த செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் தளர்த்தப்பட்டிருந்தபோதும் பாராளுமன்ற அமர்வு நாட்களில் பார்வையிடுவதற்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்த மட்டுப்பாடுகளும் தற்பொழுது தளர்த்தப்பட்டுள்ளன.

எனவே, பாடசாலை அதிபர்கள் தமது விண்ணப்பத்தை படைக்கல சேவிதருக்குக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் (0112777473 / 0112777335) அல்லது www.parliament.lk என்ற இணையவழியூடாக சமர்ப்பிக்க முடியுமென்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

# Air France,KLM Airlines; இலங்கையுடன் மீண்டும் போக்குவரத்து ஆரம்பம்

எயார் பிரான்ஸ் மற்றும் கே.எல்.எம் எயார் லைன்ஸ் விமான சேவைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 04 ஆம் திகதி முதல் கொழும்புக்கான விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதன்படி இந்த விமான நிறுவனங்கள் வாரத்துக்கு நான்கு விமானங்களை இலங்கைக்கு இயக்கவுள்ளன.

அதேசமயம் மேலும் பல விமான நிறுவனங்களும் சமீபத்திய வாரங்களில் கொழும்புக்கான விமானங்களை மீண்டும் தொடங்க அல்லது வாராந்த பயணங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப் போவதாக அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யா மற்றும் இந்திய விமான நிறுவனங்கள் இலங்கைக்கான பயணங்களின் அதிகரிப்பை உறுதிப்படுத்தியுள்ளன. கொரோனா தொற்று மற்றும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக விமான செயற்பாடுகள் தடைபட்டன.

எவ்வாறாயினும், தற்போதைய அரசாங்கம் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு விமான சேவைகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு சலுகைகளை வழங்கி வருகின்றது.

இந்திய பிரஜைகளை இலங்கைக்கு வருகைத் தருவதை ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவில் வீதி நிகழ்ச்சிகளையும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஏற்பாடு செய்திருந்தார்.

## சரத்வீரசேக்கர எம்.பி...

அதனையடுத்து, மூன்றாம் மதிப்பீடு மீதுவாக்கெடுப்பு இடம் பெற்றதுடன் சட்டமூலத்துக்கு ஆதரவாக 174 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், இதன் போதும் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் வீரசேக்கர சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்திருந்தாரென செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## தெளிவத்தை ஜோசப்பின்...

அன்னாரின் புகழுடல் இன்று 2.00 மணிவரை நீர்கொழும்பு வீதி, வத்தளையிலுள்ள மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பிற்பகல் 2.30 மணியளவில் வத்தளை புனித அன்னம்மாள் தேவாலத்திற்கு கொண்டு சென்று இறுதிச் சடங்கு ஆராதனை நடத்தப்படும்.

அதன் பின்னர் மாலை 4.00 மணிக்கு மட்டக்குளி மாதம்பிட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

எமது நாட்டின் ஜனரஞ்சக எழுத்தாளரும் முற்போக்குச் சிந்தனையாளருமான 'சாஹித்திய ரத்னா' விருது பெற்றவருமான தெளிவத்தை ஜோசப் கடந்த (ஒக் 21) தனது 88ஆவது வயதில் காலமானார்.

## இலங்கை தமிழர் 03 பேர்...

மன்னாரிலிருந்து படகு மூலம் புறப்பட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த 03 பேர் தனுஷ்கோடிக்கு அடுத்துள்ள மூன்றாம் மணல் திட்டில் இறக்கி விடப்பட்டுள்ளனர். இவர்கள் அங்கு அநாதரவாக இருப்பது தொடர்பில் கிடைத்த தகவலையடுத்து தமிழ்நாடு கரையோர பொலிசார் படகில் சென்று நேற்று சனிக்கிழமை அவர்களை மீட்டு தனுஷ்கோடிக்கு அழைத்து வந்து விசாரணை செய்தனர்.

இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களின் எண்ணிக்கை இத்துடன் 184 ஆக அதிகரித்துள்ளது.

## சுயாதீன ஆணைக்குழுக்கள்...

19 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதற்கு மீண்டும் கிடைத்துள்ளமை இலங்கைக்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரம் கிடைக்கும் விடயமென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் பிரதான எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் நேற்று முந்தினம் 178 மேலதிக வாக்குகளினால் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சட்டமூலத்துக்கு ஆதரவாக 179 வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் எதிராக 01 வாக்கு மட்டுமே பதிவானது.

கடந்த 20 ஆம் திகதியும் 21 ஆம் திகதியும் இரண்டு நாட்கள் 22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூல இரண்டாம் வாசிப்பு மீதான விவாதங்கள் நடைபெற்றன. நேற்று முன்தினம் மாலை 6.15 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பில் 22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக 179 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டன.

சட்ட மூலத்துக்கு ஆதரவாக ஆளும் கட்சியுடன் இணைந்து எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி , தமிழ் தேசியக் கூட்டமைப்பு,ஜே .வி.பி , தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, ஜீ.எல் பீரிஸ் , விமல் வீரவன்ச,வாசுதேவ நாணயக்கார தலைமையிலான சுயாதீன எதிர்க்கட்சி எம்.பிக்கள் வாக்களித்த அதேவேளை ஆளும் தரப்பில் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேக்கர எம் பி மட்டுமே எதிராக வாக்களித்திருந்தார்.

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையான 151 வாக்குகள் தேவையாக இருந்த போதும் 179 வாக்குகள் கிடைத்தன.

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பி.க்களான செல்வம் அடைக்கலநாதன் , சித்தார்த்தன்,ஸ்ரீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கோவிந்தன் கருணாகரன், கலையரசன் ஆகியோர் வாக்களித்த நிலையில் சுமந்திரன் எம்.பி.வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. அத்துடன் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன், விநோநோகராதலிங்கம் ஆகியோர் சுகவீனமுற்றிருப்பதாலும் சாணக்கியன் எம்.பி. வெளிநாடு சென்றுள்ளதாலும் வாக்களிப்பில் இவர்கள் பங்கேற்கவில்லை.

அதேவேளை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி.க்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் ஆகியோர் நேற்று சபையில் சமுகமளித்திருந்தபோதும் அவர் வாக்களிப்பின் போது சபையிலிருந்து வெளியேறியிருந்தனர்.

அதேவேளை, 22 ஆவது திருத்த சட்ட மூல விவாதத்திலோ வாக்கெடுப்பிலோ பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தலைமையிலான பசில் ராஜபக்ஷ ஆதரவு அணியினர் பங்கேற்கவில்லை.

அவர்களுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ,ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்த்தன,அரச தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அமைச்சர் மஹிந்த அமரவீர உள்ளிட்டவர்களும் பங்கேற்கவில்லை.

அதேவேளை சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சஷீந்திர ராஜபக்ஷ ஆகியோர் வாக்களிப்பில் பங்கேற்று 22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். எதிர்க் கட்சியில் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸும் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற நடைபெற்ற வாக்களிப்பில் ஆதரவாக 179 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் கிடைத்தன. ஆளும் மற்றும் எதிர்க்கட்சி தரப்பு 44 எம்.பி.க்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

அதேவேளை 22 ஆவது அரசியலமைப்பின் 03 ஆவது வாசிப்பின் போது 21 ஆவது திருத்தமாக மாற்றப்பட்டு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக 174 வாக்குகள் கிடைத்தன. எதிராக ஒரு வாக்கும் பதிவாகியிருந்தது.

எனவே 178 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட 22 ஆவது திருத்தச்சட்ட மூலத்தினூடாக அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களும் நிறுவப்பட்டு விடும் என்றும் சர்வதேசத்தில் இலங்கைக்கு ஒரு அங்கீகாரம் இதனூடாக கிடைக்கும் என அரசியில் ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

## உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய...

நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் மக்களின் போஷாக்கு மட்டத்தை மேம்படுத்துதல் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் (21) உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட தலைமையில் நடைபெற்றது.

புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சினால், சமய ஸ்தலங்களை மையமாகக் கொண்டு இந்த வேலைதிட்டத்தை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கூடாக 14,022 கிராம சேவகர் பிரிவுகளிலும் அமுல்படுத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, இப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்படும் உணவு பரிமாற்ற மையம், அப்பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய தேவைக்கு அதிகமான உணவுகளை சேகரித்து உணவு வங்கிக்கு வழங்கும். பின்னர் அந்த உணவு, உணவு வங்கியூடாக உணவு பற்றாக்குறையுடைய குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படும்.

மேலும் இச்செயற்பாட்டின் மூலம் தேவைக்கதிகமாக உள்ள உணவை இப் பிரதேசவாசிகளிடையே மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களில் உள்ளவர்களிடையேயும் பகிர்ந்தளிக்க முடிவதனால் உணவு வீண் விரயம் செய்யப்படுவதை தடுக்க முடியும்.

## தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க...

இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அதற்கிணங்க மேற்படி வங்கிகள் ஊடாக சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் ஆகக் குறைந்தது 10 மில்லியன் ரூபாவை 11 மற்றும் 12 வீத சலுகை வட்டியில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி 4,900 மில்லியன் ரூபா நிதி இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, கொமர்சல் வங்கி, ஹற்றன் நெஷனல் வங்கி, செலான் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, நேசன் டிரஸ்ட் வங்கி மற்றும் சம்பத் வங்கி ஆகிய வங்கிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக விவசாய சமூகத்தினர்,சுற்றுலாத்துறை மற்றும் ஏற்றுமதித் துறைக்கு தேவையான உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள துறைகள், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் ஆகியோரை முன்னேற்றும் நோக்கில் இத்தகைய செயற்திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

இத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பொருளாதார மற்றும் தேசிய கொள்கைகளுக்கான அமைச்சும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இணைந்து இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எங்கள் கருத்து

## ஈழத்து இலக்கியக் களத்தின் போராளி தெளிவத்தை யோசப்!

சந்தனசாமி ஜோசப் என்ற இயற்பெயரையுடைய அந்த மாபெரும் கலைஞர், தான் வாழ்ந்த 'தெளிவத்தை' என்ற ஊரை தனது பெயரின் முன்பாக பெருமையாகச் சூடிக் கொண்டு ஓயாமல் எழுதிக் குவித்தார். அந்த ஓயாத உழைப்பின் பிரதிபலனை எதிர்பாராது தனது வாழ்வையே இலக்கியத்துக்காக அர்ப்பணித்தார்.

அவரது படைப்புகள் ஏராளம். ஆறு நாவல்கள், மூன்று சிறுகதைத் தொகுதிகள் உட்பட பல நூல்களை வெளியிட்டுள்ள தெளிவத்தை ஜோசப், இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'புதிய காற்று' திரைப்படத்திற்கும் தொலைக்காட்சி நாடகத்துக்கும் திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார். அவர் பெற்றுள்ள பரிசுகள், விருதுகள் எண்ணிலடங்காதவை.

இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்களின் ஆதிக்கம் இல்லாத காலப்பகுதியில் மலையக மக்களின் அவலங்களை தனது இலக்கியத்தின் வாயிலாக வெளியுலகுக்குக் கொண்டு வருவதிலும், உள்நாட்டு தமிழிலக்கியத்தை வளர்ப்பதிலும் ஓயாமல் உழைத்த இலக்கியப் போராளி அவர். தமிழினத்தில் தனியொரு சமூகத்தின் மைந்தன் என்றில்லாமல் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்துப் பிரதேச தமிழர்களாலும் போற்றி மதிக்கப்பட்ட பண்பாளர் தெளிவத்தை யோசப் ஆவார்.

புதிய படைப்பாளிகளை இலக்கியக் களத்தினுள் அறிமுகப்படுத்துவதிலும், இலக்கிய ஆர்வலர்களை நட்புவட்டத்தினுள் ஒன்றுசேர்ப்பதிலும் அவர் போன்று மற்றொருவரைக் காண முடியவில்லை. கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் மாத்திரமன்றி, பல்வேறு மண்டபங்களிலும் நடைபெறுகின்ற இலக்கியச் சந்திப்புகளில் அன்னாரின் பிரசன்னம் தவறாமல் இருக்கும். உடல் தளர்ந்த பருவத்திலும் அவர் சிரமத்துடன் அங்கெல்லாம் வரத்தவறுவதில்லை. அவரைச் சூழ்ந்தபடி அபிமானிகள் கூட்டமொன்றையும் அங்கு காணலாம்.

இவ்வாறெல்லாம் தெளிவத்தை ஜோசப் அவர்களைப் பற்றி கூறுவதற்கு நிறையவே உள்ளன. ஆனால் நாம் தெளிவத்தை யோசப்புடன் பேசுவதற்கு அவர் இனிமேல் இல்லையென்பது வேதனையையே தருகின்றது.

## தாழமுக்கம் சூறாவளியாக ...

கடும்மழை, பலத்த காற்று, கடல் கொந்தளிப்பும் காணப்படும் என்றும் மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதில் கவனமாக செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ள வளிமண்டலவியல் திணைக்களம் அது தொடர்பில் செம்மஞ்சள் எச்சரிக்கையையும் எடுத்துள்ளது.

நாட்டின் மேற்கு மற்றும் வடமேற்கு திசையை நோக்கி நகரும் மேற்படி தாழமுக்கம் இன்று 23ஆம் திகதி காற்றழுத்த மண்டலமாகவும் அதனையடுத்து நாளை சூறாவளியாகவும் மாற்றமடைய வாய்ப்புள்ளதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதனையடுத்து வடக்கு மற்றும் வடகிழக்கு திசை ஊடாக மேற்படி தாழமுக்கம் 25ஆம் திகதி மேற்கு வங்கம் மற்றும் பங்களாதேஷ் கடற்கரையை நோக்கி நகரும் என எதிர்பார்ப்பதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடற்பரப்புகளில் கடும் காற்று மற்றும் இடியுடன் கூடிய மழையும் கடல் கொந்தளிப்பும் காணப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ள அந்த திணைக்களம் கடல் தொழிலில் ஈடுபடுபவர்கள் பாதுகாப்பாக செயற்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

நேற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி இடம்பெற்ற நிலையில் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை தொடரும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல்மாகாணம், சப்ரகமுவமாகாணம் ,மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மாத்தறை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் கிழக்கு, ஊவா மாகாணங்கள் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று அந்த காலங்களில் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்கள் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் உள்ளதாகவும் அதிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள மக்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மேலும் தெரிவித்துள்ளது.

## இ.தே.தோ.தொ சங்கத்...

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கட்சியின் முகாமைத்துவச் சபைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக பதவி வகிக்கும் சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இந்த கூட்டத்தில் கலந்துக் கொண்டுள்ளதுடன் தான் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து விலக தீர்மானித்துள்ளதாக கூறியுள்ளார்.

இதனால், புதிய தலைவரை நியமிக்குமாறும் அறிவித்துள்ளார். இதற்கமைய ஜனாதிபதியின் பணிக்குழுவின் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான சாகல ரத்நாயக்கவை சங்கத்தின் தலைவராக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் ஹரின் பெர்னாண்டோ பதவியிலிருந்து விலகிய பின்னர்,சாகல ரத்நாயக்க, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக நியமிக்கப்படவுள்ளார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஐக்கிய தேசியக்க ட்சியின் பழையதொழிற்சங்கங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

## கொடுத்த வாக்குறுதிகளை...

மகிழ்ச்சியளிப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

கட்டம் கட்டமாக அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ ஆகியோருக்கு தமிழ் மக்கள் சார்பில் தனது நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னர், எதிர்கால ஜனாதிபதி பற்றிய கேள்விகள் நாட்டில் தோன்றிய போது, பலரும் தடுமாறிக் கொண்டிருந்தபோது, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை வழிநடத்தப் பொருத்தமானவரென்பதை நாம் திட்டவட்டமாக தெரிவித்திருந்தோம்.

அத்துடன் அவரை நாட்டின் ஜனாதிபதியாக மாற்றுவதற்காக வெளிப்படையாக பல்வேறு செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தோம்.

அன்றைய நாட்களில் எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவற்றுள் ஒன்றான அரசியல் கைதிகள் தொடர்பாகவும் சாதகமாக பரிசீலிக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார்.

அந்த வாக்குறுதியை தற்போது கட்டம் கட்டமாக நிறைவேற்றி வருகின்ற ஜனாதிபதி, தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பான ஏனைய விடயங்களிலும் ஆரோக்கியமான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும்.

அதேவேளை ஜனாதிபதியின் ஆரோக்கியமான செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் பூரண ஒத்துழைப்பை வழங்குவோமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# மக்கள் வழங்கும் ஆதரவை ஆற்றில் கரைத்த புளியைப்போல கரைத்துவிடும் தமிழ் தலைமைகள்

## சுமைகாவிகளாகவே வாழ்க்கையை தொடரும் அவலம் மக்களுக்கு

கருணாகரன்...

"தமிழரசுக் கட்சி மட்டுமா தவறிழைத்துள்ளது? எதற்காக அதை இப்படிப் போட்டுத் தாக்கியிருக்கிறீங்கள்? தந்தை செல்வா காலத்திலிருந்து இன்று வரை அது சந்தித்த சோதனைகள் கொஞ்சமல்ல. இருந்தாலும் அதைத்தானே தமிழ் மக்கள் இன்னும் ஆதரிக்கிறார்கள்! இதை எப்படி உங்களால் மறுக்க முடியும்? தமிழரசுக் கட்சியுடன் கூட்டு வைத்துக் கொண்டதால்தான் தமிழ்க்காங்கிரஸ் பிழைத்தது. இதை மிகப் பெரிய கெட்டிக்காரரான ஜீ.ஜீ. பொன்னம்பலமே புரிந்து கொண்டு செயற்பட்டார். இதன் விளைவாக உருவானதே தமிழர் விடுதலைக் கூட்டணி. ஜீ.ஜீ. பொன்னலம்பலத்துக்கு விளங்கியது குமார் பொன்னம்பலத்துக்கும் விளங்கவில்லை. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் விளங்கவில்லை. அதனால்தான் அவர்கள் அதிதீவிரமாகச் சிந்திக்கிறார்கள். அதிதீவிரமாகச் சிந்திப்பது பிரச்சினையில்லை. அப்படிச் சிந்திக்கின்ற அளவுக்கு அவர்கள் அதிதீவிரமாகச் செயற்படவும் வேண்டும். ஆனால், அப்படியொன்றும் இல்லை. அப்படியான ஆட்களையே விட்டிட்டு தமிழரசுக் கட்சியை மட்டும் இலக்கு வைத்துத் தாக்குவதன் உள் நோக்கம் என்ன? ஒப்பிட்டளவில் தமிழ் மக்கள் மட்டுமல்ல, முஸ்லிம்களும் தமிழரசுக் கட்சியை இணக்கமாகத்தான் பார்க்கிறார்கள். மற்றக் கட்சிகளை விட தமிழரசுக் கட்சியோடுதான் முஸ்லிம்களுடன் உறவும் உண்டு. ஹக்கீமுக்கும் சம்பந்தன் ஐயாவுக்கும் உள்ள அரசியல் உறவையும் நெருக்கத்தையும் உலகமே அறியும். அதைப்போல சிங்களக் கட்சிகளும் அரசியலிலும் அரசியலுக்கு அப்பாலும் தமிழரசுக் கட்சியை ஒரு முக்கியமான தரப்பாகவே பார்க்கிறார்கள். இந்தளவுக்கு வேறு எந்தத் தமிழ்க்கட்சிக்கும் ஒரு முக்கியத்துவமும் கிடையாது. இதற்குக் காரணம், தமிழரசுக் கட்சியின் நிதானமான அரசியல் நிலைப்பாடுதான். நீங்கள் ஒரு உண்மையை உணர வேண்டும். தமிழரசுக் கட்சியோடு காங்கிரஸ் உறவு வைத்திருந்ததால் அது தப்பிப் பிழைத்தது. அதைப் போல இப்பொழுது ரெலோவும் புளொட்டும் உறவு வைத்திருக்கின்றன. அந்த உறவை ரெலோவும் புளொட்டும் கை விட்டால் சுரேஸ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல். எவ்வுக்கு நடந்த கதைதான் நடக்கும். ஆகவே தமிழரசுக் கட்சியை ஒதுக்கி விட்டு யாரும் தனித்து நின்று ஜெயிக்க முடியாது. அன்றைய தந்தை செல்வா தொடக்கம் அமிர்தலிங்கம், இன்றைய சம்மந்தன் ஐயா வரை அனைவரிடத்திலும் காணப்படும் அரசியல் முதிர்ச்சியும் இதற்குக் காரணம். சம்மந்தன் ஐயாவைச் சிலர் விமர்சிக்கிறார்கள். ஆனால், அவரை விட்டால் வேறு யார் நல்ல தலைவர் உண்டு? இதையெல்லாம் புரிந்து கொண்டு கருத்துச் சொல்லுங்கோ.அதுதான் நல்லது." என்று என்னுடைய கடந்த வாரக் கட்டுரையைப் படித்து விட்டுத் தொலைபேசியில் அழைத்துப் பேசினார், தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர்.

"தமிழரசுக் கட்சியின் எதிர்காலம்?" எப்படி இருக்கும்? என்ற தலைப்பில் கடந்த வாரம் நான் எழுதிய கட்டுரைக்கான பதிலே அதுவாகும். அந்தக் கட்டுரையில் (கடந்த வாரம் அதைப் படிக்க முடியாதவர்களுக்காக) தமிழரசுக் கட்சின் கடந்த கால, நிகழ்காலத் தவறுகளைப் பேசி, அது எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு என்ன மாதிரியான விளைவுகளை



உண்டாக்கும் என்று எழுதியிருந்தேன். அதனுடைய பிரதிபலிப்புகள் தமிழரசுக் கட்சிக்குள்ளும் வெளியிலும் எதிரொலிக்கின்றன.

அரசியல் விருப்புகளும் தெரிவுகளும் எப்போதும் தனிநபர் விருப்பங்களோடு மட்டுப் பட்டிருப்பதில்லை. அதனுடைய செல்வாக்கும் தாக்கமும் பொதுவானது. அரசியலின் இயல்பும் குணமும் அதுவாகும். எனவேதான் அதைத் தனிநபர்களின் தெரிவு என்பதாகப் புரிந்து கொள்ள முடியாது எனப்படுவதுண்டு. அது ஒரு கூட்டுத்தீர்மானமாகப் பரிமாணம் கொள்வதால் அதனால் உண்டாகும் நன்மை தீமைகள் அனைவரையும் பாதிக்கும்.

தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொருவருக்கும் விருப்புக்களும் தெரிவுகளும் இருக்கலாம். அது அவர்களுடைய உரிமையும் சுதந்திரமும் கூட. ஆனால் அந்த விருப்பமும் தெரிவும் பரவலாக நிகழும்போது – திரட்சியடைந்திருக்கும்போது அது ஒரு கூட்டுத் தெரிவாகவும் தீர்மானமாகவும் மாறி விடுகிறது. அதுவே குறித்த தரப்பின் அரசியல் போக்காகவும் அடையாளமாகவும் மாறி விடுகிறது. இது அந்தத் தரப்பின் (மக்களின்) நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கிறது.

இதற்குப் பல காரணங்கள் செல்வாக்குச் செலுத்தும். எதிர்த்தரப்பின் நடவடிக்கைகள். உரிய கட்சிகளின் கொள்கையும் நடைமுறைகளும். ஊடகங்களின் செயற்பாடும் ஆதரவும், பிரதேச ரீதியாக உள்ள இன, மத, சாதிய, பிரதேச, பால் ரீதியான அறிமுகங்களும் செல்வாக்கும், பிராந்திய, சர்வதேச சக்திகளின் தூண்டல்கள் அல்லது அமுக்கல்கள் எனப் பலவாக இது அமையும்.

தமிழரசுக் கட்சியின் அரசியற் பயணத்திலும் இதெல்லாம் உண்டு. சிங்கள அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறையை தமிழரசுக் கட்சி வலுவாகப் பயன்படுத்தி வந்திருக்கிறது. இப்பொழுதும் அதையே அது பயன்படுத்துகிறது. இதை அந்தக் கட்சியின் 60 ஆண்டுகளுக்கு மேலான பாராளுமன்ற வரலாறே நிரூபிக்கும். வேண்டுமானால் அந்தக் கட்சியைப் பிரதிநித்துவம் செய்து வந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகளே சான்று பகரும்.

தொடக்கத்தில் தமிழ் பேசும் மக்களின் விடுதலையை மையப்படுத்திப் பேசி வந்த தமிழரசுக் கட்சி, பின்னாளில் தமிழ் – சிங்கள முரண்பாட்டுவாதத்தில் சிக்கி விட்டது. இப்பொழுது அது தமிழ் – சிங்கள மோதலாகவும் சிங்கள வெறுப்புவாதமாகவும் சுருங்கி விட்டது. ஆகவே தமிழரசுக் கட்சி சுயமாக எதையும் சிந்திப்பதற்குப் பதிலாக அரசாங்கத்தரப்பிலிருந்தும் சிங்களத் தீவிரவாதத் தரப்பிலிருந்தும் வருகின்ற கருத்துகளுக்கு மறுப்புச் சொல்கின்ற – மறுத்தான் அரசியலையே செய்கிறது. இதைப்பற்றி நாம் பேசினால் அது தமிழரசுக் கட்சிக்கு எதிரான மனநிலையின் வெளிப்பாடு என்று புரிந்து கொள்ளப்படுகிறது. தமிழரசுக் கட்சியினருடைய பார்வையில் அது தங்களை மட்டும் இலக்கு வைத்துத் தாக்கியதாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

உண்மையில் தமிழரசுக் கட்சி அரசியல் ரீதியாக ஒரு செத்துப் போன பாம்பே. அதனால் எந்தச் சாதனைகளையும் நிகழ்த்த முடியாது. தமிழரசுக் கட்சி மட்டுமல்ல, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் அல்லது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி போன்றவையும் அவ்வாறானவையே. தமிழரசுக் கட்சி மீதான விமர்சனம் என்பது அதனுடைய அரசியலை வெவ்வேறு விதமாக முன்னெடுக்கின்ற ஏனைய தரப்புகளுக்



கும் பொருந்தும். அவை எதற்கிடையிலும் எந்தப் பெரிய வித்தியாசங்களையும் காண முடியாது. குமுதம் பத்திரிகையில் வருகின்ற ஆறு வித்தியாசங்களில் கூட ஊன்றிக் கவனித்தால் சிறிய வித்தியாசங்களைக் காண முடியும். இவற்றில் நுணுக்குக் காட்டியை வைத்துப் பார்த்தாலும் வேறுபாடுகள் எதையும் காண முடியாது. அத்தனையும் ஒரே அரசியல் வியாபாரக் கம்பனிகளே!

எனவேதான் இந்த வணிகக் கம்பனிகளோடு இந்தியாவும் சர்வதேச சமூகமும் தென்னிலங்கையும் தமக்குத் தோதான வணிகப் பேச்சுகளை தமக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் மேற்கொள்கின்றன. தமக்குத் தேவையான விதத்தில் உறவையும் வைத்துக் கொள்கின்றன.

இதொன்றும் புதினமல்ல. இது பலரும் அறிந்த உண்மை. இனியும் இதுதான் நடக்கப் போகிறது. இதைச் சரியாகச் சொன்னால், இவை தமது மக்களுக்குச் சேவை செய்வதைவிட, தமது மக்களுக்கு உண்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பதை விட, தமது மக்களுடைய நலன்களைக் குறித்துச் சிந்திப்பதை விட பிறருக்கு லாபகரமாகவே சிந்திக்க முற்படுகின்றன. இதனால்தான் இவற்றினால்



தமிழ் மக்கள் எந்த நன்மைகளையும் பெற முடியாமல் உள்ளது. இனியும் இதுதான் நடக்கும். தமிழ் மக்கள் எவ்வளவு ஆதரவைத் திரண்டு நின்று வழங்கினாலும் அதை ஆற்றில் புளியைக் கரைப்பதைப் போல கரைத்து விடுவர். பதிலாக அந்த ஆதரவைத் தமக்குரிய அங்கீகாரமாக எடுத்துக் கொண்டு தமக்கான பேரத்தைப் பேசி முடித்து விடுவர்.

இதனால்தான் மக்கள் மேலும் மேலும் பிரச்சினைகளைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றனர். பிரச்சினைகளின் மேல் பிரச்சினைகள். சுமைகளின் மேல் சுமைகள் எனச் சுமைகாவிகளாகி நிற்கின்றனர். காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, உடல் உறுப்புகளை இழந்த நிலையிலான பிரச்சினை, உளநிலை பாதிக்கப்பட்ட பிரச்சினை, உறவுகளை இழந்தால் ஏற்பட்டுள்ள பிரச்சினை, நிலத்தைப் பறி கொடுத்ததால் சந்தித்துள்ள பிரச்சினை, தொழில் வாய்ப்பையும் வருவாயையும் இழந்ததால் ஏற்பட்டுள்ள நெருக்கடி, வளங்களையும் வாழ்நிலையையும் இழந்ததால் உருவாகியுள்ள பிரச்சினை இப்படி ஏகப்பட்ட பிரச்சினைகள்.

தலைவர்களோ இந்தப் பிரச்சினைகளைப் பேசிப் பேசியே தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்கின்றனர். எந்தத் தலைவரும் எந்தப் பிரதிநிதியும் மக்களோடு சேர்ந்து வாழ்வதேயில்லை. அவர்கள் வேறு. தாம் வேறு என்ற பிரிகோட்டினைப் பக்குவமாக வைத்துக் கொண்டே செயற்படுகின்றனர். இதனால்தான் இந்த அரசியல் மக்கள் அரசியலாக இல்லாமல் பிரமுகர் அரசியலாக உள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

# அக்டோபர் 22 இந்தியாவுக்கு கரிநாளான பின்னணி என்ன?



சில நாடுகள் தோன்றும் போதே ரத்தக் களறியுடன்தான் தோன்றுகின்றன. 75 ஆண்டுகளுக்கு முன்பு ஜம்மு காஷ்மீரை ஆக்கிரமித்ததன் மூலம் பாகிஸ்தான் தோற்றம் பெற்றது. காஷ்மீர் மீதான வெறியால் இன்றும் அது மேலும் அழிவின் விளிம்பை நோக்கிச் செல்கின்றது. காஷ்மீரை ஆக்கிரமிக்கும் அதன் ஆசை தனது சொந்த குடிமக்களின் பொருளாதார தேவைகளையும் அலட்சியப்படுத்துகின்றது.

பாகிஸ்தானின் காஷ்மீர் மீதான வெறி ஜனநாயகம் உட்பட அனைத்தையும் கட்டுப்படுத்தும் ஒரு சுய சேவை இராணுவ சிவில் ஸ்தாபனத்திற்கு வழிவகுத்தது. இது மில்லியன் கணக்கான பாகிஸ்தானியர்கள் தாங்கள் விரும்பும் பிரதேசத்தை கைப்பற்ற முடியும் என்ற மாயையுடன் வளர வழிவகுத்தது. இது மக்களுக்கு இயல்புநிலையை மறுத்து, அமைதியையும் முன்னேற்றத்தையும் தடை செய்துள்ளது. நிதி இராணுவத்திற்குச் செல்வதால் மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். இந்தியாவிலிருந்து பிரிந்த ஒன்பது நாட்களில் பாகிஸ்தான் கஷ்மீரை ஆக்கிரமித்தது. அது முதலில் ஆயுதமேந்திய வீரர்களையும், பின்னர் வழக்கமான படைகளையும் காஷ்மீர் மீது படையெடுக்க அனுப்பியது. இந்த தாக்குதலை மேஜர் ஜெனரல் அக்பர் கான் வழிநடத்தினார். கஷ்மீர் ஆக்கிரமிப்புக்கு பாகிஸ்தான் ராணுவம் 'ஆபரேஷன் குல்மார்க்' என்று பெயரிட்டது. 1970 இல் தாமதமாக வெளியிடப்பட்ட கானின் பெருமைமிக்க புத்தகம், காஷ்மீரை ஆக்கிரமிக்கும் செயல்பாட்டின் தன்மை மற்றும் நோக்கம் பற்றி வாதிடவே இல்லை. இந்தியா அக்டோபர் 22 ஆம் திகதியை "கருப்பு தினமாக" அனுஷ்டிக்கிறது. மஹாராஜா ஹரி சிங் கையொப்பமிட்ட பிறகுதான் இந்தியா துருப்புக்களை அனுப்பியது என்பதை உலகுக்குச் சொல்வதற்காக இது அனுஷ்டிக்கப்படுகிறது.

75 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த சம்பவத்தை நினைவுகூருவது பொருத்தமானது, ஏனெனில் பாகிஸ்தான் இதுவரை ஜம்மு காஷ்மீர் தொடர்பாக இந்தியாவுடன் நான்கு போர்களை நடத்தியது. மேலும், பாகிஸ்தான்தான் இந்த நான்கு போர்களையும் துவக்கி வைத்தது, ஆனால் அதன் நோக்கத்தை அடையத் தவறியதால், உலகம் பாகிஸ்தானை ஒரு 'தோல்வியடைந்த' நாடாகப் பார்க்கிறது.

# பதவியிலுள்ள அரசுக்கு இந்திரா காங்கிரஸின் தலைமை சவாலா?

இந்திரா காங்கிரஸின் புதிய தலைவராக கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த மல்லிகர்ஜுன் கார்கே தெரிவாகியுள்ளார். 24 வருடங்களுக்குப் பின்னர், காந்தி குடும்பத்தவர் இல்லாதவருக்கு இப்பதவி கிடைத்துள்ளது. மேலும் ஐம்பது வருடங்களுக்குப் பின்னர் தென்னிந்திய மாநிலத்தவர் ஒருவர் கட்சியின் தலைமைப் பதவிக்கு வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவரை தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு கடந்த திங்கட்கிழமை (17) நடந்தது. ஒவ்வொரு மாநிலங்களினதும் தலைநகரில் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டு வாக்களிப்பு இடம்பெற்றது. இதில்,தென்னிந்திய மாநிலங்க ளைச் சேர்ந்த இருவர் போட்டியிட்டனர். கேரளா சஷிதரூக்கு 1072 வாக்குகளும், கர்நாடகாவின் மல்லிகர்ஜுன் கார்கே 7897 வாக்குகளையும் பெற்றனர். போட்டியிட்ட இருவரும் தலித் இனத்தவர்களாவர். இதனால்,சுமார் அரைநூற்றாண்டுக்குப் பின்னர் தலித் இனத்தவர் இந்திரா காங்கிரஸின் தலைவர் பதவிக்கு தெரிவாகினார். இந்தியாவின் சுதந்திரத்தில் பிரதான பங்காற்றிய 137 வருட வயதுள்ள காங்கிரஸ், முன்னாள் பிரதமர் ராஜீவின் மறைவின் பின்னர் பெரும் பின்னடைவுக்குள் தத்தளித்தது. காந்தி பரம்பரையை பொருட்படுத்தாத அளவுக்கு எதிரணியான பி,ஜே,பியின் செல்வாக்கு உச்சத்துக்கு உயரும் நிலை ஏற்பட்டது.இது, ஏன்? இப்படி பல கோணங்களில் ஆராயப்பட்டதில் பல நிதர்சனங்கள் வெளிச்சத்தில் தெரியத் தொடங்கியுள்ளது. பிரதமர் மோடியின் வெளிநாட்டுக் கொள்கையே இதுவரைக்கும் இந்தியர்களை கவர்வதாக ஒரு கணிப்பீடும் உள்ளது. இது தவிர, வட இந்திய மாநிலங்களில், இந்



துத்துவ சக்திகளின் ஆதரவு அதிகரித்திருப்பதாகவும் கருதப்படுகிறது. மேலும், பிஜேபி ஆட்சியில் இந்தியா அடைந்துள்ள அசுர வளர்ச்சி, உள்ளூர் வாக்காளர்களை உற்சாகப்படுத்தியுள்ளதும் அவதானிக்கப்பட வேண்டியதே! அணு உலையில் இயங்கும் நீர்மூழ்கியை கண்டுபிடித்துள்ள இந்தியா, அதிலிருந்து கண்டங்களை கடந்து சீறிப்பாயும் ஏவுகணைகளையும் ஏவி, பலப்பரீட்சை நடத்தியுள்ளது. சுமார் மூவாயிரம் கிலோமீற்றர் வீச்செல்லையில் விழுந்த இந்த ஏவுகணைகள், ஏவிய இலக்குகளில் குறித வாறாது வெடித்துள்ளன. இதனால், இந்தியாவின் கடற்படைப்பலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அணுவாயுத பலமுள்ள ஐந்து வல்லரசுகளுக்கு அடுத்தபடியாக ஆறாவது வல்லரசாக இந்தியா வளர்ந்து நிற்கிறது.

இந்நிலையில், தென்னிந்தியரின் தலைமையில் இந்திரா காங்கிரஸின் எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது. புதிய தலைவரைத் தெரிவு செய்ய கட்சியின் மத்திய குழுவிலுள்ள 9915

பேர் வாக்களித்தனர். சுமார் முப்பது வருடங்களின் பின்னர் (1992) தென்னிந்தியர் ஒருவருக்கு கட்சியின் தலைமைப்பதவி கிடைத்துள்ளது. இதற்கு முன்னர் ஆந்திர மாநிலத்திலிருந்து நரசிமராவ் கட்சியின் தலைமைப் பதவிக்கு தெரிவாகியிருந்தார்.

இப்போது தெரிவாகியுள்ள தலித் இனத்தைச் சேர்ந்த 80 வயதுடையவர், முன்னாள் அமைச்சரும்கூட. இன்னும் 18 மாதங்களின் பின்னர் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில், கட்சியின் வெற்றிக்கு கடுமையாக உழைக்கும் பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்காக பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த, ஐம்பது வயதுக்கு கீழானோருக்கு, கட்சியின் முக்கிய பதவிகளை வழங்கவுள்ளார். ஹிந்தி பேசும் மாநிலங்களில் பி,ஜே,பிக்குள்ள செல்வாக்கை தகர்க்கும் வியூகங்களுக்கு சோனியாகாந்தி, ராகுல்காந்தி ஆகியோரும் ஆலோசனை வழங்கவுள்ளனர்.

ஏ.ஜீ.எம்.தௌபீக்...



அஹச மீடியா நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இலங்கையின் எதிர்கால தலைவர்கள் என்ற தலைப்பில், பாடசாலை மாணவர்களுக்கு விருது வழங்கும் வைபவம் (22) சனிக்கிழமை மாலை தேசிய நூலக சேவைகள் சபையின் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, டவர் மண்டப நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினரும், இலக்கியப் புரவலருமான ஹாஸிம் உமர், கொழும்பு ஸாஹிரா கல்லூரி மாணவன் தரம் (06) மொஹமட் அப்ஷால் அஷ்ரஃபுக்கு பரிசு வழங்குகிறார். கலந்துகொண்ட ஏனைய பிரமுகர்களையும் படத்தில் காணலாம். (படம்: ருஸைக் பாரூக்)

# அரசாங்கத்தின் பலத்தை மீண்டும் நிரூபித்துள்ள 22 ஆவது திருத்தம்!

**அரசியலமைப்புக்கான இருபத்திரண்டாம் திருத்தச் சட்டமூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்டமூலத்தின் மூன்றாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பில் ஆதரவாக 174 வாக்குகளும், எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டன.**




அதற்கு முன்னர் நடைபெற்ற இரண்டாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பில் ஆதரவாக 179 வாக்குகளும், எதிராக ஒரு வாக்கும் பதிவாகியிருந்தது. 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு எதிராக வாக்களித்திருந்த ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர, 22 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கும் எதிர்த்து வாக்களித்திருந்தார்.

அரசாங்கத்தின் பலத்தைப் பரிசீலிப்பதற்கான பரீட்சையாக அமையும் என இந்த வாக்கெடுப்பு எதிர்பார்க்கப்பட்டிருந்த வேளையில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உள்ளிட்ட சகல தரப்பினரினதும் அமோக ஆதரவுடன் 22 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் முன்னணி, அரசாங்கத் தரப்பிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சி தரப்பில் அமர்ந்துள்ள சுயாதீனக் குழுவினர் உள்ளிட்ட அனைவரும் 22 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

இருந்தபோதும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சபை முதல்வர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் சிலர் உள்ளடங்கலாக 44 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொண்டிருக்கவில்லை.



ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்துக்கும், பாராளுமன்றத்தின் அதிகாரங்களுக்கும் இடையில் ஒரு நுட்பமான சமநிலையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த அரசியலமைப்புத் திருத்தம் குறித்த எதிர்பார்ப்புக்களுடன் காணப்பட்டிருந்தது.

22 ஆவது திருத்தச்சட்டமூலமானது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டிருந்தது. பின்னர் ஏற்பட்ட ஆட்சிமாற்றங்களைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசினால் இச்சட்டத்திருத்தம் முன்வைக்கப்பட்டிருந்தது. கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆவது திருத்தச்சட்டமூலத்தை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ முதலாவது மதிப்பீட்டுக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதனைத் தொடர்ந்து இச்சட்டமூலம் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

வழக்குகளை விசாரித்த உயர்நீதிமன்றம் திருத்தத்தில் முன்மொழியப்பட்டிருந்த சில திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு விசேட பெரும்பான்மை மாத்திரமன்றி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதைதத் தனது வியாக்கியானத்தில் குறிப்பிட்டிருந்தது. இதற்கமைய உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய சட்டமூலத்துக்கான திருத்தங்களைக் கொண்டுவர அரசாங்கம் இணங்கியது.

## ஆதரவாக 174 வாக்குகள்; எதிராக ஒரேயொரு வாக்கு மட்டுமே!



இதற்கு உட்பட்டு தயாரிக்கப்பட்ட திருத்தங்கள் நீதி அமைச்சு சார் ஆலோசனைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 19 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் பல இதில் எவ்வித மாற்றமும் இன்றி உள்ளடக்கப்பட்டிருப்பதாக விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். விசேடமாக இரட்டைப் பிராஜவுரிமை கொண்டவர்கள் தேர்தல்களில் போட்டியிட முடியாது போன்ற விடயங்கள் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக நீக்கப்பட்டிருந்தாலும், 22வது திருத்தத்தின் ஊடாக மீண்டும் கொண்டு வரப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

இதற்கும் அப்பால் சுயாதீன ஆணைக்குழுக்களைப் பலப்படுத்துவது, பாராளுமன்றத்தின் அதிகாரங்களைப் பலப்படுத்துவது போன்ற விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதும் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான காலப்பகுதி குறித்த கரிசனை பொதுஜன பெரமுன கட்சியினரிடையே காணப்பட்டது.

பத்தொன்பதாவது திருத்தத்தின்படி நான்கரை வருடங்களுக்குப் பின்னரே ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கொண்டுவந்த 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் நான்கரை வருடங்கள் இரண்டரை வருடங்களாகக் குறைக்கப்பட்டிருந்தது.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் காலப்பகுதி 22 ஆவது திருத்தச்சட்டமூலத்திலும் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. இருந்தபோதிலும் தற்போதைய அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு இரண்டரை வருடங்களில் பாராளுமன்றம் கலைக்கப்படுவதை பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் விரும்பவில்லை. மீண்டும் நான்கரை வருடங்கள் பாராளுமன்றம் கலைக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்தும் வகையில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தனர்.

இது மாத்திரமன்றி இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்பதை நீக்கும் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கினர்.

இருந்தாலும், குழுநிலையில் திருத்தங்களைக் கொண்டுவருவதாயின் அதற்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என சட்டமா அதிபர் கூறியிருந்தமையால், மேற்சொன்ன விடயங்களுக்கான திருத்தங்களைக் கொண்டுவருவதில் அவர்களுக்குச் சிக்கல் காணப்பட்டது. இதனால் 22 ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்கும் விடயத்தில் பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கிடையில் தயக்கம் இருந்தது.

இந்தக் காரணத்தினாலேயே கடந்த பாராளுமன்ற அமர்வு வாரத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த 22 ஆவது திருத்தச்சட்டமூலம் பிற்போடப்பட்டிருந்தது.

மறுபக்கத்தில், 22 ஆவது திருத்தச்சட்டமூலமானது மக்களை ஏமாற்றும் அரசாங்கத்தின் முயற்சி என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். 22 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் எதுவும் குறைக்கப்படவில்லையென்றும், அவருக்கான அதிகாரங்கள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் விவாதத்தில் கலந்து கொண்ட பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விசனம் தெரிவித்திருந்தனர்.

இருந்தபோதும் நாட்டின் நன்மையைக் கருத்தில் கொண்டு அரசியலமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவதாக அவர்கள் கூறியிருந்தனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசின் குறிக்கோள்களுடன் இசைந்து செல்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஏராளமானோர் இணக்கம்

பி.ஹர்ஷன்...

---

# உலக வல்லரசுகளுக்கு நிகராக வேகமாக வளரும் இந்தியா!

**இந்திய பொருளாதாரம் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் உலகளவில் 3 ஆவது இடத்தைப் பிடிக்கும் எனக் கணிப்புகள் வெளியாகும் நிலையில், இந்தியா தற்போது ஆயுத ஏற்றுமதியை முக்கியமானதாகக் கையில் எடுத்துள்ளது. இந்தியா அணுவாயுதம் கொண்டு தாக்கக் கூடிய ஏவுகணைகளை உள்நாட்டில் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளது.**



மத்திய அரசின் 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் இந்தியா மற்றும் ரஷ்யா கூட்டணியில் உருவாக்கப்படும் நிறுவனத்தின் மூலம் அணுஆயுதத்தைப் பயன்படுத்தும் சுப்பர்சோனிக் ஏவுகணைகளுக்கு எதிர்வரும் 2025 ஆம் ஆண்டுக்குள் சுமார் 5 பில்லியன் டொலர் அளவிலான கேள்விகள் குவியும் என்று இக்கூட்டணி நிறுவனத்தின் தலைவர் கூறியிருந்தார்.

இந்த ஏவுகணைக்காக இந்த ஆண்டு பிலிப்பைன்ஸ் இந்தியாவிடம் சுமார் 375 மில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுதத்துக்காக ஓர்டர் செய்துள்ளது. இதைத் தொடர்ந்து அடுத்தடுத்து பல நாடுகளுடன் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

BrahMos Aerospace நிறுவனம் இந்த அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் சுப்பர்சோனிக் ஏவுகணைகளை விற்பனை செய்வதற்காக தற்போது இந்தோனேஷியா, மலேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இந்த நாடுகளின் எண்ணிக்கை எதிர்காலத்தில் அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது.

'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் BrahMos Aerospace நிறுவனம் இந்திய அரசு சார்பில் 50.5 சதவீதமும், ரஷ்யாவின் 49.5 சதவீதமும் பங்குகளைக் கொண்டும் இயங்க உள்ளது. இக்கூட்டணி நிறுவனம் ரஷ்யாவின் MiG ஃபைட்டர் விமானம், Su30 ஜெட் விமானம் ஆகியவற்றுக்கான உரிமம் பெற்று உற்பத்தி செய்ய உள்ளது. இதில் BrahMos ஏவுகணைகளும் அடங்குகின்றன.

இது இவ்விதமிருக்க இந்தியாவின் துரிதமாக செயலாற்றும் தரையில் இருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணையின் (QRSAM) ஆறு சோதனைகளை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான டி.ஆர்.டி.ஓவும், இந்திய இராணுவமும் வெற்றிகரமாக நிறைவேற்றி உள்ளன. இந்திய இராணுவத்தின் மதிப்பீட்டு சோதனையின் ஒரு பகுதியாக, ஒடிசா கடற்கரைக்கு அருகே சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை நிலையத்தில் இருந்து இந்த ஏவுகணை செலுத்தப்பட்டிருந்தது.

இந்த சோதனைகளின் போது அதிநவீன வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டு வழிமுறைகளுடன் ஆயுதங்களை துல்லியமாக தாக்கும் நோக்கம் பூர்த்தி செய்யப்பட்டது. ஏவுகணை சோதனையின் வெற்றியை அடுத்து டி.ஆர்.டி.ஓவிற்கும், இந்திய இராணுவத்திற்கும் பாதுகாப்புத் துறை அமைச்சர் பாராட்டு தெரிவித்திருந்தார்.

துரிதமாக செயலாற்றும் தரையில் இருந்து வானுக்கு ஏவப்படும் இந்த ஏவுகணை, இந்திய ஆயுதப்படைகளின் ஆற்றலுக்கு மேலும் வலுசேர்க்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஒரு காலத்தில் ஏவுகணை தொழில்நுட்பத்தில் இந்தியா பின்தங்கிய நிலையில் இருந்தது. ஏவுகணை தொழில்நுட்ப பரவலைக் கட்டுப்படுத்தும் சர்வதேச அமைப்பான எம்.டி.சி.ஆர் கெடுபிடியால் இந்தியாவுக்கு ஏவுகணை தொழில்நுட்பம், தளவாட உதவிகள் கிடைக்கவில்லை. இந்த இக்கட்டான சூழலில் அப்துல் கலாம் தலைமையில் கடந்த 1983 ஆம் ஆண்டு, தேடித் தாக்கும் (Guided missiles) ஏவுகணைகளை தயாரிக்கும் திட்டத்தை இந்தியா தொடங்கியது. கலாமின் வழிகாட்டுதலில் இந்திய விஞ்ஞானிகளின் கடின உழைப்பால் உள்நாட்டிலேயே தேடித் தாக்கும் ஏவுகணை தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அப்துல் கலாம் விதைத்த விதையால் ஏவுகணை தொழில்நுட்பத்தில் இந்தியா இப்போது பல்வேறு சாதனைகளை படைத்து வருகிறது. குறிப்பாக நீண்ட தொலைவுக்கு சீறிப் பாயக்கூடிய ஏவுகணைகளுக்கான 'ரீஎன்ட்ரி' தொழில்நுட்பத்தை உள்நாட்டில் உருவாக்கியது மிகப்பெரிய சாதனையாகும். அதாவது 'ரீஎன்ட்ரி' தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படும் ஏவுகணைகள் பூமிக்கு மேலே பலநூறு கிலோ மீற்றர் பயணித்துவிட்டு பின்னர் வானில் இருந்து பூமி நோக்கி திரும்பி இலக்கைத் தாக்கி அழிக்கும்.

## ஆயுத ஏற்றுமதியில் உலகில் பிரதான இடம்பிடிக்கின்றது பாரதம்!



ஒரே நேரத்தில் பல இலக்குகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகளுக்கான தொழில்நுட்பம், அதிநவீன வழிகாட்டி, சென்சர் உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்பங்களை இந்தியா சொந்தமாக உருவாக்கி இருப்பது பெருவெற்றியாகும்.




## உலகிலேயே முன்னணியான தொழில்நுட்பத்துடன், அணுஆயுதம் தாங்கிச் செல்லும் நவீன ஏவுகணை தயாரிப்பு!

இதேவேளை அணு ஆயுதங்களை சுமந்து செல்லும்அக்னி ஏவுகணைகளை இந்தியா வெற்றிகரமாக தயாரித்து வருகிறது. இந்த ஏவுகணைகள் 700 கி.மீ. முதல் 5,000 கி.மீ. தொலைவு வரையிலான இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன் கொண்டவை. இதன்மூலம் சர்வதேச அரங்கில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்திருக்கிறது. வலிமை, வலிமையால் மதிக்கப்படும் என்பதற்கு உதாரணமாக இந்தியா திகழ்கிறது.

ஆரம்ப காலத்தில் அக்னி ஏவுகணைக்கான சுப்பர் கம்பியூட்டர் தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு எந்த நாடும் வழங்கவில்லை. இதன் காரணமாக முதலில் சாதாரண கணினிகள் மூலம் அக்னி ஏவுகணையின் வடிவமைப்பு உருவாக்கப்பட்டது. இதனால் நீண்டகாலதாமதம் ஏற்பட்டது. 'ரீஎன்ட்ரி' தொழில்நுட்பத்தில் அக்னி ஏவுகணையை வடிவமைக்க அதிநவீன சுப்பர் கம்பியூட்டர் அத்தியாவசியமாக தேவைப்பட்டது.

தலைநகர் டெல்லியில் உள்ள வானிலை ஆய்வு மையத்தில் வானிலையை கண்காணிக்க சுப்பர் கம்பியூட்டர் இருந்தது. அமெரிக்கா வழங்கிய இந்த கம்பியூட்டரை வேறு எந்த பணிக்கும் பயன்படுத்தக்கூடாது என்று அந்த நாடு கண்டிப்புடன் நிபந்தனை விதித்திருந்தது.

(15ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...




**பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ள நாட்டைப் படிப்படியாகச் முன்னேற்றகரமான வழிக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டிருப்பதுடன், முன்னேற்றத்துக்கான சில அறிகுறிகளும் தென்படத் தொடங்கியுள்ளன.**

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் ஆரம்பகட்ட இணக்கப்பாடுகள் எட்டப்பட்டு, கடன் மறுசீரமைப்புத் தொடர்பான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உலக நாடுகள் பலவற்றிடம் இலங்கை உதவிகளைக் கோரியிருக்கும் அதேநேரம், நாட்டில் முக்கியமான மறுசீரமைப்புகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.

கடந்த காலத்தில் அரசாங்கத்தின் வருமானம் பெருமளவு இழக்கப்பட்டிருந்தமையால் தற்போது அவற்றை ஈடு செய்யும் வகையில் பல்வேறு மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு செல்வதற்குப் பொருளாதார ரீதியான நடவடிக்கைகள் மாத்திரமன்றி, அரசியல் ரீதியிலும் அர்ப்பணிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தான் பொதுவான கருத்தாக இருக்கின்றது.

விசேடமாக பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்திருந்த சூழ்நிலையில் நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு அரச எதிர்ப்பாளர்கள் சிலர் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்துகின்றனர். அரசியல்வாதிகள் மாத்திரமன்றிப் பொதுமக்களும் ஒன்றிணைந்தே நாட்டை அதலபாதாளத்திலிருந்து மீட்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதாலோ அல்லது அமைதியின்மையை ஏற்படுத்துவதாலோ நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண முடியாது என்பதை எதிர்ப்பாளர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

ஆர்ப்பாட்டங்களை மீண்டும் மீண்டும் முன்னெடுத்து நாட்டில் குழப்பகரமான நிலைமையை உருவாக்குவதற்கு சில தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளமை வெளிப்படையாகவே தெரிகின்றது. அவர்கள் இவ்வாறு தொடர்ந்தும் நாட்டை பதற்றமான நிலைமையில் வைத்திருப்பதற்கு முயற்சி செய்வார்களானால், நாட்டில் பொருளாதார நிலைமை மீண்டும் வீழ்ச்சிக்குச் சென்று விடுமென்பதை மறந்து விடலாகாது.

நாட்டில் முன்னர் காணப்பட்ட எரிபொருளுக்கான கியூவரிசை, எரிவாயுவுக்கான கியூவரிசை போன்ற நெருக்கடிகள் தற்போது பெருமளவில் குறைந்து விட்டன. கியூவரிசைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு சாதாரண நிலைமை ஓரளவுக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது. பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் அரசாங்கம் அத்தியாவசிய சேவைகளை இடையறாது முன்னெடுப்பதற்குத் தேவையான சகல முயற்சிகளையும் எடுத்துள்ளது.

இவ்வாறான நிலைமையில் மக்களை மீண்டும் வீதிக்கு இறக்கிப் போராடச் செய்வதற்கான சில முயற்சிகள் இடம்பெறுவதையும் பார்க்க முடிகிறது. கடந்த மே, யூன் மற்றும் யூலை மாதங்களில் மக்கள் போராட்டங்கள் என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட குழப்பங்களை நாட்டில் மீண்டும் ஏற்படுத்துவதற்கு சில தரப்பினர் முயற்சிப்பதாகத் தெரியவருகிறது. சிறிது சிறிதாக மக்களை ஒன்றுதிரட்டிப் போராட்டங்கள் ஆங்காங்கே முன்னெடுக்கப்படுகின்றன.

இருந்தபோதும் மேற்படி போராட்டங்களுக்குப் பொதுமக்கள் மத்தியில் ஆதரவு பெருமளவில் அருகியிருப்பதைத் தெளிவாகக் காணக் கூடியதாகவுள்ளது. மறுபக்கத்தில், போராட்டம் என்ற பெயரில் ஊடகங்களில் பிரபல்யமடையும் நோக்கத்துடன் தமது குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு போராட்டக்களத்துக்கு வருகின்ற பெற்றோர்களையும் பார்க்க முடிகிறது.



குறிப்பாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் காலிமுகத்திடலில் நடத்தப்பட்ட போராட்டத்தில் தனது கைக்குழந்தையுடன் ஒரு தந்தை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார். அதேபோல, சிறுவயதுடைய பெண்பிள்ளையுடன் தாய் ஒருவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு சட்டரீதியாகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்தபோது ஏற்படும் தள்ளுமுள்ளுகளில் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பாதிக்கப்படக் கூடிய ஆபத்துகள் சமூகஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. போராட்டங்களில் கலந்து கொள்ளும் பெற்றோர் தமது பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் பற்றிக் கவனத்தில் கொண்டிருப்பதாகத் தெரிவில்லை.

சிறுபிள்ளைகள் போராட்டத்தில் இவ்வாறு பயன்படுத்தப்படுகின்ற அதேநேரம், பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு சில அரசியல் கட்சிகளின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனரென்ற விபரங்களும் வெளிவருகின்றன. பல்கலைக்கழக மாணவர்கள் அச்சுறுத்தப்பட்டு போராட்டங்களுக்காக அழைத்து வரப்படுவதாக வெளிவருகின்ற தகவல்களைப் புறக்கணிக்க முடியாதிருக்கின்றது.

போராட்டங்களில் கலந்து கொள்ளுமாறு மாணவர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. இவ்வாறான செயற்பாடுகளைஅரசியல் கட்சிகள் கைவிட வேண்டும். அரசியல்வாதிகள் தங்களது நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாணவர்களைப் பலிக்கடாக்களாக்க முற்படக் கூடாது.

இது இவ்விதமிருக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு நல்கிவரும் பொதுஜன பெரமுன கட்சி தன்னை மறுசீரமைப்புக்கு உள்ளாக்கி வருகிறது. முன்னாள் பிரதமரும் அக்கட்சியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷவை முன்னிலைப்படுத்தி நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

முதலாவது கூட்டம் களுத்துறையில் நடைபெற்றதுடன், இரண்டாவது கூட்டம் நாவலப்பிட்டியில் நடைபெற்றது. நாவலப்பிட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி அமைப்பாளர் தலைமையிலான ஒரு குழுவினரே எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர். வீதியை மறித்துப் போராடிய குழுவினர், பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நாட்டில் ஜனநாயக ரீதியான அரசியல் கூட்டங்களுக்கு இவ்வாறு ஏற்படுத்தப்படும் தடைகள் காரணமாக நாட்டில் அமைதி சீர்குலைவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.



**அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்குமாறு பல்கலைக்கழக மாணவர்களுக்கு அழுத்தங்கள்!**

# அமைதியைக் குலைக்கும் உள்நோக்குடன் அரங்கேறும் அரசியல் நிகழ்ச்சித் திட்டங்கள்!

நாடு எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு முகங்கொடுக்க அரசியல்வாதிகள் தமக்கிடையிலான கயிறிழுப்புக்களையும், அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் பலப்பரீட்சைகளுக்கும் இடமளிக்காது அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதே இன்றைய தேவையாக உள்ளது. இவ்வாறான குழப்பங்களைக் கட்டுப்படுத்துவதற்கு கட்சியின் தலைவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியதும் காலத்தின் தேவையாகும்.

ஆர்ப்பாட்டங்கள் என்பதன் பேரில் நாட்டில் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதற்கு எந்தவொரு தரப்பினரும் முற்படுவார்களேயானால், பொறுப்புள்ள அரசாங்கமென்ற வகையில் மக்களின் பாதுகாப்பு கருதி நாட்டில் அமைதியைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்பதை மறந்து விடலாகாது. நாட்டில் ஜனநாயகத்தன்மை சீரழிவதற்கு அரசாங்கம் இடமளிக்காதென்பதையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும்.

நாடு இப்பொழுதுதான் வீழ்ச்சியிலிருந்து படிப்படியாக மீண்டெழுந்து கொண்டு வருகையில், மீண்டும் அமைதியின்மையை கட்டவிழ்த்து விடுவதற்கு எவருமே இடமளிக்கலாகாது. அமைதியை விரும்புகின்ற மக்கள் இவ்வாறான உள்நோக்கம் கொண்ட முயற்சிகளுக்கு எதிராக குரல் கொடுப்பது அவசியம். பொறுமையே இன்றைய வேளையில் மக்களுக்கு அவசியமாகின்றது.

மறுபக்கத்தில், வரி அதிகரிப்புப் போன்ற விடயங்களை முன்னிலைப்படுத்தியும், அரசாங்கத்தின் செயற்பாடுகளை குழப்பும் வகையிலும் அரசியல் பின்புலத்தைக் கொண்ட தொழிற்சங்கங்கள் சிலவும் ஆர்ப்பாட்டங்களுக்குத் தயாராகி வருவதாக ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன.

நாடு பிழையான பாதையில் செல்லும்போது அதனைச் சீர்செய்வதற்காக குறிப்பாக ஊழல் மோசடிகள் இடம்பெறும்போது அவற்றைத் தடுப்பதற்கு வீதியில் இறங்கிப் போராடாத தொழிற்சங்கவாதிகள், தற்போது நாட்டில் அமைதி ஏற்படுவதைக் குழப்பும் வகையில் மக்களை உருவேற்றி விட்டு போராட்டங்களுக்கான முயற்சிகளில் ஈடுபடுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

நாட்டைப் பாதிப்பிலிருந்து மீட்டு சரியான பாதைக்குக் கொண்டுவருவதற்கு அனைத்துத் தரப்பினரும் கைகோர்த்தால் மாத்திரமே எதிர்காலத்தில் மீட்சி கிடைக்கும். இல்லாவிட்டால் நிலைமை மிகவும் மோசமானதாகி விடும் என்பதை சம்பந்தப்பட்டோர் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியம்.

**பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகள்!**







**போராட்டக் களத்துக்கு தற்போது மக்களை ஒன்றுசேர்ப்பதில் அரச எதிர்ப்பாளர்கள் தோல்வி!**

**கைக்குழந்தைகளுடன் பெற்றோர் போராட்டக்களத்தில் பங்கேற்பதன் பின்னணியில் மறைந்துள்ள உள்நோக்கம்!**

## இராகலை ரொக்லெண்ட் (மாவுசா) தோட்டம்;

# தன்னெழுச்சி முடக்கப்பட்டு அபிவிருத்தியில் அநாதைகளாக்கப்பட்ட தொழிலாளர்கள்



இந்திய வம்சாவளி மக்கள் என்ற நாமத்தில் இந்த நாட்டில் மூன்றாம் பரம்பரையை தாண்டி வாழ்ந்து வரும் பெருந்தோட்ட சமூக மக்களில் தோட்ட தொழிலில் ஈடுப்பட்டு வருபவர்களின் வாழ்க்கை நிலையில் மாத்திரம் மாற்றங்கள் ஏற்படவில்லை.

இதற்கு எடுத்துக்காட்டாக எத்தனையோ தோட்டங்கள் காணப்படுகிறது. அதில் ஒன்று தான் நுவரெலியா மாவட்டம் வலப்பனை தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட உடப்புஸ்ஸலாவை பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் டெல்மார் தோட்ட பிரிவான ரொக்லண்ட் (மாவுசா) தோட்டமாகும்.

இத் தோட்டத்தில் வசிக்கும் தொழிலாளர் குடும்பங்கள் முகம் கொடுத்துவரும் வாழ்வாதாரம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி குறைபாடுகளுக்கு தீர்வு பெற்றுத் தருமாறு தொழிலாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.



ரொக்லண்ட் தோட்டம் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சி காலத்திருந்து பின் அரசு, இன்று கம்பனி நிர்வாகத்தில் இன்று இருந்து வருகிறது.

கடந்த காலத்தில் உடப்புஸ்ஸலாவை பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த ரொக்லண்ட் மாவுசா தோட்டம் தற்போது மத்துரட்ட பெருந்தோட்ட கம்பனியின் முகாமைத்துவத்தின் கீழ் இருந்து வருகிறது.

இருந்த போதிலும் இத்தோட்டத்தில் தற்போது வசித்து வரும் தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகம் மற்றும் அரசியல் வாதிகள் எதையும் செய்து கொடுக்கவில்லை அதனால் பல குறைபாடுகளுடன் சொல்லொணா துயரங்களுடன் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக குடிநீர்,வீட்டு வசதிகள்,மலசலக்கூடம் இன்றி பல ஆண்டுகளாக வசிக்கின்றனர்.

மேலும் இந்த தோட்டத்தில் முதலாம் இலக்க தொடர் வீட்டு தொகுதி கடந்த 2009 ஆம் ஆண்டு திடீர் தீ விபத்துக்குள்ளாகியதுடன்,2015 ஆம் ஆண்டு இலக்கம் மூன்று லயம் குடியிருப்பு மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

இந்த தோட்டத்தில் பணியாற்றிய 300க்கு அதிகமான தொழிலாளர்கள் ஓய்வு பெற்ற பின்னர் தோட்டத்தை தொடர்ந்து வழிநடத்த முடியாது தோட்ட நிர்வாகம் எஞ்சியுள்ள 19 தொழிலாளர் குடும்பங்களுக்கு தேயிலை காணிகளை தற்காலிகமாக பிரித்து கொடுத்து அதில் விளைச்சல் தரும் தேயிலை கொழுந்தை பறித்து தோட்ட நிர்வாகத்திற்கு வழங்கி சம்பளம் பெற்று வரும் அவல நிலை தோன்றியுள்ளது.



இது இவ்வாறிருக்க இத்தோட்டம் சூரியக்கா பத்தனை கிராமத்துடன் இணைந்தே காணப்படுகிறது. இந்த நிலையில் கடந்த காலங்களில் வலப்பனை பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள் குடியேற்றம் என்ற பெயரில் ரொக்லண்ட் மாவுசா தோட்ட தேயிலை காணிகளை பிரித்து வழங்கியுள்ளனர். இவ்வாறு வழங்கப்பட்ட காணிகளில் இன்று வீடுகட்டி வசிப்பவர்கள் நல்ல நிலையில் வாழ்கின்றனர்.

2015 ஆம் ஆண்டு மண்சரிவு சிவப்பு அறிக்கை விடுக்கப்பட்ட நிலையில் அத்தொடர் வீட்டுகளில் வசித்த 13 குடும்பங்களுக்கு முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் டெல்மார் தோட்டத்தில் 13 வீடுகளை அமைத்து கொடுத்துள்ளார்.

இருப்பினும் அவ்வீடுகளில் வசிப்பதற்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்யாது அரைகுறையாக காணப்படுவதாலும்,அங்கு குடி நீர் கூட இல்லாத நிலையில் மண்சரிவு சிவப்பு அறிக்கை விடப்பட்ட அதே தொடர் வீட்டுகளிலேயே தொடர்ந்தும் வசிக்கின்றனர்.

இந்த நிலையில் அபிவிருத்தியில் அநாதையாகவும், வாழ்வாதாரங்களை இழந்து தாம் வாழ்வதாக இத் தோட்ட தொழிலாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்





**பெருமாள் சரஸ்வதி (60)**

நாங்கள் குடியிருக்கும் வீட்டுக்கு அருகில் தான் 2015 ஆம் ஆண்டு மண்சரிவு ஏற்பட்டது.

இந்த மண்சரிவு முதலில் ஏற்பட்ட இடத்திற்கு முதல் வீட்டுக்கு அருகில் தான் நாம் வசிக்கின்றோம். மழைக்காலங்களில் உயிர் அச்சத்துடன் இருப்பதாக கூறுகிறார்.

**பி.செல்லதுறை**

வெள்ளையர்கள் ஆட்சி காலத்தில் சிறப்பான பராமரிப்புடன் காணப்பட்ட இந்த தோட்டம் தேயிலையின் செழிப்பு இப்போது இழந்து காட்டாக மாறிவிட்டது.

செழிப்பான தேயிலை மலை, அழகான இயற்கை எழில் காணப்பட்ட தோட்டமாகும்.இன்று மனிதர்கள் வசிக்க முடியாத ஒரு தோட்டமாக மாறியுள்ளது.

அபிவிருத்திகள் ஏதும் இல்லை.பழங்கால மண்ணாலான லயத்தில் தான் இன்றும் வாழ்கிறோம்.

**பழனியான்டி மயில்வாகனம்**
**(ஓய்வு பெற்ற தொழிலாளி)**

ரொக்லண்ட் தோட்டம் என்றால் அனைவரும் விரும்பும் ஒரு தோட்டமாக இருந்தது.

ஆனால் இன்று இந்த தோட்டத்தின் அபிவிருத்தியற்ற அவல நிலை காரணமாக இத்தோட்டத்தை அனைவரும் வெறுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு மக்கள் அனாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு எட்டாம் மாதம் 14 ஆம் திகதி நான் வசித்து வரும் லயன் திடீரென தீ பற்றி எரிந்து விட்டது. இந்த லயன்களை புனரமைத்து தருமாறு தோட்ட நிர்வாகத்திடம் வழியுறுத்தினோம்,ஆனால் தோட்ட நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை.

**எஸ்.சுஜிகலா**
**(வலப்பனை பிரதேச சபை உறுப்பினர்)**

நான் டெல்மார் வட்டாரத்தில் மாவுசா தோட்ட மக்களின் வாக்கு ஆதரவுடன் வலப்பனை பிரதேச சபைக்கு தொழிலாளர் தேசிய சங்க கட்சியின் உறுப்பினராகவும் தமிழ் முற்போக்கு கூட்டணி உறுப்பினராகவும் தெரிவான பெண் உறுப்பினர்.நான் இத்தோட்டத்தில் வசிக்கும் மக்களுடன் வாழ்ந்து வருகிறேன்.

இந்த தோட்டத்தில் சொல்லக்கூடிய அபிவிருத்தி என்றால் முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் தலைமையில் செய்யப்பட்ட அபிவிருத்தியை தவிர வேறு யாரும் செய்யவில்லை.

அத்துடன் இன்று இந்த தோட்டத்தில் எந்த அபிவிருத்தியும் இல்லை, திட்டமிட்டு தேயிலை காணிகள் பிரிக்கப்பட்டுள்ளன, வெளியாருக்கு தேயிலை காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் இதே தோட்டத்தில் காலம் காலமாக வசித்தவர்கள் வாழ்வாதாரம் இழந்து, அபிவிருத்திகள் இன்றி நாடோடிகளாக வாழ்வதை பார்த்து வேதனைப்படுகிறேன்.

ரமேஷ் ஆறுமுகம் ...✍





# காலனித்துவ காலத்தில் கைவிடப்பட்ட பல திட்டங்கள் புதிய திட்டங்களால் வீணாக்கப்பட்ட நிதி...

எமது நாடு இன்று கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. அதற்காக பல காரணங்கள் கூறப்பட்டு வரும் சூழலில் நாம் அதற்கு தீர்வும் நெருக்கடிகள் உருவாவதற்கான காரணங்களையும் குறிப்பிட்டாக வேண்டிய சூழலில் இருக்கின்றோம்.

சுதந்திரத்திற்கு பின்னரான காலத்திலிருந்தே படிப்படியாக நாடு வங்குரோத்து நிலையை நோக்கி வந்ததை காணலாம். இதற்கு அனைத்து அரசும், மக்கள் பிரதிநிதிகளுமே காரணகர்த்தாவாவார்கள். சுதந்திரத்திற்கு முன்னர் எமது போக்குவரத்து சபையில் பென்ஸ் பஸ்கள் பொது போக்குவரத்தில் ஈடுபட்டதாகவும் அதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன.

அன்றும் பென்ஸ் கார்கள், மொரிஸ் மைனர் கார்கள் பென்ஸ் லொறிகளும் சேவையில் இயங்கியிருக்கின்றன. ஆனால் இன்று எமது இ.போ.சபையில் டாட்டா, லேலன்ட் பஸ்களே காணக் கூடியதாக உள்ளது ஆனால் இன்றைய சூழலில் பென்ஸ் போன்ற தரமானவற்றை இறக்குமதி செய்வதற்கான வசதிகள் குறைவு. இவையும் எமது பொருளாதார வீழ்ச்சியின் ஒரு பக்கமே. வடக்கு கிழக்கில் அந்நாளில் பாவித்த போர்ட் கார்கள் மற்றும் லொறிகள் இருக்கின்றன.அவற்றை அன்று வாங்குவதற்கு அவர்கள் வசதியானவர்களாக இருந்தனர். அதற்கு காரணம் அவர்களின் விவசாய செய்கையும் கடின உழைப்புமாகும்.

அதே போலவே இந்நாட்டில் மக்கள் குடியேற முடியாத பிரதேசங்களாக காணப்பட்ட மலைப் பிரதேசங்களில் வெள்ளைக்காரர் தேயிலையை பயிரிடுவதற்காக இந்திய வம்சாவளி மக்களை துன்புறுத்தி,வறுத்தி, கஷ்டப்படுத்தி பெருந்தோட்ட பயிர்ச் செய்கையை ஆரம்பித்தனர். ஆனாலும் அதற்காக பாடுபட்ட மக்களை அன்றிருந்த கலானித்துவ ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளவில்லை என்பதோடு அடிமைகளாக நடத்தினர்.அப்பாவி மக்களின் உழைப்பைச் சுரண்டி பெரும் இலாபமீட்டுவதிலேயே கண்ணாயிருந்தனர்.

அன்னிய ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் பெருந்தோட்ட மக்களின் நலனில் பூரண பங்களிப்பை நல்கவில்லை. இன்றும் அதிசயத்தக்க எதுவும் நடக்கவில்லை. ஆரம்பகாலத்தில் ஏற்றுமதி மூலம் அதிக அன்னிய செலாவணியை பெற்று தந்த துறையாக பெருந்தோட்டத்துறையே காணப்பட்டது. அம்மக்களின் கடின உழைப்பால் அவை சாத்தியமாக்கப்பட்டன.

ஆனால் இன்று காலனித்துவ ஆட்சியாளர்கள் செய்து வந்த பெருந்தோட்டத் துறையும் வீழ்ச்சியடைந்தே வருகிறது. ஒரு நாட்டின் இறக்குமதியைவிட ஏற்றுமதிகளே நாட்டை அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்லும். எமது நாடு ஏற்றுமதியில் கிடைக்கும் வருமானத்தைவிட இறக்குமதிக்கு அதிகம் செலவழிக்கிறது. எமது ஏற்றுமதி பொருள்களில் அநேகமானவை மூலப்பொருட்களும், மீள் ஏற்றுமதி பொருட்களாகும். இவற்றை வைத்துக் கொண்டு எமது நாட்டை முன்னேற்ற முடியாது என்பதே எமது கருத்து.

நாம் முடிவுப்பொருட்களாக தேயிலை ஏற்றுமதி செய்வதால் அதிக இலாபத்தை பெற்றுக் கொள்ளலாம். வெள்ளைக்காரர் தேயிலை ஏற்றுமதி மூலம் அதிக இலாபம் அடைந்தார்கள். ஆனால் அவை அனைத்துமே அவர்களின் நாட்டுக்கே கொண்டு செல்லப்பட்டன. ஏனைய நாடுகளிடமும் பிடுங்கி தமது நாட்டை வளப்படுத்தியவர்கள் வெள்ளையர்கள். அதற்காக பாடுபட்ட மக்களுக்கு மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டினர். அது தொடர்வதை தவிர்க்க முடியவில்லை. ஆட்கள் மாறியுள்ளனரே தவிர கொள்கையில் மாற்றம் இல்லை. வெள்ளைக்காரர்கள் எமது நாட்டிலுள்ள வளங்களை சூறையாடியது உண்மைதான். அதற்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அவர்களின் திட்டங்களும் செயற்பாடுகளும் நீண்டகால வருமானத்தை கொண்ட நல்ல திட்டங்களே. தேயிலைப் பயிர்ச்செய்கையும் அதில் ஒன்றே. ஆனால் அவை இன்று கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.காரணம் என்ன வென்றால்,பராமரிப்பு அற்ற நிர்வாகமும் சில திட்டங்கள் கைவிட்டதாலாகும். அவ்வாறு கைவிடப்பட்ட பாதையும் அது நெடுகே இருக்கும் அழகான சுழல் பற்றியே கீழே குறிப்பிடப்போகிறோம்.

வெள்ளைக்காரர் காலத்தில் கம்பளையில் இருந்து கொழும்புக்கு வருதற்கு கிட்டிய பாதை ஒன்று கவனிப்பாரற்று காணப்படுகிறது. கம்பளையில் இருந்து தொலஸ்பாகை தோட்டம் வழியாக புளத்யகொஹுபிட்டிய அவிசாவளை வழியான கொழும்பு செல்லும் பாதையாகும். இப்பதையில் 9 ஒன்பது வலைவுகள் உள்ளன. இவ்வாறு வலைவுகள் உள்ள இரு பாதைகளையே மக்கள் அறிவர். ஒன்று கண்டி மஹியங்கன பாதை அடுத்து இறக்குவானை தெனியாய பாதையாகும். இது மூன்றாவது பாதையாகும். இப்பாதை வழியே செல்லும் போது நீர்வீழ்ச்சிகளும், மலைகளும் நிறைந்து காணப்படும் அழகான பாதையாகும். பின்னேரம் சூரியன் மறையும் காட்சிகள் மிக ரம்மியமானதாகும். இப்பாதை நெடுக செல்லும்போது தொலஸ்பாகை தோட்டத்தை அடையும் போது நுவரெலியாவில் இருக்கும் குளிர் நிறைந்த மிதமான காலநிலையை அனுபவிக்கலாம். இப்பிரதேசத்திலே இப் பாதை முடிவடையும் பெலன்பிட்டிய கிராமம் அமைந்துள்ளது. தொலஸ்பாகை தோட்டத்தில் இருக்கும் ஒரு சிற்றாறு கேகாலை பிரதேசத்தையும் கண்டி பிரதேசத்தையும் பிரிக்கிறது. கம்பளையில் இருந்து சுமார் 3 மணித்தியாலத்தில் கொழும்பை வந்தடையக்கூடிய இப்பாதை இன்று குண்டும் குழியுமாக ஒடுங்கி இரு பக்கமும் காடுகள் வளர்ந்து பாழடைந்து காணப்படுகிறது ஆனாலும் இ.போ.ச. பஸ் செல்வதையும் காணலாம். இப்பாதையில் செல்லும் போது ஒரு பாலத்தை கடந்து செல்ல வேண்டும்.



இப்பாலம் எந்த பராமரிப்பும் இல்லாமல் இன்றும் 200 வருடங்கள் கடந்து உறுதியான நிலையில் காணப்படுகிறது. ஏனென்றால் வெள்ளையர்களின் சில திட்டங்கள் நீண்ட நெடுங்காலம் உறுதிப்பாடுடையதாகும்.அவற்றுக்கு அவர்கள் பயன்படுத்திய மூலப்பொருட்களெல்லாம் அவர்களது நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டவையாகும். அன்று அவர்கள் கொண்டுவந்த இரும்பு கம்பிகள் வாழ்நாள் உறுதியானது. ஆகையாலே இப் பாலம் இன்று உறுதியுடன் காணப்படுகிறது.

இவற்றை பராமரித்தாலே போதும் கூடிய பலனையும் செலவுகளை குறைத்து கொள்ளலாம். அத்தோடு அவர்கள் அன்று செய்த நீர்மின் உற்பத்தி நிலையங்கள் கைவிட்டு புதிய நீர் மின் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பழையதை பராமரித்திருந்தால் புதிய திட்டத்திற்கு செலவழித்த பெருந்தொகைபணத்தைமீதப்படுத்தியிருக்கலாம். அன்று வெள்ளைக்காரர்கள் உருவாக்கிய நீர் மின் நிலையங்களின் உதிரிப்பாகங்கள் இன்று நல்ல நிலையில் இருக்கின்றன.ஆட்சிக்கு வந்த அரசுகள் இதர செலவுகளை செய்து நல்ல பல திட்டங்களை கவனிக்காமல் விட்டப்பட்டுள்ளன.



அதேநேரம் இவை வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கும் பிரதேசங்களாகும். அதையாவது செய்திருக்கலாம். ஆனால் செய்வதில்லை. செய்ய முனைபவர்களுக்கும் இடம்கொடுப்பதில்லை. இச் செயற்பாடுளாலேயே பெருந்தோட்ட மக்கள் இன்று துப்பப்படுகின்றனர்.

உலகில் அடிமைப்பத்தப்படும் மக்களும் அடிமைகளாக மக்கள் வாழும் நாடுகள் அபிவிருத்தியடைந்த சரித்திரமே இல்லை. இலங்கயைிலும் அவ்வாறான நிலையே காணப்படுகிறது. காடு, மலைகள் வெட்டி நிலங்களை வளப்படுத்திய பெருந்தோட்ட மக்களை வெள்ளைக்காரர்கள் அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தினார்கள். சுதந்திரத்துக்குப் பின்னர் வந்த ஒவ்வொரு அரசும் அவர்களை கண்டுகொள்ளாது அடிமைகளாக நோக்கும் நிலையே தொடர்கிறது.

பெருந்தோட்ட மக்களின் உரிமைகளில் கைவைக்காமல் பெருந்தோட்டங்களை முறையாக பராமரித்தாலே எமது நாட்டுக்கு பெருந்தொகையான அன்னிய செலாவணியை கொண்டு வரலாம்.

ஸ்ரீ ...✍

# மறைந்தார் மலையகத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்



தி. ஞானசேகரன் ...

மலையகத்தின் முன்னணி எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப், 21.10.2022 அன்று காலமானர் என்ற செய்தி ஈழத்து இலக்கிய உலகைப் பெருங் கவலைக்கு உள்ளாக்கியுள்ளது.

சந்தனசாமி ஜோசப் என்ற இயற்பெயர் கொண்ட தெளிவத்தை ஜோசப், ஹாலிஎல்லைக்கு அருகேயுள்ள ஊவாக்கட்டவளை என்கிற தேயிலைத் தோட்டத்தில், தங்கசாமி சந்தனசாமிப் பிள்ளைக்கும் பரிபூரணத்திற்கும் 16.02.1934இல் மகனாகப் பிறந்தார். ஜோசப் தனது ஆரம்பக்கல்வியை தோட்டப் பாடசாலையில் தனது தந்தையிடம் கற்ற பின், தமிழ்நாடு கும்பகோணம் ஷலிட்டில் பிளவர்‌ உயர்நிலைப்பள்ளியில் இரண்டு வருடகாலம் ஐந்தாம் வகுப்புவரை கற்று, இலங்கை திரும்பி பதுளையில் உள்ள புனித பீட்ஸ் கல்லூரியில் சாதாரணதரம் வரை கற்றவர்.

பிந்திய ஐம்பதுகளில் தமிழக சஞ்சிகையான உமாவில் 'வாழைப்பழத்தோல்‌ என்ற இவரது முதற்கதை வெளியாகியது. அதனைத் தொடர்ந்து பேசும்படம் இதழிலும் இவரது படைப்பு வெளியாகியது.



தொடர்ந்து கே.வி.எஸ்.மோகன் வெளியிட்ட கதம்பம் சஞ்சிகையிலும் வீரகேசரியின் தோட்டமஞ்சரி பக்கத்திலும் இவரது ஆக்கங்கள் வெளியாகின.

1956இல் தெளிவத்தைத் தோட்டத்தில் இவருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. அதேசமயம் பகுதிநேர எழுதுவினைஞராகவும் தொழில்புரிய ஆரம்பித்தார். அக்கால கட்டத்தில் தனது இருப்பிடத்தின் பெயரைத் தனது பெயருடன் இணைத்து தெளிவத்தை ஜோசப் என்ற பெயரில் எழுதத் தொடங்கினார்.

1964இல் கொழும்பில் ஸ்டார் டொபி நிறுவனத்தில் பிரதம கணக்காளராக இணைந்து பணியாற்றினார்.

மலைமுரசு, மலைப்பொறி, தேனருவி, கலைச்செல்வி, அல்லி, ஈழமணி, கதம்பம் போன்ற சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் எழுதிக்கொண்டிருந்த தெளிவத்தை ஜோசப், வீரகேசரி பத்திரிகையூடாக 1963இல் மலையக எழுத்தாளர் மன்றம் நடத்திய முதலாவது சிறுகதைப் போட்டியில் பாட்டி சொன்ன கதை என்னும் சிறுகதைக்கும் 1964இல் நடத்திய இரண்டாவது போட்டியில் பழம் விழுந்தது, என்னும் சிறுகதைக்கும் பரிசில்கள் பெற்றுக்கொண்டார். இரண்டுமுறை தொடர்ந்து முதற்பரிசுகளைப் பெற்றதன் மூலம் இவரது சிறுகதை ஆளுமை தேசிய ரீதியில் இனங்காணப்பட்டது.

கண்டியில் இருந்து வெளிவந்த மலைமுரசு என்ற பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியிலும் இவரது நாமிருக்கும் நாடே என்ற சிறுகதை முதற்பரிசைத் தட்டிக் கொண்டது. 1979இல் இக்கதையின் தலைப்பைக் கொண்ட இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி வைகறை வெளியீடாக வெளிவந்தது. இச்சிறுகதைத் தொகுதி 1979இல் அரச சாஹித்திய விருதினைப் பெற்றுக்கொண்டது.

இனவிவகார அமைச்சு மும்மொழிகளில் நடத்திய சிறுகதைப் போட்டியில் தமிழ்மூலம் படைப்புக்கான சிறுகதைப் போட்டியில் இவர் 1998இல் முதற்பரிசு பெற்றார்.

எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள இவரது இரண்டாவது தொகுப்பான தெளிவத்தைஜோசப் சிறுகதைகள் பாக்யா வெளியீடாக வெளிவந்து 2013இன் தேசிய சாகித்திய விருதினைப் பெற்றுக்கொண்டது.

மீன்கள் என்று மகுடத்தில் இவரது மூன்றாவது சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் கலைமகள் சஞ்சிகை இவரது சிறுகதைகளுக்கு முன்னுரிமை கொடுத்துப் பிரசுரித்தது. தமிழ் நாட்டின் குமுதம், உமா, சரஸ்வதி, சுபமங்களா பொன்ற சஞ்சிகைகளிலும் இவரது படைப்புகள் இடம்பெற்றன.

இவரது முதலாவது நாவல் காதலினால் அல்ல என்னும் தலைப்பில் மித்திரனில் 1967இல் தொடராக வெளிவந்தது.

காலங்கள் சாவதில்லை என்ற நாவல் வீரகேசரியில் தொடராக வந்து பின்னர் வீரகேசரிப் பிரசுரமாக 1974இல் வெளிவந்தது. மாறுதல்கள்‌ என்ற நாவலையும் இவர் எழுதியுள்ளார்.

நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் என்ற மற்றுமொரு தொடர்கதை தினகரன் வாரமஞ்சரியில் 1996இல் வெளியாகி இரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது.

இவரது பாலாயி, என்ற குறுநாவல் கதம்பம் தீபாவளி மலரில் 1967ஆம் ஆண்டு வெளிவந்தது. ஞாயிறு வந்தது என்னும் குறுநாவல் 1966 கலைமகளில் வெளிவந்தது. மனம் வெளுக்க‌ என்ற குறுநாவல் தினகரனில் வெளிவந்தது. இந்த மூன்று குறுநாவல்களும் தெகுக்கப்பட்டு ஒரே தொகுப்பாக 1997இல் வெளிவந்தது.

தேசிய இலக்கியப் பேரவையும் தமிழ்நாட்டின் சுபமங்களா சஞ்சிகையும் இணைந்து 1995இல் நடத்திய குறுநாவல் போட்டியில் இவரது ஷகுடைநிழல் என்ற படைப்பு இரண்டாவது பரிசு பெற்றது. இக்குறுநாவல் பின்னர் நூலுருவம் பெற்றது.

இவரது மலையகச் சிறுகதை வரலாறு‌ 2000ஆம் ஆண்டில் வெளிவந்து இவரை ஒரு சிறந்த ஆய்வாளராக இனங்காட்டியது. மலையக சிறுகதை வரலாற்றை 1920 முதல் 1960 வரை முதற்கட்டமாகவும் 1960 முதல் 2009 வரை இரண்டாம் கட்டமாகவும் வகுத்து இவர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுநூல் அவ்வாண்டின் தேசிய சாகித்திய விருதினையும் யாழ். இலக்கிய வட்டத்தின் சம்பந்தன் விருதினையும் பெற்றுக்கொண்டது.

துரைவி பதிப்பகத்தின் பதிப்பாசிரியராகப் பணிபுரிந்து இவர் வெளிக்கொணர்ந்த 33 சிறுகதைகள் அடங்கிய மலையகச் சிறுகதைகள், 55 சிறுகதைகள் அடங்கிய உழைக்கப் பிறந்தவர்கள், ஆகிய இரண்டு தொகுப்புகளும் மலையக இலக்கியத்திற்கு இவர் அளித்த அரிய செல்வங்களாகும். எழுபது வருடகாலத்துக்குரிய கதைகளைத் தேடிச் சேகரித்து தொகுத்து இரண்டு வருடகால எல்லையுள் இப்பணியைச் செய்து சாதனை படைத்தார். துரைவி தினகரன் சிறுகதைகள், சுதந்திர இலங்கையின் ஐம்பது சிறுகதைகள் என்னும் நூல்களை தொகுத்து பதிப்பிக்க வழிசமைத்தார்.

தெளிவத்தை ஜோசப் கடைசியாக எழுதிய நூல் இலங்கைத் தமிழ்ச்சிறுகதை முன்னோடி இலங்கையர்கோன் என்பதாகும்.

இவர் சிறுகதைகள், நாவல், விமர்சனம், இலக்கியக் கட்டுரைகள், திரைக்கதை வசனம் (புதிய காற்று) தொலைக் காட்சி நாடகம், வானொலி நாடகம் என இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்துச் செயற்பட்டார். இலங்கையில் உருவான புதிய காற்று திரைப்படக் கதை வசனம் இவரது கைவண்ணமாகும்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலும், பேராதனை, யாழ்ப்பாணம், சப்ரகமுவ பல்கலைக் கழகங்களிலும் இவரது படைப்புகளைக் குறித்து உயர் பட்டப்படிப்பு மாணவர்கள் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்கள்.

தலைநகர் கொழும்பில் மலையக எழுத்தாளர் மன்றம் உருவாக முன்னின்று உழைத்தவர் ஜோசப். அம்மன்றத்தின் தலைவராக வெகுகாலம் பணிபுரிந்தவர். தமிழ் சிங்கள எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவர்களில் ஒருவராகவும் பணிபுரிந்துள்ளார்.

இவரது மனைவியின் பெயர் பிலோமினா. ஜோசப் தம்பதியினருக்கு திரேசா, தோமஸ் ரமேஷ் திருமதி ரவீந்திரன், தெக்ளா சியாமளா ஆகியோர் பிள்ளைகளாவர்.

இவரது படைப்புகள் சிங்களம், ஆங்கிலம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன.

மூன்று தடவை சாகித்திய விருது பெற்ற இவர், சம்பந்தன் விருது, கம்பன் கழக விருது, தேசிய ஒற்றுமைக்கான விருது, கொடகே தேசிய சாஹித்திய விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது, கலாசார அமைச்சின் தேசநேத்ரு‌ விருது, மத்திய மாகாண, மேல்மாகாண இலக்கிய சாதனையாளர் விருது, தமிழியல் வித்தகர் விருது, பேராதனைப் பல்கலைக்கழக இலக்கிய விருது(2007), இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு வழங்கிய தமிழ்மணி (1992) இலக்கியச் செம்மல் (1993) விருதுகள், எழுத்தாளர் ஊக்குவிப்புமையத்தின் தமிழியல் விருது (2008) கலாபூஷணம் விருது(1996), தமிழ்நாடு விஷ்ணுபுர விருது(2003) உட்படப் பல விருதுகள் பெற்றுள்ளார்.

மல்லிகை சஞ்சிகை இவரைக் கௌரவிக்கும் முகமாக இவரது படத்தை அட்டையில் பொறித்து கட்டுரையும் வெளியிட்டது. ஞானம் சஞ்சிகை இவரது பணிகளைப் பாராட்டுமுகமாக இவரது பவளவிழாவை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 16.05.2010இல் கொண்டாடியது. பவளவிழாச் சிறப்பிதழையும் வெளியிட்டது. அத்தோடு இவரது தொடர் நேர்காணலை ஞானம் சஞ்சிகையின் 23 இதழ்களில் தொடராக வெளியிட்டுக் கௌரவித்தது.

இவரது, நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் அல்லது 1983 என்ற நாவல் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளையுடன் இணைந்து வழங்கும் 2016ஆம் ஆண்டுக்கான கரிகாற் சோழன் விருதினைப் பெற்றுக்கொண்டது. இலங்கை அரசின் அதியுயர் விருதான சாஹித்திய ரத்னா விருதினை 2014இல் பெற்றவர் தெளிவத்தை ஜோசப். ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவரது நாமம் என்றும் நிலைத்து நிற்கும்.



யாழ்.அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் (2020) 09 ஏ பெற்று திறமையை வெளிப்படுத்திய மாணவன் கி.பிரதீஷுக்கு துவிச்சக்கரவண்டியொன்று பரிசாக வழங்கப்பட்டது. யாழ்.கோப்பாய் சர்வோதய தேசோதய சபையினால், யாழ். ஆனைப்பந்தி ஹரி உணவகத்தின் நிதிப் பங்களிப்பில் வழங்கப்பட்டது. கோப்பாய் தேசோதய சபைத் தலைவர் இ. மயில்வாகனம் துவிச்சக்கர வண்டியை வழங்குவதைப் படத்தில் காண்க. (படம்: வேலணை குறூப் நிருபர்)

SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
EDB
MINISTRY OF INVESTMENT PROMOTION

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய போட்டிரீதியான விலைமனு

EDB/DPC/ST BUS/2022-2023/01

### ஊழியர்களின் போக்குவரத்து - 2022/2023

01. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் கீழ் குறிப்பிடப்பட்ட பாதைகளில் ஓர் ஆண்டு காலத்திற்காக (2022 - 2023) ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஊழியர்களுக்கு (தலைமை அலுவலகம்) குளிரூட்டப்பட்ட அல்லது குளிரூட்டப்படாத பஸ் வண்டி/ வேன் மூலம் 2022 டிசம்பர் 01ஆம் திகதி தொடக்கம் போக்குவரத்து வசதியை வழங்குவதற்காக பயணிகள் போக்குவரத்து சேவை வழங்குநர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | பஸ் பாதை | ஆரம்பிக்கும் இடம் |
|---|---|---|
| 01. | களுத்துறை - (காலி வீதி) | களுத்துறை (தெற்கு) நகர் |
| 02. | ஹங்வெல்ல - (லோலெவல் வீதி) | ஹங்வெல்ல சந்தி |
| 03. | ஹோமாகம - (ஹைலெவல் வீதி) | ஹோமாகம சந்தி |
| 04. | கொட்டுகொட - (நீர்கொழும்பு வீதி) | கொட்டுகொட சந்தி |
| 05. | கெஸ்பேவ - (120 பஸ் வீதி) | கெஸ்பேவ சந்தி |
| 06. | கலகெடிஹேன - (கண்டி வீதி) | கலகெடிஹேன சந்தி |

02. விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதியில் இருந்து **91 நாட்காட்டி தினங்கள் வரை** விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

03. ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் **www.srilankabusiness.com** இணையதளத்தில் **"Announcements"** இன் கீழ் மாதிரி விலைமனு ஆவணத் தொகுதியை தரவிறக்கம் செய்ய முடியும்.

04. மீளளிக்கப்படாத 1500.00 ரூபா வைப்பு ஒன்று மற்றும் மீளளிக்கப்படும் 5000 ரூபா வைப்பு ஒன்றை **இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின்** பெயருக்கு **இலங்கை வங்கி லேக்வியுவ் கிளையில் உள்ள 306605** என்ற கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட வங்கிப் பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை விலைமனு ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். (வங்கி பற்றுச்சீட்டை இணைக்காத விலைமனு செல்லுபடியான விலைமனு ஒன்றாக ஏற்கப்படமாட்டாது).'

05. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"ஊழியர்களின் போக்குவரத்து 2022 - 2023"** என்று குறிப்பிட்டு 2022 நவம்பர் 10 ஆம் திகதி மு.ப. 10.30க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு **"தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, பெறுகைப் பிரிவு, 6ஆவது மாடி, NDB – EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02"** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது 06ஆவது மாடியின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுக்கள் திறக்கப்படும்.

06. விலைமனுக்கள் ஏற்கும் இறுதி நேரத்திற்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழு வசமானது.

07. விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அனுமதி அளிக்கப்படும்.

08. மேலதிக விபரங்களுக்கு 0112300702/ 0706652666 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பெறுகைப் பிரிவின் பெறுகை அதிகாரி நயனா அவர்களை தொடர்புகொள்ளவும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**
**NDB – EDB கோபுரம்,**
**இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02. இலங்கை**
**தொலைபேசி: +94112300700/ தொலைநகல்: +94112300728**
இணையதளம்: **www.srilankabusiness.com**

ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
EDB
MINISTRY OF INVESTMENT PROMOTION

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய போட்டிரீதியான விலைமனு

EDB/DPC/CDNS/2023-2025/01

### கிளவுட் சேவையகங்களில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் WWW.SRILANKABUSINESS.COM இணையதளத்திற்கான WEB APPLICATION HOSTING மற்றும் CONTENT DELIVERY NETWORK SERVERS - 2023/2025

1. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மூலம் அதன் நிறுவன இணையதளமான "www. srilankabusiness.com" இற்கு காப்பு, நுழைவுப் பதிவு போன்றவை மற்றும் உள்ளடக்க விநியோக வலையமைப்பு (CDN) சேவை வழங்கல் உட்பட WEB APPLICATION HOSTING சேவை வழங்குவதற்காக தகுதியுடைய சேவை வழங்குநர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள்/ முன்மொழிவுகள் கோரப்படுகின்றன, எதிர்பார்க்கப்படுகின்ற 24x7 சேவையை பெறும் திறனுடன் உலகளாவிய அடைவைக் கொண்ட உச்ச நெரிசல் உடைய இணைய உள்ளடக்கங்களின் விநியோகத்தை வேகப்படுத்தல், அதிக நெரிசலில் இருந்து பாதுகாப்பு வழங்கல் மற்றும் தாக்குதல்களில் இருந்து இணையதளத்தின் பாதுகாப்பை உறுதி செய்தல் போன்ற பணிகள் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றன.
2. விலைமனுக்கள் ஏற்கும் இறுதித் திகதியில் இருந்து **91 நாட்காட்டி தினங்கள்** வரை விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
3. ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் www.srilankabusiness.com இணையதளத்தில் "Announcements" இன் கீழ் மாதிரி விலைமனு ஆவணத் தொகுதியை தரவிறக்கம் செய்ய முடியும்.
4. மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா வைப்பு ஒன்றை **இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின்** பெயருக்கு இலங்கை வங்கி லேக்வியுவ் கிளையில் உள்ள 306605 என்ற கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட வங்கிப் பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை விலைமனு ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். (வங்கி பற்றுச்சீட்டை இணைக்காத விலைமனு செல்லுபடியான விலைமனு ஒன்றாக ஏற்கப்படமாட்டாது).
5. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கிளவுட் சேவையகங்களில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் **WWW.SRILANKBUSINESS.COM இணையதளத்திற்கான WEB APPLICATION HOSTING மற்றும் CONTENT DELIVERY NETWORK SERVICES – 2023/ 2025** என்று குறிப்பிட்டு 2022 நவம்பர் மாதம் 08 ஆம் திகதி மு.ப. 11.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, பெறுகைப் பிரிவு, 6ஆவது மாடி, NDB – EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது 06ஆவது மாடியின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுக்கள் திறக்கப்படும்.
6. விலைமனுக்கள் ஏற்கும் இறுதி நேரத்திற்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழு வசமானது.
7. விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அனுமதி அளிக்கப்படும்.
8. மேலதிக விபரங்களுக்கு 011-2305209/ 011-2300705 -11 (நீடிப்பு: 302) என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தகவல் தொழில்நுட்ப/ தகவல் தொழில்நுட்ப பிரிவின் உதவிப் பணிப்பாளர் கே.வை. சி. கிரேரோ அவர்களை அழைக்கவும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**
**NDB – EDB கோபுரம்,**
**இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02.**
**தொலைபேசி: 011 -2300705 -11/ தொலைநகல்: 011 -2300728**
**இணையதளம்: www.srilankabusiness.com**

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# தற்போதைய பொருளாதார வீழ்ச்சி அதிக கேள்வியினால் ஏற்பட்டதல்ல

## மாறாக பல பக்க காரணிகளாலேயே ஏற்படுத்தப்பட்டது

**ஒரு நாடு தொடர்ச்சியாக ஆறு மாத காலப்பகுதியில் அதாவது இரண்டு காலாண்டுகளுக்கு எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்குமாயின் அந்நாடு பொருளாதாரப் பின்னடைவைச் (economic recession) சந்தித்திருப்பதாகக் கூறப்படும். அவ்வாறான எதிர்க்கணிய பொருளாதார வீழ்ச்சியானது ஆழமானதாகவும் சில வருடங்களுக்குத் தொடருமாயின் அது பொருளாதார மந்தத்தை (economic depression) அடையக்கூடும்.**

இலங்கையில் இப்போது ஏற்பட்டிருப்பது ஒரு பொருளாதாரப் பின்னடைவாகும். இலங்கைப் பொருளாதாரம் 2022இன் முதல் காலாண்டில் 1.6 சதவீத வீழ்ச்சியையும், இரண்டாம் காலாண்டில் 8.4 சதவீத வீழ்ச்சியையும் எதிர்நோக்கியது. உலக வங்கியின் அண்மையை எதிர்வு கூறல்களின்படி இலங்கை 2022 ஆண்டில் 9.2 சதவீத பொருளாதார வீழ்ச்சியை அடைவதோடு, 2023இலும் 4.2 சதவீதத்தினால் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிய அபிவிருத்தி வங்கி வெளியிட்டுள்ள அண்மைய தகவல்களின்படி, 2022இல் இலங்கைப் பொருளாதாரம் 8.8 சதவீதத்தினாலும் 2023இல் 3.3 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடையும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. ஆனால் கொவிட் 19 இற்குப் பிந்திய தெற்காசியாவின் பொருளாதார மீட்சியானது அருமையானதாக உள்ளதாக அவ்வங்கி வெளியிட்டுள்ள தரவுகள் காட்டுகின்றன.

2022இல் இலங்கையைத் தவிர சகல தெற்காசிய நாடுகளும் நேர்க்கணியமான பொருளாதார வளர்ச்சியை அடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், மாலைதீவு வங்காளதேசம் மற்றும் இந்தியா 7 சதவீதத்திற்கு மேற்பட்ட பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்கின்றன. தெற்காசியாவின் சிறிய பொருளாதாரங்களாகிய நேபாளமும் பூட்டானும் கூட 4 சதவீதத்திற்கு மேற்பட்ட பொருளாதார வளர்ச்சியை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகள் திருப்திகரமான பொருளாதார விரிவாக்கத்தை எய்தியுள்ள நிலையில் இலங்கை அதற்கு நேரெதிராக மிகப்பெரிய பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துள்ளமையானது சர்வதேச ரீதியிலோ அல்லது பிராந்திய ரீதியிலோ ஏற்பட்ட பொருளாதாரத் தொய்வுகளால் உருவாகிய ஒன்றல்ல. மாறாக இலங்கை தானாகத் தேடிப் பெற்றுக்கொண்ட ஒன்றாகும். அரசியல் மயப்படுத்தப்பட்ட பிழையான பொருளாதாரக் கொள்கைத் தெரிவுகள் தான்தோன்றித் தனமான பொருளாதாரத் தீர்மானங்கள் நிபுணர்களின் கருத்துகளை செவிமடுக்காமை உரிய காலத்தில் அவசியமான பொருளாதார நடவடிக்கைகளை எடுக்காமை, கடந்த கால அனுபவங்களில் இருந்து பாடங்கற்காமை பிரச்சினைகள் தாமாகவே தீர்ந்து போகும் என்ற மூட நம்பிக்கை போன்றனவே, இப்பிரச்சினைக்கான உடனடிக்காரணங்களாகும். பொருளாதாரத்தின் நிறுவன ரீதியான கட்டமைப்புகள் சரிவர இயங்காமை ஊழல் இலஞ்ச மோசடிகள் போன்றன தலைவிரித்தாடுகின்றமை என்பன இலங்கையின் நடைமுறைசார்ந்த அரசியல், பொருளாதார இயங்கு நிலையை அவதானிக்கும் போது புலப்படும், முக்கியமான பலவீனம் யாதெனில் பொறுப்புக் கூறும் பொறிமுறை இருந்தும், பாரிசவாத நிலையில் அது முடங்கிப் போயுள்ளமையாகும். பொறுப்புக் கூறல் இல்லாத அதிகாரங்கள் தான்தோன்றித்தனமான முடிவுகளுக்கும் இட்டுச்செல்லப்படுவதும். அதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு எவரும் பொறுப்புக் கூறாத நிலையும் இலங்கையின் இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்கான முக்கிய காரணங்களாகும். இன்றைய மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இதே நிலைமை தொடர்வதும் அவதானிக்கப்படுகிறது.

| நாடு | 2022 ஆண்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் |
|---|---|
| மாலைதீவு | 8.2 |
| வங்காள தேசம் | 7.2 |
| இந்தியா | 7.0 |
| பாக்கிஸ்தான் | 6.0 |
| நேபாளம் | 5.8 |
| பூட்டான் | 4.5 |
| இலங்கை | –8.8 |
| தெற்காசியா | 6.5 |

**இலங்கையில் இப்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக, வரிகளை அதிகரிக்குமாறு IMF நிர்ப்பந்திப்பதாக அரசாங்கம் கூறுகிறது. இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் ஒரு சில வருடங்கள் தவிர ஏனைய எல்லா ஆண்டுகளிலும் அரசாங்கத்தின் அடிப்படைநிலுவை பற்றாக் குறையாகவே இருந்துள்ளது. அதனை உடனடியாக சீர்செய்ய முனைவது மடமை. அதுவும் பொருளாதாரம் பின்னடைவில் உள்ள நிலையில் அதனைச் செய்ய முனைவது பொருளாதாரத்தின் ஆணிவேரையே பிடுங்கிவிடும்.**

இவ்வாறான ஒரு பொருளாதார பின்னடைவு 2008இல் அமெரிக்காவில் உருவாகிய போது பாதிக்கப்பட்ட நிறுவனங்களை மீட்டெடுக்க அரசாங்கம் தலையிட்டது. வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு பெரும் எடுப்பில் நிவாரணங்கள் அறிவிக்கப்பட்டன. உலக வங்கி உட்பட ஏனைய நிறுவனங்கள் இதனை ஆதரித்தன. மாறாக வரிகளை அதிகரிக்க ஆலோசனைகள் முன்வைக்கப்படவில்லை. அதன் மூலம் மக்களின் கொள்வனவு சக்தியை அதிகரித்து, பொருளாதார நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையில் இப்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக, வரிகளை அதிகரிக்குமாறு IMF நிர்ப்பந்திப்பதாக அரசாங்கம் கூறுகிறது. இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் ஒரு சில வருடங்கள் தவிர ஏனைய எல்லா ஆண்டுகளிலும் அரசாங்கத்தின் அடிப்படை நிலுவை பற்றாக்குறையாகவே இருந்துள்ளது. அதனை உடனடியாக சீர் செய்ய முனைவது மடமை. அதுவும் பொருளாதாரம் பின்னடைவில் உள்ள நிலையில் அதனைச் செய்ய முனைவது பொருளாதாரத்தின் ஆணிவேரையே பிடுங்கிவிடும். பொருளாதாரத்தின் இப்போதைய வீழ்ச்சி மேலும் தீவிரமடைந்து பெருமந்தத்துக்கு இட்டுச் செல்லலாம். இப்போதைய பொருளாதாரத்தின் வீழ்ச்சி அதிக கேள்வியினால் ஏற்பட்ட ஒன்றல்ல. மாறாக எரிபொருள் விலையேற்றம் போன்ற நிரம்பல் பக்க காரணிகளால் ஏற்பட்டதாகும். அதனைச் சீர்செய்ய இலக்குப்படுத்தப்பட்ட முதலீட்டுச் சீர்திருத்தங்களுடன் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான நடவடிக்கைளும் அவசியம். வரி அதிகரிப்பின் மூலம் அதனைச் செய்ய முடியாது.



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

## பிரதமர் லிஸ் ட்ரஸ் இராஜினாமா!

# அடுத்தடுத்து பதவிவிலகும் பிரிட்டன் பிரதமர்கள்

**உலகத்திற்கு பாராளுமன்ற ஆட்சியின் மாதிரிகளை அறிமுகப்படுத்தியதுடன் அதன் கூறுகளின் சிறப்பினை நடைமுறைப்படுத்திய நாடான பிரித்தானியாவின் ஆட்சித்துறை எதிர் கொண்டுள்ள நெருக்கடிகள் அதிக குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரித்தானியாவின் 45 நாள் ஆட்சியிலிருந்த பிரதமர் லிஸ் ட்ரஸ் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். சமகால பிரித்தானியாவின் அரசியலில் டேவிட் கமரோனில் ஆரம்பித்து லிஸ் ட்ரஸ் வரையும் இராஜினாமா அரசியல் நிகழ்ந்துள்ளது. பதவியிலிருக்கும் ஆட்சியாளர்கள் இராஜினாமா செய்வதென்பது சிறந்த அரசியல் நாகரிமாகவே கருதப்படுகிறது. வளர்ந்த நாடுகளின் அரசியல் காலாசாரத்திலுள்ள பிரதான அம்சமும் அதுவாகவே கருதப்படுகிறது. அதனை அதிகம் கடைப்பிடிக்கும் பிரித்தானியாவின் அரசியல் தலைவர்கள் உலகத்திற்கு முன்னுதாரணமாக காணப்படுகின்றனர். ஆனால் இத்தகைய இராஜினாமா நாட்டினது உறுதிப்பாட்டினை சீர்குலைப்பதாக அமைய வாய்ப்புள்ளது. ஆட்சியின் உறுதிப்பாடே அந்த நாட்டின் அரசியல், பொருளாதார, இராணுவ, சமூக மட்டத்திலான செழிப்புக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாகும். ஏன் பிரித்தானியாவின் ஆட்சித்துறைக்குள் இத்தகைய நெருக்கடி நீடித்து வருகிறது என்பதை தேடுவதே இக்கட்டுரையின் வெளிப்பாடாகும்.**



முதலாவது, பிரித்தானியாவின் அரசியல் வரலாறு முழுவதும் இரு கட்சிப் பாரம்பரியம் காணப்பட்டாலும் கன்சவேட்டிவ் கட்சியின் ஆதிக்கமே மேலோங்கியுள்ளது. கன்சவேட்டிவின் மேலாதிக்க மனோநிலை அரசியல் தலைமைத்துவத்திற்கான வாய்ப்புக்களை கன்சவேட்டிவ் சமூகத் (வர்க்க) தளத்திற்கு அப்பால் தேட தயாரில்லாத தன்மையை ஏற்படுத்தியது. தற்போது கூட நான்கு பிரதமர்கள் இடைநடுவில் விலகிய போதும் ஒரே கட்சிக்குள் பிரதமர்களை தொடர்ச்சியாக தேடுவதுடன் மீளவும் தேர்தலுக்குப் போவதை கைவிட்டுவிட்டு கன்சவேட்டிவ் மீண்டும் பிரதர் ஒருவரை தேடுவதற்கான போட்டியில் இறங்கியுள்ளது. இந்தப் போக்கினைப் பார்த்தால் வாரத்திற்கு ஒரு பிரதமர் ஆட்சிக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே தோன்றுகிறது. உலகத்திற்கு ஜனநாயகத்தையும் ஆட்சியின் உறுதிப்பாட்டையும், பொறுப்புக் கூறலையும், சொல்லிக் கொடுத்த சமூகமென இனங்காட்டும் பிரித்தானிய சமூகம், அதிக முரண்பாட்டை கொண்டுள்ளதாக உலகத்திற்கு காட்டுகிறது. இது பிரித்தானியாவின் மேலாதிக்க மனோநிலையால் ஏற்பட்டதென்பதை நிராகரித்துவிட முடியாது. அத்தகைய மேலாதிக்க மனோநிலை முழு உலகத்திற்குள்ளும் பிரித்தானியா எடுத்தது போல் மேற்கு ஐரோப்பாவுக்குள்ளும் அத்தகைய போக்கு அதிகம் நிலவியது.இதுவே ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரித்தானியா வெளியேற அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தது. வேறு பல காரணங்கள் செல்வாக்குச் செலுத்தினாலும் அடிப்படையில் மேலாதிக்க மனோநிலையே அத்தகைய முடிவுக்கு வித்திட்டது. பிரித்தானியாவின் பொருளாதார நெருக்கடிக்கு ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டனின் வெளியேற்றமும் ஒரு காரணமாகும். பொருளாதாரக் கூட்டு, பாதுகாப்பு ஒத்துழைப்பு, என உலக நாடுகள் ஒத்துழைப்புக்களை பலப்படுத்தும் போது பிரிட்டன், பிரிவினையை ஊக்குவித்ததுடன், ஐரோப்பிய யூனியனிலிருந்து தனிமைப்படும் செயல்பாட்டை எடுத்தது. அதன் விளைவாகவே பொருளாதார நெருக்கடிகளும், அதற்கு முகங்கொடுக்க முடியாது பிரதமர்களது இராஜினாமாக்களும் அமைகின்றன.

இரண்டாவது, பிரிட்டன் இரண்டாம் உலக போருக்கு முன்பிருந்தே அமெரிக்க நலன்களுக்கு இசைவாகச் செயல்படும் போக்கினை கொண்டிருந்தது. ஐரோப்பாவுக்குள் அமெரிக்காவின் சிறந்த எடுபிடியாகச் செயல்படும் போக்கினை கொண்டுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்பான பிரித்தானியத் தலைமைகள் முழுமையாக அமெரிக்காவின் கொள்கைகளை பின்பற்றுவதை முதன்மைப்படுத்தி வந்தன. பிரித்தானியாவுக்காகவும் ஐரோப்பாவுக்காகவும் உழைத்த தலைவர்களில் மாக்ரட் தட்சர் முக்கியமானவராக விளங்கினார். அவர் அமெரிக்காவை கையாண்டு கொண்டு, பிரிட்டனினதும் ஐரோப்பாவினதும் நலனில் அக்கறை செலுத்தினார். அத்தகைய தலைமைகள் அதற்கு பின்னர் பிரித்தானியாவுக்குள் எழுச்சி பெறவில்லை. ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டனை வெளியே கொண்டுவருவதில் அமெரிக்காவுக்கு அதிக பங்கிருந்தது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதிக கவனமுடையவராக காட்டிக் கொண்டார். காரணம் ஐரோப்பாவின் ஆதரவு இல்லாவிட்டால் அமெரிக்கா, உலகத்தை ஆதிக்கம் செய்ய முடியாது என்ற நிலைப்பாட்டை அமெரிக்கா தெளிவாகக் கொண்டுள்ளது. அதனால் ஐரோப்பாவுக்குள் எந்த அரசும் எழுச்சியடைந்துவிடக் கூடாது என்பதிலும் அமெரிக்கா ஒத்துழைப்புக்கு எதிரான சக்திகள் வலுவடைந்துவிடக் கூடாது என்பதிலும் அமெரிக்கா தெளிவாக உள்ளது. ஒட்டுமொத்தத்தில் அமெரிக்காவே ஐரோப்பாவை தனது ஆதிக்கத்திற்குள் வைத்துள்ளது. இதற்கு உதவுவதையே பிரிட்டன் அரசியல் தலைமைகள் தங்களது பிரதான அரசியல் தலைமைத்துவமாகக் கருதுகின்றன.

மூன்றாவது, உக்ரைன் ரஷ்ய போர் அமெரிக்காவுக்கானதே. அமெரிக்க நலன்களுடன் முட்டிமோதும் நாடாக ரஷ்யாவும் அதன் தற்போதைய தலைமையும் காணப்படுவதனால் எதிர்கால உலக ஆதிக்கத்தை ரஷ்யாவின் நகர்வுகளால் அமெரிக்கா இழந்துவிடுமா என்ற குழப்பம், அமெரிக்க ஆட்சி வர்க்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. அதனால் ரஷ்யாவுக்கு எதிரான போரை ஊக்குவிக்கவும் நேட்டோ வழியாக போரை உத்தரவாதப் படுத்தவும் அமெரிக்கா விரும்புகிறது. ஆனால் இத்தகைய போர் ஐரோப்பாவை முழுமையாக நிலைகுலையச் செய்து வருகிறது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். பொருளாதார நெருக்கடி ஒரு பக்கம் அமைய மறுபக்கத்தில் அரசியல் குழப்பங்கள் நாடுகளுக்குள் ஏற்படுவதுடன் மீளவும் உலக போர்பற்றிய உரையாடல்களும் தீவிர போக்குடைய சக்திகளது எழுச்சிகளும் இலகுவாக மேலெழத் தொடங்கியுள்ளன. இதுவே முதலாம், இரண்டாம் உலகப் போர்களுக்கு வித்திட்ட காரணிகள். அது போன்ற ஒரு யுகத்தை மீளவும் உக்ரைன் ரஷ்யப் போர் ஐரோப்பாவுக்குள் ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய ரஷ்ய, ஐரோப்பிய மோதலுக்கு பின்னால் இருப்பது அமெரிக்க நலன்களே அன்றி ஐரோப்பாவின் நலன்களல்ல. ரஷ்யா ஒரு யூரோஆசியக் கண்டத்து நாடாக இருந்தாலும், அதிகம் ஐரோப்பிய மாதிரிக்குள்ளேயே மகாபீட்டர் காலத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. அதேநேரம் ஐரோப்பிய நாடுகளது பொருளாதாரத்திலும் ரஷ்யாவுக்கு அதிக பங்குண்டு என்பதை மறுக்க முடியாது. இன்றைய ஐரோப்பிய பொருளாதாரம் ஊடாக எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்கு மூலாதாரமான காரணம் ஐரோப்பாவுக்கான எரிவாயு மற்றும் பெற்றோலியத்தின் ஏற்றுமதியை ரஷ்யா தடை செய்தமையே.

நான்காவது, ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதார தடையை மேற்கொள்வதில் பிரிட்டன் அமெரிக்க கூட்டு ஏனைய ஐரோப்பிய நாடுகளை கடந்து செயல்பட்டிருந்தது. அதன் முழுமையான விளைவுகளே பிரிட்டனது ஆட்சியாளர்களது இராஜினாமா படலத்திற்கான அடிப்படையாகும். பிரிட்டன் இரு வரலாற்று தவறுகளை இழைத்துள்ளது எனலாம். ஒன்று, ஐரோப்பிய யூனியலிருந்து வெளியேறியமை. அதற்கான காரணமாக ஈரோ நாணயத்தைக் காட்டிலும் ஸ்ரேலிங் பவுண்ட் வலிமையை பாதுகாக்க பிரிட்டன் முனைந்ததாகவே கருதப்பட்டது. ஆனால் தற்போது இரு நாணயங்களையும் வலிமையற்றதாக்கியதுடன் ஸ்ரேலிங் பவுணுக்கு எதிரான டொலரின் பெறுமானம் உயர்வாகவே உள்ளது. ஐரோப்பிய மோதலை அமெரிக்கா ஏற்படுத்திவிட்டு தனது நாணயத்தின் பெறுமானத்தை பாதுகாத்துள்ளது. இரண்டாவது, ரஷ்யா மீதான பொருளாதாரத் தடையை ஊக்குவித்தமையாகும். ரஷ்ய,ஐரோப்பிய பொருளாதார உறவை புரிந்துகொள்ளத் தவறிய பிரிட்டன் அதனை ஊக்குவித்ததுடன், அமெரிக்க விருப்புக்கு தலையசைக்கும் தவறை இழைத்துள்ளது. அதில் முன்னாள் பிரதமர் பொறிஸ் ஜோன்சனின் பங்கு முதன்மையானது. இத்தாலி, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகள் ரஷ்யா மீதான பொருளாதார தடையை விரும்பாத போதும், பிரிட்டன் அமெரிக்காவுடன் இணைந்து கொண்டு நேட்டோ, ஐரோப்பிய யூனியன், ஜி7 என்ற வரிசையில் காணப்பட்ட ஐரோப்பிய ஒத்துழைப்பு நாடுகளை பயன்படுத்திக் கொண்டு அந்த நாடுகளை கட்டுப்படுத்தி ரஷ்யாவுக்கு எதிரான பொருளதாதாரத் தடையை சாத்தியப்படுத்தியுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

# இன்பம் தரும் தீபாவளி

இந்துக்களால் பரவலாகக் கொண்டாடப்படும் பண்டிகையான தீபாவளி, இந்துக்கள் வசிக்கும் பிற நாடுகளிலும்கூட உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. ஆனால், இந்தப் பண்டிகை எப்படித் தோன்றியது என்பது குறித்து ஒவ்வொரு கதை சொல்லப்படுகிறது.



இந்தப் பண்டிகை தமிழ் மாத கணக்கீட்டின்படி பெரும்பாலான வருடங்களில் ஐப்பசி மாதத்தில் வரும் அமாவாசை தினத்தன்று கொண்டாடப்படுகிறது. சில வருடங்களில் மட்டும் அமாவாசைக்கு முந்தைய தினம் கொண்டாடப்படுகிறது. ஆங்கில நாட்காட்டியின்படி, அக்டோபர் 17 முதல் நவம்பர் 15க்குட்பட்ட நாட்களில் தீபாவளிப் பண்டிகை அமைகிறது.

இந்தியா மட்டுமல்லாது, வேறு சில நாடுகளிலும் இந்தப் பண்டிகை தினத்தன்று அரச விடுமுறை அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்துக்கள் மட்டுமல்லாது, சமணர்கள், சீக்கியர்கள் போன்றவர்களும்கூட இந்தப் பண்டிகையை கொண்டாடுகின்றனர்.

வட இந்தியாவில் தீபாவளிப் பண்டிகை குறித்து பல்வேறு கதைகள் சொல்லப்படுகின்றன. அதில் ஒன்று, ராமரோடு தொடர்புடையது. அதாவது ராமன் தனது 14 வருட வனவாசத்தை முடித்துக் கொண்டு, லட்சுமணன், சீதையுடன் அயோத்திக்கு திரும்பிய தினத்தை அந்நாட்டு மக்கள் விளக்கேற்றிக் கொண்டாடினர். அதுவே தீபாவளி தினம் என்ற ஒரு கதை வழக்கில் இருக்கிறது.

மற்றொரு கதையில், பெரும் அட்டகாசம் செய்துவந்த நரகாசுரனை கிருஷ்ணர் வதம் செய்தபோது, தான் இறந்த தினத்தை மக்கள் அனைவரும் கொண்டாட வேண்டுமென அந்த அசுரன் கேட்டுக்கொண்டதாகவும், அதன்படியே தீபாவளி கொண்டாடப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

ஆனால், பண்டித அயோத்திதாஸர் தீபாவளி பண்டிகை பௌத்தப் பண்டிகை என்கிறார். தீபாவளிப் பண்டிகை குறித்து கட்டுரை ஒன்றை 1907ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி எழுதியிருக்கிறார் அயோத்திதாஸர். தீபாவளி பண்டிகை என்னும் தீபவதி ஸ்னான விவரம் என்ற அந்தக் கட்டுரையில், தீபாவளிப் பண்டிகையை ஒரு பௌத்தப் பண்டிகை என குறிப்பிடுகிறார் அயோத்திதாஸர்.

ஆனால், சமணர்களிடமிருந்து இந்துக்கள் பெற்ற பண்டிகைதான் தீபாவளி என்றும் சொல்லப்படுகின்றது. சமண மதத்தின் கடைசி தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் பாவாபுரி நகரத்தில் அரசனின் அரண்மனையில் தங்கியிருந்தபோது, அங்குள்ள மக்களுக்கு அறவுரை வழங்கினார். இரவு முழுவதும் நடைபெற்ற இந்தச் சொற்பொழிவு விடியற்காலையில் முடிவடைந்தது. இதனால் மக்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்லாமல் ஆங்காங்கே உறங்கிவிட்டனர். மகாவீரரும் தனது இருக்கையிலேயே வீடுபேறடைந்திருந்தார்.

பொழுதுவிடிந்ததும் விழித்துப் பார்த்த மக்கள் மகாவீரர் வீடுபேறடைந்திருந்ததை உணர்ந்தனர். தகவல் அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்த அரசன் மற்ற அரசர்களோடு யோசனை செய்து உலகத்திற்கு ஞானஒளியாகத் திகழ்ந்த மகாவீரரை மக்கள் நினைவுகூர்ந்து வழிபடும் பொருட்டு அந்த நாளில் வீடுதோறும் விளக்குகளை ஏற்றிவைத்து விழா கொண்டாடும்படி செய்தான். மகாவீரர் விடியற்காலையில் வீடு பேறு அடைந்ததால்தான் தீபாவளியும் விடியற்காலையில் கொண்டாடப்படுகிறது என்கிறார் சீனி. வேங்கடசாமி எனும் ஆய்வாளர்.

ஆனால், இவையெல்லாம் தீபாவளி பின்னணி குறித்த கதைகளே தவிர, அவை கொண்டாடப்பட்டது குறித்த ஆவணமல்ல. இந்தப் பின்னணியில் பார்க்கும்போது தமிழில் தீபாவளி குறித்த பதிவுகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன.

"தமிழ் வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு வரை தீபாவளி குறித்த குறிப்புகள் ஏதும் கிடையாது. வீரமாமுனிவரின் சதுரகராதி 1732ல் வெளியிடப்பட்டது. அதில் தீபாவளி என்ற சொல் கிடையாது. தமிழ் இலக்கியங்களிலும் 19ஆம் நூற்றாண்டுவரை தீபாவளி என்ற சொல் ஏதும் கிடையாது. 1842ல் இலங்கையில் வெளியிடப்பட்ட மானிப்பாய் தமிழ் தமிழ் அகராதியில் இந்தச் சொல் இருக்கிறது. அதற்கு புராண விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தத் தருணத்தில் இந்த விழா அறிமுகமாகியிருக்கலாம்" என்கிறார் ஆய்வாளர் பொ. வேல்சாமி. தமிழ் மரபின்படி, நம்முடைய விழாக்கள் அனைத்துமே அறுவடைக்குப் பிந்தைய காலகட்டத்தில்தான் கொண்டாடப்படுவது வழக்கம். 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இந்த விழா பிரபலமாக இருந்ததாகச் சொல்ல முடியாது என்கிறார் பொ. வேல்சாமி. உ.வே. சாமிநாதய்யரின் வாழ்க்கை வரலாற்று நூலான என் சரித்திரத்தில் தீபாவளி குறித்து ஏதும் பெரிதாகக் கிடையாது என்பதையும் பொ. வேல்சாமி சுட்டிக்காட்டுகிறார்.

தவிர, தமிழ்நாட்டிற்கு வந்து தங்கியிருந்து பயணக் குறிப்புகளையும் மக்களின் சமூக பழக்கவழக்கங்களையும் எழுதிய வெளிநாட்டவரின் குறிப்புகள் எதிலுமே தீபாவளி குறித்த பதிவுகள் கிடையாது என்கிறார் வேல்சாமி.

ஆனால், கார்த்திகை மாதத்தில் தீபம் அல்லது நெருப்பை ஏற்றி சடங்குகளைச் செய்யும் நிகழ்வுகள் இருந்திருக்கின்றன என்பதை சுட்டிக்காட்டும் பொ. வேல்சாமி, அவற்றுக்கும் நாம் தற்போது கொண்டாடும் தீபாவளிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்கிறார்.

பண்பாட்டு ஆய்வாளரான தொ. பரமசிவனும் பழந்தமிழ்நாட்டில் தீபாவளி என்ற பண்டிக்கை இல்லை என்கிறார். 'சமூக வரலாற்றுப் பார்வையில் திருவிழாக்கள்' என்ற கட்டுரையில் இது குறித்துப் பேசும் தொ. பரமசிவன், "தமிழ்நாட்டுத் திருவிழாக்களின் பொதுவான கால எல்லை தை மாதம் முதல் ஆடி மாதம் வரையே ஆகும். தமிழகம் வெப்ப மண்டலத்தில் உள்ள நிலப்பகுதியாகும். எனவே வேளாண் தொழில்சார்ந்த பணிகள் இல்லாத காலப்பகுதியே தமிழர்களின் திருவிழாக் காலமாகிறது. தமிழ்நாட்டின் நாட்டார் தெய்வங்கள் இந்தக் கால அளவில்தான் கொண்டாடப்படுகின்றன

**வட இந்தியாவில் தீபாவளிப் பண்டிகை குறித்து பல்வேறு கதைகள் சொல்லப்படுகின்றன. அதில் ஒன்று, ராமரோடு தொடர்புடையது. அதாவது ராமன் தனது 14 வருட வனவாசத்தை முடித்துக் கொண்டு, லட்சுமணன், சீதையுடன் அயோத்திக்கு திரும்பிய தினத்தை அந்நாட்டு மக்கள் விளக்கேற்றிக் கொண்டாடினர்.அதுவே தீபாவளி தினம் என்ற ஒரு கதை வழக்கில் இருக்கிறது.**

இன்று பரவலாகக் கொண்டாடப்படும் தீபாவளி, விசயநகர மன்னர்களின் காலத்தில் தெலுங்கு பிராமணர் வழியாக தமிழ்நாட்டிற்கு வந்த திருவிழாவாகும். வடநாட்டில் இது சமணசமயத்தைச் சேர்ந்த திருவிழா ஆகிறது" என்கிறார் தொ. பரமசிவன்.

ஆனால், பெரும்பாலானவர்கள் ஒரு பண்டிகையை மகிழ்ச்சியாகக் கொண்டாடும்போது அது எங்கிருந்து வந்தது, அதனை நாம் கொண்டாடலாமா என்ற ஆராய்ச்சிக்குள் புகுவதைவிட்டுவிட்டு, விருப்பமிருந்தால் கொண்டாடுவதே சிறந்தது என்கிறார் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளரான ஆ. சிவசுப்பிரமணியம்.

அ. கனகசூரியர் ...

---



தமிழ்க்கவியின்
வாழ்க்கைக் கோலங்கள் 2

# இன்றைய பிள்ளைகள் வாங்கும் புத்தகங்கள் 'பாஸ் பேப்பர்' கட்டுகள் மட்டும்தான் !

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்." இருபதாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில் யாழ்ப்பாணத்திலே மில்க்வைற் நீலசோப் உற்பத்தி செய்யப்பட்டது. அந்த சவர்க்காரத்தின் உறையில் ஒரு திருக்குறள் அச்சிடப்பட்டிருக்கும். இந்த சவர்க்காரத்துடன் பற்பொடி கோப்பி சிகைக்காய் என வேறு பொருட்களும் சிறு பொதிகளாக விற்பனைக்கு விடப்பட்டது. எல்லாவற்றிலுமே ஏதாவதொரு தகவல் அச்சிடப்பட்டிருக்கும். அதை பணியாகச் செய்தவரை நாம் மில்க்வைற் கனகரத்தினம் எனக் குறிப்பிடுவோம்.

அவர் தந்த பொன்மொழிதான் 'வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்.' என்பதாகும். வாசிப்பு என்பது அச்சு இயந்திரம் வருவதற்கு முன் ஓலைச்சுவடிகளில்தான் நடந்தது. ஓலை பற்றி நாம் பார்த்தால், பனையோலையை நன்கு முற்றாமலும் பிஞ்சாகவும் இல்லாத ஒரு பதத்தில் வெட்டி நிழலில் உலர்த்தி பின் வேகவைத்து உலரவைத்து பதப்படுத்துவார்களாம். அதன் பதத்தன்மையை பரிசோதிக்க அந்த ஓலையில் முதன்முதலாக 'உ'என எழுத்தாணியால் எழுதிப் பார்ப்பார்கள். இந்த ஊவானது ஒரு சுழி ஒரு கொம்பு வளைவு ஒரு நேர்கோடு என்பவை கொண்டு அமைகிறது. இந்தக்கோடு பக்குவமாக ஓலையை கிழிக்காமல் விழுந்தால் ஓலை பதமாகிவிட்டது என்பதாகும். அந்த முதற்சுழியை நாம் இன்றைக்கும் பிள்ளையார் சுழி என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். அதற்குப்பிறகு அதை அளவெடுத்து வெட்டி ஒரு புறம் நூல் போட வாகாக துளையிட்டு வைப்பார்கள்.

இந்த ஓலையில் எல்லோராலும் எழுதவும் முடியாது. எல்லோராலும் வாசிக்கவும் முடியாது. காரணம் படித்தவர்கள் மிகச்சிலரே ஒவ்வொரு ஊரிலும் வாசிக்கும் மனிதர்கள் எத்தனை பேர் என்று விரல்விட்டும் எண்ணிவிடலாம். அட என்னப்பா இப்பவும் அதே நிலைதானே. அப்போதுள்ள எழுத்துகளில் குற்றெழுத்தில் குத்த முடியாது ஓலை கிழிந்து விடும். எல்லாம் ஒற்றைக் கொம்புதான் ரெண்டு கொம்புக்காக ரெண்டுதரம் சுழிப்பது ஓலைக்கு கேடு.

பின்னாளில் வெள்ளையர்கள் ஆட்சியில் எல்லோரும் கற்கும் பேறுபெற்றாலும் பெரும்பாலானவர்கள் எழுத வாசிக்கத் தெரிந்தளவில் பாடசாலையை மறந்தனர். அவர்களுடைய தேவைக்கு அது போதுமானதாகும். அச்சு இயந்திரங்கள் வந்து பத்திரிகை, புத்தகங்கள் என (நான் தமிழில் சொல்கிறேன்) வர ஆரம்பித்து ஊருக்கூர் பெரிய எழுத்து நல்லதங்காள், பெரிய எழுத்து புலந்திரன் களவுமாலை, விக்கிரமாதித்தன், ஆராபிய ஆயிரத்தொரு இரவுகள், மதனகாமராசன்கதை, செகதலப்பிரதாபன், பாரதம், ராமாயணம் என்ற புராணப் பாத்திரங்களை மக்கள் நுகர ஆரம்பித்தாலும். எல்லோராலும் வாசிக்க முடியாது. ஊரில் மாலையில் ஒருவர் வாசிக்க பலர் இருந்து கேட்டு பயனடைந்தனர். பின்னர் வள்ளுவர் கல்வியோடு கேள்வி என்றொரு அதிகாரத்தையும் எழுதியது இதனால்தான் என நான் அப்போது நினைப்பேன்.

காலம் புராண பாத்திரங்களை விட்டு நகர்ந்து மன்னர்களையும் மன்னர் காலத்தோடு ஒட்டி வணிகர்களையும் கதாநாயகர்களாக்கியது. கோவலன் கதை, பட்டினத்தார் என கீழிறங்கிய கதாபாத்திரங்கள், சமூக மாந்தர்களை சுமக்க ஆரம்பித்தபோது, மக்கள் வாசிப்பை தாமாகவே கொள்ள ஆரம்பித்தனர். நாங்கள் படித்தால் படிப்பதோடு நிற்கவில்லை. அந்தப்பாத்திரங்களையெல்லாம் அலசி ஆராய்ந்து கழுவித் துடைத்து காயப்போட்டு உதறி சிலர் இதை கரைத்து குடித்தல் என்றும் சொல்வர். பட்டி மன்றங்களையும் கதாகாலட்சேபங்களையும், வழக்காடு மன்றங்களையும் நடாத்திக் கொண்டிருக்க, எங்கள் செல்வங்களை சூறையாடிச் சென்றவர்கள் அவற்றைக் கொண்டு அடிமைகளைவிட பலமடங்கு உழைக்கக் கூடிய வல்லமைபெற்ற யந்திரங்களை கண்டுபிடிப்பதில் காலத்தை செலவிட்டனர். அங்கும் கல்வி வளர்ந்தது இங்கும் கல்வி வளர்ந்தது. எப்படிப் பட்ட கல்வி என்பது வேறு.

வாசிப்பதில் பெண்களை விட ஆண்கள் முன்னணியில் நின்றனர். என் பாட்டி, தந்தையின் தாயார் சாகும் வரை வாசித்தார்.

கண்களை இடுக்கிக் கொண்டு வெளிச்சம் முடியும்வரை குடிசை வாசலில் இருந்து வாசித்த கதைகளை எமக்கும் சொல்வார். அப்போது கலைமகள், காதல், கற்கண்டு, பேசும்படம் போன்ற சஞ்சிகைகள் வந்தன. பாட்டி அப்பால் போனபின் திருப்தி இல்லாமல் நாங்கள் அவற்றை திரும்ப வாசிப்போம். என் தாயாருக்கு இந்த வாசிப்பு பிடிக்காது. தன் மாமியாரை கேலிசெய்வார் 'இந்த வயசிலயும் அவாக்கு ஒரு படிப்பு' என்று. நாங்களும் அம்மா அறியாமல் தான் வாசித்தோம் அது ஒரு காலம்.

வாசிப்பதில் உள்ள இன்பம் அதை அனுபவித்தவர்களுக்கே தெரியும். என் வீட்டில் ஒரு நித்தக்குடிகாரன் இருந்தான். ஒரு நாள் குடிக்காது போனாலும் பெரிய ரகளை பண்ணுவான். குடித்தாலும் பண்ணுவான். காசில்லாமலோ, அல்லது அரசாங்க சட்டத்தாலோ மது கிடைக்காத போது அவனுக்கு நல்ல புத்தகங்கள் கிடைத்துவிட்டால் போதும் அமைதியாக அதில் அமிழ்ந்து விடுவான். படிப்பது பேரின்பம் படித்ததை பகிர்வது அதைவிட இன்பம். இந்த இன்பத்தை எந்த போதைப் பொருட்களும் தந்துவிட முடியாது.

இன்றைய பிள்ளைகளுக்கு வாசிப்பதற்கான சந்தர்ப்பங்கள் மிக குறைவுதான். பெரும்பாலும் நூலகம் செல்லும் பிள்ளைகளும் புத்தகக் கடைகளுக்கு செல்லும் பிள்ளைகளும் வாங்கும் புத்தகங்கள் 'பாஸ் பேப்பர்' கட்டுகள்தான். அவர்கள் புள்ளிகளுக்காக வாசிப்பவர்கள் மனித வாழ்க்கைக்கு தேவையானவற்றை தேடிப்படிக்க முடியாத படிக்கு அவர்களது எதிர்காலம் அமையவேண்டும்.



எனக்குத் தெரிந்த திறமையான ரசனையுள்ள வாசகர்கள் பலர் தாம் எடுத்துக் கொண்ட தொழில்கள் காரணமாக வாசிப்பை அறவே விட்டொழித்துள்ளனர். ஆசை இருக்கிறது நேரம்?

இப்போது புத்தகங்களை வாசித்தறிவதை விட ஒரு இறுவட்டில் பார்த்து தெளிவதே வழக்கமாகி வருகிறது. வருங்காலத்தில் எழுத்து எனக் கூறப்படும் மொழிகளின் வரிவடிவம் தேவையற்றதாக மாறும் அபாயம் வந்து கொண்டிரு க்கிறது. ஒரு ஏயெல் படிக்கும் மாணவரால் கையெழுத்துகளை வாசிக்க முடியவில்லை.

திக்கித்திணறி வாசிக்கிறார் அவரது கல்வி இணையவழியிலும் கைபேசி வழியாகவும் நிரப்பப்படுகிறது. பரீட்சைகளும் கணனிவழி வந்துவிட்டால் எழுத்துக்களை ஒலியெழுப்பி வாசிக்க வேண்டிய தேவை என்ன இருக்கிறது என்கிறாள் எனது பேத்தி, நியாயம் தானே. .நாங்கள் படித்த காலத்தில், என் அப்பா சொன்னார் "பிள்ளை ஒரு காயிதம் எழுத வாசிக்க தெரிஞ்சாக் காணும் அதுக்கு மேல ஏன் பள்ளிக்கூடம் போய் மினைக்கெடுறாய்" பாருங்கள், இப்ப அதுவும் இல்லை. காயிதம்போடுவது யார்? எந்த தேசத்தில் இருந்தாலும் முகத்துக்கு முகம் பார்த்துப் பேசமுடிகிறது. குறுஞ்செய்தி அனுப்ப முடிகிறது. அதுவும் தமிழை ஆங்கில எழுத்துகளில் எழுதி அனுப்பும் ஒரு புதுவகை (மொழி)முழி பெயர்ப்பு.

எது எப்படிப்போனாலும் புத்தகங்களும் பத்திரிகைகளும் புற்றீசல்கள் போல வந்து கொண்டிருக்கின்றன. புத்தகக் கண்காட்சிகளும் பரவலாக நடக்கிறது. அதே இடங்களில் புத்தக மதிப்பீடுகளும் செய்கிறார்கள். ஆனால் அதெல்லாம் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளாகவே நடந்து முடிவதாக தெரிகிறது.

இப்போது தொலைக்காட்சிகளும் தொடரத் தொடங்கியுள்ளதால் செல்பேசிகள் சகல விடயங்களையும் நிரப்ப ஆரம்பித்துள்ளன. அங்கேயும் வாசிப்பு மறைந்து உரையாடல்கள் காட்சியமைப்புகள் முலமான தரவுப் பரிமாற்றங்கள் வகை தொகையின்றி வந்து சேர்கின்றன. நாம் தொடங்கிய இடத்துக்கு வருவோமா?

ஒவ்வொரு ஊரிலும் வாசிப்பவர்கள் ஒரு சிலரே உள்ளனர். வாசித்தபின் அவற்றை கலந்து பேச முனையும்போது கேட்பவர் அதே செய்தியை வேறொரு கோணத்தில் தருகிறார். பத்திரிகைகளை நம்பி இருப்பவர்கள் பல செய்திகளை கோட்டைவிட்டுவிட, தொலைபேசியில் செய்தியறிவோர் மேவிவிடுகின்றனர்.

பாடசாலைச் சிறார்கள் கல்விக்கென பெற்ற தொலைபேசிகளில் கவுண்டமணி செந்தில் வடிவேல் உட்பட பல சினிமா நட்சத்திரங்கள் பாடமெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வாசிப்பு பெற்றோரிடமிருந்து வரவேண்டும் எத்தனை பெற்றோருக்கு, ஆசிரியர்களுக்கு வாசிக்க நேரம் இருக்கிறது. ரொம்ப கவலையாக இருக்கிறது.

---

# எனக்கு எல்லாமே நீதான்

எனக்கு எல்லாமே நீதான்
என் கதையே நீதான்
காவியமும் நீதான்
காதல் ஓவியமும் நீதான்
கதை கூறும் சிற்பமும் நீதான்
கார்கால மேகமும் நீதான்
காவேரி நதியும் நீதான்
கனிவுக்கு இலக்கணமும் நீதான்
கனவுகளில் தோன்றுவதும் நீதான்
கண்களை கவர்வதும் நீதான்
கனிவான கதைகளை கூறுவதும் நீதான்
கர்வம் இல்லா உள்ளம் கொண்டவளும் நீதான்
காரிகைக்கு உதாரணமும் நீதான்
கன்னியர்களை கவர்வதும் நீதான்
காலமெல்லாம் என்னை காப்பதும் நீதான்
எனக்கு எல்லாமே நீதான்



மு.சு.நஜீம்
பிரதம பொலிஸ் பரிசோதகர்
கிண்ணியா

---

## உலக கை கழுவும் தினம் 2022



யுனிலீவர் ஸ்ரீலங்காவின் முதன்மையான சுகாதார சவர்க்கார வர்த்தக நாமமான லைஃப்போய் (Lifebuoy), இலங்கை சாரணர் சங்கத்துடன் இணைந்து, கல்கிஸ்ஸை புனித தோமஸ் கல்லூரியில் 13ஆவது முறையாக இடம்பெறும் 2022 தேசிய கியூபொரி (Cuboree) நிகழ்வை முன்னெடுத்திருந்தது. இந்நிகழ்வில் சிறுவர்களிடையே கை கழுவுவதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தும் வகையில், உலகளாவிய கை கழுவுதல் தினத்தை நினைவுகூர்ந்தது. சமூகங்களுக்கிடையே நீண்ட காலமாக சிறந்த சுகாதார நடத்தைகளை பேணுவதற்கான தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 12,000 இற்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு, ஒழுங்கற்ற கை தூய்மை தொடர்பான சுகாதார ரீதியான அபாயங்கள் குறித்து தெளிவூட்டல் மற்றும் அவர்களின் நேரடி பங்குபற்றல் மற்றும் தகவல் வழங்கல் செயற்பாடுகள் மூலம், கை கழுவுதல் தொடர்பான எளிய படிகள் சொல்லிக் கொடுக்கப்பட்டன. இந்நிகழ்வில், சிறுவர்களுக்குள்ள இயல்பான தலைமைத்துவ திறன்களை வெளிக்கொண்டு வரும் வகையில், மேலும் 5 பேருக்கு கை கழுவுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி, அவர்கள் கற்றறிந்த விடயங்களை ஏனையோருக்கும் சென்றடைவது ஊக்குவிக்கப்பட்டது.இந்த முக்கியமான செய்தியைப் பரப்புவதற்கான அவர்களின் பணியைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் வகையில், கை கழுவுதல் பிரதம விழிப்பூட்டல் அதிகாரிகளாக (Chief Education Officers CEOs) அவர்களை பதிவுசெய்யுமாறு ஊக்குவிக்கப்பட்டனர். இதில், இலங்கை முழுவதும் இருந்து மொத்தமாக 9 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, கைகழுவுதல் CEO அதிகாரிகளின் தலைமையில் தங்கள் பாடசாலை வளாகத்திற்குள் தனியான கை கழுவும் நிலையங்களை அமைப்பதற்காக தலா ரூ. 100,000 நிதியும் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு போதியளவான லைஃப்போய் ஹேண்ட் வொஷ் உடன், சவர்க்காரம் மற்றும் கியூபொரி கையேடுகளையும் சிறுவர்களுக்கு லைஃப்போய் வழங்கியது.




## தீபாவளித் திருநாளே வா...

பாண்டியூர் பொன்
ஏ.பி.என். நவநீதன்

நாடு முழுவதிலும் பெருங்கேடு
விலைவாசி!
பாடுபடும் ஏழைகளின் குடி
வீடுகளில் இல்லை மகிழ்ச்சி!

விலைவாசிக் கனம் நீங்கி நல்ல
வழியாக்கித் தெம்பூட்டித்
தெளிவாக நாம்வாழத்
தீபாவளித் திருநாளே வா!

தீ சுடா வண்ணம் எம்மை
பாதுகாக்க வருமெங்கள்
வளிக்காற்றாய் வரமருளி
தீபாவளித் திருநாளே வா!

## தீபாவளியே வருக

வி.அபிவர்ணா
முல்லைத்தீவு

வாடிய மக்கள்!
தேடிய வளமே
நாளும் கிடைத்தது அரிதினும்
அரிது!
ஆண்டிற்கு ஒருமுறை
வருகின்ற திருவிழா
அயலவர் கவலைகள்
கொஞ்சம் மறப்பர்!
உற்றார் உறவினர் கூடி
களிக்கும்!
உன்னதம் தருகின்ற தீபாவளி
திருநாள்
தீயவை அழிந்து நன்மைகள்
பெருகிட
படைத்தவன் அளித்திட்ட
பசுமை திருநாள்
தீபாவளியே ஒளியுடன்
வலுவுடன் வருக
தீஞ்சுவை தமிழ்த்தேன்
அமிழ்தென தருக!

## தித்திக்கும் தீபத் திருநாள்

சுந்தரராஜ் சுபாஷினி
வோல்ட்றிம், லிந்துல



தீபங்கள் ஏற்றும் தீபத்திருநாள்!
பார்போற்றும் பண்டிகைத்திருநாள்!
இருள் அகற்றும் இன்பத்திருநாள்!
ஒளியூட்டும் ஓங்காரத் திருநாள்!

உறவுகளோடு உறவாடும் உன்னதத் திருநாள்!
மகிழ்ச்சி பொங்கும் மங்களத்திருநாள்!
அச்சந்தவிர்க்கும் அற்புதத் திருநாள்!
புத்தாடை அணிந்திடும் புதுத்திருநாள்!

அமாவாசைக்கூட அகமகிழும் திருநாள்!
எண்ணெய் தேய்த்து எலும்புக்கு
பலம் சேர்க்கும் எண்ணிலடங்கா
ஏற்றம்தரும் திருநாள்!
பலவகை பலகாரம் படையல்
படைத்திடும் பசிபோக்கி
உணவூட்டும் திருநாள்!

சுற்றத்தோடும் நட்போடும் சேர்ந்து
குலாவி மகிழ்வூட்டும் மனமகிழ் திருநாள்!
நட்சத்திரங்கள்கூட நாணிடும்
நாடெங்கும் ஒளிரும்
நங்கையரின் விளக்கொளியில்...
புத்தம்புது புத்துணர்ச்சி...
புன்னகையால் ஒளியூட்டும்...

தித்திக்கும்.......
எத்திக்கும்.......
தீபத்திருநாள்.....
புத்திக்கும்.....
பக்திக்கும்.....
சக்திக்கும்.....
ஏற்றந்தரும்.....
நலந்தரும்.....
வளந்தரும்....
இந்நாள்போல் எந்நாளும்
நம்வாழ்க்கை மிளிரட்டும்

## தர்மம் போதித்த தீபநாள்

உடப்பூர்
வீரசொக்கன்

நாளும் பிறந்ததுதீபநாளும் வந்தது
நாட்டிலும் வீட்டிலும் ஒளிமலர்ந்தது
ஊருக்கும் உறவுக்கும் விடிவுவந்தது
ஏற்றுவோம் தீபத்தைகொண்டாடிமகிழ்ந்து

இருள் சூழ்ந்த ஏழைவாழ்வில்
இத் தீபாவளியாவது மகிழ்வுதராதா
அருள்பெற்று அவனியில் நாமும் வாழ
வந்ததீபநாளில் வசந்தமும் பூத்தது

எல்லோர் வாழ்வில் ஏற்றம் பெறவே
ஏணியாகவந்த இத்தீபாவளியும்
நல்லோர் போற்றிநலம் பெறவே
நாடுசிறக்கக் கொண்டாடும் இத்திருநாளில்

அதர்மத்தை விளைவித்த அசுரனையும்
அட்டூழியம் தந்த கம்சனையும்
சரித்திரம் சொல்லும் படிப்பினையை
இத் தீபநாளில் எமக்குரைக்கும் அருள்மொழியே

புத்தாடை புனைந்து புதுவழிபிறந்திட
புவனம் சிறக்க பட்டாசுகொளுத்திட
இத்திரை மாந்தரின் துயர் போக்கிட
இன்றே வந்தது இனிய தீபநாளடா

தர்மம் போதிக்க கண்ணன் வந்தான்
சமதர்மம் தழைக்க வாழ்வுதந்தான்
கர்மவினைகள் களைந்தோடிட
கண்கவர் தீபத்தை ஏற்றுவோம் போற்றி!



## வருவான் வடிவேலன்

க. கிருஷ்ண மூர்த்தி
தம்பிலுவில் 01

நீராடி பட்டுத்தி நின்றவர்கள் யாவருக்கு
மாறாத வாழ்வுதர வருவான் வடிவேலன்
இக்கந்த சஷ்டி நன்நாளில்

தீராத சூலநோய் தீர்த்தான் திருச்செந்தூர்
வாழும் செல்லப்பிள்ளை சரவணன்
பாலன் தேவராசனுக்கு இன்னாளில் தான்

சட்டியில் இருந்தால் தானே அகப்பையில்
வரும் சங்கடங்கள் தீரவேண்டுமானால்
பயபக்தியோடு சஸ்டி விரத மிருந்து பாருங்களே
கேட்டது கிடைக்கும் நினைத்தது நடக்கும்

கந்தரலங்காரம் கண்டுமயில் ஆடும்
ஆறுபடைவீட்டில் வாழும் நாயக கைக்கண்டு
நாமும் மனமுருகி வாழ்த்தி
வணங்கிடும் நாள் இதுதான் கந்த சஸ்டி
நன்நாளில் தான்

மாறுபட்ட சூரனை வனத்தும்
மறுவாழ்வளித்து சேவலும் மயிலுமாக்கி
னான் மன்னுயிர் காத்தவடிவேலன்
சோதனை செய்வான் ஆனால்
கைவிட மாட்டான் அந்த சுவாமிநாதன்

தேவர் துயர் மட்டும் தீர்க்கவில்லை
அவன் அருணகிரி வள்ளலார்
நக்கீரர் குமரகுரு போன்றோர்
குறைகளையும் தீர்த்தவள்ளனவன்
ஏன் நம் குறைகளையும் தீர்த்துவைப்பான்...!



## திருநாளாம் தீபாவளி

நுஸ்ரத் மஹ்ரூப்
மாதம்பை

அசுரன் நரகாசுரன்
அஸ்தமணமாகிப் போன
அழகிய நாளாம்
தீபாவளி....

திசை நாலும் சூழப்பட்ட தீவில்
தீமைகள் ஒழிந்திட
தீப ஒளியேற்றும் நாளாம்
தீபாவளி...

தீப ஒளி மட்டுமல்ல
திரண்டு வரும் தீமைகளை
தீ போல் எதிர்த்து நிற்பதுவாம்
தீபாவளி....

உள்ளமும் இல்லமும்
ஒளிக்கீற்றால்
அழகுறும் நாளாம்
தீபாவளி....

உண்டு உடுத்து
உவகை கொள்வது போல்
உற்றார் உறவுகளை
உளமார மன்னித்து
உள்ளத்தால் ஒளியேற்றி
ஒன்றாய் கொண்டாடும் நாளாம்
தீபாவளி...

இரு துருவங்களாய்
இருக்கத் தேவையில்லை
இனியும் இங்கே..

தாய்மொழி தமிழாய்
ஆனதால்
இன மத பேதமின்றி
இந்துவும் இஸ்லாமியனும்
இந்தத் தேசத்தில்
இரட்டைக் குழந்தைகளாய்
இனிமேல் வாழ
இந்தத் தீபாவளியில்
திடசங்கற்பம் பூணுவோம்...

## ஒளி பிறக்கட்டும்

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

வதை செய்த சூரனை
தன் தவறை உணரச்செய்து
வையகத்தை மகிழச்செய்த தீபத்திருநாள்
பதைக்காமல் பாரே ஒளிரட்டும்
பாசமும் நேசமும் பெருகட்டும்

சிதையாமல் சிந்தனைகள் மிளிரட்டும்
சீரான வாழ்வு நிலை தொடரட்டும்
சிரிப்பும் பூரிப்பும் கனியட்டும்
தீபங்களால் மனங்களில் ஒளிபிறக்கட்டும்

## தீபச்சுடரே எழுந்துவா

கு.சண்முகம்
வந்தாறுமூலை



எரியும் தீபச் சுடரின் வண்ண ஒளியே
இத் தீபத் திருநாளில் நானும் தாயே
எந்தன் பொன்னான விண்ணப்பத்தை
உந்தன் பொற்பாதத்தில் சாற்றுகிறேன்

வாட்டும் பசியும் ஏழ்மையும் துயரமும்
துரத்தியே நாளும் எம்மை தொடரக்கூடாது
வறண்ட புவியில் கனமழை பொழியவேண்டும்
தரையெங்கும் தானியம் விளையவேண்டும்

ஏழையின் வாழ்வும் வளம்பெற வேண்டும்
பிறப்பு முதல் இறப்புவரை இப்படித்தான்
எங்கள் வாழ்வும் இருப்பதை நினைத்துபார்
தீபச்சுடரே நல்வாழ்வை எமக்குத்தந்துவிடு

நரகாசூரன் செய்த கொடுமை தாங்காது
தேவரும் மனிதரும் எழுப்பிய குரல்கேட்டு
நல்ல தருணத்தில் வேகமாய் எழுந்து வந்து
பித்தம் தலைக்கேறிய அசுரனை அடக்கி

தேவர்கள் மனங்குளிர அபயம் கொடுத்தாய்
நாங்கள் ஓலமிட எங்கே சென்று மறைந்தாய்
தேடுகிறோம் பகவானே ஏன் மறைகிறாய்
துயர்களையும் தீபச்சுடரே விரைந்து எழுந்து வா

## குறை பகிர்தல்...!

சி.எம். சங்கர்
பண்டாரவளை

அடுத்தவர் குறை பகிர்தலில் நீங்கள்
அரைமனிதராவீர் ஆதலால்
அதை விதை போட்டு வளர்ப்பதை
விட்டுவிடுங்கள்...

அந்தரங்கமென்பது எவருக்கும்
இருக்கும் ஆதலால் "அந்த" என்பதை
"எந்த" என்று தேடப் போகாதீர்கள்!

சொந்த கதையை சொன்னால்
கேளுங்கள் சொல்லாவிட்டால்
செவிக்கு சுகமென சும்மா இருங்கள்!

காக்கை குருவிகளை பாருங்கள்
யாரின் கதையேனும் பேசி
ஊரின் பகையை தேடுகின்றதா என்று...?

மற்றவரின் வருத்தங்களையும்
மறைவாய் பேசிடின் நீங்கள்
தரம் குறைவான மனிதராவீர்
ஆதலால் பிறர் குறை பேசுவதை
பெரும் பாவமெனப் பாருங்கள்!

அடுத்தவர் வாழ்வில்
ஆயிரம் இருக்கலாம்
ஏன்
அதற்கு அதிகமாகவும் இருக்கலாம்
அதற்கொரு வழி
அவரிடமே இருக்கும்
ஆதலால் அதை நீங்கள்
உங்கள் மொழியாக்காதீர்கள்...!

## தபால் சேவை

அருலானந்தம்
ஞா.பிரகாஷ்
கந்தப்பளை

மக்கள் பார்வை
உன் மேல் பட
சிவப்பு வண்ண
பெட்டியை கொண்டு
தங்கு தடையின்றி
நடைபெற்றது
வருவதனால் உன்
சேவை அவ்வளவு
முக்கியமானதாக
அமைவாதில்லை.....

இன்றைய நவீன
காலத்தில்
தொழில் நுட்பம்
முன்னேறினாலும்
உத்தியோகபூர்வ
தகவல் இன்னும் அஞ்சல்
முறை அவசியமே...

கொரோன காலத்திலும்
நாடே முடங்கிய வேலையிலும்
மருத்துவ சேவையை
போல் உங்கள்
உயிரை பொருட்படுத்தாது
எங்கள் வீடு தேடி
வந்து சேவை
செய்தீரே?

தாபால் சேவை
மனித வாழ்வில்
தவிர்க்க முடியாத
சேவை ....

ஓய்வில்லா சேவை
அஞ்சல் சேவை
மட்டுமே .....



## தூண்டுவோம்

நிலாவெளியூர்
கெஜ – தர்மா



ஐப்பசி மாதமிது வாசிப்பு மாதம்
ஐயந் தீர்ந்திட வாசித்து அறிவோம்
எப்பசி வரினும் என்றுமே நாம்
ஏற்றதை வாசித்து உயர்ந் திடுவோம்
எழுத்தை ஆளும் எழுத்தா ளனாக
என்றும் உயர்வு பெற்றே வாழ
எழுத்தை வாசிப்பை கண்ணென எண்ணி
எப்போதும் வாசிக்கத் தவறா திருப்போம்
அறிவைப் பெருக்க அனுதினம் நாம்
அன்றாடம் வாசித்தல் அவசிய மாம்
நெறிமுறை தவறா வாழ்வினை வாழ
நிதமும் வாசிக்கப் பிறரைத் தூண்டுவோம்

## தீப ஒளிவழி

இணுவில்
வாகீசன்

துன்ப இருளகன்று இன்ப ஒளி பரவட்டும்
பரவும் ஒளியில் புது வழியமைப்போம்
வழிப்பாதையெங்கும் நன்மைகள் செய்வோம்
செய்யும் தொழில்கள் சிறக்க பிரார்த்திப்போம்

பிரார்த்திப்போம் யாவரும் நலம் பெற
நலமுடன் வாழ சுற்றங்கள் பேணுவோம்
பேணிய கலாசாரத்தை இளையோர்க்கும் பகிர்வோம்
பகிர்ந்துண்டு வாழ்வோம் பல்லாண்டு வாழவே !

## மாணவர்களை அச்சுறுத்துகின்ற... (02ஆம் பக்கத் தொடர்)

இருந்த போதிலும் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இருந்து பகிடிவதை என்பதை முற்றாக தடுப்பதற்கும் நீக்குவதற்கும் பல தலையீடுகள் அவசியம் என்று குறிப்பிட்டுள்ள 25 அரச பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழுவினர், 'சிவில் சமூகத்தின் ஆதரவுடன் பல்கலைக்கழகங்கள், சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் ஊடகங்களினால் திட்டமிடப்பட்ட விசாலமான தந்திரோபாயம் இச்சிக்கலான செயன்முறைக்கு அவசியம்' என்று குறிப்பிட்டுள்ளனர்.

| பொலன்னறுவ மாவட்டத்தில் 1/2 ஏக்கர் பப்பாசி செய்கை செயற்றிட்டத்திற்காக 300 எண்ணிக்கையுள்ள சிறிய விசிறியடிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் மற்றும் Drip Tape Systems. | LK-MOA-PMU-314687-GO-RFB | 1,800,000.00 | 25,000.00 |
| முல்லைத்தீவு மாவட்டத்தில் 1 /2 ஏக்கர் பப்பாசி செய்கை செயற்றிட்டத்திற்காக 300 எண்ணிக்கையுள்ள சிறிய விசிறியடிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் மற்றும் Drip Tape Systems. | LK-MOA-PMU-314694-GO-RFB | 1,800,000.00 | 25,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை **கமத்தொழில் அமைச்சு, விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், பெறுகை திணைக்களத்திலிருந்து 2022.10.25 ஆம் திகதியிலிருந்து 2022.11.15 ஆம் திகதி வரையுமான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம்.**

5. மீளளிக்கப்படாத கட்டணமொன்றைச் செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். செயற்றிட்ட நிதி முகாமையாளரிடம் பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. **2022.11.15 ஆம் திகதியன்று** பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **2022.11.15** ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக அடக்கப்பட்டு, முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு, முத்திரையிடப்படல் வேண்டும். இவ்விரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் **"Supply and Delivery of Papaya Seeds and Supply, Delivery, Installation & Commissioning of Mini Sprinkler Irrigation Systems for Papaya Cultivation Project in Mullaitivu and Polonnaruawa Districts"** என்ற வாசகங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
**திகதி: 23.10.2022**

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD · IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**

**விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

## வடக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சோளம் மற்றும் மாங்காய் கொத்தணிகளுக்காக தாவர தாங்கும் முறைமைகளுக்காக (Espalier) மின்சார நீர் பம்பிகள் மற்றும் பண்டங்களை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்.

1. கமத்தொழில் அமைச்சின் விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) ஆகுசெலவிற்காக 58.63 மில்லியன் அ.ஐ.டொலருக்கு நிகரான தொகையை பல்வகையான நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது கடனொன்றைப் பெற்றுள்ளதுடன், இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை **வடக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சோளம் மற்றும் மாங்காய் கொத்தணிகளுக்காக தாவர தாங்கும் முறைமைகளுக்காக மின்சார நீர் பம்பிகளை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்** என்ற ஒப்பந்தத்தின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

2. வடக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சோளம் மற்றும் மாங்காய் கொத்தணிகளுக்காக தாவர தாங்கும் முறைமைகளுக்காக மின்சார நீர் பம்பிகளை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சு, விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| விளக்கம் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|
| வவுனியா மாவட்டத்தில் சோள செய்கைக்காக 52 எண்ணிக்கையுள்ள மின்சார நீர் பம்பிகள் | LK-MOA-PMU-314649-GO-RFB | 95,000.00 | 5,000.00 |
| வடக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சோளம் மற்றும் மாங்காய் கொத்தணிகளுக்காக தாவர தாங்கும் முறைமைகளுக்காக மின்சார நீர் பம்பிகளை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல். | LK-MOA-PMU-317325-GO-RFB | 1,200,000.00 | 20,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை **கமத்தொழில் அமைச்சு, விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், பெறுகை திணைக்களத்திலிருந்து 2022.10.25 ஆம் திகதியிலிருந்து 2022.11.15 ஆம் திகதி வரையுமான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம்.**

5. மீளளிக்கப்படாத கட்டணமொன்றைச் செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். செயற்றிட்ட நிதி முகாமையாளரிடம் பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. **2022.11.15 ஆம் திகதியன்று** பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **2022.11.15** ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக அடக்கப்பட்டு, முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு, முத்திரையிடப்படல் வேண்டும். இவ்விரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் **"Supply, Delivery and Installation of Electric Water Pumps and Materials for Espalier Systems for Maize and Mango Clusters in Northern, Central and Uva Provinces"** என்ற வாசகங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
**திகதி: 23.10.2022**

# CANOWIN HOTELS & SPAS (PVT) LTD

## உடன் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான அழைப்பு

**(ஸ்ரீ லங்கா காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனம்)**

**REF No.: CNW/SUP/2023**

2023 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்வதற்கான பிரதான வழங்குநர்களை கனோவின் அழைக்கின்றது. கீழே வழங்கப்பட்டுள்ள பட்டியலிடப்பட்டுள்ள பண்டங்கள் / உபகரணங்கள் / சேவைகள் ஆகியவற்றை வழங்குவதற்கு ஆற்றலுள்ள (வர்த்தகர்கள்/ விநியோகஸ்தர்கள்/ உற்பத்தியாளர்கள் / இறக்குமதியாளர்கள்) ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. என்பதுடன் சேவை அமைவிடமானது தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெலிப்பனவில் அமைந்துள்ளது.

**குறிப்பு:** பத்து இலட்சம் ரூபாவிற்கு குறைவான தொகைக்கான பின்வரும் பதிவு செய்தல்கள் கோரப்படுகின்றன.

### பண்டங்கள்:

01. அலுவலக காகிதாதி
02. கணனி துணையுறுப்புக்கள் மற்றும் வலையமைப்பிற்கான அம்சங்கள்
03. அலுவலக உபகரணங்கள்
04. பிரிண்டர்ஸ், டோனர்கள் மற்றும் cartridges.
05. Air-fresheners & Liquid Soap bulk cans & Urinal fragrance tablets
06. Toilet paper rolls & Multi-fold paper towels
07. குப்பைபோடும் பைகள்/ குப்பைகூடைகள்
08. குளிக்கும் அறைகளை சுத்தமாக்கும் அழுக்கு நீக்கிகள் மற்றும் இரசாயனங்கள்
09. Supplying Water pumps/Pressure Pumps/Submersible pumps/Control panels and Control Units.
10. பசளைகள்
11. Cooling Tower chemicals
12. தளபாடம் (பலகை/ உருக்கு)
13. ஹாட்வெயார் பண்டங்கள்
14. பாதுகாப்பு உபகரணங்கள்
15. மின்னியல் மற்றும் கருவியாக்கம் (வழங்கல் மற்றும் நிறுவுதல்)
16. ரயர்கள் மற்றும் ரியுப்புக்கள்
17. இலத்திரனியல் அம்சங்கள் மற்றும் பெனல்கள்
18. லெட் பல்புக்கள்/ ரியுப் லைட்டுக்கள் / பிளாஷ லைட்டுக்கள்/ ஹோல்டர்கள் மற்றும் ஏனைய ஒளிர்விடும் பண்டங்களின் வழங்கல்
19. குடிநீர் போத்தல்கள் மற்றும் நீர் விநியோகிப்பவைகள் (Dispensers) ஆகியவற்றை வழங்கல்
20. மின்சார உற்பத்தி தொகுதிகள், உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை வழங்கல்
21. Bathware fittings, Commode systems, Flushing units, Wash Basins, Squatting Pans, Bidet spray, Seat covers, Paper roll holders, Taps etc.,
22. Supplying of Wall-mounted Exhaust Fans and Ventilation Fans
23. Supplying of Ceiling A Grade 1/ 2 x 1 /2 welded mesh net
24. புல் வெட்டும் இயந்திரம்
25. சூரிய சக்தி உபகரணம்
26. அடையாள பலகைகள்
27. தரை துடைப்பான்கள்/ தரை பாய்கள்
28. ஊக்குவித்தல் அம்சங்கள், அன்பளிப்புக்கள் (குடைகள், சைக்கிள்கள், ரீ-சேட்டுக்கள், தொப்பிகள் போன்றவை)
29. CCTV புகைப்படக்கருவிகள் மற்றும் ஏனைய உரித்தான உபகரணங்கள்
30. கண்ணாடி, கண்ணாடி கதவுகள், பெனல்கள் மற்றும் தரை கீல்கள் (Hinges)
31. தீ பாதுகாப்பு உபகரணங்கள்
32. Polly Carbonate Sheets (Hollow, Solid)
33. இடி தாங்கிகள்
34. மருத்துவ வழங்கல்கள் (முக மூடிகள், கை உறைகள், தலை கவசங்கள், சுகாதார கை துடைப்பான்கள்)
35. பால் மா, சீனி, தேயிலை இலைகள்
36. வெட்டும் கருவிகள் மற்றும் பாத்திரங்கள்
37. மட்பாண்டங்கள் (பீங்கான்கள், கோப்பைகள், தட்டுகள், தேநீர் சாடிகள்)

### சேவைகள்:

01. கழிவறைகளுக்கான உட்செல்லல் அனுமதிச்சீட்டு கருமபீட முறைமைகள்
02. பாதுகாப்பு சேவைகள்
03. வசதி முகாமைத்துவ சேவைகள்
04. மனிதவலு வழங்கல் சேவைகள்
05. சுகாதார துப்புரவேற்பாட்டுச் சேவைகள்
06. ஆர்கேட் பிரதேசங்களில் திரவ பெற்றோலிய வாயு முறைமை பராமரிப்பு, வழங்கல், நிறுவுதல், திரவ பெற்றோலிய வாயு குழாய்களை இணைத்தல், ஒழுங்காக்கிகள், வடிகட்டும் தொகுதிகள்.
07. கரை மற்றும் சுவர்களுக்கான சிறிய பழுதுபார்த்தல்களுக்கான சேவை வழங்குநர்கள்
08. குடிநீர் பவுசர்களை வழங்கல்
09. Gully பவுசர்களை வழங்கல்
10. அழுத்த பம்பிகளின் பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு
11. CCTV புகைப்படக்கருவிகளின் முறைமையை நிறுவுதல் மற்றும் பராமரிப்பு
12. அலுமினியம் மற்றும் கண்ணாடி வேலைகளின் வழங்கல் மற்றும் நிறுவுதல்
13. பீடை ஒழிப்பு முறைமைகள் மற்றும் பராமரிப்பு
14. அடையாள பலகைகள் அடங்கலான அனைத்து வகையான அச்சடித்தல்
15. Supply and Installation maintenance of direct lightning & surge protection system
16. தள தெரிவு மற்றும் ஆழமான குழாய் கிணறு துளையிடல்
17. கழிவு நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதிகளின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு
18. மின்படித் தூக்கிகளின் (Elevators) வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பு
19. பெயிண்ட் பூசுதல் அடங்கலான சிவில் வேலைகள் மற்றும் நிர்மாணம்
20. மின்னியல் முறைமையை நிறுவுதல்
21. கட்டிடத்தின் கண்ணாடி துடைத்தல் மற்றும் சிலந்தி வலைகளை சுத்திகரித்தல்
22. வளிச்சீராக்கிகளின் பராமரிப்பு மற்றும் சுத்தம் செய்தல்
23. தீயணைப்பு இயந்திரம் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் பராமரிப்பு மற்றும் சேவை / தீயணைப்பு உபகரணங்கள் பரீட்சித்தல் மற்றும் சுத்தம் செய்தல்
24. மின்உற்பத்தி இயந்திர பராமரிப்பு மற்றும் சுத்தம் செய்தல்
25. கடைகளுக்கான உறைப்பூச்சு (Cladding) நிறுவுதல்
26. வித்தியாசமான அளவுகளில் விளம்பர தாள்களை ஒட்டிவைக்கும் பலகைகள், விளம்பரப் பலகைகள்.
27. புகைப்படங்களை பிரேம் செய்தல்
28. பலகை வேலை மற்றும் அலுமினிய இணைப்புக்கள்
29. மேசன் வேலை
30. குழாய் வேலை
31. காணிச்சீராக்கல்
32. குப்பையை அகற்றல் (உணவுக் கழிவு/ பிளாஸ்டிக் / பேப்பர்)
33. நீர் குட்டையின் பராமரிப்பு மற்றும் சுத்தம் செய்தல்.

2022 ஒக்ரோபர் 24 ஆம் திகதியிலிருந்து 2022 நவம்பர் 27 ஆம் திகதி வரையும் திங்கள் கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப.3 மணி வரையும் அளுத்கம மக்கள் வங்கிக் கிளையின் 084100150019552 என்ற கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 ரூபாவைச் செலுத்திய பின்னர் கீழே குறிப்பிட்டுள்ள முகவரியிலிருந்து பதிவு செய்தல் படிவங்கள் மற்றும் தொடர்புள்ள ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 2022 டிசம்பர் 6 ஆம் திகதியன்று பி.ப. 3 மணியளவில் எமது தலைமை அலுவலகத்திற்கு திருப்பி அனுப்பப்படல் வேண்டும். மேலதிக விபரங்கட்கு பெறுகைப் பிரிவுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 011-7711171/ அலைபேசி: 074-0452511.

தேவைப்படுத்தல்களுக்கமைவாக வழங்குனர்/ வழங்குனர்களை தெரிவு செய்வதற்கான உரிமைகளை கம்பனியானது கொண்டுள்ளது. மேலும், எந்தவொரு வழங்குனர்/வழங்குனர்களும் தெரிவு செய்தல் தகவுத்திறனை திருப்தி செய்யாவிடின், பதிவு செய்தலிருந்து அவ்வாறான வழங்குனர்/ வழங்குனர்களை அகற்றுவதற்கான ஏகசுயவிருப்பத்தை முகாமைத்துவமானது கொண்டுள்ளது. மேலும், பதிவு செய்யப்பட்டுள்ள வழங்குனர்கள் நீங்கலாக வேறேதாவது வெளியக சாரார்/ சாரார்களிடமிருந்து கொள்வனவு செய்தல் அல்லது சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான உரிமைகளையும் கம்பனியானது கொண்டுள்ளது.

**Canowin Hotels & Spas (Pvt) Ltd.,**
**இல.: 46/46, 3ஆம் மாடி,**
**கிரீன் லங்கா டவர்கள்,**
**நவம் மாவத்தை,**
**கொழும்பு-02.**


Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
| --- | --- | --- |
| ரூ. 500/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 700/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 950/- |

COLOMBO DISTRICT

AVISSAWELLA 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

ANGODA 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

ATHURUGIRIYA 011 2760479, 011 4876968
267, Godagama Road,

BATHTHARAMULLA 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

BORALESGAMUWA 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

HANWELLA 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

HOKANDARA 071 8685437
No. 501, North Hokandara,

HOMAGAMA 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

KADUWELA 011 2579609
Nayana Bake House

KADUWELA 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

KALUBOWILA 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

KESBEWA 011 2703415

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380


World Health Organization
Sri Lanka

# ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு (EOI)

## பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான சப்ளையர்களின் முன் தகுதி 2023 – 2025

### அறிமுகம்

உலக சுகாதார அமைப்பு (WHO), நாட்டின் அலுவலகம் - இலங்கை, பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான உள்ளூர் சப்ளையர்களுக்கான பதிவேட்டை புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. WHO முன் தகுதி பெற்ற வழங்குநர்கள் பதிவு செய்வதற்காக வழங்குநர்கள் சமர்ப்பிக்கப்பட்ட ஆர்வத்தின் வெளிப்பாடுகளை (EOI) WHO மதிப்பாய்வு செய்யும். வழங்குநர் முன்தகுதியானது, ஒருவலுவான வழங்குநர் தரவுத்தளத்தை நிறுவுவதற்கும், வழங்குநர்கள் சரியான விடா முயற்சியை நடத்துவதற்கும் உதவும்.

பின்வரும் வகைகளின் கீழ் இணைக்கப்பட்ட டெம்ப்ளேட்டுகளில் EOI களை சமர்ப்பிக்க WHO உங்களை அழைக்கிறது:

| பொருட்கள் வகைகள் | சேவைகள் வகைகள் |
| --- | --- |
| மருத்துவ பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | அச்சிடும் சேவைகள் |
| ஆய்வக உபகரணங்கள் / நுகர்பொருட்கள் / கண்டறிதல் | மல்டிமீடியா தயாரிப்பு மற்றும் வீடியோ ஆவணப்படம் |
| மருந்துகள் | நிகழ்ச்சி மேலாண்மை |
| தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் | ஆலோசனை சேவைகள் |
| ஆடியோவிஷுவல்/ மாநாட்டு உபகரணங்கள் | மென்பொருள் மேம்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகள் |
| அலுவலக எழுதுபொருள் | தொலைத் தொடர்பு சேவைகள் |
| மின்னணு உபகரணம் | காப்பீட்டு சேவைகள் |
| அலுவலக உபகரணங்கள் | வளாக பராமரிப்பு மற்றும் துப்புரவுசேவைகள் |
| பல்நோக்கு வழங்குநர்கள் | சுங்க அனுமதி |

தகுதிபெற, விண்ணப்பதாரர் EOI படிவத்தில் கோரப்பட்டபடி கட்டாய ஆவணங்களை வழங்க வேண்டும்.

ஏலதாரர்கள் அனைத்து அறிவுறுத்தல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும் மற்றும் தேவையான அனைத்து படிவங்களும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டு மின்னஞ்சல் மூலம் (sesrlproposal@who.int) அல்லது சீல் செய்யப்பட்ட உறைகளில் கீழே உள்ள WHO அலுவலக முகவரிக்கு நவம்பர் 07, 2022 அன்று மாலை 04.00 மணி அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்கப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

**திரு. அமித்அகர்வால்**
**நிர்வாக அதிகாரி**
**வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைசேஷன்**
**5, ஆண்டர்சன்சாலை,**
**கொழும்பு 5.**

## மக்கள் வழங்கும் ஆதரவை...

*(07ஆம் பக்கத் தொடர்)*

*பிரமுகர் அரசியலில் அடிமைகள்தான் எஞ்சுவர். ஆம், தமிழ் மக்களை அரசியல் அடிமைகளாகவே இவை வைத்திருக்கின்றன. இனவாதத்தைப் பரப்பி, அந்த மூட நம்பிக்கைக்கு அடிமையாக்கி வைத்திருக்கின்றன.*

*ஒரு பக்கத்தில் சிங்கள இனவாத ஒடுக்குமுறை என்றால், மறுபக்கத்தில் தமிழ் மிதவாத விடுதலையைப் பேசி அதற்கு மாறான அடிமை மனோநிலையை வளர்த்துக்கொள்ளும் அடிமை அரசியல் இதுவாகும். இதை லேசில் புரிந்து கொள்ள முடியாது. மேலோட்டமாகப் பார்த்தால் சுதந்திரத்துக்கான – விடுதலைக்கான அரசியலாகவே தெரியும். ஆனால், அதன் மறுபக்கம் மிக மோசமான அடிமை நிலைப் பேணுகையாகும்.*

*இதனால்தான் பாராளுமன்றத்தில் பேசுவது, அங்கே செய்து கொள்ளப்பட்ட சத்தியப் பிரமாணம் போன்றவை ஒன்றாகவும் வெளியே இன்னொன்றாகவும் என இரண்டக நிலை காணப்படுகிறது. இதைப் பற்றி எவரும் பேசுவதில்லை. கேள்விகள் கேட்பதில்லை. அப்படி யாரும் கேள்வி எழுப்பினால் உடனே இந்தத் தரப்புகள் பதறி விடுகின்றன. கேள்வி எழுப்புவோரையும் விமர்சிப்போரையும் எதிரிகள், துரோகிகள் என்று முத்திரை குத்த முற்படுகின்றன.*

*இந்தப் பதட்டம் ஏன்? இந்த முத்திரை குத்துதல்கள் எதற்காக?*

*இங்கேதான் பிரச்சினையே உள்ளது. இந்தக் கட்டுரையின் தொடக்கத்திலே தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் தெரிவித்த கருத்துகளைப் படிப்போருக்கு தமிழரசுக் கட்சியிடம் ஒரு நியாயம் இருப்பதாகத் தெரியும். ஆனால், இவ்வளவு பெருமைக்குரியதாகக் கூறப்படும் தமிழரசுக் கட்சி, அதனுடைய அரசியல் வரலாற்றில் மக்களுக்குச் சேர்த்த நன்மைகள் என்ன? பெறுமதிகள் என்ன? அது மக்களுடைய எத்தகைய துயர்களைத் துடைத்திருக்கிறது? உண்மையாகவே துயர் துடைப்புக் கட்சியாகச் செயற்பட்டிருக்கிறதா? அல்லது துயர் பெருக்குச் சக்தியாக செயற்பட்டிருக்கிறதா? என்று பார்த்தால் துயர் பெருக்குச் சக்தியாகவே செயற்பட்டிருக்கிறது. பிரச்சினைகளைப் பெருக்கும் தரப்பாகவே உள்ளது. இதனால்தான் மக்கள் தொடர்ந்தும் பாதிப்பைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. தலைவர்கள் பேரோடும் புகழோடும் வாழ முடிகிறது.*

*என்பதால் மக்களுக்காகக் கட்சியா? கட்சிக்காக மக்களா? என்ற இலகுவான கேள்வியை எழுப்பி அந்தத் தமிழரசுக் கட்சி உறுப்பினரைப் பின்வாங்க வைத்தேன். ஒரு சிறந்த அரசியல் சக்தி எனப்படுவது மக்களுடைய வரலாற்றில் பன்முகத்தன்மையான பெறுமதிகளைச் சேர்க்க வேண்டும். ஜனநாயக ரீதியாக, உரிமைகள் வழியாக, பண்பாட்டு ரீதியாக, பொருளாதார மேம்பாட்டின் மூலமாக, அறவியல், அறிவியல் ரீதியாக என இந்தப் பெறுமதிகள் அமைய வேண்டும். தமிழ்க் கட்சிகள் எதனிடத்திலும் இத்தகைய அடிப்படைகள் ஏதுமுண்டா?*

*என்பதால்தான் தமிழ் மக்களின் அரசியலும் வாழ்க்கையும் ஒரு அடி கூட முன்னே நகர முடியாமல், பல இடிகள் பின்னே செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதைக்குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும். மக்களுடைய சிந்தனையே மக்களுக்கான விடுதலையைத் தரும். அதுவே மாற்றத்துக்கான வழிக்கு ஒளியூட்டும்.*

## அரசாங்கத்தின் பலத்தை...

*(08ஆம் பக்கத் தொடர்)*

*ஆளும் கட்சி சார்பில் உரையாற்றியிருந்த பொதுஜன பெரமுனவின் பின்வரிசை உறுப்பினர்கள் பலர், கடந்த காலங்களில் தமது வீடுகள் பல தீக்கிரையாக்கப்பட்டமையைச் சுட்டிக்காட்டினர்.*

*ஐந்து வருடங்கள் சேவையாற்றுவதற்கு மக்கள் தமக்கு வழங்கிய ஆணையை இரண்டரை வருடங்களில் இல்லாமல் செய்வது ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதையும் அவர்கள் கூறியிருந்தார்கள்.*

*1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு இதுவரை சுமார் 21 தடவைகள் திருத்தத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இதனை மேலும் மேலும் திருத்தத்துக்க உள்ளாக்காமல் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வர வேண்டியதன் தேவையைப் பல உறுப்பினர்களும் தமது உரைகளின் போது சுட்டிக்காட்டத் தவறவில்லை.*

*22 ஆவது திருத்தச்சட்டமூலம் குறித்து கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகள் இரு தினங்களும் முழுநாள் விவாதம் நடைபெற்றது. குழுநிலையில் அராங்கத்தினால் கொண்டுவரப்பட்ட திருத்தங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 22 ஆவது திருத்தச்சட்டமூலம் என்ற பெயரை 21 ஆவது திருத்தச்சட்டமூலம் என மாற்றுவதற்கும் சபை அங்கீகாரம் வழங்கியது. இதற்கமைய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள குறித்த அரசியலமைப்புத் திருத்தச்சட்டமூலம் சபாநாயகரினால் கையொப்பமிடப்பட்டு சான்றுரைப்படுத்தப்பட்டதும் 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தமாக நடைமுறைக்கு வரும்.*

## அடுத்தடுத்து பதவிவிலகும்...

*(12ஆம் பக்கத் தொடர்)*

*அத்தகைய தடையின் நேரடி விளைவுகளுக்குள்ளேயே தற்போது பிரிட்டன் அகப்பட்டுள்ளது.*

*எனவே பிரித்தானியப் பிரதமர் லிஸ் ட்ரஸின் இராஷினாமா அதிக சந்தேகங்களையும் குழப்பங்களையும் வெஸ்மினிஸ்டர் மாதிரியில் ஏற்படுத்தியுள்ளது. இரண்டாம் உலக போருக்குப் பின்னரான சூழலில் ஆங்கில மாதிரி (Anglo Model) முடிவுக்கு வந்து அமெரிக்க மாதிரி (American Model) ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. ஆனால் பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகள் அத்தகைய மாதிரியில் பழமையான ஆங்கில மாதிரியை தொடர்ந்தன. அதன் விளைவுகளை பிரிட்டன் எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளது. இதற்கு பின்னால் தனியுடமைவாதத்தினதும் முடிந்து போகும் உலகமயமாக்கத்தினதும் செல்வாக்கு அதிகமாகவே தெரிகிறது. இத்தகைய நெருக்கடியிலிருந்து இன்னோர் ஆளுமைமிக்க தலைவரை பிரிட்டன் கொண்டுவந்தாலும் எதிர்காலத்தில் வறுமை எழும் போது மீள இதே நெருக்கடி ஏற்படும். அதுவே இந்தியாவுக்கும் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஹிட்லரை நிராகரிக்கும் ஜனநாயகத் தலைவர்கள் அனைவரிடமும் ஹிட்லரிஸம் உண்டு. அவர்களது பிரகாசிப்புக்கும் நிலைத்திருப்புக்கும் ஹில்டரிஸமே காரணமாகும்.*

# கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்

## 2023 ஆண்டுக்கான வழங்குனர்களை பதிவுசெய்தல்

1. கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் தலைவரினால் 2023 ஆம் ஆண்டிற்கான கீழே பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்காக தங்களைப் பதிவு செய்ய விரும்பும் சபைகள், திணைக்களங்கள் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் உள்ளிட்ட வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், பங்குதாரர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

2. கீழே தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு வழங்கல்கள் சேவைகள் சம்பந்தமாக தெரிவிக்கப்பட்ட மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் **ரூ.1000.00** செலுத்தி கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தில் **2022.10.25** முதல் **2022.11.25 ஆம்** திகதி வரை பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் பதிவுக்கான சகல விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பணம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். பண ஆணைகள் மற்றும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படாது. நிறுவனத்தின் கடிதத்தலைப்பில் கோரிக்கையை முன்வைக்காத வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்களுக்கு பதிவிற்கான படிவம் வழங்கப்படாது.

| இல | பிரதான பிரிவு | உப பிரிவுகள் | |
|---|---|---|---|
| | **சிவில், மின் மற்றும் வாயு சீராக்கி** | 1.1 அனைத்து வகையான கட்டுமானப் பொருட்கள் - சீமெந்து, மணல், உலோகம், சிறிய கற் துண்டுகள், சரல், GI கம்பி, கற் துண்டுகள் போன்றவை, | |
| | | 1.2 அனைத்து வகையான மின் பாகங்கள் - வயர்கள், கேபிள்கள், சர்க்யூட் பிரேக்கர்கள், ஸ்விட்ச் போர்டு, மோட்டார்கள் | |
| | | 1.3 மின்னனு உபகரணங்கள் (விசிறிகள், வெற்றிட கிளீனர்கள், முதலியன) | |
| | | 1.4 விளக்கு பொருத்துதல்கள் - LED பல்புகள், GI சிப் பல்புகள், மேடை விளக்குகள், பேலஸ்ட்கள், இக்னேட்டர்கள் போன்றவை, | |
| | | 1.5 ஆலை மற்றும் இயந்திரங்கள் (வழங்கல் நிறுவல் மற்றும் பராமரிப்பு), ஒப்பந்ததாரர்கள்-(ஜெனரேட்டர்கள், வாயு சீராக்கிகள், குளிர்சாதனம், சூரிய ஆற்றல் சக்தி மற்றும் வேறு எந்த வகை ஆலை இயந்திரங்கள்). | |
| | | 1.6 அலுமினிய வெளியேற்றங்கள், கதவு ஜன்னல் பொருத்துதல் மற்றும் பாகங்கள். | |
| | | 1.7 கொள்கலன் தங்குமிடம் மற்றும் கலப்பின வீடுகள். | |
| | | 1.8 ஜன்னல் மற்றும் கதவு பொருத்துதல், பாகங்கள், அனைத்து வகையான கண்ணாடி மற்றும் பொருத்துதல் வேலை. | |
| | | 1.9 மரப் பொருட்கள், மரம், மெலமைன் பலகை, ஒட்டு பலகை, பலகைகள், MDF பலகைகள், பலகைகள் போன்றவை, | |
| | | 1.10 கூரை அமைப்புகள் - கூரை ஓடுகள், தகடுகள், கூரை தகடுகள் வழங்கல் | |
| | | 1.11 PVC குழாய்கள், பொருத்துதல்கள் மற்றும் பாகங்கள் | |
| | | 1.12 ஆணி மற்றும் போல்ட், திருகாணி | |
| | | 1.13 வாயு சீராக்கி பாகங்கள் | |
| | | 1.14 குளியலறை மற்றும் கழிப்பறை பொருத்துதல்கள் மற்றும் சுவர் ஓடுகள், தரை ஓடுகள் | |
| | | 1.15 இரும்பு பொருட்கள் - சின்க், வாஷ் பேசின் கொமட், வாஷ் பேசின், டைல்ஸ் | |
| | | 1.16 சக்கரங்கள், டயர், இரப்பர் பொருட்கள் | |
| | | 1.18 வாகன பாகங்கள், கோல்.ஃப் கார் பாகங்கள் | |
| | | 1.19 இன்டர்லாக் வழங்கல் மற்றும் நடைபாதை | |
| | | 1.20 கட்டிடம் கட்டுமானம் | |
| | | 1.21 அடையாள பலகைகள், திசை பலகைகள் | |
| | | 1.22 வண்ணப்பூச்சுகள் | |
| | | 1.23 சூரிய ஆற்றல் சக்தி அமைப்பு | |
| | | 1.24 மின்கலன்கள் | |
| | | 1.25 ஒலி உபகரணங்கள், ஒலி அமைப்புகள் | |
| | | 1.26 உட்புறம் மற்றும் வெளிப்புறம், புதுப்பித்தல், தச்சு சேவைகள், வகைப்படுத்தல் | |
| | | 1.27 தொழிலாளர் வழங்கல், மேசன்கள், தொழிலாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், டைல், கிரனைட், உறைப்பூச்சு வேலை, பெயிண்டிங், பொலிஷ், வயரிங் | |
| | | 1.28 ஜெனரேட்டர்கள், ஜெனரேட்டர் சேவைகள் | |
| | | 1.29 பொகின் வேலை | |
| | | 1.30 பழுதுபார்க்கும் பணி - மின், வாயு சிவில் இன்ஜினியரிங் போன்றவை, | |
| | | 1.31 உபகரணங்களை வாடகைக்கு எடுப்பது - டிரில் இயந்திரம், ஹில்டி கொன்கிரீட் சுத்தியல்கள் போன்றவை, | |
| | **அலுவலக தளபாடங்கள்** | 2.1 மரத்தாலான - அனைத்து வகையான அலுவலகம் மற்றும் பிற தளபாடங்கள் (அலுவலக நாற்காலிகள். சோ.ஃபாக்கள், கவுண்டர்கள், கட்டில்கள், அலமாரிகள், அலமாரிகள், நிரப்பும் அலமாரிகள். | |
| | | 2.2 இரும்பு - அனைத்து வகையான அலுவலகம் மற்றும் பிற மரச்சாமான்கள் (அலுவலக நாற்காலிகள், சோ.ஃபாக்கள், இரும்பு டிரங்குகள், கவுண்டர்கள், கட்டில்கள், அலமாரிகள், நிரப்பும் அலமாரிகள், பாதுகாப்புகள் | |
| | **அலுவலக உபகரணங்கள்** | 3.1 அச்சு இயந்திரம், பணம் எண்ணும் இயந்திரம், நகல்பிரதி இயந்திரம், பேப்பர் ஷ்ரெடர்ஸ், இலக்க இயந்திரம், ஊடுகதிர் இயந்திரம், லெமினேட்டிங் இயந்திரம், கணிப்பான்கள், பைண்டிங் மெஷின், சே.ஃப்ஸ், பாதுகாப்பு வைப்பிலிடல் லாக்கர்ஸ், இரும்பு பணப் பெட்டி போன்றவை. | |
| | **தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் சேவை வழங்குபவர்கள்** | 4.1 ஒலி உபகரணங்கள் - ஒலி கலவைகள், மொழிபெயர்ப்பாளர்கள், மிக்ஸ், துணை இடையகங்கள், ஹெட் போன்கள் போன்றவை, | |
| | | 4.2 ஒலி உபகரணங்களை வாடகைக்கு எடுப்பது - மொழிபெயர்ப்பாளர் அமைப்புகள் போன்றவற்றை வாடகைக்கு எடுத்தல் | |
| | | 4.3 மொபைல் போன் மற்றும் சாதனங்கள் | |
| | **தகவல் தொழில்நுட்ப தேவைகள** | 5.1 தகவல் வன்பொருள் (கணினி, மடிக்கணினிகள், அச்சு இயந்திரங்கள், ஊடுகதிர் இயந்திரங்கள், திரைகள், யுபிஎஸ் போன்றவை) | |
| | | 5.2 தகவல் பிணைப்பு உபகரணங்கள் (ரௌட்டர்கள், ஸ்விட்சர்கள் போன்றவை,) | |
| | | 5.3 தகவல் தொழிநுட்ப உபகரண சேவை மற்றும் பராமரிப்பு | |
| | | 5.4 தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வாடகையாளர்கள் (பிசி, லேப்டாப், புரொஜெக்டர்கள் மற்றும் பிற தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் வாடகை சேவை | |
| | | 5.5 தகவல் மென்பொருள் | |
| | | 5.6 தகவல் நுகர்பொருட்கள் (நாடாக்கள், ரிப்பன்கள், டோனர்கள், கார்ட்ரிட்ஜ்கள் போன்றவை.) | |
| | **பரிசுப் பொருட்கள் மற்றும் பிற உபகரணங்கள்** | 6.1 சீருடைகள் - புடவைகள், சட்டைகள், கால்சட்டைகள், டைகள், மேலோட்டங்கள், தொப்பிகள், சட்டைகள் மற்றும் காலணிகள். கேடயங்கள், விருதுகள், தகடுகள், படச்சட்டங்கள் போன்றவை, | |
| | **அச்சிடுதல்** | 7.1 அனைத்து வகையான பாதுகாப்பு அச்சிடுதல் - அடையாள அட்டைகள், பார்வையாளர் அனுமதிச்சீட்டுகள், வேறு எந்த வகையான பாதுகாப்பு அச்சிடுதல். | |
| | | 7.2 பொது அச்சிடும் பொருட்கள்-படிவங்கள், விலைப்பட்டியல்கள், உறைகள், குறிப்பீடுகள், நாட்காட்டிகள், இதழ்கள், விசிட்டிங் கார்டுகள் போன்றவை, | |
| | **சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரம்** | 8.1 கார்ப்பரேட் பிராண்டிங் மற்றும் தெரிவுநிலை (விளம்பரம் தொடர்பான டிஜிட்டல் பிரிண்டிங், துண்டு பிரசுரங்கள்). | |
| | | 8.2 டிஜிட்டல் விளம்பர வழங்குனர்கள் - நியோன் சைன் போர்டுகள், காணொலி திரைகள் | |
| | | 8.3 வடிவமைப்பு வேலை - கலைப்படைப்புகள், வடிவமைப்பு டிசைனிங், கிரா.ஃபிக் வேலை மற்றும் தீர்வுகள். | |
| | | 8.4 புகைப்படம் எடுத்தல், போட்டோ .ஃப்ரேமிங், வீடியோ | |
| | **பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் சேவை** | 9.1 CCTV கெமராக்கள், அலாரம் அமைப்புகள், காவலர் சுற்றுப்பயண அமைப்புகள், விநியோக நிறுவல் மற்றும் பராமரிப்பு முதலியன, | |
| | | 9.2 வோக்கி டோக்கி சப்ளையர்கள் | |

| இல | பிரதான பிரிவு | உப பிரிவுகள் | |
|---|---|---|---|
| | **காகிதம் முதலிய எழுது பொருள்கள்** | 10.1 அனைத்து வகையான எழுதுபொருட்கள் -A4, A3, லீகல், A5, காகிதங்கள், கிளிப்புகள், ஊசிகள், பென்சில், கவர்கள், மை மற்றும் பேட்டரிகள், ஷார்பனர்கள், கத்தரிக்கோல், அழிப்பான்கள், ஹைலைட்டர் பேனாக்கள், டிபெக்ஸ், ஸ்டெப்லர் இயந்திரங்கள், பஞ்சர்கள், ரிமூவர்ஸ், பசை பாட்டில்கள், செலோ டேப்கள், PVC டேப், மாஸ்கிங் டேப், .ஃபோல்டர்கள், பெயர் அட்டை வைத்திருப்பவர்கள், பொலித்தீன், பைகள், இரப்பர் பேண்டுகள் போன்றவை. | |
| | **விசேட, தொழில்முறை சேவைகள்** | 11.1 ஏலதாரர்கள் | |
| | | 11.2 ஊதிய சேவைகள் | |
| | | 11.3 தணிக்கை சேவைகள் | |
| | | 11.4 சட்ட ஆலோசகர்கள் | |
| | | 11.5 ஆலோசனை சேவைகள் | |
| | | 11.6 தொழில்முறை, தொழில்நுட்ப மொழிபெயர்ப்பாளர்கள; | |
| | | 11.7 திறமையான தகவல் தொழில்நுட்ப சேவைகள் | |
| | | 11.8 கழிவு காகிதம் ரூ மறுசுழற்சி | |
| | | 11.9 பூச்சி கட்டுப்பாடு | |
| | | 11.10 தொழில்முறை சர்வேயர்கள் | |
| | | 11.11 தையல்காரர்கள் | |
| | | 11.12 பகுப்பாய்வு | |
| | | 11.13 கட்டிடக் கலைஞர்கள் | |
| | | 11.14 நிகழ்வு மேலாண்மை சேவை | |
| | | 11.15 மீடியா ஏஜென்சி | |
| | | 11.16 தொழில்முறை பொறியியல் சேவைகள் | |
| | | 11.17 தொழில்முறை கணக்கியல் சேவைகள் | |
| | | 11.18 மதிப்பீட்டாளர்கள் | |
| | | 11.19 இயற்கையை அழகுபடுத்தல் | |
| | | 11.20 தரைவிரிப்பு, நாற்காலிகள், தரைவிரிப்பு இடுதல் | |
| | | 11.21 Reupholstering வேலை | |
| | | 11.22 தரை அமைக்கும் வேலை - கிரானைட், மார்பிள் | |
| | | 11.23 குறிப்பிடப்படாத எனைய வேலைகள் | |
| | **சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு** | 12.1 தீ எச்சரிக்கை அமைப்பு மற்றும் பாதுகாப்பு பாகங்கள். | |
| | | 12.2 தீயை அணைக்கும் பொருட்கள், தீயை அணைக்கும் கருவிகள் | |
| | | 12.3 சுகாதார உபகரணங்கள் | |
| | **வீட்டு பராமரிப்பு உபகரணங்கள்** | 13.1 அனைத்து வகையான வீட்டு பராமரிப்பு உபகரணங்கள் | |
| | | 13.2 தண்ணீர் பாட்டில்கள் | |
| | | 13.3 தரைவிரிப்புகள் | |
| | | 13.4 கைத்தறி பொருட்கள் - துண்டுகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் போன்றவை, | |
| | | 13.5 இரப்பர் பொருட்கள் - இரப்பர் பாய்கள், வெதர் பாய்கள் | |
| | | 13.6 பிளாஸ்டிக் பொருட்கள் - வாளிகள், மாப்ஸ், பான்றவை, | |
| | | 13.7 அனைத்து வகையான ஹோட்டல் உபகரணங்கள் | |
| | | 13.8 பித்தளை வேலை - பித்தளை பலகை | |
| | | 13.9 திரைச்சீலைகள், பிண்ணப்பட்ட திகைள் | |
| | | 13.10 சுத்தம் செய்யும் பொருட்கள் | |
| | | 13.11 செயற்கை தாவரங்கள், மலர்கள் | |
| | **தோட்ட உபகரணங்கள்** | 14.1. அனைத்து வகையான தோட்டக் கருவிகள் மற்றும் கருவிகள் மண்வெட்டி, கையுறைகள், துருப்பிடிக்காத இரும்பு தெளிப்பான், வில்பேரோ, ட்ரோவல், ரேக் | |
| | | 14.2 விதைகள் மற்றும் தாவரங்கள் | |
| | | 14.3 உரங்கள் மற்றும் இரசாயனங்கள் | |
| | | 14.4 பீங்கான் பானைகள் | |
| | | 14.5 கண்ணாடி பானைகள், குவளைகள் | |
| | | 14.7 கூழாங்கற்கள், நீர் முத்துக்கள் | |
| | | 14.9 பிளாஸ்டிக் பொருட்கள் | |
| | | 14.10 மலர் தொட்டிகள் - பிளாஸ்டிக், சீமெந்து | |
| | | 14.11 தென்னை நார் தூசி, சிவப்பு மண் | |
| | **ஏனைய சேவைகள்** | 15.1 போக்குவரத்து (கெப்கள், டாக்ஸி, ஷட்டில் சேவைகள் போன்றவை) | |
| | | 15.2 காப்பீட்டு தரகு | |
| | | 15.3 குப்பை அகற்றும் சேவை | |
| | | 15.4 மரச்சாமான்கள், நாற்காலி கவர்கள், மொழிபெயர்ப்பான் அமைப்புகள், PA அமைப்பு, விளக்குகள், ஒலி அமைப்பு போன்றவற்றை பணியமர்த்துதல் | |
| | | 15.5 பொதிச் சேவை | |
| | | 15.6 துப்புரவு மற்றும் சுத்தம் செய்யும் சேவை | |
| | | 15.7 மரம் வெட்டும் சேவை | |
| | | 15.8 சலவை | |
| | | 15.9 இயந்திரங்களை வாடகைக்கு எடுப்பது - பேகோ இயந்திரம், ஹில்டி இயந்திரம் போன்றவை, | |
| | | 15.10 மலர் ஏற்பாடுகள் ரூ அலங்காரங்கள் | |
| | | 15.11 வடிகட்டிகளுடன் நீர் வழங்கல் | |
| | | 15.12 இயந்திர பழுதுபார்க்கும் சேவைகள் | |
| | | 15.13 மனிதவள சேவைகள் - திறமையான மற்றும் திறமையற்ற தொழிலாளர்கள் | |
| | **துணை ஒப்பந்தக்காரர்கள் விண்ணப்பிக்கும்போது ஒப்பந்ததாரராக CIDA (ICTAS பதிவு சான்றிதழ் கொண்டிருக்க வேண்டும்.** | 16.1 மின் வேலைகள் | |
| | | 16.2 கூரை வேலைகள் | |
| | | 16.3 சுத்தம் மற்றும் ஓவியம் வேலை | |
| | | 16.4 அடைக்கப்பட்ட மற்றும் நிரம்பி வழியும் வடிகால் பணிகள் | |
| | | 16.5 நீர் வழங்கல் | |
| | | 16.6 உள்ளே / வெளியே சுத்தம் செய்தல் | |
| | | 16.7 கண்ணாடி சுத்தம் வான நிலை | |
| | | 16.8 வாயு சீராக்கி | |
| | | 16.9 பிளம்பிங் | |
| | | 16.10 இயற்கையை அழகுபடுத்தல் | |
| | | 16.11 ஒப்பந்தம் மற்றும் சிவில் வேலை | |
| | | 16.12 இரும்பு, அலுமினியம் வேலை | |

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

1. கட்டிட நிர்மாணத்துறை பொறியியல் வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்கள் கட்டிட நிர்மாணத்தறை பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான மன்றத்தின் (CIDA) 2022/2023ம் ஆண்டுக்குரிய உறுப்பினர்களாக தங்களைப் பதிவுசெய்திருத்தல் வேண்டும். (CIDA பதிவுச் சான்றிதழின் நகல் பிரதியுன் சமர்ப்பித்தல் வேண்டும்)
2. பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் / ஒப்பந்தக்காரர்களின் பட்டியல் தேவைப்படும்போது வேலை / விநியோகம் / சேவைகளைப் பெறுவதற்கு மற்றும் தேவைப்பட்டால் மற்ற வழங்குனர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும், போட்டி கொடுப்பனவு / மனுக்களைப் பெறுவதற்கும் எமக்கு உரிமை உண்டு.
3. டெண்டர் குழு அனைத்து விண்ணப்பங்களையும் பரிசீலித்து, தேவைகளை பூர்த்தி செய்த விண்ணப்பங்களை பதிவு செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். தேவையை பூர்த்தி செய்யாதவர்கள் / பூர்த்தி செய்யாதவர்கள் மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. கோரும் போது மேற்கோள்களைச் சமர்ப்பிக்கத் தவறிய மற்றும் பொருட்களையும் சேவைகளையும் சரியான நேரத்தில் மற்றும் எதிர்பார்த்த நிலையில் வழங்கத் தவறிய வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் பெயர்களைத் நீக்குவதற்கான உரிமை எமக்கு உண்டு.
5. ஒன்றுக்கு மேற்பட்ட வழங்கல் அல்லது சேவைகளுக்கு தங்களைப் பதிவு செய்ய விரும்புவோர் **ஒவ்வொரு விடயங்களுக்கும் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்** மற்றும் விண்ணப்பப் படிவத்தில் வழங்கப்பட்ட கட்டங்களில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
6. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் தகவல்கள் தவறானவை என கண்டறியப்பட்டால், எந்தவித முன் அறிவிப்பும் இன்றி பதிவு ரத்து செய்யப்படும். மேலும், எந்த சூழ்நிலையிலும் செலுத்தப்பட்ட பணம் மீள்ளளிக்கப்படாது என்பதை நினைவில் கொள்ளவும்.
7. வணிகப் பதிவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் தொடர்புடைய பொருட்களுக்கு மட்டுமே சப்ளையர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
8. உற்பத்தியாளர்கள் அல்லாத அனைத்து வழங்குனர்களும், உற்பத்தியாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வியாபாரி அல்லது விநியோகஸ்தராக உங்கள் நிறுவனத்தைக் குறிப்பிடும் நடப்பு ஆண்டிற்கான எழுத்துப்பூர்வ சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
9. பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை **2022.11.26** க்கு முன்னர் **(வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)** கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் கொள்முதல் முகாமையாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது நேரடிகான ஒப்படைக்க வேண்டும்.
10. VAT பதிவு சான்றிதழ் அல்லது உள்நாட்டு வருவாய் ஆணையாளர் நாயகம் வழங்கிய VAT விலக்கு சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.
11. வழங்குனர்கள் / உற்பத்தியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் குறைந்தபட்சம் 30-60 நாட்களுக்கு கடன் வசதிகளை வழங்க வேண்டும் கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்திற்கு இலவசமாக விநியோகிக்க வேண்டும்.

    விண்ணப்பம் அடங்கிய உறை மேல் இடது மூலையில் **“வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்கள் பதிவு - 2023”** தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.
12. விண்ணப்பங்களை ஆய்வு செய்த பின்னரே பதிவுகள் செய்யப்படும்.
13. எந்தச் சூழ்நிலையிலும் பதிவுசெய்த பிறகு பதிவுசெய்யப்பட்ட வகைகளில் மாற்றங்களைச் செய்ய முடியாது மற்றும் வகைகளை மாற்றுவதும் அனுமதிக்கப்படாது என்பதை நினைவில் கொள்ளவும்.
14. கொழும்பு லோட்டஸ் டவர் மேனேஜ்மென்ட் கம்பனி பிரைவேட் லிமிடெட், பொருட்களை வழங்குவது தொடர்பாக அவசியமானது என கண்டறியப்பட்டால், மேலதிக நிபந்தனைகளை விதிக்கும் உரிமையை கொண்டுள்ளது.
15. கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் ஊழியர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் இந்தப் பதிவில் பதிவு செய்ய முடியாது.
16. பதிவுக் கட்டணத்தை முறையாகப் பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும். பதிவு செய்ய விரும்பும் அனைத்து வழங்குநர்களும் சரியான தொகையை இலங்கை வங்கியின் ஏதேனும் ஒரு கிளையில் பணமாக மட்டுமே வைப்பு செய்ய வேண்டும், மேலும் பதிவு படிவத்தைப் பெறும்போது பிரிவு / பொருளின் பெயரை சமர்ப்பிக்க வேண்டும். வங்கி விவரங்கள் பின்வருமாறு: (எந்த சூழ்நிலையிலும் பணம் ஏற்றுக்கொள்ளப்படாது).

    பெயர் : கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்

    வங்கிக் கிளை : இலங்கை வங்கி - கூட்டுறவு கிளை

    கணக்கு இலக்கம் : 0088597307
17. வழங்குனர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் அலுவலகத்தில் இருக்கும் போது, கோவிட் - 19 க்கு பயன்படுத்தப்படும் நிலையான சுகாதார முன்னெச்சரிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும்.
18. ஏதேனும் விபரங்கள் அலுவலக நேரத்தில் முகாமையாளரிடம் 011 242 1874 தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

● இவ்விளம்பரத்தில் ஏதேனும் தெளிவின்மை காணப்படின் 2022.10.23 ஆம் திகதி சன்டே ஒப்சேர்வர் பத்திரிகையில் வெளியான ஆங்கில மொழியிலான பத்திரிகை விளம்பரத்தை பார்வையிடவும்.

**பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி**

**கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்,**

**320, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10. இலங்கை**

## உலகில் குறைந்த வரி... (03 ஆம் பக்கத் தொடர்)

**பதில்:-** மத்திய வங்கி ஆளுநருக்கு கீழே பிரதி ஆளுநர்கள் மற்றும் தொழில் அனுபவம் உள்ள அதிகாரிக ளும் இருக்கின்றார்கள். எவ்வாறான நிறுவனமாக இருந்தாலும் தொழில் ரீதியில் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கு அமைய பணியாற்றுவதென்றால் நாட்டின் நலனுக்காக அதனைக் கையாள முடியும் என் ற நம்பிக்கை எனக்குள்ளது. 30 வருடங்களாக நான் இந்த மத்திய வங்கியில் சேவையாற்றி இருக்கின்றேன். எனவே எனக்கு இங்கு பெரும் புரிந்துணர்வு உள்ளது. எனினும் மத்திய வங்கி தொடர்பில் கடந்த காலங்களில் மக்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தது. மத்திய வங்கி ஆளுநரும், நிதிச் சபையும் பொருளாதாரக் கொள்கையை முன்வைப்பது அது தொடர்பிலான அறிவுடனாகும். அது சுயாதீனமாக செய்யப்படும். மத்திய வங்கி ஆளுநர்களை நியமிக்கும் போது அரசியல் அழுத்தங்களின்றி சிறந்த அறிவுள்ள ஒருவரை நியமிப்பதன் ஊடாக இந்த நிலையினைத் தவிர்த்துக் கொள்ள முடியும். புரிந்துணர்வு மற்றும் தலைமைத்துவத்தை வழங்கக் கூடிய ஒருவர் தான் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் அரசியல் ரீதியில் ஒருவர் நியமிக்கப்படுவதின் மூலம் பொருளாதார நெருக்கடி ஏற்படும். உலகில் முன்னேற்றமடைந்த நாடுகளை எடுத்துக் கொண்டால்அங்கெல்லாம் மத்திய வங்கி சுயாதீனமாக இயங்குகின்றது. நாட்டின் பொருளாதாரத்திற்கு நிலையான தன்மையினை அவ்வாறான மத்திய வங்கிகளாலேயே ஏற்படுத்த முடியும். சர்வதேச நாணய நிதியமும் கூட இம்முறை இது தொடர்பில் விசேட கவனத்தைச் செலுத்தியுள்ளது.

**கேள்வி:- தற்போதைய நிதி அமைச்சர் ஜனாதிபதியாகும். நீங்கள் கூறுவதைப் போன்று சுயாதீனத் தன்மைக்கு தற்போதைய அரசாங்கத்தில் மற்றும் ஜனாதிபதியின் மூலம் அழுத்தங்கள் இருக்கின்றனவா?**

**பதில்:-** தற்போதுள்ள நிதிச் சட்டத்தின் கீழ் கூட, மத்திய வங்கி சுதந்திரமாக செயல்பட முடியும். இங்கு சுயாதீனமாகச் செயற்படுவது என்பது ஆளுநர் விரும்பியவாறு செயற்படுவதல்ல. மக்களுக்கு பொறுப்புக்கூறக் கூடிய வகையிலாகும். பாராளுமன்றத்திற்கும் மக்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டிய கடமை மத்திய வங்கிக்கு இருக்க வேண்டும். நாட்டின் நிதிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதியும் நிதி அமைச்சின் செயலாளரும் நல்ல புரிதலுடன் செயற்பட்டு வருகின்றனர். மத்திய வங்கிக்கும் நிதி அமைச்சுக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வு இல்லாமல் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. மத்திய வங்கி நிதியமைச்சுக்கும் பாராளுமன்றத்திற்கும் பொறுப்புக்கூறுவதை நான் மதிக்கிறேன். அதேபோன்று, நாட்டின் நிதிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி சுயாதீனமாகச் செயற்பட அனுமதித்தமைக்காக நிதி அமைச்சரையும் நான் பாராட்டுகிறேன். இவை இரண்டுக்கும் இடையிலான உறவை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். மத்திய வங்கியின் ஆளுநரிடம் இருப்பது கையிருப்பு கட்டுப்பாடு, பணவீக்கம், வட்டி விகிதம் என்பனவற்றுடன் செயற்படுவதாகும். நிதி அமைச்சின் செயலாளருக்கு இருப்பது அரசின் வருவாய், செலவுகள், மற்றும் அரச நிதிக் கொள்கையை செயல்படுத்துதல் போன்ற விடயங்களாகும். கடந்த காலத்தில் குழப்பங்கள் ஏற்பட்டது புரிந்துணர்வு இல்லாமையினாலாகும். ஒருவர் ஒரு பக்கத்திற்கும், மற்றவர் மற்றொரு பக்கத்திற்கும் இழுத்தால் சரிந்து விழுவது நாட்டின் பொருளாதாரமேயாகும். கடந்த காலத்தில் இடம் பெற்றது இவ்வாறான ஒன்றேயாகும்.

**கேள்வி:- நடுத்தர வர்க்கத்தில், ஒரு இலட்சத்திக்கு மேல் சம்பளம் ஒருவருக்கு தற்போது வரிக் கொள்கையின் மூலம் அண்ணளவாக இருபதாயிரம் ரூபாய் வரி செலுத்த வேண்டி வரும். அவ்வாறு வரி செலுத்தும் போதும் அவர் கொள்வனவு செய்யும் பொருட்களுக்கும் வரியினைச் செலுத்த வேண்டிய நிலையும் உள்ளது. அவ்வாறு செய்வதால் நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்க முடியும் என்று மக்களுக்கு உறுதியளிக்க முடியுமா?**

**பதில்:-** ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுபவர்கள் சுமார் இருபதாயிரம் ரூபாவினை வரியாகச் செலுத்த வேண்டி வரும். இவை நேரடி வரிகள். ஆனால் எமது நாட்டில் இன்னமும் அதிகமாக இருப்பது மறைமுக வரிகளேயாகும். உயர் வருமானம் பெறுபவர் தொடக்கம் குறைந்த வருமானம் பெறுபவர் வரைக்கும் மறைமுக வரிச் சுமையினைச் சுமக்கின்றார்கள். நமது வரி கட்டமைப்பில் உள்ள தவறுகளில் ஒன்று 80 சதவீதம் மறைமுக வரிகளாக இருப்பதாகும். நேரடி வரிகள் 20 வீதமே உள்ளது. எனவே நேரடி வரிகளை அதிகரிக்க வேண்டும். உலக நாடுகளை நோக்கும்போது ஈரான் மற்றும் வெனிசுவேலா ஆகிய நாடுகளைத் தவிர குறைந்த வரி வருமானம் இருப்பது இலங்கையிலாகும். மேற்குறிப்பிட்ட இரு நாடுகளுக்கும் வரி வருமானம் தேவைப்படுவதில்லை. காரணம் அங்கு எண்ணெய் வள வருமானம் இருக்கின்றது ஆனால் எம்மிடம் அவை எதுவுமே இல்லை. எனவே, குறுகிய காலத்தில் வருமானம் ஈட்டிக் கொள்வதற்காக நாம் இந்த வரிகளை விரும்பியோ விரும்பாமலோ வசூலிக்க வேண்டும். தற்போதுள்ள வரி கட்டமைப்பில் அதிகரிக்கக்கூடியதாக இருப்பது மறைமுக வரிகளைத் தான். எனினும் இங்கு குறைந்த வருமானம் பெறுபவர்களால் அதனை விளங்கக் கூடியதாக இருக்கும். எனவேதான், மறைமுக வரிகளை 60 சதவீதமாகக் குறைத்து நேரடி வரிகளை 40 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என மத்திய வங்கி பரிந்துரைக்கிறது.

அந்த வகையில் பயணிக்கும் போது அதன் முதற் கட்டம்தான் உழைக்கும் போது வருமானத்தில் வரி அறவிடுவதாகும். கடந்த காலங்களில் உழைக்கும் மக்கள் எட்டு மில்லியனுக்கும் அதிகமாக இருந்தனர். எனினும் வரி செலுத்துவது இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் மாத்திரமேயாகும். வரி செலுத்தும் எண்ணிக்கையைப் பார்க்கும் போது நியாயமற்ற கட்டமைப்புப்போலக் காணப்படலாம். வரி செலுத்தும் இரண்டரை இலட்சம் பேருடைய கோவைகளே இருக்கின்றதென்றால் வருமானம் ஈட்டுபவர்கள் தமது பொறுப்பைச் செய்யவில்லை என்றுதானே அர்த்தம். முன்னேறிச் செல்லும் போது இப்போதிருக்கும் வரிக் கொள்கை 9 வீதத்திலிருந்து 14 வீதம் வரை அதிகரித்துச்செல்ல வேண்டும். நாட்டின் பொருளாதாரம் அடுத்த வருடம் நிலையானதாக மாறினால் வரி அதிகரிக்கும். பொருளாதாரம் நிலையாகும் போது நிறுவனங்கள் இலாபம் ஈட்டலாம். அப்போது வருமான வரியின் அளவினை உயர்த்த முடியும். அப்போது ஒரு இலட்சம் ரூபா என்பதனை ஒன்றரை இலட்சமாக உயர்த்த முடியும்.

**கேள்வி:- நீங்கள் உருவாக்கும் பொருளாதாரக் கொள்கைகளால் திட்டமிட்டுகுற்றம்செய்யும் பணக்கார முதலைகளைப் பிடிக்க முடியுமா? ஏனெனில் அவர்கள் வரி செலுத்துவதிலிந்து மிகத் தந்திரமாகத் தப்பித்துக் கொள்வார்கள். அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளனவா?**

**பதில்:-** நாட்டில் வரி அறவிடப்படும் முறையும், வரி அறவிடும் நிறுவனங்களும் நிலையானதாக இருக்க வேண்டும். இலங்கையில் மூன்று நிறுவனங்கள் வரி அறவீடு செய்கின்றன. வருமான வரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் என்பனவே அந்நிறுவனங்களாகும். இந்நிறுவனங்கள் சுயாதீனமாக இயங்க வேண்டும். வரி அறவிடுவதற்கு அந்த நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும். நேர்மையான முறையில் வரி செலுத்துவோருக்குச் சுமையை ஏற்படுத்தாமல், உழைக்கும் அனைவருக்கும் வரிச்சுமை நியாயமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். வரி வலையிலிருந்து யாரையும் தப்பிக்க அனுமதிக்கக் கூடாது.

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

























தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342




# படித்ததும் பகர்வதும் (114)



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### வாசிப்பை ஊக்குவிப்போம்!

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இலங்கையில் ஆங்காங்கே சில நல்ல நிகழ்வுகள் இடம் பெறுவது மகிழ்ச்சியளிக்கிறது. அக்கரைப்பற்று புத்தக கண்காட்சி இரண்டாவது வருடமாக இம்முறையும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. பேருவளை சீனன்கோட்டை மாதர் அமைப்பினால் புத்தக கண்காட்சியொன்று இடம்பெற்றுள்ளது. ‘படிகள்’ இலக்கிய இதழ், இரஜரட்ட எடு நெட்வோர்க் (Rajarata Edu Network) அமைப்புடன் இணைந்து கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கான கவிதை, சிறுகதை போட்டி ஒன்றை நடத்துகிறது. பல பாடசாலைகளிலும் ‘வாசிப்பு’ பற்றிய நிகழ்வுகள் நடைபெற்றன.

இவ்வாறு வாசிப்பினை ஊக்கப்படுத்தவும், அதில் குறிப்பாக புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பினை பரவலாக்கவும் எடுக்கப்படும் இத்தகைய நடைமுறைகள், முயற்சிகள், ஏற்பாடுகள் நல்ல சாதகமான அடைவுகளுக்கு நிச்சயம் துணை புரியும்.



‘வாசிப்பு மனிதனை முழு மனிதனாக்குகிறது’ என்ற கூற்று அன்று முதல் இன்று வரை வாசிப்பின் சிறப்பினை தெளிவாக வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறது. இதனாலேயே அச்சுப்பதிவாக மட்டுமன்றி, இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாகவும் வாசிப்பு ஊக்குவிக்கப்படுகிறது. இந்த விடயத்தில், பெற்றோர்கள், பெரியோர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள், கல்விமான்கள், சமூக சேவையில் உள்ளவர்கள் தமது பொறுப்பிலுள்ளவர்களுக்கு வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி அவர்களை வாசிக்கத் தூண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

வசதி படைத்தவர்கள் தமக்கு நெருக்கமான, தமது ஊரிலுள்ள, தாம் கற்ற பாடசாலையிலுள்ள, மற்றும் தேவைப்பாடுகளுள்ள நூலகங்களுக்கும், அமைப்புகளுக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ளும் வகையில் சந்தாக்களை செலுத்தி ஏற்பாடுகளை செய்வது சிறந்ததொரு செயற்பாடாக அமையும்.

பிறந்த நாள், திருமண நாள், மற்றும் சிறப்புக்குரிய நாட்களில் பரிசுகள் வழங்குகின்ற சந்தர்பங்களில் அவற்றை புத்தகப் பரிசுகளாக வழங்குவதும் மிகச் சிறந்த செயற்பாடாக இருப்பதோடு வாசிப்பினை தூண்டும் நடவடிக்கையாக அமையும். இதேபோன்று பல்வேறு போட்டிகளை நடாத்துபவர்கள் வெற்றியாளர்களுக்கான பரிசுப் பொருட்களாக பொருத்தமான புத்தகங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதும் வாசிப்பினை ஊக்குவிக்க வழிவகுக்கும்.

ஒவ்வொருவரும் இந்த வாசிப்பு விடயத்தில் கூடிய கரிசனை கொண்டு, தமது வசதிக்கும், வாய்ப்புக்கும், ஆற்றலுக்கும் அமைவாக செயற்படுவதோடு, வாசிப்பை ஊக்குவிக்கவும், பரவலாக்கவும் நற்செயற்பாடுகளை முன்னெடுக்க முன்வர வேண்டும்..

## நெஞ்சுக்கு நீதி

வாழ்க்கை வளமாக நல்லதை வாசியுங்கள்
வருத்தங்கள் அதனால் மறையும் புரியுங்கள்
வாசிப்பதால் ஜெயமே மகிழ்வாய் சிரியுங்கள்
வையகமே நலமாக வாசிப்பை நேசியுங்கள்

## பிரிந்தார் பெருமை

### தர்ஷன் தர்மராஜ்

சிங்களத் திரையுலகில் சிறகடித்துப் பறந்த தமிழ் நடிகன் தர்ஷன் தர்மராஜ், கடந்த அக்டோபர் 2ம் திகதி (2022.10.02) யாரும் எதிர்பாராத நேரத்தில், தனது 41வது வயதில் காலமானார்.



இரத்தினபுரி மாவட்டம், இறக்குவானையில் தேயிலைத் தோட்டம் ஒன்றில் பிறந்த இவர் மூட்டை சுமக்கும் கூலித் தொழிலாளியாக தனது வாழ்க்கையை ஆரம்பித்தார் என்பது பலரும் அறியாத உண்மை.

2008 ஆம் ஆண்டில், ‘சிரச’ தொலைக்காட்சி ஒளிபரப்பிய, பிரபல சிங்கள இயக்குநர் சிட்னி சந்திரசேகரவின் ‘ஏ9’ தொலைக்காட்சி நாடகத்தில் நடிகனாக அறிமுகமானார். இவரது ஆற்றல்களை புரிந்துகொண்ட சிங்களத் திரையுலகின் ஜாம்பவ இயக்குநர்களான பிரசன்ன விதானகே, அசோகா ஹந்தகம, புத்தி கீர்த்திசேன போன்றவர்கள் தமது நாடகங்களிலும், திரைப்படங்களிலும் இவருக்கு வாய்ப்புகளை வழங்கினார்கள்.

2008ல் வெளியான சிங்களம், தமிழ் இருமொழி திரைப்படமான 'பிரபாகரன்' திரைப்படத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனாகப் பாத்திரமேற்று தர்ஷன் சிறப்பாக நடித்திருந்தார். இத்திரைப்படமும், தர்ஷனும் கடுமையான விமர்சனங்களை எதிர் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தர்ஷன் தர்மராஜ் நடித்த, இத்தாலியின் சிறந்த தயாரிப்பாளரும், இயக்குநருமான உபெர்ட்டோ பசோலினியின் ‘மச்சான்’ சிங்கள/ஆங்கிலத் திரைப்படம் 2008 முதல் 2010 வரை பன்னாட்டுத் திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு பல விருதுகளையும் வென்று சாதனை படைத்தது.

அசோக ஹந்தகம இயக்கி 2012ல் வெளியான 'இனி அவன்' தமிழ் திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்தமைக்காக தர்ஷனுக்கு சிறந்த நடிகருக்கான இரண்டு விருதுகள் கிடைத்தன. இத்திரைப்படம் பிரான்ஸ் நாட்டின் 'கான்' திரைப்பட விழாவில் பிரான்ஸ் மொழி உப தலைப்புக்களுடன் திரையிடப்பட்டது. ரோஜா, பிரபாகரன், மச்சான், மாதா, இனி அவன், சுனாமி, போரிசாதயா, மொனறவிளக், பாஸ்போர்ட் உட்பட இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பிரபல சிங்கள திரைப்படங்களிலும், ஓரிரு தமிழ் திரைப்படங்களிலும், பல தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்துள்ள தர்ஷன் தர்மராஜ், தெரண தொலைக்காட்சி திரைப்பட விருது, ஹிரு தொலைக்காட்சி கோல்டன் திரைப்பட விருது உட்பட பல்வேறு விருதுகளை வென்றுள்ளார்.

தமிழ் நடிகராக இருந்ததும், தமிழ் மக்களால் அதிகம் போற்றப்படாவிட்டாலும், பெரும்பான்மை சிங்கள மக்களால் பெரிதாக போற்றிப் புகழப்பட்ட தர்ஷன் தர்மராஜுக்கு இறுதி அஞ்சலி செலுத்த நாட்டின் ஜனாதிபதியே நேரில் வருகை தந்து கௌரவித்தமை அவரின் சிறப்புக்கும், மக்கள் அங்கீகாரத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## பாராட்டுறோம்! வாழ்த்துகிறோம்!!

### இலங்கைக்கு ‘புக்கர்’ விருது

2022ஆம் ஆண்டுக்கான சர்வதேச புக்கர் விருது இலங்கை எழுத்தாளர் ஷெஹான் கருணாதிலக்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது இலக்கியத்துக்கான உயரிய சர்வதேச விருதாகும். கொலையுண்ட காட்சிப் படக் கலைஞரான மாலி அல்மேதாவைப் பின்னணியாகக் கொண்டு இவர் எழுதிய ‘த செவன்ஸ் மூன்ஸ் ஒப் மாலி அல்மேதா' (The Seven Moons of Maali Almeida) நாவலுக்காக இவ்விருதினை இவர் பெற்றுள்ளார்.



புக்கர் விருதைப் பெற்ற இரண்டாவது இலங்கையர் இவராவார். 1992ஆம் ஆண்டு இலங்கை எழுத்தாளர் மைக்கள் ஒண்டச்சிக் தனது 'த இங்கிலிஸ் பேசன்ட்' நாவலுக்கு புக்கர் விருதினை வென்றிருந்தார். 1975ல் காலியில் பிறந்த ஷெஹான் கருணாதிலக்க, 2011ல், தனது முதல் நாவலான சங்கிலிமன் மூலம் பலராலும் பாராட்டப்பட்டார்.





தொழில்முறை எழுத்தாளரான, 46 வயதான ஷெஹான் கருணாதிலக்க ஒரு ஊடகவியலாளருமாவார், முன்னர் விளம்பரத் துறையிலும் பணியாற்றியுள்ளார். இவர் சிறுவர் புத்தக எழுத்தாளர், திரைக்கதை எழுத்தாளர் பாடலாசிரியர் என பன்முகம் கொண்டவர்..

தி கார்டியன், நியூஸ்வீக், ரோலிங் ஸ்டோன், நேஷனல் ஜியோகிராஃபிக், கான்டே நாஸ்ட், விஸ்டன், தி கிரிக்கெட்டர், எகனாமிக் டைம்ஸ் போன்ற புகழ்பெற்ற பத்திரிகைகளுக்கு இவர் கட்டுரைகளை வழங்கியுள்ளார்.

புக்கர் விருதோடு, 50,000 பவுண் பரிசுத்தொகையும் இவருக்கு வழங்கப்படுகிறது. நம்நாடு பல்வேறு வழிகளிலும் நலிவுற்றிருக்கும் இன்றைய காலத்தில் இந்த உயரிய சர்வதேச விருது மூலம் நாட்டுக்கு நற்புகழை ஈட்டித்தந்துள்ள ஷெஹான் கருணதிலக்காவை பாராட்டி வாழ்த்துகிறோம்.

## புது வரவு

### கடலோரப் பாதை

1969ல் ஆரம்பித்து இன்றுவரை கவிதை, சிறுகதை என தொடர்ச்சியாக எழுதி வரும் மூதூர் முகைதீன் தந்துள்ள சிறுகதை தொகுப்பு, ‘கடலோரப் பாதை’.

1. கடலோரப் பாதை, 2. பாதுகாவல், 3 பிரதிபலன், 4. இயந்திர மனிதர்கள், 5. உயர்ந்த உள்ளம், 6. அமைச்சர் வருகிறார், 7. தீஞ்ச சோறு, 8. எரியும் இதயங்கள், 9. அறியாமை, 10. வேதத்தீவு, 11. எதிர்பார்ப்பு எனும் தலைப்புகளில் பதினொரு சிறு கதைகள் இத்தொகுப்பில் இடம் பிடித்துள்ளன.



“கடலோரப் பாதை எனும் இந்நூலின் நூலாசிரியர் தனது விரிந்த சிந்தனை, பரந்த அனுபவம் என்பவற்றுடன் கூடிய மொழிவாண்மை மூலம் இதனை படைத்துள்ளார். இந்த படைப்பும் வாசகர் நுகர்விற்கு மிகவும் பொருத்தமானது என நம்புகின்றேன் அந்த வகையில் இப்படைப்பினை மேற்கொண்ட நூலாசிரியரை பாராட்டுவதுடன், அவர் மேலும் இத்துறையில் பிரகாசிக்க வாழ்த்துக்களைச் தெரிவிக்கின்றேன்” என்று இந்நூல் பற்றியும், நூலாசிரியர் பற்றியும், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தெரிவித்துள்ளார்.

மூதூர் முகைதீனின் சமகாலத்தவரான திக்குவல்லை கமால், “இலக்கியப் படைப்பும், செயற்பாடுக்களுமாய் வாழ்ந்துள்ள அனுபவ முதிர்ச்சி இக்கதைகளில் பளிச்சிடுகிறது. கலையும், இலக்கியமும் மக்களுக்காக என்ற கருத்தியலை உள்வாங்கியிருந்ததன் காரணமாக சாமான்ய மனிதர்களின் அன்றாடப் பிரச்சினைகளிலேயே இவரது கவனம் குவிந்துள்ளதை ஒட்டுமொத்தமாக எல்லாக் கதைகளிலும் காண முடிகிறது.” என்று இந்நூல் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

நூல்: **கடலோரப் பாதை**, ஆசிரியர்: **மூதூர் முகைதீன்**, முதற் பதிப்பு: 2021, பக்கங்கள்: 133, விலை: ரூபா 400.00, வெளியீடு: பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிழக்கு மாகாணம், தொடர்புகளுக்கு: 0774203500.

## பேசும் கவிதை

### பாத்திரத்திற்கு அழகு!

தெருவில் ஒரு குரல் கேட்டது
''பாத்திரத்துக்குப் பேர் போடுறதே''
வழிமறித்து
‘ஒரு எழுத்துக்கு எவ்வளவு’ என்பதற்குள்
ஒரு ரூபா என்றான்.
அவனிடம் சொன்னேன்
உன்போல் எனக்கு எழுதத் தெரியாது
என்போல் உனக்கும்
எழுதத் தெரியாது
நீ பாத்திரத்தில் எழுதுகிறாய்
நான் பாத்திரத்துக்கு
எழுதுகிறேன்
இருவர் பாத்திரமும்
உடையாமல் பார்ப்பது
அவரவர்
பாத்திரத்திற்கு அழகு!



**- கவிஞர் கபிலன்**

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# திருவள்ளுவத்தில் ஆட்சேர்ப்பு (Human Resources Management)



திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன் 25

நிறுவனமொன்றில் ஆட்சேர்ப்பென்பது அந்நிறுவனத்தில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கு பொருத்தமான தகுதி தராதரங்களை உடையவர்களையும் அனுபவமும் அறிவும் திறனும் மனப்பாங்கு உள்ளவர்களையும் இனங்கண்டு சேர்த்துக் கொள்ளலாகும். முகாமைத்துவமானது பதவிக்குப் பொருத்தமற்றவர்களைத் தேர்வு செய்தால் நிறுவனத்தை வெற்றிகரமாக கொண்டு செல்ல முடியாது. இம் முகாமைத்துவக் கருத்தினைக் கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக வெளிப்படுத்துகின்றார்.



**“வினைக்குரிமை நாடிய பின்றை அவனை**
**அதற்குரிய னாகச் செயல்”.**
( குறள் 518)

ஒருவன் ஒரு தொழிலை அல்லது செயலைச் செய்வதற்கு ஏற்றவனாக இருக்கின்றானா, பொருத்தமானவனாக இருக்கின்றானா என்பதை ஆராய்ந்த பின்பே அவனை அத்தொழிலில் அல்லது அந்தச்செயலில் ஈடுபடுத்த வேண்டும் என்கிற திருவள்ளுவர் செயல் நிறைவேற்றுதற்கு உரியவனைத் தேடிக்கண்ட பிறகு, அவனிடம் செயலின் முழு ஆளுமைப் பொறுப்பையும் ஒப்படைத்து விட வேண்டும் என்கிறார்.

அவனை அதற்குரியனாகச் செயல் என்பதன் மூலம் தெரிவு செய்தவன் மேல் சந்தேகம் கொள்ளாது, அத்தொழில் செய்வதற்கு உரியவனாக்குக. அல்லது அந்தக் காரியத்துக்கு அவனையே பொறுப்பாளியாக்கிவிட வேண்டும். அல்லது அவ்வேலைக்குப் பொருத்தமானபடி அவனை உயர்த்தி விட வேண்டும், என்ற கருத்தினைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். எனவே நிறுவனமொன்றின் முகாமைத்துவம் தொழிலுக்கு பொருத்தமானவர்களையே எப்போதும் தெரிவு செய்ய வேண்டும் என்பதனை மட்டுமல்ல, அவ்வாறு தெரிவுசெய்தவர்களை அத்தொழிலை ஆற்றுமாறு செய்து பொறுப்புகளையும் ஒப்படைக்கவேண்டும் என்ற உயர்ந்த முகாமைத்துவக் கருத்தினைக் கூறுகிறார். இவ்வாறு பொறுப்புகளை ஒப்படைப்பதன் மூலம் பொறுப்பு எடுத்துக்கொண்டவன் மகிழ்ச்சியும் பெருமையும் ஊக்கமும் பெற்று, தனது பணியினைச் செவ்வனே செய்வான் என்று திருவள்ளுவர் கூறுவதைத்தான் நவீன முகாமைத்துவம் பணி உடைமை உணர்வு (owning the job) என்று குறிப்பிடுகிறது.

இவ்வாறு ஊழியர்களைச் சேர்க்கும்போது தேர்வுக்கு வருகின்றவரிடம் நேர்மறை எண்ணம் இருக்கிறதா அவரிடம் போதுமான தகுதிகள் தராதரங்கள் இருக்கிறதா? அவரிடம் போதுமான அனுபவம் இருக்கிறதா? அவரின் மனப்பாங்கு எப்படி இருக்கிறது ( qualification, experience, personality, skills, overall attitude, etc) போன்ற பல விடயங்களை முகாமைத்துவம் பரிசீலிக்க வேண்டும். பொருத்தமில்லாத ஒருவரை பொருத்தமில்லாத பதவிக்குத் தெரிவு செய்தால் நிறுவனம் பல நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டும் என்பதில் முகாமைத்துவம் தெளிவாக இருக்க வேண்டும். இதனைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடிகளில் தெளிவாக விளக்குகின்றார்.

**“குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்”.**
(குறள் ;504)

இங்கு ஆட்சேர்ப்பினைச் செய்யும் போது முகாமைத்துவம் ஒருவனது நற்குணங்களை அதாவது நிறைகளை முதலில் ஆராய்ந்து, பிறகு அவனிடம் காணப்படும் குறைகளை ஆராய்ந்து இறுதியாக அவ்விரண்டினுள்ளும் எது மிகுதியாக உளதென எண்ணிப்பார்த்து மிகுதியாய் உள்ளதன் அடிப்படையில் அவனைச்சேர்ப்பதா இல்லையா என்ற முடிவினை எடுக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். பொதுவாக நடைமுறை உலகில் எந்த ஒருவரும் முற்றாக நிறைகள் உள்ளவராகவோ அல்லது குறைகள் உள்ளவராகவோ அமையமாட்டர்கள். எல்லோரிடமும் குறைகளும் நிறைகளும் இருக்கும் அதானாலேயே திருவள்ளுவர் அவற்றைக் கவனமாக ஆராயச் சொல்கிறார் . எனினும் குறைகள் அதிகமாக இருக்கும் சில மனிதரிடம் இருக்கும் இரண்டொரு நிறைகள் நிறுவனத்திற்கு முக்கியமாகத் தேவைப்படுமாயின் முகாமைத்துவம் அவரைச் சேர்ப்பத்தற்கு பின்னிற்கக் கூடாது என்ற கருத்தினையும் நாங்கள் இங்கு கருத்தில் கொள்ளவேண்டும்.

ஒரு நிறுவனத்தில் காணப்படும் ஊழியர்களே அந்நிறுவனத்தின் மேலான சொத்து. எனவே சரியான வேலைக்குச் சரியானவர்களைச் சரியான நேரத்தில் பணிக்கமர்த்துவதில் முகாமைத்துவம் கூடிய கவனம் செலுத்தவேண்டும். பொதுவாக வெவ்வேறு நிறுவனங்கள் வேறுபட்ட தந்திரோபாயங்களை ஆட்சேர்ப்புக்குப் பயன்படுத்தினாலும் அவர்களுடைய நோக்கம் சரியானவர்களைத் தெரிவு செய்வதாகவே இருக்க வேண்டும். இக்கருத்தினை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக வெளிப்படுத்துகின்றார் .

**“நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப்படும்”.**
(குறள் 511)

நன்மை எது தீமை எது என ஆராய்ந்து நன்மை தருகின்ற விடயங்களை மட்டுமே நிறுவனத்திற்குச் செய்ய விரும்புகின்ற இயல்புடையவர்களே எப்பணியினையும் அந்த நிறுவனத்திற்காக ஆற்றத்தகுதி பெற்றவர்கள் என்பதனால் ஆட்சேர்ப்பின்போது அத்தகையவர்களையே நிறுவனத்திற்குச் சேர்க்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். எனவே ஒரு நிறுவனத்திற்கு பொருத்தமான அல்லது அந்நிறுவன நோக்கத்திற்கு இசைவான நல்ல விடயங்களைச் செய்யக்கூடிய சரியான அறிவு, திறன், மனப் பாங்கு, அனுபவம் உடையவர்களையே முகாமைத்துவம் தொழிலுக்காகத் தெரிவு செய்ய வேண்டும் என்ற கருத்தை இங்கே திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

மேலும் திருவள்ளுவரின் 'நலம் புரிந்த தன்மை' என்ற சொற்றொடருக்கு ஒரு நிறுவனத்திற்கு வரமுன்னர் ஒருவர் தனது முன்னைய பணிகளை நன்றாகச் செய்து முடித்ததனால் பெற்றுக் கொண்டுள்ள முன் அனுபவம் என்றும் பொருள் கொள்ளலாம். எனவே ஒருவர் செய்த நற்பணிகளின் முன் அனுபவத்தின் அடிப்படையிலேயே புதிய பொறுப்புகளில் அமர்த்தப்படவேண்டும். அத்தோடு அவர் தானாகவே நன்மை தீமைகளை ஆராய்ந்து நிறுவனத்தின் நன்மையை விரும்பிச் செய்யும் தன்மை உடையவராகவும் இருக்க வேண்டும். அதுமட்டும் அல்லாமல் முகாமையாளரின் ஆணைப்படியே எல்லாவற்றையும் செய்யாமல் அதாவது சொல்லப்பட்டதை அப்படியே ஏற்றுச் செய்யாமல் கொடுக்கப்பட்ட செயலின் நன்மை தீமைகளை ஆராய்ந்து செய்யத்தக்க ஒருவராக இருக்க வேண்டும். அத்தகைய ஒருவரையே முகாமைத்துவம் நிறுவனத்திற்காகக ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர் .

இந்தக் குறளின் ஊடாகத் திருவள்ளுவர் இன்னுமொரு முக்கிய முகாமைத்துவக் கருத்தினை வலியுறுத்துகின்றார். அதாவது ஒரு பெரும்செயலினை அல்லது திட்டத்தினைத் தொடங்கமுன் அதுபற்றிய ஓர் தெளிவு வேண்டும். இல்லாவிட்டால் தேவையில்லாத செயல்களில் ஈடுபட்டு பொருளையும் சக்தியையும் நேரத்தையும் வீணாக்க வேண்டிவரும். எத்தகைய செயலாக இருந்தாலும் அதன் பயனாக ஏற்படும் முடிவு நன்மை தருமா அல்லது தீமை தருமா என்பனவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு தெளிந்து கொண்டு அந்தச் செயலைத் தொடங்க வேண்டும்.

**(தொடரும்)**

# 'ஸ்ரீ ராம ராஜ்ஜியம்' நாட்டிய நாடகம்




கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் நாட்டிய கலாமந்திர் மாணவிகள் வழங்கிய 'ஸ்ரீ ராம ராஜ்ஜியம்' நாட்டிய நாடகம் அண்மையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. இந்திய கலாசார தொடர்புகளுக்கான கழகத்தின் ஏற்பாட்டில் 6ஆவது சர்வதேச இராமாயண விழா, இம்மாதம் 17ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறுகிறது. இந்த இராமாயண விழாவில் 'ஸ்ரீ ராம ராஜ்ஜியம்' நாட்டிய நாடகம்' மேடையேற்றப் படவிருக்கிறது.





- படங்கள்: வி.ஜெகதீசன்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 34

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| | 06 | | 07 | | 08 |
| 09 | | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | | 18 |
| | | 19 | | 20 | |
| 21 | 22 | 23 | | 24 | 25 |

பெயர் ..................................................
வகுப்பு ..................................................
தொலைபேசி இல ..................................................
பாடசாலை பெயர் ..................................................
வதிவிட முகவரி ..................................................
..................................................
............................ ............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) நோய்கள் குணமாவதற்காக நோயாளர்களுக்கு மருத்துவர்கள் கொடுப்பது இது.
(10) நாம் வாழும் பூமிக்கு ஒத்தபொருள் சொற்கள் அதிகம். அகிலம், ஞாலம், தரணி, வையகம், வையம், புவி போன்ற சொற்கள் போன்று இதுவும் ஒன்று.
(14) நாம் ஒவ்வொருவரும் வசிக்கின்ற உறையுள் இது.
(21) சூரியக் குடும்பத்தில் சிறிய கோள் இது. சூரியனுக்கு மிக அருகில் உள்ள கிரகமும் இதுதான்.
(24) முக்கனிகளில் மிகப் பெரிய உருவம் கொண்ட பழம் இது. இதன் உள்ளே நூற்றுக்கணக்கான தேன்சுவை கொண்ட சுளைகள் உள்ளன. (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(2) இரும்பின் மேற்பரப்பில் தோன்றுகின்ற படிவம் இது. வளியிலுள்ள வாயுக்கள் இரும்பின் மேற்பரப்புடன் தாக்கம் புரிவதால், இரும்பின் மேற்பரப்பு சிதைவடைந்து உண்டாவது இது. (தலைகீழான சொல்)
(4) புவியின் வடக்கு, தெற்கு முனைகளை இவ்வாறுதான் குறிப்பிடுவதுண்டு.
(5) நுளம்பு, வண்ணத்துப்பூச்சி போன்றவற்றின் வாழ்க்கை வட்டத்தில் ஒரு பருவம் இது. அதாவது முட்டைக்கு அடுத்த பருவம்.
(9) தாவரத்தின் அங்கங்களில் மிகவும் பிரதானமானது இது. தாவரம் ஒளித்தொகுப்பின் மூலம் தனக்குரிய உணவைத் தொகுத்துக் கொள்வதற்கு உதவுவது இந்த உறுப்பு. (தலைகீழான சொல்)
(10) பாடல்கள் இயற்றுவதில் தேர்ந்தவன் இவன்.
(20) தண்ணொளி தருகின்ற உபகோள். இதைப் பற்றி வர்ணிக்காத கவிஞர்களே கிடையாது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 33

### விடைகள்

**இடமிருந்து வலம்**
01. சூறாவளி 07. அவள் 11. மகள் 14. தென்னை
19. பல்லி 22. பாலை

**மேலிருந்து கீழ்**
02 புறா 04. கள்ளி 05. அரை 08. வள்ளல்
10. தெரு 11. மனை 15. பாகன் 19. பனை 21. எலி

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 32

### பாராட்டு பெறுவோர்

**1. தையிபா ஹசன்**
தரம் 7, பா.மு.ம. கல்லூரி,
இல.34, டி வாஸ் லேன், கிறேன்பாஸ்.

**2. ஹாலா சமாயில்**
தரம் 5, அல் - முனவ்வறா வித்தியாலயம்,
அல் - முனவ்வறா வீதி, அக்கறைப்பற்று.

**3. ஸீனத் தஹானி சாட்**
தரம் 10B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12 செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர.

**4. எம்.எம். சஹ்றீஸ்**
தரம் 04, அல் - மதீனா வித்தியாலயம்,
76/C/1 அல் - ஹம்றா வீதி, மருதமுனை.

**5. கே.டி. அஹமட்**
தரம் 05, அக்/ ஆண்கள் வித்தியாலயம்,
132/2, முதலியார் வீதி, அக்கரைப்பற்று.

**6. வி. துவிசாலினி**
தரம் 05, இ.கி. பெண்கள் பாடசாலை,
திருமால்முக வீதி, காரைதீவு 07.

**7. எம்.ஏ.எப். அலீன்**
தரம் 07B, க/பதியுதீன் வித்தியாலயம்,
இல. 98/A, றம்புக்கனை வீதி, கலகெதர.

**8. ப. வைஷ்ணவி**
தரம் 07A, யா/ மெதடிஸ்த பெ.உ.பாடசாலை,
சிவன் வீதி, பருத்தித்துறை.

**9. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, ரஹ்மானிய்யா ம.வி (தே.பா),
இல. 418, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**9. தமீம் உஸ்மான் ஹாமித்**
தரம் 06, அக்/அல்முனவ்வறா கனிஷ்ட கல்லூரி,
அக்கரைப்பற்று.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 34
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு மாடல்ல
மற்றை யவை**

**தெளிவுரை :**
ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும், கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல

## பழமொழி விளக்கம்

### கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?



'கழு' என்றொரு கோரைப்புல் வகை உண்டு. அந்த வகை கோரைப்புல்லை கொண்டு பாய் பின்னும் போது கற்பூர வாசனையை உணர முடியும். கழு கோரைப் புல்லினால் பின்னப்பட்ட பாயின் அருகில் தேள், பூரான் உள்ளிட்ட விஷ பூச்சிகள் நெருங்காது. மேலும் கழு கோரைப் புல்லைக் கொண்டு பின்னப்பட்ட பாய்களில் படுத்து உறங்கினால் இயற்கையாகவே அதனுடைய மனமான கற்பூர வாசனையை நமது நாசிகள் உணருமாம்.

அதன் மருத்துவ குணங்கள் உடல் நலனைக் காக்கும். இப்படியாக "கழு தைக்க தெரியுமாம் கற்பூர வாசனை" என்ற சொல் மறுவி தான் இன்று "கழுதைக்கு தெரியுமாம் கற்பூரச வாசனை" என்று மறுவி வந்துள்ளது.

## பயன் மிகு ஆசான் ஆவோம்

விதியின் தலைமகனை அழைத்து
விளையாடும் வீரர்கள் ஆவோம்
புதிய கவிதை கருகொண்டு
புதுமைக் கவிதைகள் செய்வோம்
நதியின் அயல் வழியே வளரும்
நாணலாய் கொள்கை கொள்வோம்
மதியின் உயர் நுட்பம் கொண்டு
மலையகத்துக்காய் உழைப்போம்

நடுக்கிடும் குளிரூடே தினந்தினம்
நாட்டுக்கெமை யளித்தோம் இனி
முழங்கிடும் மலை வீழருவியாய் நாமும்
முழங்குவோம் புதிய உலகுக்காய்
எழுதாக் கரங்களில் நவநவ
ஏடுகள் தவழ்ந்திட வழிசெய்வோம்
பழுதிலா கல்வித்தளிர் முளைவிட
பயன் மிகு ஆசான் ஆவோம்

**மொழிவரதன் C மகாலிங்கம்**
ஓய்வுநிலை கல்விபணிப்பாளர்

## தெரிந்து கொள்ளுங்கள்

### நமது உடலில் சிறிய எலும்பு எது?



மனிதனின் உடலில் மொத்தம் 206 எலும்புகள் உள்ளன. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை எலும்பு செல்கள் மீளுருவாக்கம் அடைகின்றன. பாதத்தில் 26 எலும்புகள், கைகளில் மணிக்கட்டுகள் உட்பட 54 எலும்புகள் உள்ளன. மிக நீளமான, மிக வலுவான எலும்பு தொடை எலும்பு. காதில் உள்ள 'ஸ்டேப்ஸ்' தான் உடலின் மிகச்சிறிய எலும்பு மற்றொரு எலும்புடன் தொடர்பில்லாத ஒரே எலும்பு நாக்கின் அடியில் காணப்படும் V வடிவ ஹையாய்ட் எனப்படும் எலும்பு.

## உதடே ஒட்டாத குரல்

**"யாதெனின் யாதெனின்
நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்!"**

எந்தெந்தப் பொருட்களில் எல்லாம் மனமானது விலகி இருக்கிறதோ, அந்தப் பொருட்களால் நமக்குத் துன்பம் கிடையாது. மனது ஒட்டாமல் இருக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய இந்தக் குறளை உச்சரிக்கும்போது உதடுகள் கூட ஒட்டாது.



## சிரிக்க... சிந்திக்க

ஒரு போர் நடந்து முடிந்து போர் வீரர்கள் தங்கள் வீர செயல்களை சொல்லி மக்களை வியக்க வைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு அதீத அறிவாளி ஒருவர் வந்தார். அவரும் தன் பங்கிற்கு தான் செய்த வீரச் செயல்களை சொல்ல ஆரம்பித்தார்.

நானும் ஒரு முறை ஒரு போரில் கலந்துகொண்டு ஒரு போர் வீரனின் இரண்டு கைகளையும் வெட்டிச் சாய்த்தேன் என்றார். குறுக்கிட்ட ஒரு சிறுவன், பொதுவாக போரில் தலையைத்தானே வெட்டுவது வழக்கம்? தாங்கள் ஏன் தலையை விட்டுவிட்டு கைகளை வெட்டினீர்கள்? எனக் கேட்டான் அந்த சிறுவன். ஆமாம், நான் தலையைத் தான் வெட்டியிருக்க வேண்டும். ஆனால், எனக்கு முன்பே யாரோ தலையை வெட்டியிருந்தார்களே, அதனால் தான் கைகளை வெட்டினேன் என்றார் அந்த அறிவாளி.

## இவ்வார மழலை



**தேஜேஷ்**
மகேஸ்வரன் / உமா,
கொழும்பு.

# வாரம் ஒரு பெரியார்

## புவி ஈர்ப்பு விசையை கண்டுபிடித்த
## சர் – ஐசக் நியூட்டன்



இங்கிலாந்தில் உள்ள சிற்றூர் ஒன்றில் 1642ஆம் ஆண்டில், டிசம்பர் மாதம் 25ஆம் திகதி பிறந்தார் நியூட்டன். சிறுவயதிலேயே இவரது ஆராய்ச்சி ஆர்வத்தைக் கண்ட அவரது தாயார், தன் அண்ணனின் யோசனைப்படி, அவரை கேம்ப்ரிட்ஜ் நகரில் உள்ள ட்ரினிடி கல்லூரியில் சேர்த்தார். இக்கல்லூரியில் தான் பைனாமியல் தியரி எனும் ஈர்ப்புத் தோற்றம் கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் கல்லூரியில் படிக்கும்போதே நுண் கணிதத்தைக் கண்டு பிடித்தார். இந்த வகை நுண் கணிதத்தின் மூலம் கணிதத் துறையில் பல்வேறு புரட்சி செய்தமையால், கணித உலகமே நியூட்டனைப் பாராட்டியது. இவர் இந்தக் கணிதப் புரட்சியைச் செய்தபோது வயது இருபத்திரெண்டு. அவர் கணிதத்தில் மட்டுமன்றி, இயற்பியலிலும் ஆர்வம் மிக்கவராய்த் திகழ்ந்தார்.

இவர் தனது ஆராய்ச்சிகளை வானவியல் பக்கம் 1664ம் ஆண்டில் திருப்பினார். அதாவது வானில் உள்ள கிரகங்கள் பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபடத் தொடங்கினார். சந்திரனைச் சுற்றிலும் உள்ள மெல்லிய கீற்றுகள் எவ்வாறு உண்டானது என்பது பற்றித் தீவிரமாக சிந்திக்கலானார்.

1665ஆம் ஆண்டு உயிரைப் பலி வாங்கும் கொள்ளை நோய் பரவவே, இவர் கேம்ப்ரிட்ஜிலிருந்து வெளியேறி தன் சொந்தக் கிராமத்தைப் போய்ச் சேர்ந்தார். அங்கும் கிரக ஆராய்ச்சியிலேயே இவரது மனம் சென்றது.

பூமியின் புவி ஈர்ப்புத் தன்மையைப் பற்றி முதன் முதலில் கண்டறிந்தவர் நியூட்டன் என்றே பலர் எண்ணினாலும், அதற்கு முன்பாகவே, பலர் பூமியின் தன்மை இழுப்பதாலேயே பொருள்கள் கீழே விழுகின்றன என்பதைக் கண்டறிந்தனர்.

ஒருநாள் நியூட்டன் தன் தோட்டத்தில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தார். அப்போது அங்குள்ள ஆப்பிள் மரத்திலிருந்து ஆப்பிள் பழம் ஒன்று கீழே விழுந்தது. அதைப் பார்த்த நியூட்டனின் சிந்தனை ஆப்பிள் மரத்தின் மீது சென்றது. அப்போது அவர் ஆப்பிள் மரத்திலிருந்து விழுந்த ஆப்பிள் நேராக பூமியில் வந்து விழக் காரணம் என்ன? அந்தக் கனி மரத்தின் மீது ஏன் செல்லவில்லை என்று சிந்தித்தார். ஆக, பூமி சாதாரண பொருட்களை மட்டுமன்றி கிரகங்களையும் தன் வசம் இழுக்கிறது என்பதை உணர்ந்தார். அன்று அவர் சிந்தனையைத் தூண்டச் செய்யக் காரணமாயிருந்த சம்பவமே அவர் கண்டுபிடித்த இயக்கம் மற்றும் புவி ஈர்ப்பு விதிக்குக் கட்டுப்பட்ட கிரகச் சுழற்சி நியதிக்கும் காரணமாக அமைந்தது.

சூரியனைச் சுற்றிய பாதையில் கோளின் இயக்கத்துக்குக் காரணமான விசை மரத்திலிருந்து ஆப்பிள் கனியை விழச் செய்யும் என்ற முடிவிற்கு வந்தார். இவர் தம் 24வது வயதில் 1666ம் ஆண்டில் ஈர்ப்பியலைப் பற்றிய விதியை வெளியிட்டு மிகப்பெரும் புகழ் பெற்றார்.

**உலகில் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்த பெரியார்கள் பற்றிய சிறு தகவல்கள் வாரமொரு தடவை இப்பகுதியில் இன்று முதல் பிரசுரமாகின்றது. நீங்களும் உலகப் பெரியார் பற்றிய தகவல்களை எமக்கு அனுப்பி வைக்க முடியும். உங்கள் பெயர், வயது, பாடசாலை விபரங்களுடன் பிரசுரம் செய்வோம்.**

## சிறுவர் சித்திரங்கள்



**எம். ஸ்வேதா ஹர்சனி**
தரம் 11, கேம்பிரிஜ் பாடசாலை,
கொழும்பு.



**எம். சித்தார்த்தன்**
தரம் 07, கேம்பிரிஜ் பாடசாலை,
கொழும்பு.



**பி. ஹரிஹரசுதன்**
தரம் 07, கேம்பிரிஜ் பாடசாலை,
கொழும்பு.

# மஞ்சரி விளையாட்டு



# களைப்பை விஞ்சுமா அனுபவம்?

இலங்கை அணி டி20 உலகக் கிண்ணத்தின் சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறி விட்டது. ஆரம்பப் போட்டியிலேயே நமீபியாவிடம் படுதோல்வி, ஐக்கிய அரபு இராச்சியத்திடம் அபார வெற்றி, நெதர்லாந்து அணிக்கு எதிரான போராட்டத்துடன் வெற்றி என்று இதுவரை இலங்கை அணியின் திறமை ஒரு கலவையாகவே தெரிகிறது.

உண்மையில் ஆரம்ப சுற்று என்பது ஒட்டுமொத்த உலகக் கிண்ணத்தை பார்க்கும்போது செல்லுபடியாகாது. அது உண்மையான உலகக் கிண்ணத்திற்கு நுழைவதற்கான போட்டி மாத்திரமே. தற்போது ஆரம்பமாகி இருக்கும் சுப்பர் 12 சுற்றுடனேயே உலகக் கிண்ணத்தின் பரபரப்பு தொடங்கும்.

நேரடி தகுதி பெற்ற வலுவான எட்டு அணிகள் தனது உலகக் கிண்ண போட்டிகளை ஆரம்பித்துள்ளன. இலங்கை அணி ஆரம்ப சுற்றின் ஏ குழுவில் முதல் இடத்தை பெற்றே அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. முதல் இடம் பெற்றது இலங்கையின் தனி முயற்சி அல்ல. நமீபியா, ஐக்கிய அரபு இராச்சியத்திடம் தோற்றதால் இந்தத் தகுதி கிடைத்தது.

எப்படியோ சுப்பர் 12 சுற்றில் குழு 1 இல் இடம்பெற்றிருக்கும் இலங்கை அணியின் எதிரணிகள் என்று பார்த்தால் போட்டியை நடத்தும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் இடம்பெற்றிருக்கின்றன. எந்த அணியையும் பலவீனமாகப் பார்க்க முடியாது.

அதிலும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகள் சவால் மிக்கவை. மூன்று வலுவான அணிகளும் ஆசியாவுக்கு வெளியில் உள்ளவை. ஆஸி. ஆடுகளங்கள் வேகப் பந்துக்கு கொஞ்சம் அதிகம் உதவுவதால் இந்த அணிகளுக்கு பரீட்சயமானவை.

என்றாலும் இந்த அணிகள் சுழற்பந்துக்கு சற்று தடுமாற்றம் காணும். இலங்கையில் இரு சிறந்த சுழற்பந்து வீச்சாளர்கள் இருப்பது ஒரு சாதகமான சூழல்தான். என்றாலும் இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் எதிரணியின் வலுவான வேகப்பந்து படையை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அது ஆரம்ப சுற்றின் நிலையில் இருந்து முற்றாக மாறுபட்டிருக்கும்.

இதுவரை இலங்கையின் துடுப்பாட்ட வரிசையை ஒப்பிட்டுப் பார்த்தால் ஆரம்ப வீரர்களான குசல் மெண்டிஸ் மற்றும் பத்தும் நிசங்க நன்றாக ஆடுகிறார்கள். தனஞ்சய டி சில்வா சற்று நிதானத்தோடு ஆடுவது ஆஸி.



ஆடுகளத்திற்கு பொருத்தமானதாக இருக்கும். பானுக்க ராஜபக்ஷ ஆரம்ப சுற்றுப் போட்டிகளில் சோபிக்காத போதும் தேவையான நேரத்தில் தனது வழக்கமான ஆட்டத்திற்கு திரும்பும் திறமையை கொண்டவர்.

ஆசிய கிண்ணத் தொடரில் சோபிக்காமல் பார்வையாளராக வைக்கப்பட்டிருந்த சரித் அசலங்க நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் 31 பந்துகளில் 30 ஓட்டங்களை பெற்றது நல்ல செய்தி.

இந்த முதல் ஐந்து வரிசையில் இருவரேனும் நன்றாக ஆடினால் இறுதி ஓவர்களில் அணித் தலைவர் தசுன் ஷானக்கவின் வேலை இலகுவாகிவிடும். அதேபோன்று சகலதுறை வீரர்களான வனிந்து ஹசரங்க மற்றும் சாமிக்க கருணாரத்னவின் பங்கு துடுப்பாட்டத்திலும் முக்கியமானது.

என்றாலும் அடுத்தடுத்த காயங்களால் இலங்கை வேகப்பந்து வரிசைதான் சற்று சிக்கலாக இருக்கிறது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அனுபவ வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீர மற்றும் இளம் வேகப்பந்து வீச்சாளர் டில்சான் மதுசங்க இருவரும் காயம் காரணமாக வெளியேறி இருக்கிறார்கள். இவர்களுக்கு பதில் வந்திருக்கும் கசுன் ராஜித்த, பினுர பெர்னாண்டோவுடன் ஏற்கனவே அணியில் இருக்கும் லஹிரு குமார மற்றும் பிரமோத் மதுஷன் ஆகியோரிலேயே இலங்கை அணி தங்கியிருக்கிறது.

டெஸ்ட், ஒருநாள் போட்டி போலன்றி டி20இல் குறுகிய ஓவர்களில் சிறப்பாக பந்துவீச வேண்டும் என்ற நிபந்தனை காரணமாக இந்த வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமான மற்றும் சூழல் தென்படுகிறது. அதனை தெரிந்துகொள்ள போட்டியில் ஆடித்தான் பார்க்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலே ஆடுகளம் மற்றும் காலநிலை பற்றி அதிகம் கரிசனை காட்டினால்தான் முன்னேற முடியும். மழையுடன் கூடிய காலநிலை ஒன்று இருப்பதால் ஆடுகளங்களின் புற்தரை மெதுவடைந்து அதன்மீது பந்து மெதுவாகவே செல்கிறது. உயர அடிக்கும் பந்துகள் மைதானத்தில் குத்தி நிற்பதால் பௌண்டரிக்கு செல்லவே சிரமப்படுகிறது.

ஆரம்ப சுற்றில் இலங்கை அணி ஆடிய கிலொங் மைதானத்தில் இதனை அதிகம் பார்க்க முடிந்தது. இதுவே இலங்கை அணி வீரர்கள் காயமடைவதற்கும் பெரிதும் காரணமாக இருக்கக் கூடும். ஆரம்ப சுற்று முடிவதற்குள்ளேயே இலங்கை அணியின் மூன்று வீரர்கள் உபாதை காரணமாக வெளியேறிவிட்டார்கள்.

இடது கை துடுப்பாட்ட வீரர் குணதிலக்கவுக்கு பதில் அஷேன் பண்டார சேர்க்கப்பட்டிருக்கிறார். சரித் அசலங்க தனது வழக்கமான ஆட்டத்திற்கு திரும்பினால் இந்த உபாதை பெரும் பொருட்டாக இருக்காது.

பத்தும் நிசங்க மற்றும் பிரமோத் மதுசானுக்கு ஏற்பட்டிருக்கும் காயங்கள் அதிக தீவிரம் கொண்டவை அல்ல. என்றாலும் எதிர்வரும் போட்டிகளில் ஆடுகளங்களும் தீர்க்கமான பங்காற்றும் என்பது ஆரம்பப் போட்டிகளைப் பார்க்கும்போது தெரிகிறது.

ஆரம்பப் போட்டி முடிவதற்குள்ளேயே இலங்கை அணி காயங்கள், எதிர்பார்த்ததை விடவும் போராட்டங்கள் என்று அதிகம் களைப்படைந்துவிட்டது. என்றாலும் அது எதிர்வரும் போட்டிகளுக்கு நல்ல அனுபவமாக இருக்கும். இது சுப்பர் 12 சுற்றுக்கு நேரடித் தகுதி பெற்ற எட்டு அணிகளுக்கு கிடைக்காத அனுபவமாகவும் மாற வாய்ப்பு இருக்கிறது.

**எஸ்.பிர்தௌஸ்...**

# 12ஆவது பாதுகாப்பு சேவைகள் விளையாட்டு விழா ஆரம்பம்



முப்படை வீரர்களின் விளையாட்டு திறமைகள் வெளிக்கொணரும் நிகழ்வான பாதுகாப்பு சேவைகள் விளையாட்டு நிகழ்வுகள் கடந்த ஒக்டோபர் 19 ஆம் திகதி பனாகொட இராணுவ உள்ளக அரங்கில் விமர்சையாக ஆரம்பமானது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனெரல் கமால் குணரத்ன கலந்துகொண்டதுடன் பாதுகாப்பு படை பிரதானி ஜெனெரல் சவேந்திர சில்வா மற்றும் பாதுகாப்பு சேவைகள் விளையாட்டு குழு தலைவரும் இலங்கை விமானப் படை தளபதியுமான எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன, இலங்கை இராணுவ மற்றும் கடற்படை தளபதிகளும் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இந்த பாதுகாப்பு சேவைகள் விளையாட்டின் மூலம் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பங்கேற்பதற்கான அனுபவங்கள் இராணுவ, கடற்படை மற்றும் விமானப்படை வீரர்களுக்கு கிடைக்கும்.

இந்த பாதுகாப்பு சேவைகள் விளையாட்டின் மூலம் திறமைகளை வெளிப்படுத்தி சர்வதேச ரீதியில் தாய் நாட்டுக்காக இராணுவப்படை சார்பாக 272 பதக்கங்கள், இலங்கை விமானப்படை சார்பாக 40 பதக்கங்கள் மற்றும் இலங்கை கடற்படை சார்பாக 30 பதக்கங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.



## குறிப்புகள்

### வெற்றி புதிதல்ல



நமீபிய அணி உலகக் கிண்ண ஆரம்பப் போட்டியில் இலங்கையை 55 ஓட்ட வித்தியாசத்தில் வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்திருந்தது. ஆபிரிக்க நாடான நமீபியாவை கிரிக்கெட் உலகம் பெரிதாக அறியாதபோதும் அது அண்மைய வரலாற்றில் சிறப்பாக ஆடி வருகிறது.

நமீபியா 40 சர்வதேச டி20 போட்டிகளில் ஆடி அதில் 28இல் வென்றிருக்கிறது. என்றாலும் அதில் 22 வெற்றிகள் டெஸ்ட் ஆடாத நாடுகளுக்கு எதிராக பெற்றவை. கடந்த உலகக் கிண்ணப் போட்டியிலேயே நமீபியா பக்கம் அனைவரும் பார்வை சென்றது. டெஸ்ட் ஆடும் அயர்லாந்தை வீழ்த்தி அந்த அணி சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறி இருந்தது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் சிம்பாப்வேயுக்கு எதிரான டி20 தொடரை அந்த அணி 3–2 என கைப்பற்றி இருந்தது.

தென்னாபிரிக்காவின் காலனி நாடாக இருந்ததால் நமீபியாவுக்கு கிரிக்கெட் ஒன்றும் அந்நியப்பட்ட விளையாட்டு அல்ல. ஆரம்பத்தில் தென்னாபிரிக்க உள்ளூர் கிரிக்கெட்டில் ஆடிய நமீபியா 1990இல் சுதந்திரத்திற்குப் பின் ஒரு தனியான அணியாக விளையாடி, ஆபிரிக்காவில் உள்ள வலுவான அணியாக மாறியிருக்கிறது.

### ஹட்ரிக் படைத்த மெய்யப்பனின் கனவு



ஐக்கிய அரபு இராச்சியம் டி20 உலகக் கிண்ணத்தின் ஆரம்பச் சுற்றிலேயே வெளியேறினாலும் கார்த்திக் மெய்யப்பனுக்கு இது மறக்கமுடியாத உலகக் கிண்ணமாக இருக்கும். 22 வயதான லெக் ஸ்பின் சுழற்பந்து வீச்சாளரான மெய்யப்பன் இலங்கைக்கு எதிரான போட்டியின் 14 ஆவது ஓவரில் பானுக்க ராஜபக்ஷ, சரித் அசலங்க மற்றும் அணித்தலைவர் தசுன் ஷானக்கவின் விக்கெட்டுகளை அடுத்தடுத்து வீழ்த்தினார்.

இதன்மூலம் அவர் டி20 உலகக் கிண்ண வரலாற்றில் ஹட்ரிக் சாதனை படைத்த ஐந்தாவது வீரராக இடம்பிடித்தார். இதற்கு முன் பிரெட்லி, கேர்டிஸ் கெம்ப்பர், வனிந்து ஹசரங்க மற்றும் ககிசோ ரபாடா ஆகியோரே இந்த சாதனையை படைத்திருக்கிறார்கள்.

இலங்கைக்கு எதிரான போட்டியில் அவர் அபாரமாக பந்து வீசினார். நான்கு ஓவர்களுக்கும் 12 ஓட்டமற்ற பந்துகள் அடங்கலாக 19 ஓட்டங்களையே விட்டுக்கொடுத்தார்.

அவரது ஹட்ரிக் சாதனை என்பது குறைத்து மதிப்பிட முடியாதது. வீழ்த்திய மூன்று விக்கெட்டுகளும் இலங்கை மத்திய வரிசையின் வலுவான துடுப்பாட்ட வீரர்கள்.

“ஹட்ரிக் பந்துக்கு முன் எனது திட்டத்தில் நான் தெளிவாக இருந்தேன், யாரும் தலையிடவில்லை. ஆனால் நான் பந்துவீசும்போது விக்கெட் காப்பாளருடன் எப்போதும் பேசிக்கொள்வேன். நாம் ஒரே நகரில் (சென்னை) இருந்து வந்திருப்பதால் எமது தமிழ் மொழியாலேயே பேசிக்கொள்வோம். நாம் அந்தப் பந்துக்கு முன் பேசிக்கொண்டோம். எனக்குத் தேவையான பந்தை நான் வீசினேன்” என்று போட்டிக்கு பின் கூறினார் மெய்யப்பன்.

சென்னையில் பிறந்த மெய்யப்பன் முன்னர் ஐ.பி.எல் அணிகளான ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் மற்றும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகளில் பயிற்சி பெற்றிருக்கிறார். எனினும் 2007 ஆம் ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு தந்தை தொழிலுக்கு வந்தபோது மெய்யப்பனும் அந்த நாட்டில் குடியேற வேண்டியதாயிற்று. கடைசியில் அந்நாட்டு தேசிய அணிக்கு தெரிவானார்.

என்றாலும் அவரது கனவு ஐ.பி.எல்லில் ஆட வேண்டும் என்பதுதான். இந்த சாதனைக்குப் பின் அது நிறைவேறுமா, என்ற ஒரு நம்பிக்கையோடு இருக்கிறார். “வலையில் பந்துவீசுவதற்கு அப்பால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு ஆட வேண்டும், அதற்கு வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்” என்கிறார் மெய்யப்பன்.



# மழை ஆடும் ஆட்டம்

கிழக்கு மற்றும் தென் கிழக்கு அவுஸ்திரேலியாவில் ‘லா நினா’ காலநிலை சூழல் தோன்றி இருப்பதால் டி20 உலகக் கிண்ணத்தின் எஞ்சிய போட்டிகளை குடையை விரித்துக்கொண்டு, டக்வர்த் லுவிஸ் முறையை நம்பியே பார்க்க வேண்டி ஏற்படலாம். மெல்போர்னில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டிக்கும் மழை குறுக்கிட அகதி வாய்ப்பு இருக்கிறதாம்.

போட்டிகள் நடைபெறும் சிட்னி, ஹோபார்ட் மற்றும் மெல்போர்னில் மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் அதிகமாகவே இருப்பதாக காலநிலை அவதானிப்பு நிலையம் கூறுகிறது.

பசிபிக் கடல் பரப்பில் ஏற்படும் வெப்ப நிலை குறைவையே லா நினா என்று சுருக்கமாகச் செல்லலாம். இது அதிக மழை வீழ்ச்சியை உருவாக்கும். அவுஸ்திரேலியாவில் கடந்த மூன்று ஆண்டுகளாக லா நினா காலநிலை நிலவி வருகிறது.

அண்மையில் கூட அவுஸ்திரேலியாவின் விக்டோரியா, நியூ சவுத் வேல்ஸ் மற்றும் டஸ்மேனிய மாநிலங்களில் கடும் மழை வெள்ளம் ஏற்பட்டது. லா நினா பருவம் 2022 முடிவு வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த காலநிலைக்கு மத்தியில் உலகக் கிண்ணப் போட்டி அட்டவணையை பார்த்தால் இறுக்கமாக போடப்பட்டிருக்கிறது. ரவுன்ட் ரொபின் சுற்று போட்டிகளில் மேலதிக நாள் ஒதுக்கப்படவில்லை. இறுதி மற்றும் அரையிறுதிப் போட்டிகளுக்கு மாத்திரமே மேலதிக நாள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

போட்டி ஒன்றின் முடிவைத் தீர்மானிக்க குறைந்தது ஐந்து ஓவர்களேனும் வீசப்பட்டிருக்க வேண்டும். போட்டி மாலையில் நடப்பதால் தொடர்ந்து மழை பெய்தால் அந்த ஐந்து ஓவர்களைக் கூட வீச முடியாத நிலை ஏற்படும்.

சில நாட்களில் ஒரே மைதானத்தில் ஒரே நாளில் இரு போட்டிகள் இடம்பெறுகின்றன. மழை கொட்டித் தீர்த்தால் இரண்டு போட்டிகளும் கைவிடப்படும் சூழல் ஏற்படும்.

இந்த மழையுடன் கூடிய காலநிலை என்பது அவுஸ்திரேலிய மைதானங்கள் அதிக புற்கள் கொண்ட பசுமையானதாகவும் மென்மையானதாகவும் இருக்கும். இது பார்க்க அழகாக இருந்தாலும் மைதானத்தில் பந்து மெதுவாக நகர்வதால் பௌண்டரி அடிப்பதும் கடினமாகும். இதுவரை நடந்த போட்டிகளில் அதனை நன்காக பார்க்க முடிந்தது. உயர அடிக்கும் சில பந்துகள் மைதானத்தில் நகராமல் குத்தி நிற்கின்றன.

ஏற்கனவே பெரிய மைதானங்களில் சிக்ஸர் அடிப்பதற்கு பதில் மைதானத்தின் நடுவில் பிடிகொடுக்கும் எண்ணிக்கை அதிகரித்திருக்கும் சூழலில் இது துடுப்பாட்ட வீரர்களுக்கு மேலதிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இதுவெல்லாம் பந்துவீச்சாளர்களுக்கு சாதகமான சூழலையே இம்முறை உலகக் கிண்ணம் ஏற்படுத்தி இருக்கிறது.

மழை என்பது கிரிக்கெட்டில் எத்தனையோ நடைமுறை சிக்கலை உருவாக்கும். அது கிரிக்கெட்டின் இயல்பானை திறனை குழப்பிவிடும். சுப்பர் 12 சுற்றில் விளையாடும் 12 அணிகளும் தலா ஆறு அணிகள் கொண்ட இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு விளையாடுகின்றன. இதில் ஓர் அணி மற்ற அணி உடன் தலா ஒரு போட்டியில் மோதும். இரு குழுக்களிலும் அதிக புள்ளிகளைப் பெற்று முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளே அரையிறுதிக்கு முன்னேறும்.

எனவே புள்ளிகள் என்பது தீர்க்கமானது. இதில் மழை குறுக்கிடுவது என்பது புள்ளிகளில் செயற்கையான தாக்கத்தை செலுத்தக் கூடும். இது நிகர ஓட்ட விகிதத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதால் தோல்வி என்பது கூட கௌரவமாக இருப்பதற்கு பார்த்துக் கொள்வது அவசியம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




## மேஷம்

வெற்றி தரும் செவ்வாய் ராசிக்கு 3ம் இடத்தில் வீரியமுடன் வீற்றிருக்கிறார். அதனால், உங்கள் செயல்களில் வெற்றி கிடைக்கும். செயல்களில் துணிவு பிறக்கும். சூரியன் துலா ராசிக்குப் பெயர்கின்றமையினால் 6ம் இடத்தில் புதன் ஆட்சியாக இருப்பது என்பது மிகப் பெரிய சாதகம். குறிப்பாக பத்திரிகை, தகவல் தொழில் நுட்பத்தில் வேலை செய்பவர்கள் பலன் அடைவார்கள். உத்தியோகம், பதவி உயர்வு, வருமான உயர்வு போன்றவை ஏற்படும். சனியின் வக்ர நிவர்த்தியால் மேலதிகாரிகள் உங்கள் மீது அன்போடு இருப்பார்கள். தடைகள் நீக்கி முன்னேற்றம் ஏற்படும். சூரியன் ஏழாவது ராசியில் நீசம் அடையப் போகிறார். எனவே வாரத்தின் பிற்பகுதியில் குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். விட்டுக்கொடுத்துச் செல்லவும். சகோதர சகோதரிகளை அனுசரிக்கவும்.

## ரிஷபம்

ராசிநாதன் 5ம் இடத்தில் சந்திரன் சாரம் பெற்றிருக்கிறார். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். சுக்கிரன் நீசபங்கம் அடைந்திருக்கிறார். சுபகாரியம் நல்லபடியாக நிறைவேறும். வெளிநாட்டு அன்பர்கள் உதவி புரிவார்கள். நீங்கள் வெளிநாட்டில் வசித்தால் நல்ல உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் நீங்கும். கலைஞர்களுக்கு புதிய வருவாய் கிடைக்கும். செய்யும் வேலையில் திருப்தி இருக்கும். மேலதிகாரிகளால் பலனடைவீர்கள். தர்மகர்மாதிபதி யோகம் இப்போது நன்கு வேலை செய்யும். தொழில் வளம் பெருகும். நல்ல காரியங்களுக்கு நன்கொடை தருவீர்கள். 5ஆம் இடத்துக்கு உரிய சூரியன், வாரத்தின் பிற்பகுதியில் துலா ராசியில் நீசம் அடைகிறார். குழந்தைகளை நன்கு கவனித்துக் கொள்ளவும். படிப்பில் அவர்கள் கவனக் குறைவாக இருக்கலாம். உடல் சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளும் வரலாம். சகிப்புத்தன்மை முக்கியம்.

## மிதுனம்

இதுவரை அட்டமச் சனியால் அலைக்கழிக்கப்பட்டு இருப்பீர்கள். ராசிநாதன் புதன் ஆட்சி பலத்தோடு இருக்கிறார். எனவே வாழ்வில் மகிழ்ச்சியும் நிம்மதியும் கொஞ்சம் கொஞ்சமாக திரும்ப ஆரம்பிக்கும். உத்தியோகத்தில் நல்ல உயர்வு கிடைக்கும். தகவல் தொழில்நுட்பம், பத்திரிகை துறையில் உள்ளவர்கள் சிறப்படைவார்கள். உறவினர்கள் உங்கள் வீட்டுக்கு வருவார்கள். சுபகாரியங்களில் தடைகள் நீங்கி முன்னேற்றம் இருக்கும். 11இல் ராகு இருந்து பலவிதங்களில் உங்கள் எண்ணத்தை பூர்த்தி ஆக்கும். பொருளாதாரத்தில் சில அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிடைக்கும். குலதெய்வ வழிபாடு செய்வீர்கள். சனி, 7ம் பார்வையாக 2 ஆம் இடம் பார்க்கிறார். எந்த விஷயத்திலும் தாமதம் வேண்டாம். நன்கு ஆலோசித்து எதையும் தீர்க்கமாக முடிவெடுக்கவும். ராசியில் செவ்வாய் இருப்பதால் எதிலும் நிதானம் தேவை. மேலதிகாரிகளுடன் இணக்கமான நிலையைக் கையாளவும்.

## கடகம்

சூரியன் துலா ராசிக்கு சென்று அங்கு அவர் நீசம் பெற்றுள்ளார். ஆயினும் ராசியின் பலம் குருவின் 5ம் இடப்பார்வையில் இருப்பதால் எதையும் சமாளிப்பீர்கள். சுக்கிரன் 3ம் இடத்தில் இருப்பதால் கருத்து வேறுபாடுகள் போன்ற குடும்ப பிரச்சினைகள் வந்தாலும், அதிக பாதிப்பு வராது. சேமிப்புக்கு இடமில்லை. வாக்கு சாதுரியத்தால் வெற்றி பெறுவீர்கள். திடீர் யோகம் ஏற்பட வாய்ப்புண்டு. ஆசிரியர் தொழிலில் உள்ளவர்களுக்கு அனுகூலமான வாரம் இது. திடீர் பிரயாணங்கள் வரும். அலைச்சல்களால் லேசான உடல் உபாதைகள் வரும். எனவே உடல் நலன் விஷயத்தில் கவனம் செலுத்தவும். சில நேரம் முடிவு எடுப்பதில் தடுமாற்றம் ஏற்படும். கருத்து வேற்றுமைகளுக்கும் வீண் விவாதங்களுக்கும் இடம் தர வேண்டாம். தாயின் உடல் நிலையில் சிறு பாதிப்புகள் ஏற்படலாம். வண்டி வாகனங்கள் பழுதாகலாம்.

## சிம்மம்

வாரத்தின் பிற்பகுதியில் சூரியன் 3ம் இடம் சென்று அங்கு நீசம் பெற்றுள்ளதால் சுக்கிரன் நீச்ச பங்கம் பெறுவதாலும் புதன் ஆட்சி அமைப்பில் இருப்பதாலும் அது சிம்ம ராசிக்கு 2ஆம் இடமாக இருப்பதாலும் பொருளாதார பாதிப்பு வராது. காரணம் குருவும் அந்த ராசியை பார்க்கிறார். கொடுக்கல் வாங்கல்கள் நன்கு நடக்கும். தகவல்தொடர்பு, பத்திரிகை, ஊடகம் இவற்றில் வேலை செய்பவர்களுக்கு சாதகமான வாரம். கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் வருவதற்கு வாய்ப்பில்லை. வந்தாலும் விரைவில் தீரும். விடா முயற்சியுடன் வெற்றியடையும் வாரம். மனதில் தடுமாற்றமும் அலைச்சலும் எட்டிப் பார்க்கும். இனம்புரியாத அச்சம் அவ்வப்போது வந்துபோகும். மனதை சிதறடிக்க வேண்டாம். உடல் ஆரோக்கிய விஷயத்தில் எவ்வித அலட்சியமும் காட்ட வேண்டாம். அரசாங்க ரீதியான செயல்கள் தாமதம் ஆகும். பேச்சில் எக்காரணத்தை முன்னிட்டும் கடுமை காட்ட வேண்டாம்.

## கன்னி

ராசிநாதன் புதன் வலுப்பெற்று இருப்பதுடன் சுக்கிரன் ராசியில் நீச பங்க யோகம் பெற்றுள்ளார். எனவே நினைத்தது நடக்கும். தொழில் முன்னேறும். பொருளாதாரத்தில் சிரமங்கள் குறையும். கொடுத்த கடன்கள் வசூலாகிவிடும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக மாறும். வீட்டில் தடைப்பட்டிருந்த சுப நிகழ்ச்சிகள் பற்றிய பேச்சுவார்த்தை மறுபடியும் தொடங்கும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகமுண்டு. கலைத்துறையினர் வருமானம் மிக்க புதிய ஒப்பந்தங்களைப் பெறுவார்கள். 10ல் உள்ள செவ்வாயால் சிலருக்கு இட மாற்றங்கள் நிகழலாம். சிறிய காரியத்தடைகள் வரலாம். குழந்தைகள் விஷயத்தில் அதிருப்தியும் கவலையும் வரலாம். விடாமுயற்சியும் எதையும் கவனத்தோடு செய்வதும் நல்லது. எதையும் குதர்க்கமாக பேசினால் தொல்லைகளைச் சந்திப்பீர்கள்.

## துலாம்

ராசிநாதன் சுக்கிரன் 12ல் இருப்பது நல்லது. அதே சமயம் அவர் நீசபங்க பலம் அடைந்து இருக்கிறார். எனவே சில எதிர்பாராத நல்ல வாய்ப்புகளும் அதிர்ஷ்டமும் வரலாம். சனியால் பட்ட துன்பங்கள் படிப்படியாகக் குறையும். குழந்தைகள் பிடிவாதம் குறையும். மருத்துவச் செலவுகள் குறைய ஆரம்பிக்கும். செவ்வாயின் சஞ்சாரத்தால் வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. தொழிலில் புதிய திட்டங்களைக் குறித்த சிந்தனை தோன்றும். நவீன வழிமுறைகளை புகுத்தத் தொடங்குவீர்கள். மாற்றம் சிலருக்கு உண்டு. செய்யும் செலவில் கவனமாக இருக்க வேண்டும். சின்ன சின்ன விஷயங்கள் மற்றும் தகுதியற்ற செலவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். செவ்வாயால் உடல் நலம் பாதிக்கும். எனவே எச்சரிக்கையுடன் இருக்கவும்.

## விருச்சிகம்

செவ்வாய் அஷ்டமத்தில் இருப்பது சரிதான். ஆனால் அவருக்கு வீடு கொடுத்த புதன் ஆட்சி நிலை பெறுவதால் வருகின்ற கஷ்டங்கள் விலகி விடும். கலைத் துறையில் உள்ளவர்களுக்கு தொழில் நல்லபடியாக நடக்கும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். திருமணம் போன்ற சுப காரியங்களில் பேச்சுவார்த்தை மறுபடியும் தொடங்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. சகோதர உதவியும் உண்டு.வாக்கு கொடுப்பதில் கவனம் தேவை. காரணம், வாக்கு தவற நேரிடும். எச்சரிக்கையுடன் பேசவும். பன்னிரெண்டில் கேது, சோம்பலையும் தூக்கமின்மையும் கொடுக்கும். வேலைச்சுமை, டென்ஷன் முதலியவை ஏற்படும் வாய்ப்பு உண்டு. வாகனங்களை இயக்குவதில் அதிக கவனம் எடுத்துக் கொள்ளவும்.

## தனுசு

லாபாதிபதி சுக்கிரன் நீசம் பெற்றாலும் நீச பங்கம் அடைந்து இருக்கிறார். எனவே உத்தியோகம், வேலை முதலியவை லாபகரமாக இருக்கும். வருவாய் அதிகரிக்கும். பதவி உயர்வுகளும் உண்டு. ராசிநாதன் குரு, கேந்திரத்தில் இருந்து மற்றொரு கேந்திரமான தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதால் தொழில் உத்தியோகம் நல்லபடியாகவே நடைபெறும். தொழில் ஸ்தானாதிபதி புதன் ஆட்சி பெற்றிருப்பதால் இழுபறியாக இருந்த வேலைகள் சட்டென்று முடிந்து விடும். எந்தக் காரியத்திலும் உங்களுக்கு சாதகமான ஆதாயம் உண்டு. பணி செய்யும் இடத்தில் எந்தவிதமான கவனக் குறைவும் சங்கடங்களைத் தரும். செவ்வாயால் குடும்ப கருத்து வேறுபாடுகள் வரும் என்பதால் பொறுமையுடனும் நிதானத்துடனும் அணுகவும். முன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

## மகரம்

ராசிநாதன் சனி ஆட்சியில் இருக்கிறார். வக்ர நிவர்த்தி அடைந்து இருக்கிறார். அவரால் சிரமங்கள் குறைவதே ஒரு பெரிய நன்மைதான். சகோதரர்களால் நன்மை உண்டு. சுக்கிரன் பலமாக யோகம் செய்யும் நிலையில் இருக்கிறார். தொழில், குறிப்பாக கலை சார்ந்த தொழில்கள் சிறப்படையும். நீண்ட நாள் சொத்து விற்பனையாகாமல் தவித்தவர்களுக்கு விற்பனையாகி விடும். வருமானமும் பணப்புழக்கமும் அதிகரிக்கும். புது வீடு வாங்கும் யோகமும் உண்டு. பழைய பிரச்சினைகள் தீர்ந்து விடும். எக்காரணத்தை முன்னிட்டும் கருத்து வேற்றுமைகளை வளர்க்க வேண்டாம். விவாதங்களைத் தவிர்க்கவும். அப்பொழுது மனதில் அச்சம், பதட்டம், சஞ்சலங்கள் உருவாகும். எனவே தியானம் உங்களுக்கு மிகவும் அவசியம்.

## கும்பம்

ராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் இருக்கிறார். ஆனால், சுப பலத்துடன் இருக்கிறார். இரண்டில் குரு இருப்பதால் பொருளாதார சிரமங்கள் குறைய ஆரம்பிக்கும். கொடுக்கல் வாங்கல்கள் சுலபமாக இருக்கும். 3ல் ராகு இருப்பது எந்தச் சங்கடங்களையும் சமாளிக்கும் திறனைத் தரும். திரைப்பட மற்றும் கலைத் துறையில் உள்ளவர்களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய வாய்ப்புகளும் இருக்கும். சீமந்தம், திருமணம் முதலிய சுப காரியங்கள் உறுதியாகும். விருந்தினர்கள் வருகையால் மகிழ்ச்சி இருக்கும். நா அடக்கம் உயர்வைத் தரும். சூரியனின் நிலையால் தந்தை வழியில் சில சங்கடங்கள் ஏற்படலாம். தந்தைக்கு ஆரோக்கிய குறைவு ஏற்பட்டு மருத்துவச் செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே கவனம் தேவை. 5ல் உள்ள செவ்வாயால் சில காரியத் தடைகள் வரலாம். சுற்றி இருப்பவர்களைத் தெரிந்து கொள்வீர்கள்.

## மீனம்

ராசிநாதன் குரு ஆட்சியில் இருக்கிறார். ஆனால், வக்ரமாக இருக்கிறார். ஜென்மகுரு தொல்லை தரும் என்பார்கள். ஆனால், மீன ராசிக்கு அவ்வளவு கெடுதல் செய்யமாட்டார். குடும்பத்தில் நல்லுறவும் அன்பும் நிலவுவதால் காரியங்களில் வெற்றியும், திருப்தியும் இருக்கும். மன தைரியமும் ஆற்றலும் அதிகரிக்கும். சமாளிக்கும் திறன் கூடும். தொல்லை தந்த சனியின் வக்கிர நிவர்த்தியால் பல வகையில் ஆதாயம் கிடைக்கும். உங்கள் மனது தரும் சில எச்சரிக்கைகளைக் கூர்ந்து கவனித்தால், எதையும் சமாளித்து விடலாம். முக்கிய பிரமுகர்களால் ஆதாயம் உண்டு. உறவுகளிடம் பகை வேண்டாம். வீண் வார்த்தைகளை விளையாட்டாகப் பேச வேண்டாம். 8ல் சூரியன் நீசம் அடைவதால் வாரத்தின் பிற்பகுதியில் சில உடல் உபாதைகள் தோன்றும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# நகர்ப்புறங்களில் வீட்டுத்தோட்டங்கள்








இன்றைய பொருளாதார நெருக்கடிகளின் காரணமாகவும், சுத்தமான, பசுமையான மரக்கறிகள், கீரைகள் போன்றவற்றை தமக்குத் தேவையான போது பெற்றுக் கொள்வதற்கு வசதியாக கிராமியப் பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய நகர்ப்புறங்களிலும், ஓரளவான நகர்புறங்களிலும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ வசிக்கும் பெரும்பாலான மக்கள் தாங்கள் வாழும் இடங்களில் ஒரு வீட்டுத்தோட்டத்தை வைத்திருக்க விரும்புகின்றனர். ஆனால் அவர்கள் தாம் விரும்பியவாறு சிறியதொரு தோட்டத்தையேனும் ஸ்தாபித்துக் கொள்வதற்கு போதியளவான இடவசதிகள் இல்லாமை அவர்களது முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அத்தோடு, பயிர்களை நடுவதற்கு போதியளவான, பொருத்தமான வளர்ப்பூடகங்கள் இல்லாமை, பயிர்களின் வளர்ச்சிக்கு தேவையான சூரிய வெளிச்சம் போதியளவில் கிடைக்காமை போன்றனவும் இப்பிரச்சினையை மேலும் தீவிர மாக்கியுள்ளது. இருப்பினும், இடவசதி குறைவாகக் காணப்படும் வீட்டுத்தோட்டங்களில் கிடைக்கக்கூடிய இடத்தை மிகவும் வினைத்திறனாகப் பயன்படுத்தினால் மரக்கறிகள், பழங்கள், கீரைகள், மூலிகைகள், வாசனைத் திரவியங்கள் போன்ற பயிர்களை திறம்பட பயிரிட்டு தமது தேவைக்கு அமைய இலகுவாகப் பராமரிக்க முடியும். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இலகுவானதொரு வழி முதலில் உங்களது வீடுகளில் வரையறுக்கப்பட்ட இடங்களில் பயிர்களை நட்டு பராமரிக்கக் கூடிய இடங்கள் எவை என்பதை முதலில் இனங் கண்டு கொள்ள வேண்டும். பின்வரும் இடங்கள் பொதுவாக பயிர்களை வளரக்கூடிய இடங்களாக நாம் அடையாளம் காண முடியும்.



**உங்கள் வீட்டின் மேல்மாடம் (பால்கனி), கூரை மாடி வீடுகளாயின் மாடி மேல்மாடம் (பால்கனி)**

வீட்டு வாயில், முன் புறம் உள்ள மேல்மாடம், மொட்டை மாடி போன்ற இடங்களை பயிர்களைச் செய்கை பண்ண மிக இலகுவாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட இடங்களிற்கு ஏற்ற பொருத்தமான பயிர்களைத் தெரிவு செய்ய வேண்டியது மிகவும் முக்கியமாகும். இதற்காகப் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும். குறிப்பாக நகர்ப்புறங்களில், அதிக உயரமாக வளரும் பல்லாண்டு பயிர்களை பயிரிடுவதும், பராமரிப்பதும் ஓரளவு கடினமானதாகும். எமக்குத் தேவையான பழங்கள் போன்ற பல்லாண்டுப் பயிர்களைப் பயிரிட சூரியவெளிச்சம் நன்கு விழும் இடங்களான நிலாமாடம், மொட்டை மாடி போன்றவற்றை எளிதாகப் பயன்படுத்தலாம். கங்குன், பசளிக் கீரை, கீரை, பொன்னாங்காணி போன்ற கீரை வகைகளை நிழலான இடங்களில் நடுங்கள்.ஓரளவு வெயில் விழும் இடங்களில் வல்லாரை, வற்றாளை போன்ற பயிர்களை நடுகை செய்ய முடியும்.

மரக்கறிப் பயிர்களுக்கு நல்ல சூரிய வெளிச்சம் தேவை. எனவே மரக்கறி பயிர்களுக்கு சூரிய ஒளி நன்கு விழும் இடங்களைத் தெரிவு செய்யவும்.

வீட்டின் முன் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களில் செங்குத்தாக உள்ள இடத்தைப் பயன்படுத்தவும். எனவே இங்கு பந்தல் பயிர்கள், வளைவுகளில் படர விடப்படும் பயிர்கள் போன்றவற்றை நடவும். இதற்காக பாகல், புடோல், பீர்க்கு, மூக்குத்தி அவரை, சிறகவரை, அவரை போன்ற பயிர்களைப் பயன்படுத்தவும்.

மேல் மாடியில் அல்லது மொட்டை மாடியில் சூரிய வெளிச்சம் நன்கு விழுமாயின், அதுவே மரக்கறிப் பயிர்களுக்கு ஏற்ற இடமாகும். அதில் பந்தலில் வளரும் பயிர்களையும் பயிரிட்டு அவ்விடத்தை மேலும் அலங்கரிக்கலாம். அவ்விடங்களில் வாழை, பப்பாசி போன்ற பயிர்களையும் எளிதில் பயிரிடலாம்.

நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை மட்டுப்படுத்தப்பட்ட இடவசதிகளே காணப்படும். நாம் மரக்கறிகளைப் பயிரிடுவதற்குப் போதியளவில் நிலம் காணப்பட மாட்டாது. எனவே இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான இலகுவான வழி கிடைக்கக் கூடிய பாத்திரங்கள் அதாவது சாடிகள், பைகளை போன்றவற்றைப் பயன்படுத்தி மரக்கறிகளைச் செய்கை பண்ண முடியும். ஏற்கனவே நீங்கள் இனங் கண்ட இடங்களிற்குப் பயன்படுத்தக் கூடிய பொருத்தமான வளர்ப்புச் சாடிகளை நீங்கள் வீட்டில் கழிவாக அகற்றும் பெரும்பாலான பொருட்களிலிருந்து எளிதாகவும், இலகுவாகவும் தயாரித்துக் கொள்ள முடியும்.

அத்தகைய பயிர் சாடிகளுக்கு மேலதிகமாக பயிர் உற்பத்தி வடிவங்கள், வெளியிலிருந்து வாங்கப்படும் சாடிகள் ஆகியவற்றைப் பயிர்களை நடப் பயன்படுத்துவதன் மூலம் வீட்டுத்தோட்டங்களை அலங்கரிப்பதோடு, உங்கள் உணவுத் தேவைகளையும் எளிதாக பூர்த்தி செய்யலாம்.

இட வசதி குறைந்த வீடுகளில் மரக்கறிகளை நடுவதற்குப் பயன்படுத்தக் கூடிய பயிர்ச்செய்கை முறைகள்

**பிளாஸ்ரிக் கொள்கலன்களில் மரக்கறிகள், கீரைகளை நடல்**

கொள்கலன்களின் அல்லது சாடிகளின் அளவிற்கேற்ப காய்கறிகள், பழங்கள், ஏனைய பயிர்களை பயிரிட அவற்றைப் பயன்படுத்தலாம்.

மரக்கறிகளை நடுகை செய்வதற்கு, குறைந்தது 12 அங்குல விட்டமும் 1 – 1 1/2 அடி உயரமும் கொண்ட கழிவாக அகற்றப்பட்ட கொள்கலன்களை எளிதாகப் பயன்படுத்தப்படலாம்.

ஒரு பழ நாற்றை நடுவதாயின் கழிவாக அகற்றப்படும் 1/2 அடி விட்டமும், 2 – 2 1/2 அடி (200 லீற்றர்) உயரமும் கொண்ட பீப்பாய்கள், கழிவாக அகற்றப்படும் வெற்றுக் கொள்கலன்கள் ஆகிவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

# நவீன மருத்துவத்தைத் தமிழில் கற்பித்த முன்னோடி கிறீனின் இருநூறாண்டு விழா

மார்க்கண்டன் ரூபவதனன் ...
முதுநிலை விரிவுரையாளர்
ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம்



உலகின் நவீன மருத்துவத்தைத் தமிழில் கற்பித்த முன்னோடி, தென் ஆசியாவின் முதலாவது மருத்துவக் கல்லூரியை இலங்கையில் நிறுவியவர், அறிவியல் தமிழின் காரணகர்த்தா என்ற சிறப்புகளால் அவரது 175வது பிறந்த ஆண்டை முன்னிட்டு 1998இல் இலங்கை அரசால் முத்திரை வெளியிட்டுக் கௌரவிக்கப்பட்ட அமெரிக்கன் சிலோன் மிஷன் வைத்திய மிஷனரியான சாமுவேல் கிறீனின் 200வது பிறந்த ஆண்டை நினைவுபடுத்தி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

1822 ஆம் ஆண்டு இதே ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி கிறீன் அமெரிக்காவில் பிறந்தார். தமது 19வது வயதில் 1841ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மருத்துவக் கல்லூரியில் இணைந்துகொண்டார். 1847ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25வயது நிரம்பிய ஒரு வைத்திய மிஷனரியாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார். ஏறத்தாழ 25 வருடப் பணிகளுக்குப் பின் அவர் 1873இல் மீண்டும் அமெரிக்கா சென்றார். இவ்வாறு தன்னிகரில்லாத் தமிழ்த் தொண்டாற்றிய கிறீனை நினைவு கூருவதே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடன் ஆகும்.




இலங்கையில் அமெரிக்க வைத்திய மிஷன்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இலங்கைக்கு வரத் தொடங்கிய அமெரிக்கன் கிறிஸ்தவ மிஷனரிமார் மதம் பரப்புவதை நோக்கமாகக் கொண்டிருந்தனராயினும் மறைபரப்புதலுடன் மருத்துவம், கல்வி போன்ற மனிதநேயப் பணிகளையும் செய்தனர். மருத்துவப் பணியின் தேவை அதிகரிக்க 'வைத்திய மிஷனரி'களாகவும் சிலர் வரலாயினர். வைத்திய மிஷனரிமாரின் தொடர் வருகையும் பணியும் ஈழத்தில் பரவலடைந்தன.

அறிவியல் தமிழ்ப் படைப்புக்கள்

கிறீனின் முயற்சிகளால் வெளிவந்த அறிவியல் தமிழ்ப் படைப்புக்களை இரண்டு வகையாக நோக்கலாம். அவை அறிவியல் தமிழ் பாட நூற் படைப்புக்கள் மற்றும் அறிவியல் சார் வெகுஜன தொடர்பாடல் கட்டுரைகள் என்பனவாகும். இவ்வாறு, அறிவியல்சார் விடயங்களை நூல்களாகவும், கட்டுரைகளாகவும் கொண்டு வருவதற்கு "அறிவியல்பூர்வமான" காரணங்களை கிறீன் கொண்டிருந்தார். அவற்றை அவர் நூல்களுக்கு எழுதிய முன்னுரைகள், கடிதங்கள் என்பவற்றின் மூலம் அறியமுடிகின்றது. தமிழில் வைத்தியக் கல்வியை நடத்துவது தமிழ் மாணவர்கள் வைத்தியத்தைப் பற்றிப் பூரணமாகப் புரிந்து கொண்டு மக்களுக்கு முறையாகச் சேவையாற்றப் பயிற்றுவிப்பது, தவறான வைத்திய முறைகளை நீக்குவது, பொது மக்கள் மத்தியில் காணப்படும் மூடநம்பிக்கைகளை விலக்குவது தமிழில் தொடர்ந்து அறிவியல் தமிழ் நூல்கள் எழுவதற்கு வழிகாட்டுவது என பொதுமக்களின் தேவைக்கும், சமகால நோய்ப் பரவல்களுக்குத் தீர்வு கொடுப்பதற்கும், நீண்டகாலத் தேவைகருதிய வைத்திய மாணவர்களுக்குமாக அவரது படைப்புகள் அமைந்திருந்தன.

19ஆம் நூற்றாண்டில் நவீன சமூகத்தின் தேவையில் ஒன்றான அறிவியலைத் தமிழ்ப்படுத்தும் முயற்சிகள் தமிழகத்தைவிட ஈழத்தில் அதிகம் நடைபெற்றன என்று கூறலாம். அதில் கிறீனின் பங்கு முதன்மையானது. அறிவியல் என்பது தெளிவுடன் எடுத்துக் கூறப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் சொற்செட்டு மிகுந்த வாக்கியங்கள், புதிய சொற்கள், பழைய சொற்களுக்குப் புதிய விளக்கங்கள் என்பன அவரின் படைப்புகளில் வெளிப்பட்டன. புதிய ஒரு மொழிக் கையாளுகை தமிழில் நிகழத் தொடங்கியது. கிறீனைப் பொறுத்தவரை, முதன்முதலில் தமிழுக்கு அறிவியல் வருகின்றது என்ற எண்ணம் அவரிடம் இருந்தாலும் பல வருடப் பழக்கம்போல் மருத்துவ நூல்களைப் படைத்திருப்பது அவரது மொழிக் கையாளுகையையே காட்டுகின்றது. "எனது ஆறுமாதகால முயற்சியில் நான் இரு பலன்களைப் பெற்று விட்டேன். நல்லதொரு விடயத்தைத் தமிழில் இணைத்துள்ளேன். தமிழில் எழுதும் அனுபவம் பெற்றுள்ளேன். இவ்விடயத்தில் குறிப்பாக எனக்கிருந்த ஆர்வத்தாலேயே மிகவும் அக்கறையுடன் எனது பணியைக் கவனித்தேன். குறிக்கோளின்றித் தமிழைக் கற்பதிலும் பார்க்க ஒரு நோக்கத்துடனேயே கவனமாகத் தமிழை அணுகி நல்ல அனுபவம் பெற்றுள்ளேன்" என நீண்டகாலப் பயிற்சியால் நோக்கத்துடன் தமிழை எழுதுவதால் தனது தமிழ்நடை வளம் பெற்றது என கிறீன் கூறுகிறார்.

தான் மேற்கொண்டுள்ள முயற்சியானது, தமிழில் மேனாட்டு வைத்தியம் பரவ ஓர் அத்திவாரமாகவும் ஆரம்பமாகவும் அமைதல் வேண்டும் என விரும்பிய கிறீன், தனக்குப் பின்னும், அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப தொடர்ந்து புதிது புதிதாக நூல்கள் தமிழில் வரவேண்டும் என்றும் விரும்பியவர். தாம் இறப்பதற்கு முன் 'மனுஷ சுகரணம்' என்னும் நூலுக்கு எழுதிய முன்னுரையில், 'சுகரணகல்வி தீவிர வளர்ச்சியுடையதாதலால் அதை ஏற்ற விதமாய் விளக்குவதற்கு ஓர் புத்தகத்தைப் பிரசித்தப்படுத்துவதில் வேளைக்கு வேளை அதில் புதிதாக விளையும் அறிவைப் பத்திரிகையில் பதித்துப் பரப்புவதே தகும்" என அறிவியலின் தொடர்ச்சியை, அதன் இற்றைப்படுத்தலை, பரப்புகையை முக்கியத்துவப்படுத்தினார்.

(26ஆம் பக்கம் பார்க்க)

# தீபாவளிப் பரிசு

வவுனியாவிலிருந்து மன்னார் போகும் வழியில் உயிர்த்திராயன் குளம் பதினோரம் கட்டையில் முருங்கன் என்ற ஊர் இருக்கின்றது. நல்ல செல்வச் செழிப்பான கிராமம்.

இரணைமடு குளத்து நீர்ப்பாசனத்தால் விவசாயம் அள்ளி வருமானத்தை கொடுத்து கொண்டிருந்தது. சம்பா, நாடு தவிர சிறுபோக காலத்தில் சோளம், பயறு, உளுந்து, விதைகளை விதைப்பார்கள் விவசாயிகள். குறுகிய கால பயிர். ஆனால் அவையும் விளைச்சல் பெருகி லாபத்தை கொடுக்கும். சாப்பாட்டுக்கு இல்லை என்று யாருமே வாய் திறந்து சொல்ல முடியாத வண்ணம் வளம் கொண்ட பூமி.

ஊர்க்காரர்கள் காலையில் எழுந்து வீட்டை விட்டு வெளியே வந்ததும் திருக்கேதீஸ்வர கோயிலை நோக்கி கும்பிடுவார்கள். அது அந்த சுற்றுப்புற கிராமங்களில் தொன்று தொட்டு இருந்து வரும் பழக்கம்.

உயிர்த்திராயகுள மக்களோ கோவிலை நோக்கி கும்பிட்ட கையோடு பூமியையும் வலது கையால் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொள்வார்கள். அவர்களுக்கு அந்த மண், தெய்வத்துக்கு இணையானது. வயதான விவசாயிகள் அந்த மண்ணை எடுத்து நெற்றியில் விபூதி போல பூசிக் கொள்வதும் உண்டு. இதெல்லாம் அந்தக் காலம்.

இந்தக்காலத்துப் பிள்ளைகளோ நவநாகரீக பாதையில் பயணிக்கிறார்கள். மகாவலி கங்கைத் தாயின் தொண்டையே நெருக்குவது போல், இப்பொழுது பல இடங்களில் அணைகளை கட்டி தண்ணீர் வரவை தடுத்து விடுகிறார்கள். பிச்சை போடுவது போல் தண்ணீர் ஒரு பக்கம் திருகோணமலை கடலில் சங்கமிக்கின்றது.

பாதி அனுராதபுரம் வழியாக கிளிநொச்சி, ஆனையிறவு கடலில் சங்கமிக்கின்றது. வடபகுதிக்கு கொண்டு செல்வதற்கு பேச்சு வார்த்தை நடந்த வண்ணம் உள்ளது.

இந்த தண்ணீரை கொண்டு தான் வவுனியா முதல், மன்னார் வரை விவசாயம் செய்கிறார்கள். அதற்கெல்லாம் காரணம் விவசாயிகள் கமநல உத்தியோகத்தரை நாடி தண்ணீர் பெற்று கொள்ளுகின்றனர். ஊரில் பெரிய செல்வந்தர் தங்கவேல் ஐயா தான். கிட்டத்தட்ட 75 ஏக்கர் விவசாய நிலத்தின் சொந்தக்காரர்.

அவர் ஆழ்துளைக் கிணறு போட்டு நிலத்தடி நீரை எடுத்து தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் விவசாயம் செய்பவர். கடந்த ஐம்பது ஆண்டுகள் விவசாயத்தில் ஈடுபட்டதற்காக சிறந்த விவசாயி என்று ஜனாதிபதி விருதும் பெற்றவர். இந்த ஆண்டு நெல்லுக்கு பதிலாக பெரும் பகுதி நிலத்தில் மரக்கறி விவசாயம் செய்துள்ளார்.

பயிர் அமோகமாக வளர்ச்சியடைந்து நல்ல வருமானமும் கிடைத்தது. அவரிடம் வேலை பார்க்கும் அனைவரையும் தன் சொந்தங்கள் போலவே கவனித்துக்கொள்வார். அன்று வெள்ளிக்கிழமை, ஆட்கள் காலையிலேயே வயலில் இறங்கி விட்டார்கள். ஒருபுறம் நாற்பது பேர் பயிரை வெட்டுகிறார்கள். இன்னொரு புறம் முப்பத்தைந்து பேர் நெல்மணிக் கட்டுகளை கட்டி எண்ணி எண்ணி அடுக்குகிறார்கள்.

ராஜாவின் லொறி அவர்கள் அருகில் வந்து நெல் மூட்டைகளை ஏற்றி ஆலைக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறது. தங்கவேலு எட்டு மணிக்கு வந்தார். அவர் உட்கார புளியமரத்தடியில் கயிற்றுக் கட்டிலை எடுத்துப் போட்டான். "ஐயா வேலை முடிய இன்னும் மூணு மணி நேரம் தான் இருக்கு.

வானம் வேறு கருகரு என்று இருக்கிறது. முடிந்த அளவு கதிர் அறுத்து ஏற்றி அனுப்பி விடனும்" என்றான் சுப்பிரமணி. வெற்றிலை பாக்கு புகையிலை வாய் நிறைய போட்டுக் கொண்டார் தங்கவேலு. அப்போது தூரத்தில் மோட்டார் சைக்கிள் சத்தம். சத்தம் வந்த திசையை திரும்பிப் பார்த்தார். டிரைவர் ரவி. மேலே போட்டிருந்த துண்டால் முகத்து வியர்வையை துடைத்துக் கொண்டார் . வாங்க என்ன இந்த பக்கம் என்று தங்கவேலு ஐயா கேட்க ஏதோ சொல்லிக் கொண்டே ரவியும் கட்டிலில் உட்கார்ந்து கொண்டான். குடிப்பதற்கு தான் கொண்டு வந்த செம்பு தண்ணீர் எடுத்து நீட்டினார் தங்கவேலு. பாதி செம்பை காலி செய்து விட்டு எப்படி அண்ணே இருக்கீங்க என்று விசாரித்தான் ரவி டைவர். "பிரச்சினை இன்னும் தீரலையா? வீட்டில் உங்க சம்சாரம் உங்க வழிக்கு வரமாட்டேங்குறாங்களா?" என்று கேட்டார்.

ஆமாய்யா, அவ என்னைக்கு என் பேச்சை கேட்டாள்? என் மகனைத்தான் அவளின் அண்ணன் மகளுக்கு கொடுக்கணும் என்று ஒத்தக்காலில் நிற்கிறாள். இவ அண்ணன் மகள் எட்டாவது வகுப்போடு நிறுத்திவிட்டாள்.

அவனுக்கு கட்டி வைத்தா நல்லா இருக்குமா? பார்க்கவும் கன்னங்கரேலென்று கரிக்கட்டி மாதிரி கலரு. நாகரிகமா பழகவும் தெரியாது. இவனை கொண்டு போய் கொழும்பில் இருக்கும் என் ஒன்றுவிட்ட தங்கச்சி மகளுக்கு கட்டி வைத்தா நல்லா இருக்கும். ஏதோ அண்ணனுடைய சொத்து பூரா ஒரே மகளுக்கு வந்து சேரனும் என்று பாக்குறாளே தவிர, வேற எதையும் பார்க்க மாட்டேன் என்கிறாள். என் தங்கச்சி மகளை வெளியூரில் கோலேஜ்ல டாக்டருக்கு படிக்க வைத்திருக்கிறாள். செக்க செவேல் என்று நல்ல கலர்.

அம்மன் கோயிலில் விக்கிரகம் மாதிரி லட்சணமான முகம். அந்த பெண்ணை மகனுக்கு கட்டி வைக்கலாம் என்றால் கேட்க மாட்டேங்கிறா. ஏதாவது நம்ம சத்தமா பேசினா சாமி வந்தது போல கத்தி குதிக்கிறாடா? என்ன செய்வது தெரியலையே. என்று குடும்ப விடயத்தை சொல்லி முடித்தார் தங்கவேலு.

உற்சாகமாக கேட்டுக் கொண்டிருந்த ரவி, ஆண்டவன் கருணையால் எல்லாம் சரியா நடக்கும் அண்ணே. நான் மன்னார் டவுனுக்கு போயிட்டு வந்துடுறேன். அங்கே செல்வராசன் ஒரு நாளைக்கு லொறிவேணும்னு சொன்னாரு என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

அப்படியே களப்பிலிருந்து கால் நடையாக வீட்டுக்கு வந்து கயிற்றுக் கட்டிலில் சாய்ந்த தங்கவேலு ஏதோ சத்தம் கேட்டு வலது பக்கம் திரும்பினார். யாருக்கும் தெரியாமல் பதுங்கிப் பதுங்கி தன் மகன் சரவணன் பக்கத்தில் இருக்கிற அம்மன் கோயிலில் நுழைவதை பார்த்தார்.

எனது ஒன்றுவிட்ட தங்கையும் மகளும் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். அதேபோல தங்கையின் மகளும் கோயிலுக்குள் நுழைவது தெரிந்தது. சந்தேகப்பட்ட தங்கவேல் மெதுவாக எழுந்து கோவிலுக்குள் நுழைந்தார். தன் மகனினதும் தன் தங்கையின் மகளினதும் கண்களில் படாமல் கோயிலில் இருக்கும் நவக்கிர பீடம் அருகில் ஒளிந்துகொண்டார் .

நாளைக்கு காலையில 5 மணிக்கு கோல் டெக்ஸி ஏற்பாடு செய்திருக்கிறேன். மெயின் ரோட்டில் கொண்டு வந்து நிறுத்திடுவான் செந்தூரன். அங்கே போய் அங்கேயே மாலை மாத்தி தாலி கட்டி சாப்பாடு எல்லாம் முடிச்சிட்டு... என்று மகன் பேசிக்கொண்டதை காதார கேட்டார் தங்கவேலு.

அவர்கள் கோயிலிருந்து வெளியே போவதை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டார் . அப்பாடா தன் மகன் தன் தங்கை மகளுடன் ஊரை விட்டு போய் திருமணம் செய்து கொள்ளப் போகிறான் என்பதில் அவருக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. தீபாவளிக்கு இன்னமும் ஒரு கிழமைதான் இருக்கின்றது. தனது மகன் இந்தத் தீபாவளிக்கு தனக்கு அளிக்கவிருக்கும் மிகப் பெரிய பரிசாக அவர் இத்திருமணத்தைக் கருதினார்.

அந்த சந்தோஷத்தில் மெல்ல நடந்து வந்து கட்டிலில் படுத்துக் கொண்டார். அவர் தன் மனைவியை எண்ணினார் . உன்னை ஏமாத்தி , நம்ப மவனே தன் கல்யாணத்தை ஏற்பாடு பண்ணிட்டான்டி என் தங்கை மக தான் மணப்பெண். யாருமே இல்லாம அவங்க கல்யாணம் நடக்கப் போகுது.

அறிவுகெட்ட பொண்டாட்டியே நல்லா ஏமாந்து போகப் போறே என்று சந்தோசம் தாங்காமல் தனக்குள் என்னென்னமோ சொல்லிக் கொண்டார். வாய் நிறைய வெற்றிலை போட்டு யோசித்துக் கொண்டு இருந்த அவர், ஜன்னல் வழியாக மகன் அறையை எட்டி பார்த்தார்.

அவன் தன் பெட்டியில் துணிமணிகளை அடுக்கிக் கொண்டிருந்தான். அம்மா சாப்பிட அழைத்ததும் அவன் வெளியே வந்தான். அவனுக்கு தெரியாமல் 25000 ரூபாய் பணத்தை அவன் பெட்டியில் வைத்துவிட்டார்.

கல்யாணம் கட்டப் போறவன் செலவுக்கு ஆகட்டுமே என்று கணக்கு போட்டுக் கொண்டார். சமையல் அறையில் மகனுக்கு சோறு போட்டுக் கொடுத்த மனைவியைப் பார்த்து மகனுக்கு நல்லா சோறு போடு.

நாளை காலையில அவனுக்கும் என் தங்கை மகளுக்கும் கல்யாணம். முடிந்த பிறகு உன் மனக்கோட்டை எல்லாம் தவிடுபொடியாகிவிடும் என்று எகத்தாளமாகச் சிரித்தார். பின் அயர்ச்சியில் தூங்கிவிட்டார்.

மறுநாள் காலை ஒன்றுமே அறியாதவர் போல் காலை கடனை முடித்துவிட்டு களத்து மேட்டுக்கு போய் வீட்டுக்கு வந்து கட்டில் அமர்ந்த பொழுது, மணி இரண்டு இருக்கும். தன் தங்கை மகள் வீட்டுக்கு வெளியே அந்தப் பக்கமாகப் போவதைப் பார்த்தார்.

அவருக்கு தூக்கி வாரிப் போட்டது. மணப்பெண் தன் மகனின் தாலியை ஏற்க வேண்டியவ இங்கு என்ன செய்கிறா என்று நினைத்தார்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை அவளை அழைத்து என் மகனை நீ கூட்டிட்டு போகலையா? என்று கேட்டார்.

"என்ன மாமா உளறீங்க?" என்று மருமகள் கேட்க முதல் நாள் அவர்கள் கோயிலில் பேசியதை ஒளிந்து கேட்ட விவரத்தை தங்கவேலு சொன்னதும் அதுவா உங்க மகனுக்கும் பக்கத்து கிராமத்து சுந்தரேசன் மகள் கமலாவுக்கும் ரொம்ப நாள் சினேகிதமாம். அவளை கல்யாணம் கட்டிக்கப் போறதா உங்கள் மகன் சொன்னார்.

நல்லூரில் கல்யாணம் பண்ணிக்கிட்டு அப்படியே அவளையும் கூட்டிக்கிட்டு வந்துடுவேன் என்றார். அதுக்கு கொஞ்சம் ஒத்தாசை செய்யுமாறு கேட்டார். அதைத் தான் செய்தேன்.

இந்த நேரம் அவங்க கல்யாணம் முடிஞ்சுருக்கும் என்றாள். அதிர்ந்து போன தங்கவேலு உனக்கும் அவனுக்கும் மிகச் சரியான நேரத்துல கல்யாணம் நடக்கப் போகுதுன்னு நான் நினைச்சேன் என்றார்.

எனக்கும் அவருக்குமா நல்லா சொன்னீங்க மாமா சொந்தம் என்று உங்க வீட்டுக்கு வந்தா கல்யாணமே பண்ணி வைச்சிருவீங்களா என்றாள் அவள்.

அவருக்கும் பக்கத்து கிராம சுந்தரேசன் மகள் கமலாவுக்கும் ரெண்டு வருஷமா காதலாம்.

சரவணன் என்கிட்ட சொன்னதால நான் அவங்களுக்கு உதவி பண்ணினேன். அவ்வளவுதான் மாமா என்றாள். அப்போது "என்னங்க நம்ம பையன் நம்ம ரெண்டு பேரையும் ஏமாத்திட்டு எவளையோ கல்யாணம் கட்டிக்கிட்டானா? என்று அழுதபடி ஓடி வந்தாள் அவரது மனைவி. அவளது குரலைக் கேட்டு கூனி குறுகிப் போனார் தங்கவேல். தான் எண்ணிய தீபாவளிப் பரிசு இதுதானா என்று வேதனை தாளாது அழலானார்.



பொன் பத்மநாதன் ...

## நவீன மருத்துவத்தைத் தமிழில் கற்பித்த... (25ஆம் பக்கத் தொடர்)

இதனால், அவரது காலத்தில் ஈழம், இந்தியாவைச் சேர்ந்த அறிஞர்கள் அறிவியல் தமிழ், கலைச் சொல்லாக்க நடைமுறைகள் பற்றிய விளக்கங்களை, விபரங்களை கிறீனிடம் கேட்டு அறிந்து கொண்டமை, அக்காலத்தில் அவருக்கிருந்த மதிப்பையே எடுத்துக்காட்டுகிறது.

உதாரணமாக, சென்னை அரசினர் கல்லூரி பேராசிரியர் தமிழில் விஞ்ஞானத்தின் அறிமுகம் தொடர்பாகவும் கலைச்சொல்லாக்கம் பற்றியும் கேட்டறிந்ததுடன், கல்கத்தாவில் உருவாக்கப்பட்ட கலைச்சொல்லாக்க ஆவணங்களைத் திருத்தும்படியும் அனுப்பியிருந்தார்.

இத்தகைய செயற்பாடுகள் கிறீனுக்கு அறிவியல் தமிழ் உலகில் கொடுக்கப்பட்ட முதன்மையையே காட்டின.

கிறீனின் மாணவரான எதெர் நாயகம் “கிறீன் ‘எமது குருடொக்கடர்’ என அழைக்கப்படத்தக்கவர். முதன்முதலில் மருத்துவத்தைத் தமிழில் தந்ததால் தமிழ் விளங்கும் நிலமெங்கும் பெறமதிமிக்க ‘அகஸ்தியர்’ என்றும் திகழ்வார்” என்றும் கூறியுள்ளார். ‘அகஸ்தியர்’ என்ற எண்ணக்கரு தமிழில் எப்படிப் பயன்படுகிறது என்பதைப் பார்த்தால் கிறீனின் முதன்மை நன்கு புலப்படும்.

அறிவியலைத் தமிழில் தந்தமை, நூல்கள், கட்டுரைகள் என்பவற்றை அறிவியல் மொழி நடையில் எழுதியமை – அறிவியல் தமிழுக்கு தேவையான கலைச்சொற்களை விதிமுறையிட்டு உருவாக்கியமை என்பவற்றை கிறீனே தமிழ் உலகில் சீராகவும், தெளிவாகவும், தொடர்ச்சியாகவும் செய்தமையை நோக்குகின்றபோது, கிறீன் ‘அறிவியல் தமிழின் தந்தையாகவே’ போற்றப்படக்கூடியவர் என்பது புலனாகின்றது.

## பண்டையகால மக்கள் இறந்தவர்கள் உடலை ஏன் பாதுகாத்தார்கள்?

பண்டையகால மக்கள் ஏன் இறந்தவர்கள் உடலைப் பாதுகாத்தார்கள்? உடலுடன் அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் சேர்த்து ஏன் பாதுகாக்க வேண்டும்? இதற்கான காரணம் சுவாரஸ்யமானது. அவர்கள் மறுபிறவியில் நம்பிக்கை உடையவர்களாக இருந்துள்ளனர்.

இறந்தவர்கள் மறுபடியும் பிறப்பார்கள்; அவர்களின் ஆன்மா அவர்கள் உடலுடன் பாதுகாக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தும் என்பதுதான் பண்டைய மக்களின் எண்ணமாக இருந்திருக்கும். மேலும், "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்கிறது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய சிலப்பதிகாரம். அதாவது முந்தய பிறவியின் பாவ புண்ணியம் இப்பிறவியிலும் விடாது துரத்தும் எனப் பொருள் கொள்ளலாம். மறுபிறவியை மையமாக வைத்து எடுத்த திரைப்படங்களான சியாம் சிங்கா ராய், அனேகன், சைத்தான், அருந்ததி, சடுகுடுவண்டி, நெஞ்சம் மறப்பதில்லை உள்ளிட்டவை மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இவை எடுத்துக்காட்டுவது என்னவென்றால், இன்றைய காலத்திலும் மக்களிடையே மறுபிறவியின்மேல் நம்பிக்கை உள்ளது எனக் கொள்ளலாம்.

இயன் ஸ்டீவென்சன் ஒரு மனநல மருத்துவர். இவர் 1957ல் அமெரிக்காவில் உள்ள வெர்ஜினியா பல்கலைக்கழகத்தில் மனநலத்துத் துறைத் தலைவராக இருந்தவர். இவர் ஆன்மீக உளவியல் (Parapsychology) என்ற துறையில் நம்பிக்கை உள்ளவர். ஆன்மிக உளவியல் என்பது தொலைவிலுள்ள பொருட்களைத் தொடாமல் நகர்த்தல், மரண அனுபவம், மறுபிறப்பு, ஆவியுடன் தொடர்பு மற்றும் பிற இயல்புக்கு ஒவ்வாத உளவியல் சார்ந்த ஆய்வாகும்.

மருத்துவர் ஸ்டீவென்சன் உலகில் பல இடங்களில் குழந்தைகள் முந்தைய பிறவி பற்றிப் பேசுவதைக் கேள்விப்பட்டார். அத்தகைய குழந்தைகளின் தகவல்களைச் சேகரிக்க ஆரம்பித்தார். அவ்வாறு பேசுபவர்களை உலகம் முழுவதும் சுமார் 3,000 பேரைக் கண்டறிந்தார். இந்தியா, பர்மா, இலங்கை, மற்றும் பிரான்ஸ் என நாடு நாடாகச் சுற்றி மறுபிறப்பு பற்றி ஆராய்ச்சி செய்தார். அவர் கண்டறிந்தது என்னவென்றால், இந்த 3,000 பேரில் இரண்டு வயது முதல் ஆறு வயதுக் குழந்தைகளே இந்த பூர்வஜென்ம அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இத்தகைய குழந்தைகள் சராசரிக்கும் அதிகமான புத்திசாலிகளாக இருப்பதையும் கண்டறிந்தார்.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 43



திரு/திருமதி.செல்வி ..........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

..........................................

..........................................

.......................... ..........................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 43
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 43

**இடமிருந்து வலம்**

*01. ஒருவருக்குச் செய்யும்நன்மை அல்லது உதவி*
*05. திறவுகோல்*
*07. தூய்மை ( குழம்பியுள்ளது)*
*08. நீர்வாழ் பிராணி*
*09. அகம்பாவம்*
*11. பயனற்ற அல்லது வீண் செலவு (குழம்பியுள்ளது)*
*14. தொடக்கம் குழம்பிவிட்டது.*
*15. எப்போதும்*
*16. மரத்தோணி*
*18. மரக்கோல்*
*20. சோகம்*
*22. புத்திரி திரும்பிவிட்டாள்*
*23. நான்கில் ஒரு பகுதி (திரும்பியுள்ளது)*

**மேலிருந்து கீழ்**

*01. உடல் நடுக்கம்*
*02. பெண் மாடு*
*03. உறுதியானது*
*04. மனதுக்கு மகிழ்ச்சியானது*
*05. அரிசியிலிருந்து தயாரிக்கப்படுவது*
*06. ஒரு பொருளின் விலை மதிப்பீடு*
*10. விருப்பம், ஈடுபாடு (குழம்பியுள்ளது)*
*12. எதிர்பாராத வகையில் சேதத்தை அல்லது துன்பத்தை ஏற்படுத்தும் செயல்*
*13. மழைக்கு மட்டுமல்ல வெயிலுக்கும் பயன்படும்*
*14. மனைவி குழம்பிக் காணப்படுகிறாள்.*
*15. சேறு*
*17. பெண்*
*19. பறவை*
*21. கருமை என்பதையும் குறிக்கும் (தலைகீழ்)*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 42

### விடைகள்

**இடமிருந்து வலம்**

| | | |
|---|---|---|
| 01. தீபாவளி | 04. பாரதி | 07. மைதிலி |
| 08. சங்கதி | 09. மைதானம் | 11. புவி |
| 13. ஆல் | 14.தேள் | 15. சாராயம் |
| 16. மான் | 17. தல | 19. ஊனம் |
| 22. வழி | 23. குறும்பு | 24. ஆதி |

**மேலிருந்து கீழ்**

| | | |
|---|---|---|
| 01. தீமை | 02. பாதி | 03. வலிமை |
| 04. பாசம் | 05. ரதி | 06. திங்கள் |
| 08. கனல் | 10. ஆதாயம் | 11. விசாலம் |
| 12. புராதனம் | 14. தேன் | 16. மாயை |
| 18. யுவதி | 20. ஊறு | 21. புலி |
| 22. ஆழி | | |

### பரிசு பெறுவோர் விபரம்

முதல்பரிசு (ரூ 500/)
**மிஹாத் அஜமட்**
*337, மங்கெதர*
*துல்ஹிரிய*

இரண்டாம்பரிசு (ரூ 350/)
**ஹலீமா சித்தீகா அக்பர்**
*25, சீத்தாகம 2,*
*குடகம வீதி, அவிஸாவளை*

மூன்றாம் பரிசு (ரூ 150/)
**கே. புண்ணியநேசன்,**
*151, சாரதா வீதி,*
*காரைதீவு 05*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 42

### பாராட்டு பெறுவோர்

**1. கனகா கந்தசாமி** *புசல்லாவை*

**2. ஆர்.ஞானச்சந்திரன்** *மட்டக்களப்பு*

**3. வி. பாலேந்திரா** *வெள்ளவத்தை*

**4. ஏ.சி.சிறிதரன்** *கொழும்பு 06*

**5. கஸ்தூரி கலியபெருமாள்** *கண்டி*

**6. ஏ.எல். அப்துல் ஜலீல்** *கொட்டிகாவத்தை*

**7. எம்.ஏ. அனீகா** *ஹெம்மாத்தகம*

**8. பி.நடேசன்** *மட்டக்களப்பு*

**9. பி.இந்திரா** *மாத்தளை*

**10. ஐ.எல். லத்தீபா** *இறக்காமம்*

# பெறுகை அறிவித்தல்

# இலங்கை இராணுவம்

## 2023ஆம் வருடத்தில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், இராணுவ தகவல் தொழில்நுட்ப தீர்வு நிலையத்திற்கு வன்பொருள் மற்றும் மென்பொருள் உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் / இறக்குமதியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பராமரிப்பு ஒத்துழைப்பு மற்றும் சேவை வழங்குவதற்காக விலைமனு கோரல்

1. 2023ஆம் வருடத்தினுள் வேரஹெர மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், இராணுவ தகவல் தொழில்நுட்ப தீர்வு நிலையத்திற்கு (ATTSC) வன்பொருள் மற்றும் மென்பொருள் பராமரிப்பு ஒத்துழைப்பு மற்றும் சேவை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை இராணுவ பெறுகைக் குழுத் தலைவரினால் கோரப்படுகின்றன.

   அ. இதற்கு ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் வேலை நாட்களில் முற்பகல் 1000 மணித்தியாலம் முதல் பிற்பகல் 1500 மணித்தியாலம் வரையான நாட்களில் வேரஹெரயில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், இராணுவ தகவல் தொழில்நுட்ப தீர்வு நிலையத்திலிருந்து அந்த விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தை ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையக நிதிப் பணிப்பாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரர்களினால் முறையாக கையொப்பமிடப்பட்ட விலைக்கோரல்களை உத்தியோகபூர்வ முத்திரையைப் பதித்ததன் பின் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2023ஆம் வருடத்தில் வன்பொருள் மற்றும் மென்பொருள் பராமரிப்பு ஒத்துழைப்பு மற்றும் சேவை வழங்குவதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் கேள்வி இலக்கம் (ATTSC/PROCUREMENT/2023/……............) திகதி மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம் என்பவற்றைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

| தொ. இல. | கேள்வி அடையாள இலக்கம் | விபரங்கள் | அளவு | | (NCB/ ICB) | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | AITSC/PROCUREMENT/SER/2023/01 | Tec support and maintenance agreement for oracle database(10G) in Core Driving Licence Printing system. | 1 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 2 | AITSC/PROCUREMENT/SER/2023/02 | Servers (HP) | 8 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | Servers (Dell) | 2 | எண்ணிக்கை | | | | |
| | | Servers (EMC) | 3 | எண்ணிக்கை | | | | |
| | | Servers (Lenovo) | 28 | எண்ணிக்கை | | | | |
| | | IBM Hardware Servers | 17 | எண்ணிக்கை | | | | |
| | | IBM Software Maintenance Support | 7 | எண்ணிக்கை | | | | |
| 3 | AITSC/PROCUREMENT/SER/2023/03 | Electrical & Computer Networking System (LAN - Passive Network) | வேரஹெர மற்றும் ஒன்பது ரிமோட் அமைவிடங்கள் | | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 4 | AITSC/PROCUREMENT/SER/2023/04 | Fortigate Firewall - 90D | 1 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | Fortigate Firewall - 100D | 1 | எண்ணிக்கை | | | | |
| 5 | AITSC/PROCUREMENT/SER/2023/05 | Fortigate - FG - 100F (FG100FTK20025709) | 1 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | FWB 100E (FV100ET220000054) | 1 | எண்ணிக்கை | | | | |
| 6 | AITSC/PROCUREMENT/SER/2023/06 | Air Conditioner 18000 Btu/hr | 6 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | Air Conditioner 24000 Btu/hr | 2 | எண்ணிக்கை | | | | |
| | | Air Conditioner 36000 Btu/hr | 1 | எண்ணிக்கை | | | | |
| | | Air Conditioner 48000 Btu/hr | 3 | எண்ணிக்கை | | | | |
| | | Air Conditioner 60000 Btu/hr | 3 | எண்ணிக்கை | | | | |
| 7 | AITSC/PROCUREMENT/SER/2023/07 | 11 KVA UPS (Eaton Ex Rt) | 1 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | 7 KVA UPS (Eaton Ex Rt) | 2 | எண்ணிக்கை | | | | |
| | | 60 KVA UPS (Emerson Liebert Nxc) | 1 | எண்ணிக்கை | | | | |
| | | 2 KVA UPS (DCP) | 13 | எண்ணிக்கை | | | | |
| | | 20 KVA UPS (Riello) | 2 | எண்ணிக்கை | | | | |
| | | 10 KVA UPS (DIP) | 2 | எண்ணிக்கை | | | | |
| 8 | AITSC/PROCUREMENT/SER/2023/08 | Fire Detection/ Alarm System | 1 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | Novec 1230 Suppression System | 2 | எண்ணிக்கை | | | | |
| 9 | AITSC/PROCUREMENT/SER/2023/09 | Printer Machines (LBP 253X, LBP 2900D, LBP 6200D, LBP 6230DN, LBP 6300DN, LBP 6680X, LBP214DW Canon printers) | 95 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 10 | AITSC/PROCUREMENT/SER/2023/10 | Canon Document/ Cheque Scanner (DR-G1100, DR-G5010C, DR-M1060, DR-M140, DR-2580C) | 49 | எண்ணிக்கை | NCB | | | 1,000.00 |
| 11 | AITSC/PROCUREMENT/SER/2023/11 | All in One Computer Maintenance (Acer Core i3 7th Generation) | 160 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 12 | AITSC/PROCUREMENT/SER/2023/12 | Desktop PCs with Monitor Maintenance<br>PC model / Mother Bd Type / Processer Type:<br>Acer / Acer Motherboard H11H4-AD<br>Samsung / Samsung h61s1<br>Lenovo / Lenovo g31-lm<br>Assembled PC / Samsung h61s1, Samsung h61s2, Samsung h61s3<br>Processer Type: Dual core up to Core i3 2nd Gen | 435 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 13 | AITSC/PROCUREMENT/SER/2023/13 | Power Generator 30KVA - GBW 30 (Model:DEUTZ F4M-2011 & G/S/M: PEE2459199) | 1 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 14 | AITSC/PROCUREMENT/SER/2023/14 | Power Generator 560KVA - Pramac GSW 560 (Model:DEUTZ BF8M-1015CP & G/S/M: PECS0006338) | 1 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 15 | AITSC/PROCUREMENT/SER/2023/15 | Card Personalization Machine (Muehlbauer SCP 60) | 2 | எண்ணிக்கை | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| | | Card Personalization Machine (Muehlbauer CLP 54) | 2 | எண்ணிக்கை | | | | |
| 16 | AITSC/PROCUREMENT/SER/2023/16 | Service Agreement for Cleaning of office premises | - | - | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 17 | AITSC/PROCUREMENT/SER/2023/17 | SriTis Application | - | - | NCB | 2022.10.23 முதல் 2022.11.13 வரை | 2022.11.14 மு.ப. 11.00 மணிக்கு | 35,000.00 |

2. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் விலைக்கோரல்கள் இடம்பெறும்.

3. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட மூன்று பிரதிகளிலான விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு முடிவுறுத்தப்படும் காலம் முடிவடைதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளல் காலம் முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தேசிய அடையாள அட்டை மற்றும் சேவை இடத்தின் கடிதத்துடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

   **தலைவர்,**
   **செயற்றிட்டப் பெறுகைக் குழு,**
   **இராணுவ தகவல் தொழில்நுட்ப தீர்வு நிலையம்,**
   **சாரதி உரிமக் கிளை,**
   **மோட்டார் வாகன போக்குரத்துத் திணைக்களம்,**
   **வேரஹெர.**

4. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது வழங்குநர்களால் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. முழுமையற்ற மற்றும் தேவையான ஆவணச் சாட்சிகள் இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் கொள்வனவு செய்யும் அளவைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளார்.

6. உடன்படிக்கையில் கைச்சாத்திடும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களுக்கு பதிவுத் தபாலில் அறியத்தரப்படும்.

7. உள்நாட்டு வழங்குநர்களுக்கு காசோலைகள் மூலமும் கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

8. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வழங்குநர்களால் 1,000,000.00 ரூபா மேற்பட்ட பெறுமதிக்கு விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்கும் போது விலைக்கோரல் பெறுமதியின் 1% விலைக்கோரல் பிணை முறியொன்றை இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் அல்லது இலங்கைக் காப்புறுதிச் சபையினால் அவ்வாறான பிணை முறியை சமாப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெற்று விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

9. ஆவர்முள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்கள் 011 2516040

**இராணுவத் தளபதி,**
**இலங்கை இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**கொழும்பு.**

# பாடசாலை மாணவிகளின் மாதவிடாய் சுகாதாரம்; Eva அறிமுகப்படுத்தும் Eva Dream



1987 ஆம் ஆண்டு முதல் இலங்கை சந்தையில் மாதவிடாய் சுகாதார அணையாடை தயாரிப்பில், முன்னணி வர்த்தக நாமமாகத் திகழும் Eva, தற்போது Eva Dream தயாரிப்பை அறிமுகம் செய்து, பாடசாலை மாணவிகள் மத்தியில் நிலவிய மாதவிடாய் கால சுகாதார பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வந்துள்ளது.

இது நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் பிரத்தியேகமாகக் கிடைக்கின்றது. Eva Dream என்பது தற்காலத்தின் தேசிய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், தரமான மற்றும் கட்டுபடியான விலையில் கிடைக்கும் மாதவிடாய் சுகாதார அணையாடை ஆகும்.

கெப்பிடல் மஹாராஜா குழுமத்தின் உறுப்பு நிறுவனமான ICL Brands Pvt Ltd இன் தயாரிப்பான Eva Dream, அணையாடையின் விலையானது கல்விக்கு ஒருபோதும் தடையாக இருக்கக்கூடாது என்ற தீர்மானத்துடன் அறிமுகம் செய்துவைக்கப்படுகின்றது.

பெற்றோர்கள், சிவில் உரிமை ஆர்வலர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் மருத்துவ வல்லுநர்கள் ஆகியோரினால், சுகாதார அணையாடைகளின் விலையேற்றத்தினால் நாடளாவிய ரீதியில் பல பாடசாலை மாணவிகள் தமது மாதவிடாய் காலத்தில் பாடசாலைக்குச் சமூகமளிப்பதில்லை என்பதை தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த தயாரிப்பிற்கான மூலப்பொருட்களின் விலை உயர்வு காரணமாக, இந்த அத்தியாவசியப் பொருளின் விலை சமீப காலமாக சடுதியான அதிகரிப்பைக் கண்டுள்ளது.

தற்போதைய நெருக்கடியான பொருளாதார சூழ்நிலை மற்றும் கல்வி முன்னேற்றத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் விளைவுகளை கருத்தில் கொண்டு, Eva Dream இந்த நிலைமையை முடிவுக்கு கொண்டுவர முயல்கிறது. மாதவிடாய் சுகாதாரம் சார்ந்த தயாரிப்புகளில் சந்தையில் முன்னணியில் வகிக்கும் Eva இந்த சவாலை ஏற்று 8 சுகாதார அணையாடைகள் கொண்ட Eva Dream பக்கற் ஒன்றை கட்டுப்படியான விலையில் 140 ரூபாவுக்கு வழங்குகின்றது.

இந்த தயாரிப்பு இலங்கை தர நிர்ணய சபையின் சுகாதார அணையாடைகளின் வகைப்பாடு மற்றும் தரநிலைகளை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் அதன் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

# பஜாஜ் ஜெனுயின் உதிரிப்பாகங்களின் விலை குறைப்பு




நாட்டில் நிலவும் இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக புத்தம்புதிய வாகனங்கள் இலங்கையில் இல்லாதிருக்கும் சூழ்நிலையில் தம்மிடம் காணப்படும் தற்பொழுது பயன்பாட்டில் உள்ள வாகனத்தை உரிய வகையில் பராமரிப்பதற்கே அனைவரும் முன்னுரிமையளித்துள்ளனர்.

இதற்கு உதிரிப்பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள் அவசியமாகின்றபோதும், கடந்த சில மாதங்களில் நாணயமாற்று வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக சகல வகையான வாகனங்களினதும் அசல் உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்துள்ளன.

இதற்கிடையில் விற்பனையின் பின்னரான சேவைக்காக அர்ப்பணிப்புடன் உள்ள டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடெட் இந்நாட்டில் பஜாஜ் வாகன உரிமையாளர்களுக்கு நற்செய்தியைக் கொண்டுவந்திருப்பதுடன், பஜாஜ் ஜெனுயின் ஸ்பெயார் பார்ட்ஸ் விலைகளைக் கணிசமானளவு குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடேட் நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (உதிரிப்பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள்) உதித் விஜேதுங்க குறிப்பிடுகையில், பஜாஜ் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு எப்பொழுதும் தேவைப்படும் உதிரிப்பாகங்கள் பலவற்றின் விலையைக் குறைப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.

பஜாஜ் வாகனங்களைத் தயாரிக்கும் இந்தியாவின் பஜாஜ் ஓட்டோ லிமிடெட் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் உதிரிப்பாகங்கள் ஏக முகவரான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடெட் மற்றும் நிறுவனத்தின் டீலர்களால் மாத்திரமே இந்நாட்டில் விநியோகிக்கப்படுவதுடன், விற்பனை செய்யப்படுகின்றன.

இதனால், வாடிக்கையாளர்கள் தமது வாகனங்களை எப்பொழுதும் பிரான் நியூ போன்று பேணுவதற்கு ஜெனுயின் பார்ட்ஸ் மாத்திரம் பயன்படுத்துமாறு நிறுவனம் பணிப்புரை விடுத்துள்ளது.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடெட் உதிரிப்பாக விற்பனை நிலையங்கள் மற்றும் டீலர்கள் நாடு முழுவதிலும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் அமைக்கப்பட்டிருப்பதுடன், மற்றும் பஜாஜ் ஜெனுயின் பார்ட்ஸ் பெயர் பலகைகள் மூலம் இவற்றை இலகுவில் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

# ரைகம் நிறுவனத்தின் புதிய தயாரிப்பு 'நெனபோஷா'

உப்பு உற்பத்தியில் முன்னணில் திகழும் ரைகம் வயம்ப சோல்ட்டர்ன்ஸ் நிறுவனம் ஊட்டச்சத்து நிறைந்த 'நெனபோஷா'வை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம் உள்ளூர் விவசாயம் சார்ந்த உற்பத்தியில் காலடி வைத்துள்ளதுடன் தேசிய பொருளாதாரத்திற்கு உள்ளூர் விவசாயிகளை ஊக்குவிக்கும் புதிய திட்டங்களையும் அறிவித்துள்ளது.




'நெனபோஷா' அறிமுக நிகழ்வு அண்மையில் இலங்கை மன்றக்கல்லூரியில் ரைகம் நிறுவனத்தலைவர் டாக்டர் ரவி லியனகே தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிஷான் ரோஹன தியோட்ரே, சிரேஷ்ட பணிப்பாளர் கானக அமரசிங்கம் நெனபோஷா வர்த்தகநாம தலைவி கவிஷா தியோட்ரே மற்றும் நிறுவனத்தின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

ரைகம் வயம்ப குழுமம் அதன் வர்த்தக பரிமாணத்தை விரிவுபடுத்தும் நோக்கில் விவசாயத்துறையில் கால்பதித்துள்ளது. போஷாக்கு நிறைந்த நெனபோஷா உள்ளூர் விவசாய நிலங்களில் இருந்து பெறப்பட்ட சோயா, சோளம், பீன், பச்சைப்பயறு மற்றும் அரிசி ஆகிய தானியங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தின் வெல்லவ எனும் இடத்தில் இதன் உற்பத்தி தொழிற்சாலை அமைந்துள்ளது. விவசாயிகளிடமிருந்து பெறப்படும் தானியங்கள் நன்கு சுத்தம் செய்யப்பட்டு மிக உயர்ந்த தரம் மற்றும் சுகாதார முறைகள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஊட்டச்சத்து உள்ளடக்கங்களாக விட்டமின் ஏ, பி1, பி12, சி மற்றும் டி3 ஆகியவற்றையும் சேர்த்து மேம்படுத்தப்படுகிறது. ரைகம் நெனபொஷாவில் சுவைகள் மற்றும் செயற்கை பொருட்கள் எதுவும் உள்ளடங்கவில்லை என நெனபோஷா வர்த்தகநாம தலைவி கவிஷா உறுதிபடக்கூறுகிறார். நெனபோஷா 80 கிராம், 200 கிராம், 500 கிராம் மற்றும் 700 கிராம் ஆகிய அளவிலான பக்கெற்றுகளில் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது.

நெனபோஷாவை காலை உணவாக உட்கொள்ளலாம். நுகர்வோர் தமது விருப்பத்திற்கேற்றவாறு உருண்டை, வடை, ரொட்டி, பிட்டு போன்றவற்றை செய்து சாப்பிடலாம்.

# அதிகரித்துவரும் உள்ளூர் தேவைக்கு இலங்கையில் தயாரிக்கப்பட்ட டயர்

இலங்கை வாகனத்துறையில் முன்னணிப் பெயரைக் கொண்டுள்ள AMW, பயணிகளின் வாகனத்துக்காக மெருகூட்டப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ள AMW EPIC டயர்களை வெளியிடுவது தொடர்பான அறிவிப்பை அண்மையில் மேற்கொண்டிருந்தது.



AMW இன் புதுப்பிக்கப்பட்ட இந்த முயற்சியின் மூலம் நுகர்வு மற்றும் வணிகப் பிரிவுகளில் உள்ள வாகனச் சாரதிகள், குறிப்பாக விலை மற்றும் தரத்தில் பார்வையில் பெரும் நன்மையடைவார்கள். உள்நாட்டு டயர் சந்தையில் பற்றாக்குறை காணப்படும் சந்தர்ப்பத்தில் இலங்கையின் இதயபூர்வமான AMW EPIC டயரானது மக்களின் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் அமையும் என AMW நம்பிக்கை கொண்டுள்ளது.

பரந்த அளவிலான நுகர்வோர் மற்றும் தொழில்துறை தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், AMW ஆனது நவீன உற்பத்தி முறைமை, முகாமைத்துவ நுட்பங்களைப் பயன்படுத்தி ஸ்கூட்டர்கள் (Yamaha Ray ZR, Honda Dio, TVS Scooty Pept & Ntorq) மோட்டார் சைக்கிள்கள் (Yamaha FZ, Suzuki GN 125, Bajaj Discovery, CT 100 & Pulsar), முச்சக்கரவண்டிகள் (Bajaj, TVS, Mahindra & Piaggio) மற்றும் ஏனைய இலகுரக வாகனங்கள் (Tata Dimo Batta & Mahindra Maxximo) போன்றவற்றுக்குப் பயன்படுத்தும் வகையில் டயர்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. AMW EPIC ஐ வேறுபடுத்தும் ஒரு அம்சமாகப் பயன்படுத்துபவர்கள் ஒரு லீட்டர் பெற்றோலில் அதிக தூரம் பயனிக்கக் கூடிய தன்மை காணப்படுகிறது. இது தற்பொழுது காணப்படும் சூழலில் மிகவும் பொருத்தமானதும் பயனுள்ளதாகவும் அமைகிறது.

அத்துடன் இந்த டயர்கள் அதிர்வு மற்றும் தள்ளாட்டத்திற்கு எதிராக 100 வீத சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதுடன், திருப்பங்கள் மற்றும் பிரேக் பிடித்தல் ஆகியவற்றின் போது சிறந்த பிடிமானத்தையும் இது வழங்குகிறது.

அனைத்து AMW EPIC டயர்களும் Pro rata அடிப்படையில் 3 ஆண்டு உத்தரவாதத்தைக் கொண்டுள்ளன.

# சிறந்த தொழில்முயற்சி இணையத்தளத்துக்கான தங்கவிருதை வென்ற La Vivente



நவீன ரக தைத்த ஆடைகள் உற்பத்தியில் வளர்ந்து வரும் வர்த்தக நாமமான La Vivente இற்கு இலங்கையின் முன்னணி டிஜிட்டல் தொழில்நுட்ப BestWeb.lk விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் Dilchand தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான La Vivente வர்த்தக நாமத்துக்குரிய www.lavivente.lk இணையத்தளம் சிறிய மற்றும் நடுத்தர பிரிவில் சிறந்த இணைய வழி தொழில் முயற்சி இணையத்தளத்துக்கான தங்க விருதை வென்றுள்ளது.

மேற்படி விருது விழா கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

கடந்தாண்டில் SLIM வர்த்தக நாம விருது விழாவில் சிறிய மற்றும் நடுத்தர பிரிவின் சிறந்த உள்நாட்டு நிறுவனத்துக்குரிய தங்கப் பதக்க விருதையும் சிறந்த புதிய நிறுவனத்துக்கான வெங்கல விருதையும் Dilchand நிறுவனம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய வாடிக்கையாளர்கள் எப்போதும் இணையத்தின் ஊடாக பொருட்கள் தொடர்பாக தகவல்களை பெற்று, ஒவ்வொன்றாக ஒப்பிட்டு பார்த்து பொருட்களை வாங்குவதால் இணையத்தளத்தை இலகுவாக அணுகக்கூடிய வகையிலும் கண்கவர் வகையிலும் இற்றைப்படுத்த வேண்டியது முக்கிய தேவையாக உள்ளது.

மேலும், வாடிக்கையாளர்களுக்கு அனுகூலங்களையும் கொடுக்க வேண்டும். இன்றைய தலைமுறை வாடிக்கையாளர்களின் தேவைகளை மிகச் சரியாக புரிந்து கொண்டுள்ளதொரு நிறுவனம் என்ற வகையில் எதிர்காலத்தில் புதிய தொழில்நுட்பத்தின் துணையுடன் வாடிக்கையாளர்களுக்கு மேலும் நெருக்கமாக பணியாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்போம்." என Dilchand நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி திலேசா பெரேரா தெரிவித்தார்.

# "ஒட்டுமொத்த தங்க விருது வெற்றியாளர்" எனும் உயர்ந்த கௌரவிப்பை சுவீகரித்த Alupenters.lk




வாடிக்கையாளர்களுடன் அலுமினிய வடிவமைப்பாளர்களை இணைக்கும் இலங்கையின் ஒரே இணையத்தளமான www.alupenters.lk க்கு, LK Domain Registry இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறந்த இணையத்தள விருதுகள் 2022 இல் ஒட்டுமொத்த தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலாக, விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவில் தங்க விருதையும் சுவீகரித்திருந்தது.

அண்மைக் காலமாக அலுமினிய வடிவமைப்புக்கான கேள்வி அதிகரித்துச் செல்லும் நிலையில், இந்தச் சந்தைப் பகுதியில் சேவைகளை வழங்கும் நோக்கிலும், தகைமை வாய்ந்த வடிவமைப்பாளர்களை இணைக்கும் வகையிலும் Alupenters.lk உருவாக்கப்பட்டது. நாடு முழுவதையும் சேர்ந்த 800 க்கும் அதிகமான அலுமினிய கதவுகள், ஜன்னல்கள், பிரிப்புகள், கடை முகப்புகள், லூவர்கள், குளியலறைகள், கூரைகள், டைல் ஸ்கேர்டிங்கள், ஏணிகள், இறாக்கைகள், அலுமாரிகள் மற்றும் பான்ரி கபட்கள் போன்ற வடிவமைப்பாளர்களை இந்த இணையத்தளம் தற்போது இணைப்பதாக அமைந்துள்ளது.

நாடு முழுவதையும் சேர்ந்த வாடிக்கையாளர்களுடன் இணைப்பை ஏற்படுத்தி அலுமினிய வடிவமைப்பாளர்களுக்கு ஆதரவளிப்பது மாத்திரமன்றி, தாம் வழங்கும் சேவையை நிபுணத்துவம் வாய்ந்ததாக மாற்றிக் கொள்ளவும் Alupenters.lk உதவுகின்றது.

இந்தக் கட்டமைப்பினூடாக, அலுமினிய வடிவமைப்பாளர்களுக்கு மெய்நிகரான முறையிலமைந்த விற்பனையக முகப்பு வழங்கப்படுவதுடன், தமது வியாபாரச் செயற்பாடுகள் தொடர்பான முழுமையான உள்ளம்சங்களைக் கொண்ட கோவையை தயாரித்து காட்சிப் படுத்த முடியும்.

தரப்படுத்தல் கட்டமைப்பினூடாக வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை வழங்குநரை தெரிவு செய்ய உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன், அலுமினிய வடிவமைப்பாளர்களுக்கு தமது தரமான பணிகளையும், வாடிக்கையாளர் தன்னிறைவையும் மேம்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

# திறமையான மாணவர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் SLTC

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமையின் காரணமாக, வெளிநாட்டில் உயர் கல்வியைத் தொடர்வது எனும் பல இளைஞர்களின் கனவு எதிர்மறையான தாக்கத்துக்கு முகங்கொடுத்துள்ளது. வெளிநாட்டுக் கல்விக்காக செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையும் சுமார் 90% ஆக குறைந்துள்ளதுடன், உள்நாட்டு அரச சாராத உயர் கல்விக்கான கேள்வும் பாரிய தடங்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளது.




SLTC ஆய்வு பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரஞ்சித் ரூபசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "தற்போது நிலவும் சூழல், இலங்கையில் காணப்படும் அரச சாராத உயர் கல்விச் சேவைகளை வழங்கும் நிலையங்களை சோதிப்பதாக அமைந்துள்ளது. அவர்கள் இளைஞர்களுக்கு ஆதரவளிக்க முன்வர வேண்டிய காலம் இதுவாகும். இதன் பிரகாரம், தற்போதைய சவால்களுக்கு முகங்கொடுக்க SLTC தயாராக இருப்பது மாத்திரமன்றி, இளைஞர்களின் வாழ்க்கையில் உண்மையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய பங்களிப்பை வழங்கவும் தயாராகவுள்ளது என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்." என்றார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "ஐக்கிய இராஜ்ஜியம், நியுசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் முன்னணி பல்கலைக்கழகங்களுடன் கல்விசார் பங்காண்மையை SLTC கொண்டுள்ளது. SLTC ஆய்வு பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் முன்னெடுக்கும் முதல் இரண்டு வருட கால கற்கையை, தமது பல்கலைக்கழகங்களில் முதல் இரண்டு வருடங்களுக்கு பயில்வதற்கு நிகரானதாக கருதுகின்றன. இதனால் SLTC மாணவர்களுக்கு, எமது கல்வியகத்தில் தமது உயர் கல்வியை ஆரம்பித்த முதல் நாளிலிருந்து சர்வதேச தரம் வாய்ந்த கல்வியைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், எமது கல்வியகத்தில் முதல் இரண்டு வருட காலத்துக்கான கற்கையை பூர்த்தி செய்த பின்னர், தமக்கு விருப்பமான பல்கலைக்கழகத்துக்கு மாறிக் கொள்வதற்கு அவசியமான சர்வதேச நியமங்களையும் கொண்டிருப்பார்கள்." என்றார்.

ரூபசிங்க மேலும் குறிப்பிடுகையில், "எனவே, மாணவர்கள் வெளிநாட்டில் கல்வியைத் தொடர்வதற்கு செலவிடும் தொகையின் அரைப்பங்கை மாத்திரம் செலவிட்டு, வெளிநாட்டில் கல்வியைத் தொடரும் தமது எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்" என்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# Senthooram செந்தூரம்

2022 ஒக்டோபர் 23 ஞாயிற்றுக்கிழமை

















**பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!**

சாகித்ய ரத்னா தி. ஞானசேகரன்

# குளிர்சாதனப் பெட்டியின் இரகசியம்

குளிர்சாதனப் பெட்டிகளில் ஏன் காந்தத்தால் மூடித் திறக்கும் பதவு பொருத்தப்பட்டிருக்கிறது தெரியுமா? ஏதோ, தொழில்நுட்ப விஞ்ஞானக் காரணங்கள் இருக்கலாம் என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கதையே வேறு.

முன்னரெல்லம் குளிர்சாதனப் பெட்டிகளை வெளியால் மாத்திரமே திறந்து பூட்ட முடியும். வீட்டில் இருக்கும் பிள்ளைகள் சும்மா இருக்காது. ஒளிந்து விளையாடப்போய் குளிர்சாதனப் பெட்டிக்குள்ளும் ஒளிந்து கொள்கிறார்கள். அதனால் வெளியே வர முடியாமல் பலரும் உயிரிழந்திருக்கிறார்கள்.

1956ஆம் ஆண்டு குளிர்சாதனப்பெட்டி பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதாவது குளிர்சாதனப் பெட்டியை வெளியாலும் உள்ளாலும் திறக்க முடியுமாக தயாரிக்க வேண்டும் என்பதுதான் நிபந்தனை.



# சிறை தண்டனையிலும் கின்னஸ் சாதனை



உலகில் மிக நீண்ட காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர் என்ற கின்னஸ் சாதனை படைத்திருப்பவர் தாய்லாந்தின் சமோய் திப்யாசோ என்ற பெண். இவர் ஒரு ஏமாற்றுப் பேர்வழி. சாதாரண ஏமாற்றுக்காரர் அல்ல தாய்லாந்தில் 16,000க்கும் அதிகமானவர்களை ஏமாற்றினார். அரசின் உயர்மட்ட அதிகாரிகள் மட்டுமல்ல மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கூட மாட்டிக் கொண்டார்கள்.

அதாவது குறைந்த முதலீட்டுக்கு பெருத்த லாபம் பெறும் முதலீட்டு நிறுவனம் ஒன்றையே இவர் நடத்தி வந்தார்.

இதனால் அவரிடம் பணத்தை அள்ளிக் கொடுத்தவர்களுக்கு கிட்டத்தட்ட 204 மில்லியன் டொலர் நஷ்டம் ஏற்பட்டது. தாய்லாந்து நீதிமன்றம் திப்யாசோவுக்கு 1989 ஆம் ஆண்டு 154,005 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

என்றாலும் தாய்லாந்து சட்டப்படி மோசடி வழக்கில் சிறை செல்பவர் 20 ஆண்டுகளுக்கு மேல் சிறை அனுபவிக்க முடியாது. எனவே எட்டு ஆண்டுகள் கழித்து அவர் விடுதலை பெற்றார். என்றாலும் அவர் படைத்த சாதனையை இதுவரை எவரும் முறியடிக்கவில்லை.





பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# ஓர் ஆண்டு முடிவில்...

ஒவ்வொரு ஆண்டும் பூமியில் இருந்து நிலவு 3.8 சென்டி மீற்றர் விலகிச் செல்கிறது. சூரியன் தனது நிறையில் 174 டிரில்லியன் தொன்களை இழக்கிறது. எனவே, பூமியின் சுற்றுவட்டம் 1.5 சென்டி மீற்றர்களால் அதிகரிக்கிறது. பிரபஞ்சத்தில் 150 பில்லியன் நட்சத்திரங்கள் பிறக்கின்றன. அன்ட்ரோமேடா பால்வெளி மண்டலம் 3.5 பில்லியன் கி.மீ. எம்மை நெருங்கி வருகிறது. பிரபஞ்சம் 60 டிரில்லியன் கி.மீ. விரிவடைகிறது.

உண்மையில் ஓர் ஆண்டு என்பது மனித வாழ்வில் ஓர் நீண்ட காலப்பகுதி. அதாவது 365 நாட்களில் எத்தனையோ நடக்கின்றன. ஆனால் சுமார் 19.8 பில்லியன் ஆண்டுகள் கொண்ட பிரபஞ்சத்துடன் ஒப்பிடுகையில் ஓர் ஆண்டு என்பது இமைக்கும் தருணத்தை விடவும் குறைவு. உண்மையில் இந்தப் பிரபஞ்சத்தின் வயதை ஒற்றை ஆண்டுடன் ஒப்பிட்டால், அதில் மனித வாழ்நாள் என்பது 0.2 வினாடிகள் மாத்திரம் தான்.



# "காலமே இது பொய்யடா..."

நேரம் என்பது நீங்கள் பயணிக்கும் வேகத்தைச் சார்ந்தது. ஆதாவது வேகம் கூடினால் நேரம் குறையும் என்பதுவே விஞ்ஞானக் கோட்பாடு. ஒளியின் வேகத்தில் பயணிக்கும் விண்கலம் ஒன்றில் 15 வயதில் நீங்கள் ஒரு நொடிக்கு மூன்று இலட்சம் கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கிறீரர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஐந்து வருடங்கள் இவ்வாறு விண்வெளியில் பயணித்துவிட்டு மீண்டும் பூமிக்குத் திரும்பினால் உங்களின் வயது 20 என்றபோதும் நீங்கள் புறப்படும்போது உங்களின் வயதில் இருந்த நண்பர்களுக்கு இப்போது 65 வயதாக இருக்கும். “காலமே இது பொய்யடா...” என்று தத்துவம் படிப்பதைத் தவிர உங்களுக்கு வேறு வழியில்லை.

# நாய் மயிரால் சிறை அனுபவித்தவர்

1978ஆம் ஆண்டு வொஷிங்கடன் நகரில் டெக்சி ஓட்டுநர் ஒருவர் தமது வீட்டுக்கு வெளியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். உள்ளூரைச் சேர்ந்த 17 வயதான சன்டா ட்ரிப்ஸ் என்ற இளைஞன் பொலிஸாரால் பிடிக்கப்பட்டார்.



இந்த கொலையைச் செய்தது அவர் தான் என்று பொலிஸார் ஒரு தலைமுடியைக் கொண்டு நிரூபித்தார்கள். நீதிபதியும் எக்கச்சக்கமாக சிறைத்தண்டனை விதித்தார். ட்ரிப்ஸ் 32 ஆண்டுகள் சிறை அனுபவித்தார். ஆதாரமாக கூறிய அந்த தலைமுடியை அண்மையில் டி.என்.ஏ சோதனை செய்து பார்த்தபோது உண்மையில் அது நாய் ஒன்றின் மயிர் என்று தெரியவந்தது.

# உயிர்களை ஆட்டி படைக்கும் பேய்கள்!

(கடந்த வாரத் தொடர்)

இன்னும் சிலர், பல்வேறு வகையான பேய்களுக்கு, பொல்டெர்ஜிஸ்டுகள், எஞ்சிய பேய்கள், புத்திசாலித்தனமான ஆவிகள் மற்றும் மனித நிழல்கள் போன்ற சிறப்பு வகைகளை உருவாக்குகிறார்கள். நிச்சயமாக, பேய்களை வகைப்படுத்த முயற்சிப்பது, தேவதைகள் அல்லது டிராகன்களின் வெவ்வேறு இனங்களை உருவாக்குவது போன்றது: ஒவ்வொரு நபரும் எத்தனை வகையான பேய்களை வேண்டுமானாலும் பெயரிடலாம்.

### முரண்பாடுகள்

கூடுதலாக, பேய்கள் பற்றிய கருத்துக்கள் பல முரண்பாடுகளைக் கொண்டுள் என. உதாரணமாக, அவை பொருளா இல்லையா. திடமான பொருட்களை அழிக்காமல் அவை வழியாக செல்ல முடியுமா? அல்லது அவர்களால் கதவைத் திறந்து மூட முடியுமா, அறையைச் சுற்றி பொருட்களை வீச முடியுமா? இயற்பியலின் தர்க்கம் மற்றும் விதிகளின்படி, ஒன்று மற்றொன்று முரண்படுகிறது.





பேய்கள் மனித ஆன்மாக்கள் என்றால், அவர்கள் தொப்பிகள், கரும்புகள் மற்றும் ஆடைகள் போன்ற ஆன்மா இல்லாத பொருள்களை அணிந்து ஏன் தோன்றுகிறார்கள்? ரயில்கள், வேகன்கள் மற்றும் கப்பல்களின் பேய்கள் இருப்பதற்கான ஏராளமான சான்றுகளைக் குறிப்பிடவில்லை.

பேய்கள் இறந்தவர்களின் ஆவிகள் என்றால், இன்னும் பல தீர்க்கப்படாத கொலைகள் ஏன் உள்ளன, ஏனென்றால் இந்த ஆவிகள் உயிருள்ளவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று பொதுவாக நம்பப்படுகிறது, அதாவது அவர்கள் காவல்துறையை அந்த பாதையில் அனுப்பியிருக்க வேண்டும். நீண்ட காலத்திற்கு முன்பு கொலையாளி. இது போன்ற விடை தெரியாத கேள்விகள் ஏராளம், இவை அனைத்தும் நமக்கு பேய்கள் இருக்கிறதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

### ஆவி கண்டறிதல் முறைகள்

ஆவிகள் இருப்பதைக் கண்டறிய கோஸ்ட்பஸ்டர்கள் பல்வேறு ஆக்கப்பூர்வமான (மற்றும் சந்தேகத்திற்குரிய) முறைகளைப் பயன்படுத்துகின்றனர். ஏறக்குறைய அனைவரும் தங்கள் "வேலைக்கு" ஒரு விஞ்ஞான அடிப்படையைக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர், எனவே உயர் தொழில்நுட்ப விஞ்ஞான உபகரணங்களைப் பயன்படுத்துகின்றனர், எடுத்துக்காட்டாக, கீகர் கவுண்டர்கள், மின்காந்த புலம் கண்டறிதல்கள், அயன் கண்டுபிடிப்பாளர்கள், அகச்சிவப்பு கேமராக்கள் மற்றும் உணர்திறன் மைக்ரோஃபோன்கள். இருப்பினும், இந்த உபகரணங்கள் அனைத்தும் பேய்களைக் கண்டுபிடிக்க யாருக்கும் உதவவில்லை. பல நூற்றாண்டுகளாக, ஆவிகள் முன்னிலையில் மெழுகுவர்த்தி தீப்பிழம்புகள் நீல நிறமாக மாறும் என்று மக்கள் நம்புகிறார்கள். இன்று, சிலர் இந்த யோசனையை ஏற்றுக்கொள்கிறார்கள். எனவே, சில தசாப்தங்கள் அல்லது நூற்றாண்டுகளில் பேய்களைக் கண்டறியும் நமது முறைகள் சந்ததியினருக்கு கேலிக்குரியதாகவும் கேலிக்குரியதாகவும் தோன்றும்.

### ஏன் பலர் தொடர்ந்து நம்புகிறார்கள்

பேய்களை நம்பும் பெரும்பாலான மக்கள் சில தனிப்பட்ட அனுபவத்தின் காரணமாக அவ்வாறு செய்கிறார்கள். உதாரணமாக, அவர்கள் ஒரு வீட்டில் வளர்ந்தார்கள், அங்கு நட்பு ஆவிகள் இருப்பது ஒரு பொருட்டல்ல. இரண்டாவது உதாரணம், "பேய் வீடுகள்" என்று அழைக்கப்படுவதில் அவர்களுக்கு ஒருவித மன அழுத்தம் நிறைந்த அனுபவம் இருந்தது. இருப்பினும், பேய்கள் இருப்பதற்கான ஆதாரத்தை நவீன இயற்பியலில் காணலாம் என்று பலர் நம்புகிறார்கள், அதாவது ஆல்பர்ட் ஐன்ஸ்டீனால் உருவாக்கப்பட்ட வெப்ப இயக்கவியலின் முதல் விதி. ஆற்றல் உருவாக்கப்படாமல் அல்லது அழிக்கப்படாமல், அதன் வடிவத்தை மட்டுமே மாற்றினால், நாம் இறக்கும் போது நமது உடலின் ஆற்றல் என்னவாகும்? அவள் எப்படியாவது ஒரு பேயாக வெளிப்பட முடியுமா?

இது ஒரு நியாயமான யூகம் போல் தெரிகிறது, ஆனால் அடிப்படை இயற்பியல் உங்களுக்கு புரியவில்லை என்றால் மட்டுமே. பதில் மிகவும் எளிமையானது, அது மர்மமானது அல்ல.

ஒரு நபர் இறந்த பிறகு, அவரது உடலில் இருந்து ஆற்றல் மரணத்திற்குப் பிறகு அனைத்து உயிரினங்களின் ஆற்றல் இயக்கப்படும் அதே இடத்திற்கு செல்கிறது:

**பேய்கள் இறந்தவர்களின் ஆவிகள் என்றால், இன்னும் பல தீர்க்கப்படாத கொலைகள் ஏன் உள்ளன, ஏனென்றால் இந்த ஆவிகள் உயிருள்ளவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று பொதுவாக நம்பப்படுகிறது**



சுற்றுச்சூழலுக்கு. இது வெப்ப வடிவில் வெளியிடப்படுகிறது, மேலும் உடல் அதை உண்ணும் விலங்குகளால் செயலாக்கப்படுகிறது (அதாவது, ஒரு நபர் புதைக்கப்படாமல் இருந்தால் காட்டு விலங்குகள், அல்லது, பொதுவாக, புழுக்கள் மற்றும் உடல் புதைக்கப்பட்டால் பாக்டீரியா) மற்றும் தாவரங்கள் இந்த எச்சங்களை உறிஞ்சி.

எனவே, ஒரு நபரின் மரணத்திற்குப் பிறகு எஞ்சியிருக்கும் உடல் "ஆற்றல்" எதுவும் இல்லை, மேலும் பேய் வேட்டைக்காரர்களிடையே பிரபலமான சாதனங்களைப் பயன்படுத்தி அதைக் கண்டறிய முடியும்.

(தொடரும்)

# மட்டக்களப்பில் அருந்ததியின் "மாற்று மோதிரம்" நிகழ்வும், மணப்பெண் அலங்கார கண்காட்சியும்!



திருமண சேவை மற்றும் மணப்பெண் அலங்காரக் கலைகளை நடத்தி வருகின்ற அருந்ததி நிறுவனம் அண்மையில் மட்டக்களப்பு அஞ்சனா கிராண்ட் பலஸ் ஹோட்டலில் "மாற்று மோதிரம்" எனும் தொனிப்பொருளில் கண்காட்சி நிகழ்வொன்றை மிகப்பிரமாண்டமாக நடாத்தியிருந்தது.

அருந்ததி நிறுவனத்தின் பிரதான ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி கருணாகரன் தலைமையில் நடைபெற்ற "மாற்று மோதிரம்" கண்காட்சிக்கு பிரதம அதிதிகளாக புத்தகப் புரவலர் காசீம் உமர், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்த நிகழ்வில் கௌரவ அதிதிகளாக தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன், இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனின் பாராளுமன்ற செயலாளர் ரீ.ஈஸ்வரராஜா, புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர் நடராஜா ரவிக்குமார், அருந்ததி நிறுவனத்தின் பணிப்பாளர் கே.மேகலா ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர். கிழக்கு மாகாணத்திலுள்ள இத்துறை சார்ந்தவர்களது வேண்டுகோளின் பேரில் மட்டக்களப்பில் நடாத்தப்பட்ட இக்கண்காட்சியில் கேக் கண்காட்சி, மணப்பெண் அலங்காரக் கண்காட்சி, திருமண சேவை, கொட்டுமேளக் காட்சி, மாற்றுமோதிர காட்சிகள் மேடையேற்றப்பட்டதுடன், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளியாகும் "அருந்ததி" பத்திரிகை அறிமுகமும் இடம்பெற்றிருந்தது.இதன்போது கிழக்கு மாகாணத்திலுள்ள கேக், மணப்பெண், உள்ளிட்ட வடிவமைப்பாளர்கள் பங்கு கொண்டதுடன், அவர்களின் இத்தொழில் ரீதியான ஆலோசனைகளும், அதுதொடர்பான வியாபார யுக்திகளும், வியாபாரத்திற்குரிய வர்த்தக இணைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டதுடன், இதன்போது கேக் வடிவமைப்பாளர்கள், அழகுக் கலை நிபுணர்களது திறமைகளை பாராட்டி உயரிய விருதுகள், நினைவுச் சின்னங்கள் மற்றும் பரிசுப்பொருட்கள் என்பன அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டதுடன், இந்நிகழ்விற்கு அனுசரனையாளர்களாகவும், அதிதிகளாகவும் கலந்து கொண்டவர்களை நிகழ்வின் ஏற்பாட்டாளரான கந்தசாமி கருணாகரன் மற்றும் அருந்ததி நிறுவனத்தின் பணிப்பாளர் கே.மேகலா ஆகியோர் இணைந்து பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



**(கல்லடி குறூப் நிருபர்)**

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



★ "வாயைத் திறந்து ஆ காட்டுங்க.."
"என்ன டாக்டர் கிண்டல் பண்றீங்க.. வாய்க்குள்ள பல்லுதானே இருக்கும்.. 'ஆ' எப்படி இருக்கும்..?"



"என் மனைவி அதிகமா டி.வி. பார்க்குறா டாக்டர்!"
"அதனாலென்ன, உங்களுக்கு நிம்மதிதானே?"
"பவர்கட் ஆனபிறகும் டார்ச் அடிச்சுப் பார்த்துக்கிட்டு இருக்காளே டாக்டர்!"

"என்ன! காலைல எழுந்த உடனே உங்க கன்னம் வீங்கி இருக்கு?"
"என் மனைவிக்கு தூக்கத்துல அரையற வியாதி இருக்கு..."





"நாய்க்கு நாம பேசறது தெரியுமாடா?"
"எனக்குத் தெரியாதுடா!"
"நாய்க்குத் தெரியுமான்னுதான் கேட்டேன்!"



"கல்யாணத்துக்குப் பிறகும் நடிப்பீங்களா மேடம்?"
"ம்ஹூம்.. டைவர்ஸுக்கு அப்புறம்தான் நடிப்பேன்!"







"உன் மனைவி லெட்டர் எழுதிவச்சிட்டு ஷாப்பிங் போயிருக்காளா...?"
"ஆமாம்... 'ஷாப்பிங் போறேன் எனக்கும் சேர்த்து சமைக்க வேண்டாம், வர ரெண்டு நாளாகும்'னுதான்..."



"என்ன தரகரே.. பொண்ணுக்கு ஏகப்பட்ட பாய் ஃப்ரெண்ட்ஸ் இருப்பாங்க போலிருக்கே?"
"எப்படி தம்பி சொல்றீங்க?"
"அவளைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி தினமும் கொலை மிரட்டல் வந்துக்கிட்டிருக்கே!"





"உன் அம்மா வீட்டுக்குப் போனியே... ஏன் மறுநாளே திரும்பி வந்துட்டே?"
"நான் இல்லாமல் நீங்க சந்தோஷமா இருக்கிற மாதிரி கனவு வந்திச்சு. அதான் உடனே திரும்பி வந்துட்டேங்க!"



"இதோ பாருங்க.. உங்க மனைவி உங்களைக் 'கொன்னுடுவேன்'னு சொன்னதையெல்லாம் 'மிரட்டல்'னு எடுத்துக்கிட்டு, உங்களுக்கு போலீஸ் பாதுகாப்பெல்லாம் தர முடியாது!"



"வீட்டுக்கு வந்த உன் தங்கச்சிக்கு ஓட்டல் சாப்பாடை வாங்கிப் போட்டு அனுப்பினியாமே... ஏன்டி?"
"என் புருஷன் சமையல்ல மயங்கி... அவ எனக்கே சக்களத்தியா வந்துடக் கூடாதுல்ல.... அதனாலதான்!"



"அப்பா! 'ஹிட்லர் ஒரு கொடுங்கோலன்'னு புத்தகத்துல இருக்கு. இப்பவும் அந்த மாதிரி யாராவது இருக்காங்களா?"
"அம்மா இல்லாதப்போ கேளு சொல்றேன்!"

"'மாசமானா வீட்டு வாடகை தரணும்'னு சொன்னேன். இன்னும் நீங்க தரவே இல்லையே..."
"இப்பதான் கல்யாணமாச்சு. என் மனைவி இன்னும் மாசமாகலையே!"



"என் கணவர் என்னோட சண்டை போட்டா நான் கோபிச்சுக்கிட்டு சமைக்க மாட்டேன்."
"அதான் உன் கணவர் அடிக்கடி உன்னோட சண்டை போடுறாரா....?"



# ஈழத்து தமிழ் இலக்கியத்தில் வைரவிழா கண்ட இலக்கியவாதி

## சாகித்திய ரத்னா தி. ஞானசேகரன்



இலங்கை அரசின் இலக்கியத்திற்கான அதியுயர் விருதான சாகித்திய ரத்னா விருதினை இவ்வாண்டு மூத்த எழுத்தாளரும் ஞானம் சஞ்சிகை ஆசிரியருமான தி. ஞானசேகரன் பெறுகிறார்.

1941ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி. தியாகராசா ஐயர் பாலாம்பிகை தம்பதியின் புதல்வராக யாழ். மண்ணில் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்ப் பாடசாலை, புன்னாலைக்கட்டுவன் மெதடிஸ்ற் ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றிலும், இடைநிலைக் கல்வியை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் உயர்கல்வியை இலங்கை மருத்துவக் கல்லூரியிலும் பெற்றவர்.

அத்தோடு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைமாணி (B.A) பட்டமும் பெற்றவர்.

வைத்தியராக நீண்டகாலம் மலையகத்தில் பணிபுரிந்தவர். ஈழத்து இலக்கிய உலகில் அறுபது வருடங்களாக இயங்கிவரும் இவர் சிறுகதை, நாவல், பயண இலக்கியம், கட்டுரை, விமர்சனம், பத்தி எழுத்து, ஆய்வு, இதழியல், நூல் பதிப்பும் வெளியீடும், இலக்கியச் செயற்பாடுகள் ஆகிய துறைகளில் இயங்கிவருபவர்.

இவரது முதலாவது சிறுகதை பிழைப்பு! 1964இல் கலைச்செல்வி என்ற சஞ்சிகையில் வெளிவந்தது. இதுவரை இவரது சிறுகதைத் தொகுதிகளாக காலதரிசனம், அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும், தி. ஞானசேகரன் சிறுகதைகள் ஆகியவை வெளிவந்துள்ளன.



இவற்றுள் அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும் என்ற சிறுகதைத் தொகுதி கடந்த இருபத்து இரண்டு ஆண்டுகளாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கலைமாணி (B.A) பட்டப்படிப்புக்கு பாடநூலாக விளங்குகிறது. இவர் எழுதிய தேர்ந்தெடுக்கப்பட்ட பத்துச் சிறுகதைகள் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, 'பரதேசி' என்ற மகுடத்தில் வெளியிடப் பட்டுள்ளது.

இவர் எழுதிய நாவல்களாக புதிய சுவடுகள், குருதிமலை, லயத்துச் சிறைகள், கவ்வாத்து, எரிமலை ஆகியன வெளிவந்துள்ளன.

இவற்றுள் புதிய சுவடுகள், குருதிமலை ஆகிய இரண்டு நாவல்களும் அரச சாகித்திய விருதினைப் பெற்றவை. லயத்துச்சிறைகள், கவ்வாத்து ஆகிய நாவல்கள் மத்திய மாகாண சாகித்திய விருதினைப் பெற்றவை.



கவ்வாத்து நாவலுக்கு மத்திய மாகாண சாஹித்திய பரிசு (தற்போதைய) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கிய போது...

குருதிமலை நாவல் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, 'தலென யகட' என்ற மகுடத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நாவல் 1992-1993 காலப்பகுதியில் தமிழக மதுரை அமெரிக்கன் பல்கலைக்கழக கல்லூரியில் முதுமாணி (ஆ.யு.) பட்டப்படிப்புக்குப் பாடநூலாக விளங்கியது.

எரிமலை 2018ஆம் ஆண்டின் சிறந்த நாவலுக்கான 'கொடகே தேசிய சாகித்திய விருது' மற்றும் 'தமிழ்நாடு கரிகாற் சோழன் விருது' ஆகியவற்றைப் பெற்றது. இந்நாவல் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.



இலங்கை கலாசாரப் பேரவை அகில இலங்கை ரீதியாக நடத்திய சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றதற்கான பரிசை அப்போதைய பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வழங்கியபோது....



மூத்த எழுத்தாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் தி. ஞானசேகரனை அப்போதைய ஜனாதிபதி (2017) மைத்திரிபால சிறிசேன விருது வழங்கி கௌரவித்தபோது.

இவர், ஈழத்தில் பயண இலக்கியத்துறைக்கு பங்களித்தவர்களில் முக்கியமானவர். ஈழத்தில் அதிகமான பயண இலக்கிய நூல்களை வெளியிட்டவர் இவரே.

இவரது பயண இலக்கிய நூல்களாக அவுஸ்திரேலிய பயணக்கதை, வடஇந்திய பயண அனுபவங்கள், லண்டன் பயண அனுபவங்கள், ஐரோப்பிய பயண இலக்கியம், கனடா பயணம் ஓர் அனுபவம் ஆகியவை வெளிவந்துள்ளன.

2000ஆம் ஆண்டிலிருந்து 'ஞானம்' என்ற மாதாந்த கலை இலக்கியச் சஞ்சிகையை வெளியிட்டு வருகிறார். இதுவரை 270 இதழ்கள் வெளிவந்துள்ளன.

ஞானம் சஞ்சிகை ஈழத்து இலக்கியத்தையும், உலகத் தமிழ் இலக்கியத்தையும் இணைக்கும் பாலமாக விளங்குகிறது. இருபத்து இரண்டு வருடங்கள் மாதந்தவறாது வெளிவரும் ஞானம், அச்சு இதழாகவும், இணைய இதழாகவும், வெளிவந்து உலகின் பரந்துபட்ட வாசகர்களை சென்றடைகிறது.

இலங்கைத் தமிழர்கள் முகங்கொண்ட முப்பதுவருட உரிமைப் போரினை ஆவணப்படுத்தும் வகையில் 'போர் இலக்கியம்' என்ற இலக்கிய வகைமையினை தமிழுக்கு அறிமுகப்படுத்தி அது சார்ந்த படைப்புகளை 600 பக்கங்களில் ஒரு நூற்கட்டமைப்புக்குள் ஆவணப்படுத்தி, ஈழத்து இலக்கிய உலகிற்கு வழங்கியவர்.

அதேபோன்று 976பக்கங்களில் 'புலம்பெயர் இலக்கிய'த் தொகுதியினை வெளியிட்டவர்.

ஈழத்து நவீன இலக்கியத்திற்கான ஒரு கைநூல் எனத்தக்க வகையில் 1000 பக்கங்களில் ஒரு நேர்காணல் தொகுதியை வெளியிட்டவர்.

இலங்கையின் ஆரம்ப இதழியலாளர்களான அமரர்கள் வரதர், கே.கணேஷ், சிற்பி, டொமினிக் ஜீவா மற்றும் கலை இலக்கியவாதிகளான பேராசிரியர் கா.சிவத்தம்பி, செங்கை ஆழியான், எஸ்.பொ.,தெளிவத்தை ஜோசப் ஆகியோரின் தொடர் நேர்காணல்கள் உள்ளிட்ட 60பேரின் நேர்காணல்கள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன.





(தொடர் 7ஆம் பக்கம்)

கே. பொன்னுத்துரை ...



(06ஆம் பக்கத் தொடர்)

ஞானம் சஞ்சிகையை இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள், தமிழக பல்கலைக்கழக மாணவர்கள் இதுவரை 10 பேர் ஆய்வு செய்து B.A., M.A., Mphi, PhD ஆகிய பட்டப்படிப்புக்களை நிறைவுசெய்துள்ளனர். ஞானம் சஞ்சிகை, உலககத் தமிழ் சிற்றிதழ்கள் சங்கத்தின் தமிழ்த்தாய் அறக்கட்டளை விருதினை (2005)யும் தமிழ்நாடு உயிர்மை சுஜாதா அறக்கட்டளை வழங்கிய சிறந்த சிற்றிதழுக்கான (2013) விருதினையும் பெற்றுக்கொண்டது. ஞானம் பதிப்பகம் என்ற வெளியீட்டகத்தின் மூலம் இவர் பலதரப்பட்ட இலக்கிய நூல்களை வெளியிட்டு வருகிறார். இதுவரை 80 நூல்கள் இவரது பதிப்பகத்தின் ஊடாக வெளிவந்துள்ளன.

ஞானம் இலக்கியப் பண்ணை என்ற அமைப்பினை உருவாக்கி அதன்மூலம் இலக்கிய விழாக்கள், சான்றோர் கௌரவம், நூல்வெளியீடுகள், நினைவு அஞ்சலிகள், இலக்கியப் பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றை நிகழ்த்தி வருகிறார்.

சர்வதேச ரீதியாலான எழுத்தாளர் விழாக்கள், மாநாடுகளில் பங்குபற்றி பத்துக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். இம்மாநாடுகள் சிலவற்றில் அரங்கத் தலைமை வகித்துள்ளார். இம்மாநாடுகளில் சமர்பிக்கப்பட்ட 10 ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு ஈழத்து நவீன இலக்கிய வளம்! என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது.

இவரது ஏனைய நூல்களாக புரிதலும் பகிர்தலும் (1999), எனது இலக்கியத்தடம் ((2013), ஞானசேகரன் முன்னுரைகள் (2018), பகிர்தலும் புரிதலும் ஞானம் ஆசிரியத்தலையங்கங்களின் தொகுப்பு(2018), புன்னைநகர் மான்மியம் (2021), தி.ஞானசேகரன் நேர்காணல்கள் (2021), மணிமேகலை பேசும் மனித நேயம் (2021), யாவரும் கேளீர் பத்தி எழுத்துக்கள் (2022) ஆகியன வெளிவந்துள்ளன.

இவரது பணிகளைப்பாராட்டி வழங்கப்பட்ட இலங்கை அரசின் கலா பூஷணம் விருது உட்பட உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் பல்வேறு இலக்கிய நிறுவனங்களின் முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட விருதுகளையும் கௌரவங்களையும் பெற்றுள்ளார்.

இலங்கைச் சஞ்சிகைகளான மல்லிகை, கொழுந்து, படிகள், அகமதி ஆகிய சஞ்சிகைகளும் ஜேர்மனியிலிருந்து வெளிவரும் மண் சஞ்சிகையும் தமிழக சஞ்சிகையான ஏழைதாசன் சஞ்சிகையும் இவரை அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்துள்ளன.

## கவிக்கமல், பாசில், ரஜினி இணைந்து வழங்கும்

## தர்ஷனுக்கு நினைவஞ்சலி

# தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்

அண்மையில் நம்மை விட்டு மறைந்த பிரபல நடிகர் தர்சன் தர்மராஜ் அவர்களின் நினைவஞ்சலியுடன் சிரேஷ்ட கலைஞர்களை கௌரவிக்கும் முகமாகவும் மிக நீண்ட நாட்களுக்குப் பின் இதமான இடைக்கால இருபத்தைந்து முத்தான பாடல்களின் கோர்வையில் கவிக்கமல், பாசில், ரஜினி இணைந்து வழங்கும் “அக்ஷரா” “வீனஸ்” இசைக் குழுவினரின் இதமான இசையில் “தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் “ அதிதிகளின் இன்னிசை இரவு. On Stage Live Concert எதிர் வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பு 13 கதிரேசன் வீதியில் அமைந்துள்ள குளிரூட்டப்பட்ட ஸ்ரீகதிரேசன் மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்விற்கு வத்தளை மாபோலை நகரசபை உறுப்பினர் எஸ் சசிகுமார் தலைமை வகிக்க, கொழும்பு பிரதிமேயரின் பிரத்தியேக செயலாளர் மொஹமட் ஹமீட் முன்னிலை அதிதியாகவும் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாகவும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

கௌரவ அதிதியாக தினகரன் பத்திரிகை பிரதம ஆசிரியர் திரு தே. செந்தில் வேவலர் கலந்து கொள்ளும் இந்த இசைநிகழ்வில் சிறப்பதிகளாக சமூக சேவையாளர் தேசமான்ய டாக்டர் ஐ வை எம் ஹனீப், முனைவர் சதீஸ்குமார்,தொழிலதிபர் இராமசாமி சதானந்தன், தேசமான்ய பிச்சைக்கிருஷ்ணா, கலைஞர் ஜோசப் பெர்ணான்டோ, சமூக சேவையாளர் உசைன் போல்ட், கிரிக்கட் பயிற்சிவிப்பாளர் ஜே எம் எம் ரிஸ்வான்,சமூக சேவகி முஸ்தபா ஷரீனா, சமூக சேவையாளர் மொஹமட் நிஜாம், நகர சபை உறுப்பினர் எம் பி சுதர்சன்,சமூக சேவையாளர் சமன்குமார்,எஸ் ஐ ஏ ஆர் ஜீனா, இம்ரான் நெய்னார் கலந்து கொள்கிறார்கள்.

விஷேட அதிதிகளாக கலைஞர் ஏ ரவீந்திரன், திருமதி கௌசல்யாதேவி கோவிந்தபிள்ளை,குருசாமி எஸ் யுவ ராஜா,கலைஞர் சண்மு, திரு ஓவியநாதன்,ஜனாப் அஸீஸ் லக்ஹானா, தங்கவேல் யோகராஜன், கவிஞர் தனபாலன், அதிபர் ஹார்க் கோட் மொஹமட் கியாஸ், எஸ் ஆனந்தா கலந்து கொள்கிறார்கள்.



கலை அதிதிகளாக கலைஞர் ராதா மேத்தா,கலைநிலா உவைஸ் செரிப், இசையமைப்பாளர் பசால் ஜின்னாஹ், கலாபூசணம் மொஹமட் அலி, இசையமைப்பாளர் எம் ரி தவராசா, பாடகர் இசையமைப்பாளர் முபாறக் இல்யாஸ், சிரேஷ்ட ஊடகவியலாளர் கே ஈஸ்வரலிங்கம் , கவிஞர் ஈழகணேஸ், கலந்து கொள்ள பிரபல சிரேஷ்ட அறிவிப்பாளர் எஸ் சித்தார்த்த ராஜா தொகுத்து வழங்குகிறார்.

## ஆதங்கம்

கண்மணி
நீ எந்தன்
கண் இமை
நான் உந்தன்
வன் சுமை

காலுண்டு நடக்க
கூழுண்டு குடிக்க என
வாழ்ந்த வாழ்வு
நோ கொண்டு வருந்த

நோய்க்கில்லை மருந்து
புண் வந்தால் நோவு
புன்னகைக்குச் சாவு

கண் கண்டால் ஆறு
காயமே ஆறு

பேரிடர் வந்தது
விழியின்
பெருஞ்சுடர்
அணைந்தது
காரிருள் ஒழிக
பேரொளி புலர்க

நிமிர்ந்துழைத்து
உண்ணும்
நீரும் இனிக்கும்
அமர்ந்தமுது உண்ணும்
தேனும் கசக்கும்

காயங்கள் உதிர்க
கால்கள் நிமிர்க
காலங்கள் புலர்க
கானல்கள் ஒழிக

சிறு குடியில் குஞ்சு
சிரித்தபடி கொஞ்சும்
சிறு நொடியும் பிரியா
சிநேகமே வரமாய்

நெய் பூந்தி கனவு
நான் கொண்டதில்லை
கையேந்தும் மனது
நான் கண்டதில்லை

அடிவேர் வரையும்
ஆனந்தம் நிறையும்
குடில் வாழ்க்கை
கூழ் கோப்பை

கால் பயணம்
நூலாடை போதும்
பழம் சோறு
நலம் நூறு
நோய் கண்டால்
மருந்துண்டால்
நொடியில் கரைக்க
நெஞ்சம் நிறைக

கவலை ஓயும்
கண்ணீர் கரையும்
அவலம் நீங்கும்
ஆழ்மனம் தூங்கும்
பொன்னாளே வருக
பேரின்பம் தருக

வெலிமடை ரபீக்

## செந்தூரத்தில் என்னைப் பற்றி எழுதியதால் 3 வாய்ப்புகள்



செந்தூரம் பகுதியில் என்னைப் பற்றி எழுதியதன் பின்னர் இரண்டு மூன்று வாய்ப்புக்கள் கிடைத்துவிட்டன.

**ஓ.. அப்படியா? என்னென்ன வாய்ப்புகள்?**

பத்திரிகைகளில் கட்டுரை எழுதுகின்றேன். சிங்கள இணையத்தளம் ஒன்றில் பகுதிநேர ஊழியராக வீட்டிலிருந்தே பணி செய்கின்றேன். செய்தி ஆசிரியராக பணியாற்ற வானொலி ஒன்றில் அழைப்பு வந்தது. உதயம் வார இதழுக்கு ஆசிரியர் தலையங்கம் இப்போ நான் தான் எழுதுகின்றேன்.



**கவிஞர் பன்னீர் செல்வம் புனிதப்ரியா**

2022 ஒக்டோபர் 23 ஞாயிற்றுக்கிழமை


# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

எல் எஸ்.மணி
வத்தளை.

கேள்வி:கவிஞர் கண்ணதாசனுக்கு கமால் பாட்சா என்று ஒரு மகன் இருக்கிறாராமே.. உண்மையா...இது எப்படி இந்த பெயர் வைப்பு..!

பதில்: உண்மைதான். கண்ணதாசனின் இரண்டாவது மனைவிக்கு பிறந்தவர் இவர். ஆனால் இப்போது அவருடைய பெயர் கமல் கண்ணதாசன். இதற்கு ஒரு பின்னணி இருக்கு. இவர் ஒரு பல் டாக்டர்.இவர் பிறந்தபோது இவருக்கு வைக்கப்பட்ட பெயர்தான் கமால் பாட்சா. அதற்கும் ஒரு காரணமிருக்கிறது. இவர் பிறந்தபோது அப்போதைய துருக்கி நாட்டின் அதிபராக. இருந்தவரின் மீது கொண்டிருந்த ஈர்ப்பின் காரணமாக அவரின் பெயரையே தன் மகனுக்கு சூட்டினாராம் கண்ணதாசன்.ஆனால் பின்னர் இந்திய பாகிஸ்தான் பிரிவினையால் ஏற்பட்ட கலவரங்களில் போது பாது காப்பைக் கருத்தில் கொண்டு கமால் என்ற பெயரை கமல நாதன் என்று மாற்றிவிட்டாராம் கண்ணதாசன்..

ஆர்.எம்.இக்பால்.
மாவனல்ல.

கேள்வி: தனுஷ் மீண்டும் ஒரு படத்தில் இரட்டை வேடங்களில் அவருடைய அண்ணன் இயக்குநர் செல்வராகவனோடு சேர்ந்து நடித்திருக்கிறாராமே.. அதுபற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்..?

பதில்: தமிழ் திWரையுலகில் தற்போது இரண்டு நடிகர்களின் நடிப்பு பாடினான் பேசு பொருளாக பாதிக்கப்பட்டு வருகிறது. ஒன்று நடிகர் தனுஷின் பாணி. மற்றொன்று நடிகர் விஜய் சேதுபதியின் பாணி. இந்நிலையில் நடிகர் தனுஷின் திறமையை அவரது சகோதரரும் இயக்குநருமான செல்வராகவன்' காதல் கொண்டேன்' படத்தின் மூலம் வெளிக்கொணர்ந்தார். அதனை 'புதுப்பேட்டை' மற்றும் மயக்கம் என்ன' படத்தின் மூலம் மேலும் சிறப்படையச் செய்தார். இந்நிலையில் செல்வராகவனும் நடிகராகிவிட தற்போது செல்வராகவனும் நடிகராகிவிட,தற்போது இருவரும் நடித்திருக்கும்'நானே வருவேன்'படம் வெளியாகி நல்லதொரு வரவேற்பைப் பெற்றிருக்கிறது.படம் வெளியான தருணம் குறித்து திரையுலகினரிடையே மாறுபட்ட கருத்துகள் இருந்தாலும் படத்தில் இரண்டு வேடத்தில் நடித்திருக்கும் தனுஷின் நடிப்பை அனைவரும் பாராட்டியிருக்கிறார்கள்.குறிப்பாக இரண்டு வேடங்களுக்கும் இரண்டு வித உடல் மொழி.உச்சரிப்பு,நடிப்பு என தனுஷ் கூடுதலாக உழைத்திருக்கிறார்.இதனை திரையில் பார்க்கும் ரசிகர்கள் தனுஷை கொண்டாடி வருகிறார்கள்.'வெந்து தணிந்தது காடு'படத்தில் நடித்த சிலம்பரசனோடு தனுஷின் நடிப்பை ஒப்பிட்டு இணையத்தில் பலரும் விமர்சித்து வருகிறார்கள்.



எம்.மலர்ராணி.
கொழும்பு13.

கேள்வி:'பொன்னியின் செல்வன்'படத்தில் சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்க இருந்தாராமே.... எந்த காதாபாத்திரத்தில் அவர் நடிக்கவிருந்தார்...இப்போது அந்த கதாபாத்திரத்தில் யார் நடித்திருக்கிறார்கள்?

பதில்: இது தொடர்பாக நடிகர் சரத்குமார் என்ன சொல்லுகிறார் என்று படித்துப்பாருங்களேன்... உங்கள் கேள்விக்கு பதில் கிடைக்கும்."நடிகை ஐஸ்வர்யா ராயுடன் நடித்தது மறக்க இயலாது இருந்தது.சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்க விரும்பிய கதா பாத்திரத்தில் அதாவது நந்தினியின் கணவனாக பெரிய பழுவேட்டரையர் கதாபாத்திரத்தில் நடித்தது பெருமையாக இருக்கிறது.தமிழ், தெலுங்கு,மலையாளம், கன்னடம்,இந்தி என அனைத்து மொழிகளிலும் விரைவில் வெளியாக இருக்கிறது."என்றார் அவர்

எம்.மாகிரட்,
எலபடகம.

கேள்வி:கிரிக்கட் வீரர் கெப்டன் தோனியும் இளைய தளபதி விஜய்யும் சேர்ந்து ஒரு படத்தில் நடிக்கப் போகிறார் களாமே..உண்மையா..சேர்?

பதில்:அப்படித்தான் திரையுலக வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

ஒரே ஸ்டுடியோவில் இரண்டு படங்களின் படப்பிடிப்பு நடந்த போது,நடப்பில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த நடிகர் விஜய்யும் கெப்டன் தோனியும் சந்தித்துக் கொண்ட வேளையில் இது பற்றி பேசியிருக்கிறார்கள். தோனி சமீபத்தில் "தோனி என்டர்டெயின்மன்ட்"என்ற ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தார்.



இந்த நிறுவனத்தின் மூலம் விஜய்யின் 70வது படத்தைத் தயாரிக்க முடிவு செய்திருக்கிறார் தோனி.

அதேநேரம் அந்தப் படத்தை தோனியே இயக்கவும் முடிவு செய்திருக்கிறார் என்பது மேலதிகத் தகவல்.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# ராஷ்மிகா வலையில் சிக்கிய விவாகரத்து நடிகர்



**ராஷ்மிகா** தொட்டதெல்லாம் தொடங்கும் என்பது போல அவர் நினைத்த காரியம் எல்லாம் ஒவ்வொன்றாக நடந்து வருகிறது. தமிழ் சினிமாவில் எப்படியாவது நடித்துவிட வேண்டும் என்ற அவரது ஆசை சுல்தான் படத்தின் மூலம் நிறைவேறியது. ஆனால் சுல்தான் படம் பெரிய அளவில் ஹிட் கொடுக்கவில்லை.

அதன் பிறகு அல்லு அர்ஜுனுக்கு ஜோடியாக புஷ்பா படத்தில் நடித்திருந்தார். இந்த படம் மாபெரும் வெற்றி அடைந்ததால் விஜயுடன் நடிக்கும் வாய்ப்பு ராஷ்மிகாவுக்கு கிடைத்தது. அதாவது விஜய்க்கு ஜோடியாக நடிக்க வேண்டும் என்பது ராஷ்மிகாவின் பல வருட கனவு என்பதை அவரே கூறியுள்ளார்.

தெலுங்கு, தமிழ் என இரு மொழிகளில் வம்சி இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகும் வாரிசு படத்தில் ராஷ்மிகா மந்தனா நடித்து வருகிறார். இதனால் தற்போது ராஷ்மிகாவிற்கு தமிழ் சினிமாவில் அடுத்தடுத்த பட வாய்ப்பு தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் சென்னையிலேயே டேரா போடும் அளவிற்கு கைவசம் நிறைய படங்களை ராஷ்மிகா வைத்துள்ளார்.

அதுவும் விஜய்க்கு அடுத்தபடியாக தனுஷுக்கு ஜோடியாக ராஷ்மிகா நடிக்க உள்ளார். தற்போது தனுஷ் நடிப்பில் வாத்தி மற்றும் கேப்டன் மில்லர் படங்கள் உருவாகி வருகிறது. இதைத்தொடர்ந்து சேகர் கம்முலா இயக்கும் படத்தில் தனுஷ் ஒப்பந்தமாகியுள்ளார். இப்படம் தமிழ், தெலுங்கு, ஹிந்தியில் உருவாக உள்ளது.

இந்த படத்தில் தான் தனுசு உடன் ராஷ்மிகா நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இது குறித்து அதிகாரப்பூர்வ தகவல் இன்னும் சில நாட்களில் வெளியாக உள்ளது.

இவ்வாறு தமிழ் சினிமாவிலும் ராஷ்மிகா மந்தனா அடுத்தடுத்த வெற்றி படங்களின் மூலம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள உள்ளார்.

# படம் தோல்வி அடைந்ததால் சம்பளத்தை திருப்பி கொடுத்த நடிகர்



**தெலுங்கு** நடிகர் சிரஞ்சீவி தனது மகன் ராம்சரணுடன் இணைந்து நடித்த ஆச்சார்யா படம் தோல்வி அடைந்ததால் சம்பளத்தை திருப்பி கொடுத்தார். தெலுங்கு நடிகர் சிரஞ்சீவி தனது மகன் ராம்சரணுடன் இணைந்து நடித்த ஆச்சார்யா படம் கடந்த ஏப்ரல் மாதம் வெளியாகி படுதோல்வியை சந்தித்தது. ஆனால் தற்போது திரைக்கு வந்து ஓடிக்கொண்டு இருக்கும் காட்பாதர் தெலுங்கு படம் ரூ.120 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை நிகழ்த்தி உள்ளது. இதனால் மகிழ்ச்சியில் இருக்கும் சிரஞ்சீவி தோல்வி அடைந்த ஆச்சார்யா படத்துக்கு வாங்கிய சம்பளத்தை திருப்பி கொடுத்து விட்டார். இதுகுறித்து ஐதராபாத்தில் நடந்த நிகழ்ச்சியில் சிரஞ்சீவி பேசும்போது, "படம் தோல்வி அடைந்ததால் அதற்கான முழுப்பொறுப்பை நானே ஏற்றுக்கொள்கிறேன். இதனால் எனக்கு எந்த குற்ற உணர்வும் இல்லை. நானும், ராம் சரணும் ஆச்சார்யா படத்துக்காக வாங்கிய சம்பளத்தில் இருந்து 80 சதவீதத்தை தயாரிப்பாளரிடம் திருப்பி கொடுத்துவிட்டோம்" என்றார். சிரஞ்சீவிக்கு திரையுலகினர் பாராட்டு தெரிவித்து உள்ளனர். வெற்றிகரமாக ஓடும் காட்பாதர் படத்தை தமிழில் டப்பிங் செய்து வெளியிட ஏற்பாடுகள் நடக்கின்றன. காட்பாதர் படத்தை ஆர்.பி.சவுத்ரியின் சூப்பர் குட் பிலிம்ஸ் பட நிறுவனத்துடன் இணைந்து சிரஞ்சீவி தயாரித்துள்ளார். மோகன்ராஜா இயக்கி உள்ளார். சல்மான்கான், சமுத்திரக்கனி, சத்யதேவ், தான்யா ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

# ரகுல் பிரீத் சிங்குக்கு விரைவில் திருமணம்



ரகுல் பிரீத் சிங் இந்தி நடிகரும், தயாரிப்பாளருமான ஜாக்கி பக்னானியுடன் ஜோடியாக இருக்கும் புகைப்படத்தை வலைத்தளத்தில் பகிர்ந்து அவரை காதலிப்பதை உறுதி செய்தார். சில மாதங்களில் திருமணம் செய்துகொள்ள திட்டமிட்டு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழில் தடையற தாக்க படத்தில் அறிமுகமான ரகுல் பிரீத் சிங்குக்கு கார்த்தியுடன் நடித்த தீரன் அதிகாரம் ஒன்று வெற்றிகரமாக ஓடி பெயர் வாங்கி கொடுத்து பிரபலப்படுத்தியது. தற்போது சிவகார்த்திகேயனின் அயலான் படத்தில் நடித்து முடித்துள்ளார். கமல்ஹாசனில் இந்தியன்2 படத்திலும் நடிக்கிறார். சில மாதங்களுக்கு முன்பு இந்தி நடிகரும், தயாரிப்பாளருமான ஜாக்கி பக்னானியுடன் ஜோடியாக இருக்கும் புகைப்படத்தை வலைத்தளத்தில் பகிர்ந்து அவரை காதலிப்பதை உறுதி செய்தார்.

தற்போது ரகுல் பிரீத் சிங்குக்கு 32 வயது ஆகிறது. எனவே அடுத்த சில மாதங்களில் திருமணம் செய்துகொள்ள திட்டமிட்டு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுகுறித்து ரகுல்பிரீத் சிங்கின் சகோதரர் கூறும்போது, "எல்லா காதல் உறவுக்கும் திருமணம்தான் முடிவு. இதில் யாருக்கும் மாற்று கருத்து இருக்காது.

ரகுல் பிரீத் சிங்ஜாக்கி பக்னானி திருமணம் விரைவில் நடக்கும். இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை ரகுல்பிரீத் சிங் வெளியிடுவார்" என்றார்.

இதையடுத்து ரகுல் பிரீத் சிங்கின் திருமண அறிவிப்பு எப்போது வேண்டுமானாலும் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருமணத்துக்கு பிறகு தொடர்ந்து நடிப்பாரா என்பது தெரியவில்லை.

# ப்ரியா பவானி சங்கர் ரகசியம்



**தற்போது** வளர்ந்து வரும் நாயகியாக இருக்கும் ப்ரியா பவானி சங்கர் கைவசம் ஏராளமான திரைப் படங்களை வைத்திருக்கிறார். அதிலும் அவர் கமலுடன் இணைந்து நடித்துக் கொண்டிருக்கும் இந்தியன் 2 திரைப்படத்திற்கு மிகப்பெரும் எதிர்பார்ப்பு இருக்கிறது.

பல திரைப்படங்களில் இரண்டாவது ஹீரோயினாக நடித்திருக்கும் இவர் தற்போது கேரக்டருக்கு முக்கியத்துவம் தரும் கதைகளை தேர்ந்தெடுத்து வருகிறார். இந்நிலையில் அவர் தன்னுடைய நீண்ட நாள் ரகசியம் ஒன்றை வெளியிட்டுள்ளார். அதாவது அவர் கடந்த சில வருடங்களாகவே ஜிம்முக்கு சென்று உடல் எடையை குறைக்கும் முயற்சியில் இருந்தார். அப்போது ஜிம்முக்கு செல்லும்போது இவர் ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக ஒருவரை சைட் அடித்திருக்கிறார்.

இது பலருக்கும் புதிய தகவலாக இருக்கிறது. இவர் வழக்கமாக செல்லும் ஜிம்முக்கு ஒரு பையனும் அடிக்கடி வருவாராம். அமைதியான குணமும் தன்னுடைய வேலையை மட்டுமே பார்க்கும் அவருடைய நடவடிக்கையும் பிரியாவை ரொம்பவே கவர்ந்திருக்கிறது. இதனால் ரொம்ப நாட்கள் அவர் அந்த பையனை சைட் அடித்த படியே இருந்திருக்கிறார்.

ஆனால் இப்படி ஒருவர் தன்னை வருட கணக்கில் பார்ப்பது கூட அந்த பையனுக்கு தெரியாதாம். தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருக்கும் அவர் பிரியாவிடம் ஒரு நாள் கூட பேசியது கிடையாதாம். அதன் பிறகு பிரியா பவானி சங்கர் வேறு ஜிம்முக்கு மாறி மாறியதால் அந்தப் பையனை பார்க்கவில்லை.

தற்போது இதைப் பற்றி கூறிய அவர் ஒரு நடிகை என்ற காரணத்திற்காக பேசாமல் இயல்பாக தன் வேலையை பார்த்த அந்தப் பையனை எனக்கு பிடித்திருந்தது. அதே போன்று அனைவருக்கும் மரியாதை கொடுக்கும் நபர்களை எனக்கு மிகவும் பிடிக்கும் என்று கூறி இருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல் அம்மா அப்பா காசில் பி எம் டபுள்யு கார் வைத்திருக்கும் பையன்களை விட, சொந்த உழைப்பில் முன்னேறி பைக் வைத்திருக்கும் பையன்களை தான் எனக்கு பிடிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

அவர் கூறியிருக்கும் எந்த விஷயத்தை கேட்ட ரசிகர்கள் நீங்கள் சைட் அடித்த அந்தப் பையன் யார் என்று கேட்டு வருகின்றனர்.

# ஐஸ்வர்யா ராஜேஷை கதிகலங்க செய்யும் நடிகை



**நல்ல** திறமையான நடிகை, குடும்பப்பாங்கான முகம் என்று பிரபலமாக இருக்கும் ஐஸ்வர்யா ராஜேஷ் தற்போது தமிழ் மட்டுமல்லாமல் மலையாளம், தெலுங்கு என்று அனைத்து மொழிகளிலும் நடித்து வருகிறார். ஆரம்ப காலத்தில் சிறு சிறு வேடங்களில் நடித்து வந்த இவர் தற்போது கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சோலோ ஹீரோயின் படங்களை தேர்வு செய்து நடித்துக் கொண்டிருக்கிறார்.

இப்படி தன் திறமையால் கஷ்டப்பட்டு தனக்கென ஒரு இடத்தை உருவாக்கிய இவர் தற்போது அடிக்கடி ஏதாவது ஒரு சர்ச்சையில் சிக்கி விடுகிறார். படப்பிடிப்பு தளத்தில் கடுமையாக நடந்து கொள்வது, சம்பள விஷயத்தில் கறார் காட்டுவது என்று இவருடைய போக்கு சமீப காலமாக முற்றிலுமாக மாறி இருக்கிறது.

அதனாலேயே இவரை தங்கள் படங்களில் புக் செய்ய பல தயாரிப்பாளர்களும் தயங்குகின்றனர். அந்த வகையில் தற்போது தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குனர்களின் பார்வை ஒரு இளம் நடிகையின் மேல் திரும்பி இருக்கிறது. சின்னத்திரை சீரியல் மூலம் சினிமாவுக்கு வந்த நடிகை பிரியா பவானி சங்கர் தற்போது ஏராளமான திரைப்படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

அது மட்டுமல்லாமல் தற்போது பல வாய்ப்புகளும் அவரை தேடி வந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால் இவர் சம்பள விஷயத்தில் எப்பவும் எந்த வித பிரச்சனையும் செய்ய மாட்டாராம். அதேபோல ஷூட்டிங் ஸ்பாட்டிற்கு வந்தால் ஹீரோயின் என்ற எந்த பந்தாவும் இல்லாமல் அனைவரிடமும் ஒரே மாதிரியாக பழகுவாராம்

மேலும் சூட்டிங் ஸ்பாட்டில் சில விஷயங்களில் அட்ஜஸ்ட் செய்து கொள்ளும் இவரை அனைவருக்கும் ரொம்பவே பிடிக்குமாம். இது போன்ற பாசிட்டிவ் விஷயங்கள் தான் இவரை தற்போது கமலுடன் இணைந்து இந்தியன் 2 திரைப்படத்தில் நடிக்கும் அளவுக்கு உயர்த்தி இருக்கிறது.

அந்த வகையில் தற்போது பிரியா பவானி சங்கர், ஐஸ்வர்யா ராஜேஷின் இடத்தை அசால்டாக தட்டிப் பறித்துவிட்டார் என்கிறது கோலிவுட் வட்டாரம். அதனால் இனிமேல் முன்னணி நடிகர்களின் திரைப்படங்களில் ப்ரியா பவானி சங்கருக்கு நிச்சயம் ஒரு இடம் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. சத்தமே இல்லாமல் ஐஸ்வர்யா ராஜேஷின் வாய்ப்புகள் எல்லாம் இவர் பக்கம் வந்து குவிகிறது

# மழைக்கால கூந்தல் பராமரிப்பு



மழைக்காலத்தில் எப்படி நம் சருமத்தை பாதுகாக்கனுமோ அதே மாதிரி நம்முடைய கூந்தலையும் பாதுகாப்பது மிகவும் அவசியம். மழைக்காலத்தில் ஈரப்பதம் அதிகமாக இருக்கும். இதனால் நம் தலைமுடி அதிகளவில் பாதிப் படைகிறது. மழைநீரில் உள்ள அமிலத்தன்மையும் நம் கூந்தலை அதிகளவில் பாதிக்கிறது.

மழைக்காலத்தில் ஈரப்பதம் எண்ணெய் பசை எல்லாம் சேர்ந்து கூந்தல் அழுக்கடைய வாய்ப்பு உள்ளது.

எனவே மழைக் காலத்தில் கூந்தலை பிரத்தியேகமான முறையில் பராமரிப்பது அவசியம். இயற்கை பொருட்களைக் கொண்டு தயாரிக்கும் ஹேர் பேக்குகள் கூந்தலுக்கு நிறைய நன்மைகளை நமக்கு வழங்குகிறது.

2 டீஸ்பூன் வேம்பு பொடி மற்றும் 2 டீஸ்பூன் உளுத்தம்பருப்பு சேர்த்து ஒரு மென்மையான பேஸ்டாக கலந்து (உங்கள் கூந்தலின் நீளத்துக்கேற்ப வேண்டிய அளவு) உங்கள் தலைமுடி மற்றும் உச்சந்தலையில் தாராளமாக தடவி வர வேண்டும். சுமார் 30 நிமிடங்கள் அதை உலர விட வேண்டும்.

உளுந்தம் மாவு உச்சந்தலையை சுத்தப்படுத்தவும், வேம்பு தலையில் உள்ள பொடுகை போக்கவும் உதவுகிறது. வாரத்திற்கு இரண்டு முறை செய்து வரும் போது பளபளப்பான கூந்தலை பெற முடியும்.



ஆரோக்கியமற்ற கட்டுக்கடங்காத கூந்தலுக்கு இந்த ஹேர் பேக் உதவுகிறது. தயிர் 1 கப், எலுமிச்சை 2 டீஸ்பூன் மற்றும் கடுகு எண்ணெய் 2 டீஸ்பூன் கலந்து அதை தலையில் தடவிக் கொள்ள வேண்டும். இதை தலையில் தடவி உலர வைத்து பின்னர் வெந்நீரில் அலசி கொள்ளுங்கள்.

பிறகு சில செம்பருத்தி இலைகளை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து நன்றாக அரைத்து அதில் எலுமிச்சை ஒன்றை பிழிந்து தலையில் தடவிக் கொள்ளுங்கள். சுமார் 20 நிமிடங்கள் அப்படியே விட்டு லேசான ஷாம்பு கொண்டு கழுவி வாருங்கள். உளுந்தம் மாவு உச்சந்தலையை சுத்தப்படுத்தவும், வேம்பு தலையில் உள்ள பொடுகை போக்கவும் உதவுகிறது. வாரத்திற்கு இரண்டு முறை செய்து வரும் போது பளபளப்பான கூந்தலை பெற முடியும்.



# கண் மை

குழந்தைகளின் கண்களில் மை இடுவது என்பது பாரம்பர்யமாக பல குடும்பங்களில் இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது.

இலங்கை, இந்தியாவில் மை இடும் பழக்கம் போல எகிப்து போன்ற நாடுகளிலும் இப்பழக்கம் இருந்து வருகிறது.



விளக்கெண்ணெய், நெய் போன்ற எண்ணெய்களால் கண் மை தயாரிக்கப்படுகிறது.

குழந்தையின் கண்கள் இன்னும் அழகாகத் தெரிய வேண்டும் என்பதற்காக வைக்கின்றனர்.

தொற்றுகள், சூரிய கதிர்களின் தாக்கம் ஆகியவற்றிலிருந்து காக்கும் என நம்பிக்கையாலும் சிலர் மை இடுகின்றனர். குழந்தைக்கு கண் திருஷ்டி பட்டுவிட கூடாது என்பதற்காகவும் மை வைக்கின்றனர்.

கடைகளில் விற்கக் கூடிய கண் மையில் பாதிப்பு இருக்கலாம். கடைகளில் மை வாங்கும் முன், அது எவற்றால் தயாரிக்கப்பட்டிருக்கிறது என பார்த்துக் கொள்ளுங்கள்.

இதை வீட்டிலேயே தயாரிக்கலாம்.

# சுண்டி இழுக்கும் சுடிதார்கள்

இன்றைய பெண்கள் தங்களின் அழகிலும், உடைகளை அணிவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். பெண்கள் பொதுவாகவே மிகவும் ஆசைப்படுவதும், அதிகம் செலவழிப்பதும் நகைகளுக்கும், துணிகளுக்கும் மற்றும் அழகுசாதன பொருட்களுக்கும் தான். தான் தேர்ந்தெடுக்கும் சுடிதார்களோ, அல்லது புடைவைகளோ மிகவும் புது வரவாகவும், புது டிசைன்களிலும் இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள்.

நாம் அணிந்து செல்லும் உடைகளை வைத்தே நமக்கு மரியாதை கொடுக்கிறார்கள். ஆகவே மற்றவர்களின் முன் நம்மை பெருமையாகவும், அடுத்தவர்களை திரும்பி பார்க்க வைப்பதும் நம்முடைய ஆடைகள் தான். ஒரு சிலர் தான் உடுத்தும் சுடிதார் மற்றவர்களை கவர வேண்டும். ஆனால் நிறைய டிசைன்கள் இருக்க கூடாது என்று தான் எண்ணுவார்கள். ஒரு சிலர் அதிக வேலைப்பாடுகள் இருந்தால் தான் பிடிக்கும். முதலில் நாம் எடுக்கும் சுடிதார் கலர் நம்முடைய டிசைன்களுக்கு ஒத்துவருமா? என்று பாருங்கள்.

அதை விட்டுட்டு, தேவையில்லாமல் டிசைன்களுக்கு ஆசைப்பட்டால், என்னதான் அதிக விலை கொடுத்து வாங்கியிருந்தாலும், மற்றவர்களின் முன் உங்களை "டல்லாக" தான் காட்டும். எனவே அதை முதலில் தெரிந்து கொள்வது அவசியம்.

முதலில் கருப்பு நிறமாக உள்ளவர்கள், லைட் நிறத்தில் உள்ள ஸ்டோன் வேலைப்பாடுகள் செய்த சுடிதாரை தேர்ந்தெடுக்கலாம். லைட் கிரீன், எலுமிச்சை நிறத்தில் உள்ள மஞ்சள் கலர், லைட் வைலட், லைட் சாண்டில், ஒயிட் அல்லது ஏதாவது காமினேஷன் கலர் இது மாதிரி லைட் நிறத்தில் உள்ள சுடிதார்களை தேர்வு செய்யுங்கள். கொஞ்சம் கலராகவோ அல்லது மாநிறமாகவோ உள்ளவர்கள் மெரூன், இங்க் புளூ, பிங்க் கலர், ஆஷ் கலர், ஒயிட் அல்லது ஏதாவது காமினேஷன் கலரை தேர்வு செய்யலாம். கலராக உள்ளவர்களுக்கு டார்க் கலரில் எந்த நிறவகையான சுடிதார்கள் போட்டாலும் அழகாக தெரியும்.

பெரும்பாலும் நிறத்திற்கு ஏற்றார் போல் தேர்வு செய்வதை காட்டிலும், அவரவர் உடல் வாகுக்கு தகுந்தாற்போல் சுடிதார்களை எடுக்க வேண்டும். குண்டாக உள்ளவர்கள் காட்டன் சுடிதார் அணிந்தால், அது மேலும் அவர்களை குண்டாகத்தான் காட்டும். அதற்கு பதில், அவர்கள் நிறைய ஆடம்பர வேலைப்பாடுகள் செய்யாத சிம்பிளாக உள்ள சல்வார்களை போட்டாலே அழகாக தெரியும். ஒல்லியாக உள்ளவர்கள் கொஞ்சம் அதிக வேலைபாடுகள் செய்த காட்டன் அல்லது சில்க் காட்டன் சுடிதார் தேர்வு செய்யலாம். அது அவர்களை சற்று குண்டாக காட்டும்.



அதுமட்டுமல்லாமல் என்னதான் சுடிதார்களை தேர்வு செய்தாலும், அவர்கள் தைக்கும் முறை அந்த துணியின் அழகை கெடுத்து விடுகிறது.

# செல்ஃபி உலா



சி. கு.சித்ராங்கனி



Yadhusha
Agrapathana



சுபதேஜா



Rishanth & Kirithikesh



ரீட்டா



பாலன் சுதாகரன் மாணவர்களுடன்



குமுதினி



இனாயத் பர்விஸ்
மட்டக்களப்பு



அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்த
எழில்மாறன் மோனாலிஷா தம்பதிகளுக்கு இனிய
திருமண வாழ்த்துகள் தேற்றாத்தீவு ஸிந்தூரன்



அஸாம் அக்கரைப்பத்து



என்.எம்.நளீம்

## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## A visit to the zoo



Today our class teacher took us to the zoo. We went to the zoo by bus. We were about twenty students on the bus. We entered the zoo through a large gate. Our teacher guided us. We saw a lion inside a cage. We also saw tigers, giraffes and other wild animals in a fenced area. The best experience was seeing the roar of the big Lion face to face. Snake park was also a part of the zoo. It was a thrilling experience watching the snakes move just like that behind the glass panes. We came back to school at 3 PM. It was a place worth to spend time with family or big groups.

## 13 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்





நான் ரொம்ப பிஸி...

# இலக்கை நோக்கிய பயணத்தில் இடர்பாடுகள் இல்லாமல் இருந்ததில்லை

**உதைபந்தாட்ட வீரர் றிப்கான் முகம்மது**

கிண்ணியாவின் விளையாட்டுத்துறை வளர்ச்சியானது பல தசாப்தங்களை கடந்தது. தேசிய ரீதியிலான சாதனைகள் கிழக்கு மாகாணத்திலிருந்து கிண்ணியா மண்ணின் பங்களிப்பு இன்றுவரை காணப்படுவது விளையாட்டின் அதிக பற்றை பறைசாற்றி நிற்கின்றன.

தேசிய மட்டத்தில் எமது பிரதேசத்திற்கென்று விளையாட்டுத்துறையில் தனியான கௌரவம் காணப்பட்டாலும் சர்வதேச ரீதியிலான போட்டிக்கு தேசிய அணியினை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய அணியில் இடம் பிடிப்பதென்பது பல வருடமாக எட்டாக் கனியாகவே காணப்பட்டது.

இருப்பினும் எமது கல்வி வலயத்தின் உடற் கல்வி ஆசிரியர்கள், ஆலோசகர்கள், மாணவர்கள் என பலரது முயற்சியின் காரணமாக அண்மைக் காலமாக சர்வதேச மட்டத்தில் கலந்து கொண்டு ஊரின் நாமத்தை உலகறியச் செய்த பல வீரர்கள் மண்ணில் நிறைந்துள்ளது சந்தோஷம் தரும் செய்தியாகும். அந்த வகையில் இன்று வரை எமது தேசிய அணிக்காக விளையாடி வரும் 'முகம்மது ஜௌபர் றிப்கான் முகம்மதை' விளையாட்டு பற்றிய தகவல்களை பெறுவதற்காக சந்தித்த போது.

விளையாட்டு சம்மந்தமாக பல்வேறு விடயங்களை அவர் இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

றிப்கான் முகம்மது தனது 10 ஆவது வயதில் உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடினார். தான் கற்ற அல்அக்ஸா கல்லூரிக்காக மாவட்ட,மாகாண,தேசிய மட்ட போட்டி களில் விளையாடி வெற்றி கிண்ணங்கள் பெற்றதோடு சிறந்த வீரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

றிப்கான் முகம்மது தனது 10 ஆவது வயதில் உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடினார். தான் கற்ற அல்அக்ஸா கல்லூரிக்காக மாவட்ட, மாகாண,தேசிய மட்ட போட்டி களில் விளையாடி வெற்றி கிண்ணங்கள் பெற்றதோடு சிறந்த வீரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.







இவர் விளையாடிய சர்வதேச போட்டிகள்

- 44 வது ஆசிய நாடுகளுக்கான உதைபந்தாட்டம் 2016 இல் கொரியா பயணம்
- 45 வது ஆசிய நாடுகளுக்கான உதைபந்தாட்டம் 2017 ஈரான் பயணம்
- 19 வயதிற்குட்பட்ட வர்களுக்கான உலக கிண்ணம் FIFA (AFC) 2017 தஜகிஸ்தான் பயணம் .

மற்றும் மாலைதீவு ,சவூதி அரேபியா,பஹ்ரைன் போன்ற நாடுகளிலும் இலங்கையின் தேசிய அணிக்காக நின்று விளையாடி சிறந்த வீரர் என்ற பட்டத்தை தனதாக்கிக் கொண்டவர் றிப்கான் முகம்மதாகும்.

2018 இல் இலங்கை பொலிஸ் அணிக்காக விளையாடி வெற்றிக் கேடயத்தை அந்த அணி பெற காரணமாக இருந்த இவர் நூற்றுக்கும் மேற்பட்ட கோல்களை அடித்துள்ளார்.

இலங்கை இராணுவ அணிக்காகவும் இலங்கையின் தேசிய அணிக்காகவும் தற்போது விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

2022 கட்டாரில் நடைபெறவுள்ள உதைபந்தாட்ட போட்டிக்காக இலங்கை தேசிய அணியில் பயிற்சியில் தற்போது ஈடுபட்டு வரும் றிப்கான் முகம்மது மூன்று தடவை சிறந்த விளையாட்டு வீரராக சர்வதேச மட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டதை எண்ணி சந்தோஷம் கொள்கிறார்.

தேசிய அணியில் இடம் பிடித்ததால் பல்வேறு நாடுகளுக்குச் சென்று விளையாடும் தகுதியை இறைவன் எனக்கு ஆக்கியுள்ளான்.

அவனுக்கே நன்றியனைத்தும் எனவும் இந்த மாதம் கட்டாரில் நடக்கவிருக்கும் போட்டியில் சிறப்பாக விளையாட பிரார்த்தனை செய்கிறேன்.

இலக்கை நோக்கிய பயணத்தில் இடர்பாடுகள் இல்லாமலில்லை தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் இறைவனின் நாட்டத்தால் மாற்றத்தை பெற்றுத்தரும் என நம்புகிறேன்.

அதே நேரம் எனக்கு ஊக்கப்படுத்தி பயிற்சியளிக்கும் பயிற்சியாளர்கள், முகாமையாளர் சக வீரர்கள் மற்றும் ஊர் மக்கள் அனைவருக்கும் நன்றியை இவ்விடத்தில் சொல்லிக்கொள்கின்றேன்.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# மருதாசல்

முல்லை முஸ்ரிபா

## அகம் பத்து 08

கூடலும் கூடல் நிமித்தமுமாக உரி விரியும் குறிஞ்சிப்பா, பெருங்குன்றூர் கிழார் எழுதுவது, மழை, முகிழ்கள், நீர்நிலை, குழிகள், குன்றுகள், காட்டு வழிகளென்று விரியும் குறிஞ்சிக் காட்சி. நள்ளிரவு, மழைக்காட்சியென விரியும் குறிஞ்சிக் கார்காலம். ஆண்பன்றி, புலி, யானை, மான், கரடி, பாம்பென விலங்குகள் உலாவும் குறிஞ்சிக்கானகம். மூங்கில், சுரபுன்னை, குறிஞ்சி மரங்கள் என முதல், கரு, உரியமைத்த பா கிழாருடையது. 'ஈயற் புட்றத்து......'' எனத் தொடங்கும் அகநானூற்றின் எட்டாவது பா.

தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய் தலைமகள் சொல்லியதாயான கூற்றுப் பா இது.

களவொழுக்கத்தில் இணைந்த தலைவன் மணந்துகொள்வதில் விருப்பற்றிருக்க வருந்தும் தலைவி, ஒரு தடவை இரவுக்குறியிடத்து அவன் வந்தேகினான். அவனைக் காணாதவள் போல் அவன் கேட்பதற்காய் தோழிக்கு கூறுவாள் போன்ற காட்சியாக்கம்.



தோழியே, ஆண் பன்றியைத் கொன்ற பிளந்த வாயுடைய புலி பலா மரங்கள் நிறைந்த பக்க மலைகளில் புலால் மணக்க இழுத்துச் செல்லும் மூங்கில்கள் ஒலிக்கும் மலை. சுரபுன்னையோடு, வாழைகள் வளர்ந்த நீர்க்குழியில் ஆண்யானை அகப்படுகிறது. அதன் பெண் யானை, தன் துணையை வெளியேற்ற ஏற்றாற்போல் பெரிய மரங்களை முறிக்கும் போது எழும் ஓசை மலைமுகடுகளில் ஒலிக்கும் நாடுடையான் நம் தலைமகன்.

அத்தகைய தலைவனுடன், அத்தகைய சூழலில் சென்ற வழி எண்ணற்கரிய குன்றுகளின் பக்கமாகச் செல்லும் மான்களின் வழியில் மயங்கித்திரியாமல் மின்னல் ஒளி காட்டச்சிறுக சிறுக மெத்தென நடந்தோம்.

தோழி, அது ஈசல்களுடைய புற்றின் மேற்புறத்தில் புற்றாஞ் சோறாகிய இரை கவரும் கரடியின் தொங்கும் தோல் உறைக்குள் பொருந்திய கூர்நகம் பட்டதால் பாம்பு தன் வலிமையை அழிக்கும் ஒரு நள்ளிரவு.

அத்தகைய இரவில், மழைத்துளிகளைக் கொண்ட நீல மணி போன்ற அழகிய கூந்தலை பிடரி மறைய பின்னே கோதி மயிர்த்தொகுதியைப் பிழிந்தபடி நடக்க இயலாது பின்னிக் கிடக்கும் மலைக்காட்டு வழியை நீ அறிவாயா என்று வினவுபவரைப் பெற்றால் அவ்விதம் நம்மால் நடப்பதற்கு அரியன் அல்ல என்கிறாள் தலைவி.

தலை மக்களின் மனம் இப்பாடலில் வரையப்படுகிறது. 'புறப்பட்டுச் செல்வோம்'' என்கிறாள் தலைவி. மறைந்து நிற்கும் தலைவனின் மனதில் வரைதலே இனி அவசியமென உணர்த்துகிறாள்.

உள்ளுறையும் இறைச்சியும் அமையப் பெற்றது இந்த அகப்பா. பாம்பை வருத்தும் கரடி, பன்றியைக் கொல்லும் புலி, மரம் முறிக்க எழும் ஒலி என்பன உள்ளுறைக் காட்சிகள்.

சங்க அகவாழ்வின் குறிஞ்சிக் காதலின் கூடலும் கூடல் நிமித்தமும் மிளிரும் அகக் காட்சி கிழாருடையது.

### நடுவழி

நடு இரவின் இருளிடை
இருசோடிச் சுவடுகளில் வழியும் ஈரம்
கண்ணீர் ஒருதுளி
கனவு மறு துளி

யாருமற்ற அடவியின்
மலைக் குகைகளில் எதிரொலிக்கும்
மனக்குகையின் பாடல்

கரடிகீறும் காயத்தின் வலி
மூங்கிலில் வழிகிறது உன் பாடல்
இரவுக்குறியொன்றில் களிகொள்ளும்
வரைவற்ற யாமத்தின் மீது படிகிறது உன் பாடல்

ஆயிரம் நடுநிசியின் ஏக்கத்தை
எங்கெடுத்துச் செவ்வாய்
தோழி

## ஔவன் கவிதை

### நினைவின் நிழல் வாகை



பிரியாப் போர்வை இருளில்
பெரு மூச்சில் குழைத்தெடுத்தப்பிய கனவின் நீட்சி
வேர் நீண்ட காலடியில் உதிரும் காட்சி
காய்ந்திறுகிய மனசைப் பிசைந்தெடுத்து
மீள அப்புகிறேன்
காலத்தின் சுவடுகளில் வழிகிறது
நினைவு மீளா நிணம்

இனியென் முற்றத்தில்
முறிந்த நிழல்வாகையெனக் கிடக்கும்
காலநினைவை அள்ளுகிறேன்
அதன் நிழலொட்டிய மனசை மொய்க்கிறேன்
வாசல்மர ரோசாவில் பூத்தபடி காத்தபடி

காலடிகளில்
வேர் நீள நிழல்கொள்கிறேன்

## வடக்கு முஸ்லிம் எழுத்து மூன்று தசாப்தம்

வடக்கு முஸ்லிம் எழுத்து, ஈழத்து இலக்கியப் பரப்பில் எத்தகைய பெறுமானங்களைக் கொண்டிருக்கிறது என்கிற ஆய்வுகள் அல்லது கருத்தோட்டங்கள் மிகத் தொய்வாகவே உள்ளது.

குறிப்பாக 1990களுக்கு முன்னதாக இந்த வகைப்படுத்துகை பெரிய அளவில் மேற்கிழம்பவில்லை. எனினும் பிற்காலத்தில் வெளியேற்றப்பட்டோர் இலக்கியம், இடப்பெயர்வு இலக்கியம், புலம்பெயர் இலக்கியம் என்கிற பதிவுகள் முன்னெழுந்த சூழலில் வடக்கு முஸ்லிம்களை மையப்படுத்திய எழுத்தின் கனதி, வருகையளவு, வகைமைப்பாடுகளின் போதாமை மீதும் கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும்.

வரலாறு, அரசியல், ஆய்வியல், பண்பாடுசார் எழுத்துக்களின் தளம் மேலும் விரிவுற வேண்டியிருந்தது.

இலக்கியத்தில் கவிதை, சிறுகதை, நாவற் பரப்பில் வெளிவந்தவையும் அவற்றின் கனதியும் போதாமையும் குறித்து சிந்திக்கும் தளம் விரிவு பெறவில்லையோ எனத் தோன்றுகிறது.

இந்தப் பின்புலத்தில் வெள்ளாப்புவெளி கடந்த காலங்களில் விரிவான பேசு தளங்களை உருவாக்கியது. கவிதை வாசிப்பு, இலக்கிய ஆய்வுகள், நூல் வெளியீடு, ஒக்டோபர் நினைவு நாள் என இணையவழி முன்னெடுப்புகளும் இதன் பாற்பட்டன.

மூன்று தசாப்த எழுத்தில் வடக்கு முஸ்லிம் வாழ்வியல் மைய அடையாள விரிவெழுத்துக்கள் மற்றும் அதன் காத்திரம் குறித்த புனைவெழுத்துக்கள் பற்றியெல்லாம் பார்க்கப்பட்டது. வடிவங்களைத் தேடும் வாழ்வு குறித்த பார்வை மீது மேலும் தனியான தேடலும், பதிவும், உரையாடல்களும் வளர்க்கப்படல் வேண்டும்.

வடக்கு முஸ்லிம் குறித்த கவிதையெழுத்து பதியப்பட்ட அளவில் சிறுகதை, நாவலில் மேலெழவில்லை என்பது மிகுந்த குறையாகவுள்ளது. கவிதைகளில் முஸ்லிம் கவிஞர்கள் மட்டுமன்றி சக தமிழ்க் கவிஞர்களும் காத்திரமான பங்களிப்பைப் பதிவு செய்துள்ளனர். சு.வில்வரத்தினம், வ.ஐ.ச.ஜெயபாலன், சி.சிவசேகரம் உள்ளிட்ட பலர் குறிப்பிடும்படியானவர்கள். எஸ்.எச்.நிட்மட், கலைவாதி கலில், யாழ்.அஸீம், யன்ஸி கபூர், உவைஸ்கனி, பைசல் போன்றவர்கள் குறிப்பிடும்படியானவர்கள். ஆனால் நாவல் எழுத்தில் இந்தத் தளம் விரிவுபெறவில்லை.

## வடக்கு முஸ்லிம் வாழ்வியலின் ஆய்வுக்குரல்

வடக்கு முஸ்லிம்களின் தொண்ணூறுகளுக்குப் பின்னான பலவந்தமான வெளியேற்ற வாழ்வின் சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு, வரலாற்று வெளியில் முக்கிய செயற்பாட்டாளர்களில் முதன்மையானவர் பேராசிரியர் மர்ஹூம் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ்.

பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரான அவர் 1990களில் அகதி மக்களின் ஆய்வு நிலைச் செயற்பாட்டாளராக மிளிர்ந்தார்.



உண்மைபூர்வமான தகவல் திரட்டியாகவும், அறிக்கையிடுதலாகவும் காத்திரமாகச் செயற்பட்டவர் பேராசிரியர்.

முஸ்லிம் சமூக நலன், சமூகக் கட்டமைப்பு, தேசத்தின் சுபீட்சம், சமூக இணக்கப்பாடு, புத்திஜீவித்துவ அணுகல் என தன் செய்கையை விரித்த பேராசிரியர் ஹஸ்புல்லாஹ், 'வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு'' நிறுவப்பட்டபோது தலைமைச் செயற்பாட்டாளரானார். களஆய்வுகளிலும், அறிக்கைப்படுத்தலிலும், ஆவணவாக்கத்திலும் கவனம் செலுத்தினார்.

வடக்கு முஸ்லிம்களின் விவகாரத்தை அகதி அந்தஸ்தை முன்னிறுத்தி தேசிய மயப்படுத்தவும், உலக மயப்படுத்தவும் முயன்றவர். தற்காலிகக் குடியேற்றத்தைக் கண்டித்து மீள்குடியேற்றம், மீள் இணக்கப்பாடு, நஷ்டஈடு குறித்தெல்லாம் அதிகம் கவனம் செலுத்தினார்.

புத்திஜீவித்துவ மட்டத்தில் தேசிய சர்வதேச ரீதியில் வடக்கு முஸ்லிம்கள் பற்றிய சமூகப் பெறுமானத்தை முன்னெடுத்தார்.

பேராசிரியர் மர்கூம் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் அவர்களின் எழுத்தாவணப் பணி வரலாற்றில் பேசப்படுவது, 'இலங்கை இனப் பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்'' எனும் தொகுதிகளை எழுதி வெளியிட்டவர்.

வில்பத்து தொடர்பான பூதாகர பிரச்சினை கட்டவிழத்துவிடப்பட்ட காலத்தில் ஆய்வுபூர்வமாக ஆவண அறிக்கையை முன்வைத்துப் பேசியவர்.



தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழு, மாகாண எல்லை நிர்ணயக் குழு, யாழ். பல்கலைக்கழக செனட்சபை என்பவற்றிலும் செயற்பட்டவர்.

பேராசான் மர்ஹூம் ஹஸ்புல்லாஹ் வடக்கு முஸ்லிம் ஆய்வுப் பரப்பில் மறுதலிக்க முடியா ஆவணம். அன்னாரை இறைவன் பொருந்திக் கொள்வானாக.

அன்னாரின் பணிகளைக் கௌரவித்து வெள்ளாப்புவெளி 2021 ஒக்டோபரில் நிகழ்த்திய 'வடக்கு முஸ்லிம் எழுத்து மூன்று தசாப்தம்' என்னும் இணைய நிகழ்வை அன்னார் நினைவரங்கில் நடத்தியது.

### முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டெடுத்த பேரறிஞர் அண்ணா

# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா

1946 இல் மதுரையில் கருஞ்சட்டை தொண்டர் படைக்கு அரசு தடைவிதித்தது. ஆனால் அரசின் தடையை கண்டு திராவிடர் கழகத்தினர் அஞ்சவில்லை. இறுதியில் 'கருப்பு சட்டை' திராவிடர் கழகத்தினரின் அடையாளமாகவே மாறி விட்டது.

தமிழகத்தில் மீண்டும் இந்தி திணிப்பு மீண்டும் தலைதூக்கியது. இந்தி மொழி; திணிப்பை எதிர்த்து சென்னை மாகாணத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் அண்ணா சொற்பொழிவாற்றினார். அண்ணாவின் சொற்பொழிவுகளால் சென்னை மாகாணத்தின் இளைஞர்கள் கிளர்ந்தெழுந்து ஹிந்தி திணிப்பை எதிர்த்து வந்தனர். வெற்றியும் கண்டனர்.

அண்ணா பெரியாருடன் சேர்ந்த காலத்திலிருந்து தந்தை பெரியார் ஒருவரையே தனது குருவாக கருதி வந்தார். இருப்பினும் சில ஆண்டுகளில் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. திராவிடர் கழகத்திலிருந்து தனிக்கட்சி ஒன்றை அண்ணா உருவாக்கும் நிலையும் வந்தது.

இந்தியாவில் வெள்ளையனே வெளியேறு எனும் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில், அண்ணா பெரியாரிடம் ' வெள்ளையர் மீதான எதிர்ப்பை மக்கள் எழுச்சியோடு காட்டுகிறார்கள். நாமும் நமது கட்சியின் சார்பில் எதிர்ப்பை காட்டுவோமா? என தயவாக கேட்டார்.

அவ்வளவுதான் ! பெரியாருக்கு கோபம் வந்துவிட்டது. ' அந்த இயக்கத்தில் நாமும் சேரவேண்டும் என்று சொல்கிறாயா? என்று கேட்டார் பெரியார். 'ஐயா! நாமும் அந்த இயக்கத்தில் சேரவேண்டும் என்று சொல்லவில்லை. நாம் தனியாகவே வெள்ளையனை எதிர்க்கலாமே?' என்றார் அண்ணா. ரியாரும் 'அண்ணாத்துரை! உன் மனதை யாரோ கெடுத்துவிட்டார்கள். நீ கண்டகண்ட புத்தகங்களை எல்லாம் படிக்கிறாய் அல்லவா! ஆதனால்தான் என்னவோ உன்புத்தி இப்படிபோகுது!' என்று கோபத்துடன் கூறினார்.

காங்கிரஸை விட்டு பெரியார் வெளியேறிய பிறகு காங்கிரஸாரின் நடவடிக்கைகளை பெரியார் எதிர்த்தே வந்தார். அந்த வகையில்தான் காங்கிரஸாரின் பேராட்டங்கள் பலவற்றுக்கு பெரியார் ஆதரவாக நிற்கவில்லை.

அண்ணா சற்று கோபத்தடன் பெரியாரிடம் 'ஐயா! ஏகாதிபத்திய வெறியர்களான வெள்ளையர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறியே ஆக வேண்டும்' என்று கூறினார்.

பெரியார் அண்ணாவிடம் ' வெள்ளையனாவது இந்த நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதாவது, அதெல்லாம் நடக்காது!' என்றார்.



இந்திய விடுதலை குறித்தும் ஆங்கிலேயர்களை இந்தியாவை விட்டு வெளியேற்றுவது குறித்தும் பெரியார் அவ்வளவாக நம்பிக்கை கொள்ளவில்லை. ஆனால் அண்ணாவோ இந்திய விடுதலையில் நம்பிக்கையும் உறுதியும் கொண்டிருந்தார். பெரியாருக்கும் காங்கிரஸின் மீதிருந்த எதிர்ப்பில் இவ்வாறு பேசிவந்தார். ஆனால் திராவிடநாடு கொள்கையில் ஏற்றுக்கொள்ளக்கூடியவராக இருந்தார். அண்ணாவோ இந்திய விடுதலையில் பெருவிருப்பம் கொண்டிருந்தார். அண்ணா பெரியாரின் கட்சியில் பெரியாரோடு தன்னை இணைத்துக்கொண்டு பத்து ஆண்டுகள் கடந்த பின்னரே இருவருக்கும் முரண்பட்ட தருணம் உருவானது.1947 ஆம் ஆண்டு ஒகஸ்ட்; மாதம் 15 ஆம் திகதி இந்தியா சுதந்திரம் அடைந்தது. இந்தியா சுதந்திரம் அடையும் கட்டத்தில் கூட பெரியாருக்கும் அண்ணாவுக்கும் இடையியலான விரிசல் சற்று அதிகமாகவே இருந்தது. அண்ணா திராவிடர் கழக கூட்டங்களை தவிர்க்க ஆரம்பித்தார். 1947ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டிலும் அண்ணா கலந்து கொள்ளவில்லை.1948 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற தூத்துக்குடி மாநாட்டிலும் அண்ணா கலந்து கொள்ளவில்லை. அண்ணா திராவிடர் கழகத்திலிருந்து விலகி இருந்தாலும் அண்ணாவின் ஆதரவாளர்கள் பலர் அண்ணா கலந்து கொள்ளாத மாநாடுகளை கண்டு வருந்தினர் அண்ணா பெரியாரின் மீது தனக்குள்ள பக்தியை ஒருபோதும் மறக்கவில்லை.

**(தொடரும்)**



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# தமிழ்த் திரையின் ஒப்பற்ற கலைஞர் ஆச்சி மனோரமா

தென்னிந்தியத் திரைப்பட நடிகையான மனோரமா இந்திய சினிமா வரலாற்றில் பல சாதனைகளுக்கு சொந்தக்காரர். ஆண் நடிகர்களில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்பாற்றலுக்கு நிகராக பெண் நடிகையொருவர் கோலோச்சினார் என்றால் அவர் இவர் தான். இவர் "பொம்பல சிவாஜி"

எனப்பெயர் வாங்கியவர். நகைச்சுவைக் கதாபாத்திரங்களில் தனது திறனை வெளிப்படுத்திய இவர் 1500 திரைப்படங்களுக்கு மேல் நடித்தார். இவர் தமிழ்த் திரையுலகினராலும், தமிழ்த் திரைப்பட ரசிகர்களாலும் 'ஆச்சி' என அன்போடு அழைக்கப்பட்டார். இவரின் இயற்பெயர் கோபிசாந்தா. 1937 மே 26 அன்று பிறந்தவர் மனோரமா.கணவர் பெயர் எஸ். எம். ராமநாதன். இவர்களின் மகனின் பெயர் பூபதி. தென்னிந்தியாவின் ஐந்து முதலமைச்சர்களுடன் நடித்த பெருமை கொண்டவர் மனோரமா . பேரறிஞர் அண்ணாதுரை, மு. கருணாநிதி ஆகிய இருவரும் நாடக மேடைகளில் மனோரமாவுடன் நடித்திருக்கிறார்கள். தவிர ஜெயலலிதா மற்றும் மக்கள் திலகம் எம்ஜியார் இவருடன் பல தமிழ்த் திரைப்படங்களில் நடித்திருக்கிறார்கள். மேலும் ஆந்திரா முதலமைச்சர், நடிகர் என். டி. ராமராவுடனும் சில தெலுங்கு படங்களிலும் இவர் நடித்திருக்கிறார்.



இவர் காசியப்பன் 'கிளாக்குடையார்' மற்றும் ராமாமிர்தம் ஆகியோருக்கு மகளாக தமிழ்நாடு மாநிலத்தில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ராஜமன்னார்குடியில் வசதியான குடும்பத்தில் பிறந்தார். இவரின் தந்தை ஒரு சாலை ஒப்பந்தக்காரராகப் பணியாற்றியவர். தந்தை காசியப்பன் கிளாக்குடையார் மனோரமாவின் தாயார் ராமாமிர்தம் அவர்களின் தங்கையை இரண்டாம் தாரமாகத் திருமணம் புரிந்ததால். இதனை அடுத்து கணவருடன் ஏற்பட்ட மனக்கசப்பால் புறக்கணிக்கப்பட்ட ராமாமிர்தம் அம்மாள் மனோரமவை அழைத்து கொண்டு காரைக்குடி அருகே உள்ள

பள்ளத்தூர் என்ற ஊருக்கு குடிபெயர்ந்தார். மனோரமா ஆறாம் ஆம் வகுப்பு வரை படித்தார். குடும்ப வறுமையின் காரணமாக பள்ளி படிப்பை தொடர முடியாத மனோரமா அங்குள்ள செட்டியார் வீடுகளில் வேலையாளியாக பணி செய்தும். அவர்கள் தாயாருடன் பலகார வியாபாரம் செய்து வாழ்க்கையைத் தொடங்கினார்கள். தனது பனிரெண்டாவது அகவையில் நடிப்புத் தொழிலில் இறங்கினார்." பள்ளத்தூர் பாப்பா" என சிறு வயதில் மனோரமா செல்லமாக அழைக்கப்பட்டார். நாடக இயக்குனர் திருவேங்கடம், ஆர்மோனியக் கலைஞர் தியாகராஜன் ஆகியோர் இவருக்கு "மனோரமா" எனப் பெயர் சூட்டினர்.

ஆரம்பத்தில் "வைரம் நாடக சபா" நாடகங்களில் சிறு வேடங்களில் நடித்து வந்தார் மனோரமா.

அக்காலத்தில் புதுக்கோட்டையில் எஸ். எஸ். ராஜேந்திரன் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த போது அவருக்கு மனோரமா பி. ஏ. குமார் என்பவரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். மனோரமாவின் திறமையை அறிந்து கொண்ட எஸ்.எஸ். ராஜேந்திரன் தனது "எஸ். எஸ்.ஆர். நாடக மன்றத்தில்" சேர்த்துக் கொண்டார். இந்நாடக நிறுவனத்தின் மணிமகுடம்,

தென்பாண்டிவீரன், புது வெள்ளம் உட்பட நூற்றுக்கணக்கான நாடகங்களில் நடித்தார். '



மனோரமா முதன் முதலாக மஸ்தான் என்பவர் இயக்கிய ஒரு சிங்கள மொழித் திரைப்படத்தில் கதாநாயகிக்குத் தோழியாக நடித்திருந்தார். பின்னர் எஸ்.எஸ்.ராஜேந்திரன், தேவிகா நடித்த ஒரு திரைப்படத்தில் இவர் நடித்தார். ஆனால் இத்திரைப்படம் வெளிவராமல் பாதியிலேயே நின்று விட்டது. பின்பு எம். ஆர். ராதா தனது நாடக சபாவில் நடத்தி வந்த ஒரு நாடகத்தை அவரது தம்பி எம். ஆர்.பாப்பாவுடன் சேர்ந்து படமாக தயாரித்தபோது அதில் ஒரு முக்கிய வேடத்தில் மனோரமா நடித்தும் அந்த திரைப்படமும் பாதியில் நின்றதால் கடைசியாக கவிஞர் கண்ணதாசன் தயாரித்த சொந்த திரைப்படமான "மாலையிட்ட மங்கை" திரைப்படமே மனோரமாவின் முதல் திரைப்படமாக அமைந்தது. மனோரமா கதாநாயகியாக நடித்த முதல் படம் கொஞ்சும் குமரி. (1963) பின்னர் நகைச்சுவை வேடங்களில் அதிக கவனம் செலுத்தினார். 50 படங்களில் நன்கு அறியப்பட்ட நகைச்சுவை நடிகர் நாகேஷுடன் அவருக்கு சமமான சவாலான பாத்திரங்கள் வழங்கப்பட்டன. அவர் எப்படி படங்களில் இறங்கினார் என்று ஒரு நேர்காணலில் கேட்டபோது, "இதற்கு எல்லாம் கண்ணதாசன் தான் காரணமாகும்.

1957 இல் மாலையிட்ட மங்கை படத்தில் என்னை நடிக்க வைத்து என் வாழ்க்கையை மாற்றியவர் அவர் தான். இது ஒரு நகைச்சுவையான பாத்திரம், என்னை மிகவும் வற்புறுத்தி நடிக்க சொன்னார். நகைச்சுவையாக நடிக்க முடியாது என்று சொன்னேன். எனக்கு இது குறித்து மிகவும் சந்தேகம் இருந்தது, ஆனால் அவர் என்னிடம், "நீங்கள் ஒரு கதாநாயகியாக மட்டுமே படங்களில் நடிக்கப் போகிறீர்கள் என்றால், இங்குள்ளவர்கள் உங்களை தொழில்துறையிலிருந்து வெளியேற்றி விடுவார்கள்.

மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, ஆனால் அத்தகைய பாத்திரங்களைச் செய்வது உங்களுக்கு சிறந்த இடங்களை கொடுக்கும். உயர்ந்த சிகரங்களை எட்டுவதற்கான திறமையும் உங்களிடம் உள்ளது என்றார் கண்ணதாசன். "அப்போது தான் எனக்கு நம்பிக்கை பிறந்தது, தொடர்ந்து நகைச்சுவை வேடங்களில் நடித்தேன் என மனோரமா கூறினார்.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...**
கம்பளை

# பேருவளையில் தேசிய மீலாத் விழா




முஸ்லிம் சமய கலாசார திணைக்கள ஏற்பாட்டிலான தேசிய மீலாத் விழா பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதன்போது பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று திறமைகளை வெளிப்படுத்திய சீனன்கோட்டை, அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை மாணவர்கள் நிகழ்வின் பின், நிகழ்வு நடைபெற்ற மாநாட்டு மண்டபத்தில் குழுவாக எடுத்துக்கொண்ட படம். (படம்: அஜ்வாத் பாஸி, பி.எம்.முக்தார்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.